அடையாளம்

# அவணம்

## 271 கவிதைகள்

சோலைக்கிளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவணம்

பெருந்தொகை - 271 கவிதைகள்

உசாத்துணைப் பகுதி

சோலைக்கிளி

பொது நூலகம்.
மாநகர சபை - யாழ்ப்பாணம்.

894.8111

அடையாளம்

| | |
|---|---|
| வரவுப் பதிவு எண் | 21429 |
| வகுப்பு எண் | 894.8111 |

முதல் பதிப்பு: 2011
© சோலைக்கிளி

வெளியீடு: அடையாளம், 1205/1 கருப்பூர் சாலை, புத்தாநத்தம் 621310, திருச்சி மாவட்டம், இந்தியா, தொலைபேசி: (+91) 04332 273444.

நூல் வடிவம்: த பாபிரஸ், அச்சாக்கம்: அடையாளம் பிரஸ், இந்தியா

ISBN 978 81 7720 143 7

விலை: ₹ 350

*avanam* is a Collection of Poems in Tamil by Solaikkili, Published by Adaiyaalam, 1205/1 Karupur Road, Puthanatham 621 310. Thiruchi Dist., Tamilnadu, India. email: info@adaiyaalam.net.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் தோலும்
அதில் பூத்த தேமலும் என்றாகிவிட்ட
மனைவி சித்தி நயீமா
மகன்மார்
தூர்ஷீனா சோலைக்கிளி
உமாமா சோலைக்கிளி ஆகியோருக்கும்,
இந்த மண்ணில்
பாடி மறைந்துபோன மைனாக்கள்:
எம்.எச்.எம். அஷ்ரஃப்
அன்பு முகையதீன்
பஸீல் காரியப்பர்
என்போருக்கும்,
இதிலுள்ள ஒவ்வொரு மரைக்காலும்
சமர்ப்பணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி

என்னில் கரிசனையுள்ள
கவிஞர்கள் ஆத்மா,
எஸ். நளீம்,
முஹம்மத் நபீல்,
எச்.எம். பாறூக்,
சுகுமாறன்,
ஷங்கர்ராமசுப்ரமணியன்,
இத்தொகுப்பு வெளிவர ஒத்தாசைபுரிந்தவர்கள்
றிஸ்வானுல் ஹக்,
அடையாளம் பதிப்புக்குழுவினர்,
குறிப்பாக இத்தொகுப்பை சிறப்பாக்குவதற்கு உதவிய
மதிப்புக்குரிய கவிஞர் அபி, அனைவருக்கும் நன்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்

நன்றி

என்னுரை 13

**நானும் ஒரு பூனை**

*1* முற்றத்து அலரியின் கதை 17
*2* கூடு கலைந்த குருவி 19
*3* சவங்கிப் போன தெரு 21
*4* விடை தெரியாத வினா 23
*5* ஓர் அமாவாசை இரவு 25
*6* குடுக்கை வைச்சான் காக்கை 27
*7* காணத்துப் போன பத்தை 29
*8* கழுவிழுங்கி மனம் 31
*9* சமுகமும் சனமும் 33
*10* புறாக் கால்கள் 35
*11* இன்னுமொரு பாப்பா பாட்டு 37
*12* மாசாலை இரவுகள் 39
*13* ஒரு சாதியான எரிச்சல்கள் 41
*14* மழைப் பழங்கள் 44
*15* பாம்புக் கோடுகள் 47
*16* நானும் ஒரு பூனை 49

**எட்டாவது நரகம்**

*17* நினைவுகள் 53
*18* எனது தாய்ப்பால் 55
*19* எட்டாவது நரகம் 57
*20* என் வரிக்குதிரைச் சவாரி 59
*21* உயில் 61
*22* நான் 63
*23* இறகு உதிர்ந்த கிராமம் 65
*24* ஒரு மாரி நோக்காடு 67

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25 பேய் நெல்லுக் காயவைக்கும் வெயில் 69
26 வால் மனிதர்கள் 71
27 பாலூட்டிகள் 73
28 கால்மாட்டுச் சுழற்சிகள் 75
29 கொம்பன் காற்று 77
30 இதயத்துள் உறைகின்ற மேகம் 79
31 நவீன இலங்காபுரி 81
32 பூனைக்கண் வெள்ளி 83
33 தொப்பி சப்பாத்துச் சிசு 85
34 தொட்டில் 87
35 கருக்கல் 89
36 சிலும்பல்கள் 91
37 ஒன்றிப்பு 93
38 செத்தமரமும் சில மைனாக்களும் 95
39 அந்த வெல்வெட்டுப் பறவை 97
40 பூமரத்துச் சந்தி 99
41 வெயிலை விழுங்கும் சிறுக்கி 101
42 காதற் குதிரையும் அழுக்குப் பொதிசுமக்கும் கழுதைகளும் 103
43 உலுவாக் கொட்டைக் கறிசோறு 105
44 விபத்துகள் 107

காகம் கலைத்த கனவு

45 பகுத்தறிவுத் தெருக்கள் 111
46 காகம் கலைத்த கனவு 113
47 வாசல் 115
48 ஓர் ஈர நாள் 116
49 நான் - பிள்ளை 117
50 ஒரு மனிதனுக்காகக் காத்திருந்த அன்றைய தினம் 118
51 இனி அவளுக்கு எழுதப்போவது 120
52 குழம்பிச் சண்டையிட்டு பிறகு புன்னகைத்து 122
53 ஓர் உறவு பூத்த பாட்டு 123
54 வெயில் மழை புழுதி 125
55 ஓர் அகதிக் கவிஞன் நிலாவைப் பார்த்து 126
56 எனது நகரத்தின் பைத்தியக்காரி 128
57 ஒரு கவிதைக்கான நேரத்துக் கோரிக்கை 130
58 பறவைக்குக் கடிதம் எழுது 131
59 என் வேப்பமரப் பெண்டாட்டி 133
60 நாயோடு சம்பாசித்தல் 135


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆணிவேர் அறுந்த நான்**


61 1989 நவம்பர் உறவுகள் 139
62 என்னோடு அகதி முகாமிலிருந்த மற்றவருக்கு 141
63 குருட்டு வண்ணாத்தி மோதிய காலை 142
64 மின்வெட்டுக் குருவி 144
65 அன்னியப் பூனை 146
66 செருப்புக்குத் தாலாட்டு 148
67 சிறகோடு பறந்த நரி 150
68 சோறுபோடும் பீங்கானின் புள்ளி 152
69 வேர் விழுங்காத பறவை 153
70 மீன் கடித்த கவிதை 155
71 விளையாடப் போன மனதுக்கு 156
72 ஆலாப் பாட்டு 158
73 சிறப்பாக விளையாடிய சென்ற ஆண்டு 160
74 கவிஞன் முளைக்கும் கட்டில் 162
75 களை 164
76 நாய் குரைக்கும் இவர்கள் 166
77 தமிழ் பேசும் நாய் 168
78 நான் பறக்கின்ற சிட்டுக் குருவி 170
79 தேசம் எரிகின்ற கனவு 171
80 இது அவளுக்குரிய நேரம் 173
81 ஆணிவேர் அறுந்த நான் 175


**பாம்பு நரம்பு மனிதன்**


82 என் பேனை ஓடிய கனவு 179
83 உணவுகள் 181
84 நானும் நண்டும் ஒரு தேர்தலும் 183
85 சிறு மரங்கள் தீயணைக்கும் மழை 185
86 என் காற்றுமுட்டை குடிக்காத வண்டு 187
87 பூனை மலங்கழித்த முகம் 189
88 வானம் பத்திரிகையான நான்போன புதுக்கிராமம் 191
89 உன் சிரிப்பென்ற மாயப் பொடி 193
90 பாம்பு நரம்பு மனிதன் 195
91 கொலையுண்ட என் மனம் 197
92 குருவிக்கு அறைந்ததும் பெண்ணின் கொண்டைப்பூவைச் சோதித்ததும் 199
93 என் ஆமை தவளை வாகனம் 201


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

94 பல்லியின் எச்சமாய் நான் 203
95 அந்தக் கிராமத்தை நினைத்து 205
96 என்மனம் என்னுடன் இருந்த இன்று 207
97 பொய்சொல்லி இன்று பூமரம் வாங்கியவன் 209
98 சப்பாத்துக்கள் பற்றிய எனது அபிப்பிராயம் 211
99 ஓய்வெடுக்கப்போன என் ஆறு 213
100 மாடு சப்பிய சூரியன் 215
101 முடிவு திகதியற்ற விண்ணப்பம் 216
102 நின்று தூங்கும் நான் 218
103 என் அறைக்குள் விளக்குவைக்க வந்தவளுக்கு 219
104 பைத்தியக்கார எருமைமாடு 221
105 குருத்துகள் வாசி 223
106 மீன்களுக்காகப் பாடப்போன குயில் 225
107 காகத்தின் கால்மொழிக் கடிதம் 227
108 வருவேன் என்று சொன்ன அவர் 228
109 கதிரையில் வந்தமர்ந்த பூமரம் 229
110 என் மாடு 231
111 பாரதியும் நானும் சாப்பிட்ட இரவு 233
112 அபிமானக் கவிஞனைத் தின்ற கரப்பான் 235
113 எனது உள்ளங்கையில் நான் 236
114 செத்த முகிலின் மழை 237
115 மனித நேயத்தின் வெளிச்சம் 239
116 என் கந்தோர் முழுமதி 241
117 நான் மடித்து வைத்த பிணம் 243
118 தூரம் போய்விட்ட எனது ஒற்றைக்கு 244
119 பொன் ஆற்றின் ஒரு கதை 246
120 ஆடுகள் உலகமே 248
121 நத்தை பறந்த கண்ணிமை இலை மரம் 250
122 பிச்சைக்கார வானம் 252
123 நான் சந்தோஷமாக இருந்த அன்று 254
124 அந்தக் காட்டுப் பூமரம் 256
125 காணாமல் போன அவனின் பாடல் 257
126 பல்லிகள் கத்தும் துயர் 259
127 நான் போகமுடியாத அயலூர் 261
128 மலங்கழிக்கும் பேய்க்காற்று 263
129 நானான உருண்டை 265
130 கடல் அழுத தலைவெட்டிய பிணம் 267
131 உலகின் முள்ளந்தண்டில் ஒரு பாடல் 269

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

132 எனக்குள் விழுந்த எனக்குள் இருப்பவர் 271
133 என் காகங்களுக்காக 273
134 துள்ளி விளையாடும் மரணம் 275
135 அப்பாவிச் சனங்களின் சந்தை 277
136 நிலவிற்குள் பாலூற்றுபவன் 279
137 ஏழாவது உலகம் போனவன் 281
138 புனரமைக்கப்பட்ட கடலருகு ஊர் 282
139 அறையில் படுக்கும் மரங்கள் 284
140 சீறி ஓடாத வருங்கால மனித நதி 286
141 வானம் பூட்டி 288

## பனியில் மொழி எழுதி

142 நவீன தமிழ் அப்பம் 291
143 வண்டு வணங்கிகள் 293
144 எனது கவிஞனுக்குச் செதுக்கியது 295
145 விஷர்நாய்க்குப் பூத்த புன்னகை 297
146 நண்பரின் 'நான்' 299
147 மேற்குத் திசையான என் கண் 301
148 கண் 302
149 காக்கை நாய்ச் சவாரி 304
150 பல் முளைத்த பனை 306
151 கல்லில் நட்ட கிராமம் 308
152 நாய் நக்கிய தெரு 310
153 மூடப்படும் கடற்கரைப் படைவீடு 312
154 போரில் பிழைத்த 314
155 எனது இனத்துப் பேனையால் அழுதது 316
156 மிக நவீன ஈழத்துக் கனவு 318
157 நாட்டுக் காட்டில் குறையாய் கேட்ட மனிதனின் சத்தம் 319
158 பாம்பு பாம்பு பாம்பு 321
159 கர்ப்பிணிப் பெண்களைக் கண்ட தினம் 323
160 பென் குலிக்கும் அறை 325
161 கோழிமுட்டைக் கோது வீதி 327
162 பல்லில் ஒட்டிய பொய் 328
163 நஞ்சு பூசிச் சிரிக்கின்ற யுகத்தில் 330
164 என் பிரியமுள்ள உனக்கு 332
165 பனியில் மொழி எழுதி 334
166 மனதை உடைத்த வெண் வண்ணாத்தி 336
167 தோல் கறுத்த புறா 338

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

168 அரை அங்குலமாய் பூனை பூச்சியாய் நான் 340
169 இளந்தாரி வெயில் 342
170 இதயமுள்ள பிரிய தென்னைகள் 344
171 ஆடு கார்வதைப் போன்ற ஓவிய அந்தி 346
172 இரத்தம் மினுக்கும் பொன்மாலைப் பொழுது 348
173 மனதுக்குள் மரம்விழுந்த ஒரு மாலைப்பொழுது 349
174 மரங்கள் காய்ப்பதைப் போன்ற இரவு 351
175 பூதங்கள் இறங்கிய இரவு 352
176 நகம் உரசும் வட்ட நிலா 354
177 இன்றிரவு கட்டிலுடன் 356
178 சுவர்கள் நடந்துவரும் அறை 358
179 விரால்மீன் துள்ளாத குளம் 359
180 என்னை வாழ்க்கையில் எழுதும் செய்தியொன்று 361
181 தலைக்கிறுக்குப் புல் 363
182 ஆட்டுக்குட்டிக்கு அஞ்சலி 365
183 பூத்தல் 367
184 தோணி ஆடும் பாட்டு 369
185 படைபோன பிறகுகண்ட என் அலரிமர மாமி 371
186 தமிழ் எழுத்து ஓட்டு வீடு 373
187 அவள் கூந்தலில் சூடிய காற்று 375
188 பிள்ளைத்தாய்ச்சிக் கவிஞன் 376
189 எனக்கான இரங்கற்பா 377

**என்ன செப்பங்கா நீ**

190 காதல் கடிதம் வாசிக்கும் மழை 381
191 உள்ளதும் ஒரு நிலாப்போல மரம்போல 383
192 தாளத்தில் புழு நெளிந்த காலம் 385
193 ஒட்டு வெயில் 387
194 இரவைப்போல இனி விவசாயி 389
195 அவள் புறங்காலில் என் புதைகுழியின் தடம் 391
196 உன் உள்ளம் என்ற துணியை 393
197 எனது புத்தகத்தைப் படித்த என்னிடம் 395
198 கட்டில் மெத்தை குடை 397
199 வாழ்க்கை தெரிந்த ஓணானின் புன்னகை 398
200 பஞ்சில் முளைக்கின்ற கூந்தலாளுக்கு 400
201 காகம் அழைத்தல் பிரச்சினைகள் 401
202 பழத்தேங்காய் கேட்ட கதை 402
203 சின்ன உடுப்புகளும் சிரிப்பும் 404

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

204 தொங்கும் வானமும் தடாகமும் 406
205 கடதாசிப் பொடிச்சியும் கல்லு இளைஞனும் 408
206 இலைகள் பற்றிய கணிப்புகள் 410
207 சீலை 411
208 வண்ணத்துப் பூச்சிகள்தான் பறப்பதா 413
209 பதினோராவது பாடலும் ஐந்து விரல் குருத்தும் 415
210 அழகின் தலைப் பயிர்கள் 417
211 சவர்க்காரம் 419
212 எழுதுகின்ற வெண் கொக்கு 421
213 பசை 423
214 விக் விக் விக் 425
215 உச்சி விதைப்பு 427
216 காது மின்னி 429
217 உன் விரலின் நெட்டி 431
218 ஊத்தை மயிர் 433
219 தாவணியே 435
220 வெகுளி 437
221 வாப்பாவின் பூந்தோட்டம் 439
222 பறவை பாடியமாதிரி 441
223 ஆசை இல்லாத மீன் 443
224 போடித் தாவரம் 445
225 இலைகள் இல்லாக் கதிரை 447
226 உன்னில் பாடுதல் மாதிரி 449
227 கொசு மாங்காய் 451

வாத்து

228 போர்வைக்குள் உதிர்ந்த இலைகள் 455
229 பெட்டைச் சுண்டு 457
230 ஒரு நாய்க்கும் நாயின் நேசனுக்கும் மகாநாடு 459
231 பழஞ்சோற்றுப் பூப் பீங்கான் 461
232 மந்திரவாதியின் மனைவி 463
233 வாத்து 465
234 ஜன்னலின் காணிக்கைக் காசு 467
235 செத்தல்மீன் பாக்குவெட்டி 469
236 திங்கட்கிழமையென்னும் மாட்டுத் தாள் 471
237 மண்புழு 473
238 வெற்றிலை 475
239 வண்ணத்துப் பூச்சியின் கோடரி 477

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

240 விரிந்த தாமரை 479
241 இரண்டு தலைமுடிகள் 481
242 மழையில்லை மழை 483
243 பளிங்கு நீர் ரயில் வண்டி 485
244 மான்குட்டி 487
245 பால்காரன் போய்விட்டான் பால்காரன் வந்துவிட்டான் 489

புதியவை

246 உமிக்குவியல் 493
247 மழை என்கின்ற வண்டிக்காரன் 495
248 என்னோடு எப்போதோ 498
249 வான மாம்பழம் 500
250 இறப்பும் பிறப்பும் 502
251 முட்டைச் சமுகம் 504
252 விஞ்ஞான ஆசிரியர் 506
253 சிகப்பு மயில் 507
254 வைக்கோல் 509
255 ஒரு கூடைக் கற்பனையின் துளிர் 511
256 கூச்சல் 513
257 உன் கைலேஞ்சி 515
258 படைப்பு 517
259 கறுப்பாக எழுதுகின்ற பேனை 519
260 சினைக் காலம் 521
261 பலாப்பழம் 523
262 அணில்களின் சந்தை 525
263 மணி வியாபாரி 527
264 கோழி 529
265 ஓடித்திரிகிறது ஒரு மழை 531
266 குளம் சுட்ட கொழுக்கட்டை 533
267 இருந்து பாடு 535
268 சிலுசிலுப்பும் பலகாரமும் 537
269 வீசி விதைப்பவன் 539
270 கோடுகள் 541
271 அது வேறு விடயம் 543

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னுரை

'அவணம்' என்றால் அதிகம் என்று பொருள். முப்பது மரைக்கால் ஓர் 'அவணம்' என்று தானியத்தை அளப்பவர்களும் குறிப்பிடுவர்.

இந்தத் தொகுதியிலும் ஏற்கனவே வெளிவந்த *நானும் ஒரு பூனை, எட்டாவது நகரம், காகம் கலைத்த கனவு, ஆணிவேர் அறுந்த நான், பாம்பு நரம்பு மனிதன், பணியில் மொழி எழுதி, என்ன செப்பங்கா நீ, வாத்து* ஆகிய தொகுதிகளில் இருந்து கறந்தெடுக்கப்பட்ட கவிதைகளும் புதியவைகளுமாகச் சேர்ந்து அதிகமான உருப்படிகள் முகங்காட்டுவதால் இதற்கும் 'அவணம்' என்று பெயரிட்டோம்.

நாகரீகம் முற்றிவிட்டதென்று நினைத்துக்கொண்டு தன்னையும் தன் மொழியையும் நிராகரித்து, ஆங்கிலம் பேசுவதால்தான் தன் கௌரவம் ஓங்குகிறது என்ற தப்பபிப்பிராயத்தின் நிமிர்த்தம் இங்குள்ளோன் தம்மைத் தாமே ஏமாற்றிக் கொண்டிருக்கும்போதும், இம்மண்ணில் விளைந்த பாரம்பரியமிக்க சொற்கள் இன்னமும் பச்சை காயாமல் வாழ்ந்துகொண்டுதான் இருக்கின்றன. இதற்கு ஓர் அத்தாட்சியாகவும் இந்த அவணம் என்கின்ற நாமத்தை எடுத்துக் கொள்ளலாம்.

யார் என்ன தடம் புரண்டாலும் இந்த மண்ணில் விளைந்த விரால் மீனுக்கும், திராய் சுண்டலுக்கும் உள்ள உருசி மாறாமல் அப்போது இருந்ததைப் போலவே இப்போதும், இருக்கும்வரைக்கும் இந்தச் சொற்களும் என்றும் உருசி கெடாமல் நம்மை வாழவைத்துக் கொண்டே இருக்கும்.

இந்தச் சொற்கள் வெறும் சொற்களல்ல, 'கனிமொழிகள்'. இவற்றை உண்ணுகின்ற கிளிகள் இன்னுமின்னும் பிறந்து எத்தனை தலைமுறைகள் கழிந்தாலும் மழைப்பாட்டுப் பாடியபடியே பறக்கும்.

நானும் இந்தச் சொற்களையும் இந்தச் சொற்கள் விளைந்த மண்ணின் புழுதியையும் புசித்துப் புசித்துத்தான் விரிகிறேன். என் பூக்களின் தேகம் முழுக்க நான் பிறந்த நிலத்தின் வாசம் இருக்கும்.

ஒரு பெரிய வீட்டைக் கட்டுவதற்கு வளவில் இருந்த பல மரங்களைப் பிடுங்கி வேறு ஓரிடத்தில் வைத்து நீரூற்றுவதைப் போல,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்ட அந்தத் தொகுதிகளில் இருந்து பல கவிதைகளை இதில் சேர்த்து அவணம் என்று பெயரிட்டு நீரூற்றும்போது உரிய வளவிலேயே சில மரங்கள் நிற்பதைப் போன்று உரிய தொகுதி களிலேயே சில கவிதைகள் இதில் சேர்க்கப்படாமல் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால், அவை நிராகரிக்கப்பட்டவை என்று அர்த்த மில்லை. சில தோது கருதி இந்த மரம் பிடுங்கல் நிகழ்ந்தது. நான் கட்டும் வீட்டுக்கு அவை பூமரமாகவும் சில நேரம் மாறக்கூடும்.

*மாற்றங்களை யார்தான் கண்டார்! ஒரு காலத்தில் 'ஈறல்' காடு களுக்குள் முளைத்திருந்த புதர்கள் இன்று நவீன மாடிமனைகளுக்கு முன்னால் அழகு தரும் செடிகொடிகளாக வளர்ந்திருப்பதை நாம் காணவில்லையா! ஆம், அங்கிருப்பதை இங்கும், இங்கிருப்பதை அங்கும் நகர்த்துவது தானே வாழ்க்கை!*

இந்தத் தொகுப்பும் அப்படித்தான்! உங்கள் கருத்துகள் என்னைச் செயல்படத் தூண்டும்.

சோலைக்கிளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானும் ஒரு பூனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1

## முற்றத்து அலரியின் கதை

காலையிலே
கதவைத் திறந்தால் கண்ணெதிரே சிவப்பாக
நிற்கின்ற அலரியுடன் நெருக்கம் எனக்குண்டு

பரட்டை விரித்து பார்ப்பதற்குத் தேவதைபோல்
வளர்ந்து எத்தனையோ வயதுகளை விழுங்கிவிட்ட
இதற்கும்
எனக்கும்
உள்ள இரகசியம் ஒருவருக்கும் தெரியாது

சொல்கின்றேன்
நமக்குள் இருக்கட்டும் நாய்நரியும் அறியாமல்

சின்ன வயதில் சட்டையின்றித் தெருவெல்லாம்
அலைந்து புழுதி அளைந்து திரிகையிலே
ஒரு நாள்
தூரத்து
வீடொன்றில் மாங்கன்றாய் வளர்ந்து துளிர்விட்ட
இதனைப் பார்த்தவுடன் இதயத்தைப் பறிகொடுத்து
அன்றே தான்
செக்கலுக்குள் *
களவாகப் பிடுங்கிக் கொண்டுவந்து நட்டேன்

கேளுங்கள்
நீரூற்றி
எருவிட்டு
நண்பர்கள் குருத்தை நோண்டுங்கால் தலையிட்டு
கண்ணைப் போல் இதனைக் காத்த சுவையான
கெட்டித் தனமுள்ள கதைகள் ஏராளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவேதான்
கதவைத் திறந்தால் கண்ணெதிரே புன்னகைத்து
நிற்கின்ற அலரியுடன் நெருக்கம் உண்டென்றேன்

ஆனாலும்
இப்போது
அன்று இதிலிருந்த ஆசை எனக்கில்லை

மாடு கடித்து மரத்தினையே தின்றாலும்
வேரோடு யாரும் வெட்டி எறிந்தாலும்
விருப்பந்தான்
ஏனென்றால்

பூமரத்தை
நெஞ்சினிக்க ரசிக்க நிம்மதியே இன்றில்லை

●

*11.04.1983*

*செக்கலுக்குள் - மாலைக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2

## கூடு கலைந்த குருவி

வீட்டின்
ஓட்டைக் கல்லுக்குள் ஒப்பாரி வைத்தபடி
எதையோ தேடுகின்ற என்னாசைக் குருவி
நீ
தேடும் பொருளெனக்குத் தெரியும். குடியிருந்த
கூட்டைத் தேடுகிறாய் கொட்டைப் பாக்கானே
இனியுனக்கு
கூடு கிடையாது கொல்லையிலே[1] போய்ப்பாரும்
குப்பை மேட்டினிலே கல்லாந்து கிடக்கிறது

கேளுமடி
இதுநாள் வரைக்கும் இக்கூட்டைக் கட்டுகையில்
பக்கத்துக் குடிசையிலே பார்த்தேதான் நானிருந்தேன்
ஆனாலும்
என்னை நீபெரிதாய் எண்ணிடவே இல்லை
கல்வீடு உந்தன் கண்ணைக் கெடுத்திருக்கும்
அதனால்தான்
முட்டை இட்டவுடன் முடைவந்து அழுகின்றாய்

ஓட்டைக் கல்லுக்குள் ஒப்பாரி வைத்தபடி
தலையைப்
போட்டுத் துளைக்கின்ற பைத்தியமே எங்களது
குடிசைக்குள் நீவந்து கூடுகட்டி முட்டையிட்டால்
நாசம்
வருமோடி கண்ணே வளர்க்கின்ற பூனைக்கும்
உள்ளம் இருப்பதனால் உன்னிடத்தில் பதுங்காது

நீ கெட்டாய்
நானென்ன செய்ய
கத்திக் குரல்வளையைக் கிழிக்காமல் போபோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறப்படுமுன்
அடுத்த 'வைப்பினிலே[2]' ஆறுதலாய் முட்டையிட
இந்தக் குடிசை இருக்குமென்று வாராதே
ஒருவேளை
பஞ்சத்தால் நாங்கள் பாதியினை[3] விற்றுவிட்டு
காடு கரம்பென்று குடியகன்று போயிடலாம்
ஆனாலுமென்ன
அங்கே நீவந்து ஆறுதலாய் முட்டையிடு

ஏனென்றால்
நொந்தவர்க்கே தெரியும் நொந்தவரின் நோவினைகள்

●

*15.04.1983*

[1] கொல்லையிலே - பின்புறத்திலே

[2] வைப்பினிலே - முட்டையிடும் பருவம்

[3] பாதியினை - வளவினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3

## சவங்கிப் போன தெரு

தெரு
அடித்துப் போட்டதாய் அசைவு இன்றி
சும்மா கிடக்கும்

சீவன் போன சாரைப் பாம்பாய்
வீதி கிடப்பதால்
காகம்
கோழி
எல்லாம் அதிலே
எச்சம் போடும்

அது
அடித்துப் போட்டதாய்
அசைவு இன்றி
சும்மா கிடக்கும்

வெள்ளம் தெருவின் வயிற்றுள் இருக்கும்
முகத்தில் பருக்கள்
கனிந்து வெடித்து
வழி
குன்றும் குழியுமாய் காட்சி அளிக்கும்
அருகே மரங்கள்
ஒன்றும் ரெண்டுமாய்
காவல் செய்து கால்கள் கடுத்தும்
கை
வரிசையைக் காட்டி வெய்யில் ஜெயிக்கும்

என்ன நடந்தாலும் என்மயிர் போச்சு
என்று சொல்வதாய்
தெரு
அடித்துப் போட்டதாய் அசைவு இன்றி
சும்மா கிடக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்தான் இல்லை விருப்பம் விடுமா
ஓர விளக்குகள்
எரியும் மாலையில் இளமை திரும்பி
வீதி மினுங்கும்

அந்த-
சொட்டு இன்பமும் சுகமாய் இராது

அவனும் அவனும்
அவளும் அவளும்
பெண்ணும் ஆணும்
ஆணும் பெண்ணுமாய்
நாயும்
பேயும்

அந்திவேளையில் அணிகள் கோர்த்து
வீதி முழுக்க விரையும் ஊர்வலம்

அந்த நெரிச்சலில் அலறும் வாகனம்
உறுமிச் சீறியும்
வீதி அழாது

அது-
அடித்துப் போட்டதாய் அசைவு இன்றி
சும்மா கிடக்கும்

சீவன் போன சாரைப் பாம்பாய்
வீதி கிடப்பதால்
காகம்
கோழி
எல்லாம் அதிலே
எச்சம் போடும்

●

*01.05.1983*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4

## விடை தெரியாத வினா

பந்தயக் குதிரைகள் பறப்பதனைப் போன்று
நாளெல்லாம்-
பறந்து மடிகின்ற பொருளென்ன தானோ

அப்பு
பாருங்கள் இந்தப் பாழான காலத்தை
பொழுது விடிந்து புளக்கடி[1]க்குள் வருவதற்குள்
இருட்டு வந்து இழிக்கிறது பல்லை
ஏனப்பு
காலம் சுருங்கிக் கலண்டர் முடிகிறதா

கக்கூசு குந்திக் கழுவி முடிப்பதற்குள்
சூரியன் மூலைக்குள் சறுக்கி வீழுகின்ற
ஆச்சரியம் என்ன அப்பு சொல்லுங்கள்
காலம் சுருங்கிக் கலண்டர் முடிகிறதா

முன்பெல்லாம்
விடிந்தால் பொழுது விடிந்த மாதிரித்தான்
அடுப்பிலே துணியை அவித்து அப்புறமாய்
கல்லில் அடித்துக் கழுவிக் காயவைத்து
ஆறுதலாய்
ஸ்திரிகை செய்து இஸ்டம்போல் கொண்டுவரும்
வயதான
சலவைத் தொழிலாளி சுணங்குகின்ற[2] பாங்காக
சூரியனும்
ஆற அமர ஆகாயம் தனைக் கடக்கும்

ஏனப்பு
சொல்லுங்கள் பழங்கதையை சோட்டைக்கா புளுகுகிறேன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லவே இல்லை இனிய இரைமீட்பு
அந்த இனிமைகள் அழிந்தின்று போனதுவோ
வானத்து
அக்கினிப் பிளம்பிற்கு அவசரம் கூடுதற்கு
என்ன நடந்து எரிச்சல் பொங்கியது

ஏனப்பு மௌனமாய் இருக்கின்றீர் கல்லாய்
காலம் சுருங்கிக் கலண்டர் முடிகிறதா
ஐயோ பேசி அறிந்ததனைச் சொல்லுங்கள்
நீங்கள்
பழுத்த ஓலை போய்விடலாம் இலகாய்
நானோ
குருத்து ஓலை குந்தவுமே நேரமில்லை
அதனால்தான்
பேசுங்கள்
காலம் சுருங்கிக் கலண்டர் முடிகிறதா

ஏனப்பு
அவலா வாய்க்குள் அடைத்து இருக்கிறது

●

*19.05.1983*

[1] புளக்கடி - வீட்டின் பின்புறம்

[2] சுணங்குகின்ற - தாமதிக்கின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம்
யாழ்ப்பாணம்

5

## ஓர் அமாவாசை இரவு

கடந்த காலத்துக் கரிக்கோச்சைப் போல
அமாவாசை -
இரவு நீண்டு எம்மூரை மேய்கிறது

நேரம் -
சரியாக எட்டுமணி

நல்ல கறுப்பு நெற்றிக்கு நேரே
வெள்ளையன் நின்றாலும் விளங்காது பாருங்கள்
அப்படியாய்
சரியான இருட்டு சனப்பேத்தி எங்குமில்லை
அலைகின்ற நாய்களுக்கும் அச்சம் வந்திருக்கும்
இல்லையெனில் -
செத்த வீட்டைப்போல் சோர்ந்திடுமா கிராமம்

நேரம் -
எட்டுப் பதினைந்து

தண்ணிலவு மங்கைக்கு தொடக்குதினம் இன்று
அதனால் -
வட்டில் அப்பம் வான்சுடவே இல்லை
கடைவெள்ளி -
பிடித்த சுண்டெலியைப் பறிகொடுத்த பூனைபோல்
கண்ணைச் சிமிட்டிக் கவலையிலே உழலுவதால்
ஊரென்னும்
சேனைக்குள் புகுந்து சுதந்திரமாய் வெறியாட்டம்
இரவுக் குரங்கு இரக்கமின்றி ஆடிடுது

இன்று
மணிகூட ஓடுதில்லை



21429
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிச்சம் குறைந்தால் வாழுவதே கஷ்டம்தான்
மாதத்தில் ஒருநாள் மகிழ்ச்சியினைக் கொலைசெய்து
அமாவாசை வந்து அகிலத்தை ஆளுகையில்
அம்மாடி –
ஊரே வறண்டு ஒடுங்கிப்போய் விடுதென்றால்

பரிதாபம்
வாழ்க்கை முழுவதுமே வாலாட்ட அமாவாசை
விடியாமல் நிலைமை வடிக்கின்ற மானிடர்க்கு
நிச்சயமாய்
தூண்டில் மீனின் தண்டனையாய் தானிருக்கும்

இன்னும் -
எட்டரையைத் தாண்டவில்லை

நரகம்தான்
கோடி யுகங்கள் கடல்கிழியக் கிடந்தும்
கிழட்டு -
ஆமையினைப் போல அமாவாசை ஊர்கிறது
●

*17.06.1983*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6

## குடுக்கை வைச்சான் காக்கை

குடுக்கை வைச்சான் காக்கையைத் தெரியுமோ
அதோ
பட்ட வேப்பையில்

மிலாறு தெரித்து முறியும் கட்டை
அந்த வேப்பை
துளிர்க்க அதற்குத் துணிச்சல் இல்லை
இந்த மழைக்கு எழும்பா உசிரு

பட்ட வேப்பை பழைய சரக்கு
அப்பச்சி ஒருநாள் அவலைக் கொறிக்கையில்
விஷயம் தெரிந்தது

அப்பச்சி செத்து
பேரன் நானும் அப்பச்சியாகி
பொல்லும் தடியுமாய்

வேப்பையின் வயது வேண்டாம் விடுங்கள்
அதோடு கிடந்து அழியும் காக்கையின்
நப்பித்தனம்[1]தான் நமக்குத் தேவை

வேப்பை செத்து வீழும் நிலையிலும்
குடியைக் கிழப்புதா
இருந்த சுற்றும் எல்லாம் கலைந்து
வாழ்ந்த போதும் வேசா மகன்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிணத்தைக் கொத்துது
சிறகை அகட்டிச் சினைப்புச் சுரண்டுது
கீதம் பாடுது
நித்திரை வந்ததும் நின்று தூங்குது
எல்லாம் பிறந்த இத்த வேப்பையில்

குடுக்கை வைச்சான்[2] காக்கை இதுதான்

'பிறந்த இடத்தை பெரிதாய் மதிக்கும்
இந்தக் குடுக்கை எங்களை விடவும்
ரொம்ப உசத்தி'

அடிக்கடி மனசு அப்படி உழறும்

●

*09.03.1984*

[1] நப்பித்தனம்- கஞ்சத்தனம்
[2] குடுக்கை வைச்சான் - கஞ்சன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7

## காணத்துப் போன பத்தை[1]

ஒரு பீப்பத்தை

இவடம் எல்லாம் எருக்கிலை பூத்து
பூமுத்தை
தகரை
ஆமணக் கென்று

எலியும் உடும்புமாய் எத்தனை பொந்துகள்

உறுமினால் போதும்
களிசனை[2] உரிஞ்சி கையிலே தூக்கி
குப்பி[3]யில் முள்ளுக் குத்திடக் குத்திட
பேண்டு அரைச்சி

ஒரு பீப்பத்தை

இந்த வளவுள் இருந்த குப்பை
செத்த காகங்கள்
படிக்கத் தண்ணி
போத்தல் ஓடு பீச்சும்பு கல்லு
ஆயிரம் வண்டில்[4] அள்ளிடக் காணும்
எம்பட்டு மாறுதல்

கழுக்கு முழுக்கெனக் காய்க்கிற தென்னைகள்
வளைச்சி சிக்காறாய் வேலியும் கடப்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவே கொட்டு[5]
வழுதிலை கொச்சி வண்டை இப்படி
நாயும் பூருமா

எணல்[6] சோலை

காலம் போனாலும்
சொந்தக் காரன் சோம்பறை[7] முறிச்சிட்டான்
●

*25.03.1984*

[1] காணத்துப்போன பத்தை - காணாமல்போன பற்றை

[2] களிசனை - காற்சட்டையை

[3] குப்பி - மனிதனின் இருக்கைப் பகுதி

[4] வண்டில் - வண்டி

[5] கொட்டு - கிணறு

[6] எணல் - நிழல்

[7] சோம்பறை - சோம்பல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8

### கழுவிழுங்கி மனம்

அள்ளிக் கொஞ்சலாம்
ஊத்தை கழுவி உலர்ந்த கடற்கரை
மனதைச் சுழுக்க
தாவும் அலைகளில் தலையைக் கோதும்

மாலைப் பொழுதின்
மஞ்சள் வெளிச்சம்

என்
வரவு இன்றும் விழவே இடாப்பில்
மகிழும் நண்டு
ஓரம் முழுக்க
சின்னச் சின்னச் சுலோகம் எழுதி
விரலில் நடக்கும்

அந்தி
வானம் என்னை
வரைந்து காட்டும்

கண்ணைத் தோண்டும் கடுவன் பூனையாய்
பெட்டை அலையாம்
சமயம் தேடிச் சமயம் தேடிச்
சேட்டை விட்டு
உம்மா பெயரால்
காலைச் சுரண்டிக் கத்தம் ஓதும்

தாழ்வுச் சிக்கலால் தேயும் பரிதி
கண்ணைப் பொத்தும்

தொலைவில் மிதந்தே தூங்கும் படகின்
முத்தல் விளக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானம் ரோசம் மழுங்கிப் போனதாய்
ஊரார் சோற்றுள்
முழிசி முழிசி மாங்காய் போடும்

உயிலை
இரவு எனக்கே
எழுதி வழங்கும்

சிற்பியும்
வலு
சின்ன ஊசியும்
என்னில் நுணுக்கமாய் இருந்து நேசிக்கும்

நான்
காற்றை நினைத்து

●

*28.04.1984*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9

## சமுகமும் சனமும்

காய்ந்து கிடந்தாலும்
அது
களனி

நெல்லு விளையும்
நெல்லுப் போல நிமிர்ந்து அங்கே
கொக்குநாரையும்[1]
கோழியாகூந்தலும்[2]
எத்தாளம் காட்டி இடும்பாய் சிரிக்கும்

அது
களனி

கொக்கு மேயும்.
கண்ணறுத்தானும்[3]
கருமியும்
குருவியும்
சன்னம் போல சிதறித் திரியும்
அங்கே அங்கே
அழுக்குத் தின்னும் ஆமைகூட
முளையைக் குடிக்கும்

அது

களனி
எருமை மாடு இருக்குமா சும்மா
முள்ளுக் கம்பியால் முடைந்த வேலியை
மல்லாக்க வீழ்த்தி
பயிரைச் சப்பும்
நேரமிருந்தால்
தின்ற 'ஹறாத்தை'[4] தாராப் புட்டியில்
கரைத்து ஊற்றிக் கிறாணி அடிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது
களனி

கீச்சான் மட்டுமா
உள்ளான் தொட்டு
அடச மானும்[5] அங்கே பறக்கும்
அட்டை
நுளம்பு
நாயுண்ணி எச்சுண்ணி நக்குண்ணி என்று
என்ன கோதாரி இருக்கோ எல்லாம்
அங்கே இருக்கும்

அது
களனி

நெல்லும் துணிந்த நெஞ்சம் உள்ளது
அம்மியில் வைத்து
கிண்ணியில் வடிக்கும் களனியில் முளைத்து
எத்தனை வாய்க்குள்ளால் இரணம் தப்புது

அதுவும்
அதுகேட்ட வரமும்

●

*07.06.1984*

[1, 2] கொக்குநாரை/கோழியர்கூந்தல் - களைகள்

[3] கண்ணறுத்தான் - ஒரு பறவை

[4] ஹறாம் - கூடாத உணவு

[5] அடசமான் - ஒரு வயல்பறவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10

## புறாக் கால்கள்

காற்றில்லை கடற்கரையில்
பேயறைந்த தென்னையெல்லாம்
ஊறாவாய்
கழுத்தை
வெட்டி வாங்கிய வாதக் காரன்போல்
நிற்கிறது மூஞ்சை நீட்டி

சொத்தையைப் பார்
இந்தக் கடற்கரைக்கும் என்மீது கோபம்

வாலாந் தவக்கையையும்
செப்பலிக் குஞ்சினையும்
வளர்த்த குட்டைபோல் வாடிப்போய் கிடக்கிறதே

என் முகத்தில்
முழிக்க இதற்கும் முடையாக்கும்
போ

எனது செடிகளும் பூப்பதில்லை
ஜன்னலால்
காற்று வருவதும் கிடையாது

எனக்கென்ன
நான்
உஷ்ணத்தைச் சுவாசித்து உயிர்வாழும் பிராணி

கடற்கரையே
வாயையும் பொத்து
கொட்டாவி விடும்போது காற்றுவந்து படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூச்சு
அதுவும் விடாதே
உன்
வயிறூதி வெடிக்கட்டும்

சொத்தை[1]யைப் பார்

நான்
உஷ்ணத்தைச் சுவாசித்து உயிர்வாழும் ஜீவன்
காற்றுக்காய் உனது காலடியில் விழமாட்டேன்

என்முகத்தில்
முழிக்க எல்லோர்க்கும் முடையாக்கும்[2]
போ
புறாக்கால்கள் கீறிப் புடவை கிழியாது
●

*12.06.1984*

[1] சொத்தை - மூஞ்சி

[2] முடையாக்கும் - விருப்பமின்மையாக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11

## இன்னுமொரு பாப்பா பாட்டு

ஆதலினால்
பொண்ணு மாப்பிள்ளை
விளையாட்டுத் தேவையில்லை

பொக்கணியைப் பார் பொக்கணியை
வொப்புத்தீ[1]

அலமடியைச் சொட்டுப்போல் அங்கால நழுக்கு
வெக்கம் தெரியுது
பொக்கணியைப் பார் பொக்கணியை
வொப்புத்தீ

விளையாடி விளையாடி வாசலெல்லாம் கந்தல்
செங்கல்லும்
பாயும்

போ
விளையாட நேரமில்லை

புண்ணாக்கு வாங்கவேண்டும் பால்கறக்க மாட்டில்
குறுக்குக் கோழிக்கும் கூந்தலினைக் கட்டு
வளவைத் தூர்
கோடி அடிக்காமல்
நாலு மூலைக்கும் நாய்க் கள்ளி புதை

வொப்புத்தீ வொப்புத்தீ
நீபிறந்த காலம்தான்
வரையறையை தகர்க்கும் விஷப்பரீட்சை நடக்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானென்ன செய்ய
சூத்தாம் புட்டியில் சாம்பலுண்டு தட்டு

போ
போய்
தலைமுறையை மாற்று

அறுநாக்கொடி[2]யைப் பார் ஆளைவிடப் பெரிசு

●

*13.07.1984*

[1] வொப்புத்தீ - கன்னங்கள் ஊதியவள்

[2] அறுநாக்கொடி - அரையில் கட்டும் கயிறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12

## மாசாலை[1] இரவுகள்

இன்றைய இரவு ரம்மியமானது
இல்லையென்று யார் சொன்னா

ஒரு
மண்டெலியைப் போல
இல்லை
வாழைப் பழம்திருடும் வௌவாலைப் போல
எப்படியோ
உஷாராகு

நிலவு பெய்யும்
மூத்திரம் கூட
குளிர்

பப்பாசி மரத்தில் பூந்தென்றல் ஏற
கந்துகள் மருண்டு
பூக்கள் மசியுது[2]

அத்தைக் கொருக்கால்
இலையான் போல
சில
கிழட்டு இலைகள் கசமுசக்க
வெள்ளனை விரியும்
கன்னியின் பாடெதோ கவனிக்கவில்லை

ஆம்
நித்திரை முழித்து
உசித்து விட்டது
ரா

நமக்கென்ன தெரியும்
ஒவ்வொரு தாக்கலும் உசிக்க உசிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வான வாத்தியார்
எழுதிய வரவோ இழித்த வெள்ளிகள்

நகத்தைச் சுரண்டு
ஓ
இன்றைய இரவு ரம்மியமானது

ஒரு
மண்டெலியை போல
இல்லை
வாழைப் பழம் திருடும் வௌவாலைப் போல
எப்படியோ

இரவின் மாசாலை எமக்கென்ன புதிசா
நாளைய இரவிலே நரகமாய் போகலாம்
யார்தான் கண்டது
இன்றைய இரவு ரம்மியமானது
ரசி

●

*26.10.1984*

[1] மாசாலை - மருள்

[2] மசியுது - கசங்கிது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம்.
மாநகர சபை - கல்முனை.

13

## ஒரு சாதியான எரிச்சல்கள்

யாரது
நீயா

நிறை மதியம்
உனக்கு
சோறுதீத்தும் சாந்தமாமா[1]வின் நினைப்பு

வீதிச் சருகுகளும் விலகி இருமருங்கும்
ஆங்காங்கே வழிப்போக்கர் அடித்த மூத்திரத்துப்
பாத்திகளின் ஈரத்தில் பதறும் உடல்தேற்ற
நீமட்டும்

பொடியனையும்
பொட்டையையும்
கூட்டிக் கொடுப்பவன்தான்
ஆனாலும்

ஆளைப்பார்
கசங்கிப் போனாய்
காக்கிச் சட்டைக்குள் கசிந்தும் போனாய்

கட்டுக்குள் எத்தனை
காதல் கடதாசி

அண்ணே
உன்
வியர்வையின் மணத்திலா
விஷர்நாய்க் கூட்டமும்
கொட்டையிலே நாக்குக் குலைதட்ட இறால்போல
சுருண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கும்
இங்குமாய்
'இச் இச்' என்றபடி ரசித்துப் படுக்கிறது

எங்கள் நடையன்[2]தான்
உனக்கு
சொல்லாமல் வெளிக்குமே
வாலாட்டி ஆட்டி
வரவேற்று வரவேற்று

நம்பமாட்டாய் எங்கள்
கடப்படியில் உசிக்கின்ற கடதாசி மரமில்லை
சவண்ட[3]
குண்டு மல்லிகை
நீவந்து
தந்துவிட்டு
போகும் வரைக்கும்
கைகளையும்
கால்களையும்
நீட்டி நீட்டி நிழலை முகர்கிறது

உனக்கும்
அதற்கும்
...
என்னைத்தான் விடேன்
வீட்டை விட்டும் வெளியிறங்க மாச்சல்[4]

ஆனாலும்
நீ
தூக்கி எறிவதில்லை
தம்பியிடம் கொடுத்தாலும் திரும்பித் திரும்பி
நின்று
கிறுகி
கண்முண்டை பிதுங்க

தபாற்காரா
என்ன நினைத்தாலும்
நினை
மனிசன் தலைகாட்ட மாட்டாத வெயில்

இந்த வேக்காட்டுள்
இல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாக்காட்டுள்
உன்
கரகரத்த சைக்கிளின் 'கிணுங்கிணுங்' மட்டும்தான்
இனிமையென்று நான்சொல்வேன்

அவள்தான்
நாசமத்துப் போனாளே

என்ன
எனக்கு
ஏதாச்சும் கிடக்கா

●

*06.01.1985*

[1] சாந்தமாமா - நிலவு
[2] நடையன் - நாய்
[3] சவண்ட - வளைந்த
[4] மாச்சல் - சோம்பல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14

## மழைப் பழங்கள்[1]

அவை எல்லாவற்றையும் விட
நான் அடிக்கடி தடவும்
உனது தழுதழுத்த உதடுகளைப் போட்டுவிட்டு
தெருவில் படிகின்ற இரத்தம்
சிவப்பாக இருக்கிறது

அதை
முள்ளுத் தின்று ஓராவாய்ப்[2] போன
நாய்கூட முகராமல்
வாயைக் கொசுவி விலகுகையில்
என் செய்வேன்

நீ
ஒரு
குருவியைப் போல

2
3
4
5
இலக்கங்களின் கூனலைப் போல
மூக்கைச் சீறித் தலையணையில் தேய்த்துவிட்டு
கும்பகருணியாய் கிடப்பாய் என்பது

உன் விழிகளின் இமைகளுக்கு
எத்தனை உரோமங்கள் எனக் கணக்கெடுத்து
என் பெயரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் மூச்சுத் தொங்கலில்
முடிந்து கட்டிவிட்ட எனக்குத்
தெரியாமலா போகும்
தவிர்க்க முடியாத
திரையிழுப்பும்
திணிக்கப் பட்ட
ஒத்திவைப்பும்
அறிவிக்கப் படாத கோளாறும்தான்

கண் செருகலையும்
ஒரு
கலா பூர்வமாகச் செருகக் கூடிய
செருகல் காரியே
'!'
இந்தக் குறிகளினை எடுத்து விடு

எதற்கும்
நாம் கடற்கரைக்குப் போனது போலும்
நீ வீட்டாருக்குத் தெரியாமல்
எழுத்தின் அத்தனை இனங்களையும்
சிற்பமாகச் செதுக்கி
காதற் கடிதங்கள் படைப்பது போலும்
சமயங்கள் சுமூகமாய் இருந்தால்தான்
காற்றுக் கட்டியாய்
இருக்கும்

இங்கே
அண்ணார்ந்து பார்த்தாலும்
எங்கோ எவனோ கொளுத்திய நெருப்பின்
நுனி நாக்கு உரசிய கொதிப்புத் தணியாமல்
நட்சத்திரக் குஞ்சு பொரிக்கும்
நிலவு
மேக மலைகளைப் பிராண்டிக் கொண்டு
குளிர் காற்றை எதிர்பார்த்து அழுகிறது

இந்தப் பாலைவனத்து வெக்கைக்குள்
ஈச்சை மரநிழலும் இல்லாத ஒட்டகைக்கு
மனக் குரங்கைப் பிடித்துச் சரிப்படுத்தி
மழைப் பழங்களை மடல் செய்தல்
சுள்ளியான்[3] உனது இடுப்புக்குச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரி வழுகுவது
போலாச்சே

சிரி
சின்னதென்றாலும் ஒரு கடுகு
கருக்கட்டிக் கண் விடுத்து
வானம் தரைக்கு வருவதுபோல்
இறகடித்து
எழும்பி
வந்ததென்று
●

*13.03.1985*

[1] மழைப்பழும் - பெரியமழை
[2] ஓராவாய் - முள்ளாய்
[3] சுள்ளியான - மெலிவான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15

## பாம்புக் கோடுகள்

அப்போதே நீ சொல்லியிருக்கிறாய்
நான் போடுவதெல்லாம்
பாம்புக் கோடுகளென்று

ஞாபகமிருக்கிறதா
மல்லிகைப் பூவையும் நோண்டிச் செருகி
என் பெயருக்கு முன்னால்
'கவிஞர்' எனக் கடைசியும் முதலுமாய்
கிண்டல் செய்து அனுப்பிய
கடிதத்தில்

அதைப்போல் ஒரு
மடலெழுது.
அந்தப் பூவைப்போல் இன்னுமொரு
பூச் செருகு

அந்தக் கடிதம் கிடைத்தது
தபாற்காரனால் அல்ல
ஒரு தூதுப் பொடியனால்
அப்போது நமக்கொரு காதல் இருந்தது

அதற்கு முடக்கு வாதம் பிடித்து
குணப்படுத்த முடியாமல் கைவிட்டுப்
போனதெல்லாம்
இந்தப் பாம்புக் கோடுகளால்தான்
என்று
நீ சொல்லவில்லை
நானே இப்பொழுது உணர்கிறேன்

பரவாயில்லை
நிலவுகளைக் கற்பனை பண்ணுவதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு
எப்போதும்
திருப்தியில்லை

நான்
சூரியன்கள் வரும்போதும் வெள்ளிகளை
வானத்தில் வரவழைக்க
விரும்புகிறேன்
அவைகளுக்கே பூச்சூட்டி
நீ ஊஞ்சல்கட்டி ஆடுகின்ற
இராக்காலம் போல
பகற் காலத்தையும் புரட்டிப் பார்க்க
ஆசைப்படுகிறேன்

விடு
எனது கோடுகளால்
நானே சல்லிவேருடன் சிதறிடினும்
ஒரு பல்லி
எட்டு வைத்தால்
போதும்

●

*16.03.1985*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16

## நானும் ஒரு பூனை

நானுமொரு பூனைதான்

கட்டையான வாலுமில்லை
பொத்திப் பிடித்ததுபோல் அடிவிறைத்த
காலுமில்லை

மீசையுண்டு ஆனாலும்
கிளைபோன்ற கொம்புமீசை அமையவில்லை

கம்பளியைப் போர்த்தியதாய்
மேனியில்லை
கண்ணிரண்டும் பளபளக்கும் குண்டுமில்லை

மூக்கடியில்
சின்னச்
சிவப்புமில்லை
மோப்பம் பிடிக்கையிலே செவியெழும்பி
குத்திட்டும் நிற்கவில்லை

எலி
என் பெட்டிக்குள் கூடுவைத்து
குட்டியீனும்

நாய்
அது என்னைத் துரத்தினாலும்
தனக்கு அடிமையென்று நினைக்காது ஒருபோதும்

தெள்ளும்
ஈரும்
என் தேகத்தில் இருக்காத சில


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாம்பல் திட்டியும்
அடுப்பங் கரையும்
சுருட்டி அல்ல
நான்
நீட்டிப் படுக்கவும் லாயக்கு[1] அற்றவை

ஆனாலும்
நானுமொரு பூனைதான்

அது
புதைத்த பீயை
கெல்லி[2] முகரும்

நான்
இழந்த இனிமையை
நினைத்து மகிழுவேன்

●

*22.03.1985*

[1] லாயக்கு - தகுதி
[2] கெல்லி - கிண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம்.
மாநகர சபை - யாழ்ப்பாணம்.

# எட்டாவது நரகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17

## நினைவுகள்

இந்த
நெஞ்சைக் கழற்றி நாய்க்குப் போட்டால்
நின்று போகலாம்
அது
இருந்த இடத்தில் களிமண் நிறைத்தால்
ஓட்டை மறையலாம்

நிமிடத்திற்குள் நிலத்தை வெட்டித்
தண்ணீர் காணும்
கப்பலில் பறக்கும்
கடலில் மூழ்கி முத்தும் குளிக்கும்

செத்துப்போனதை செவியில் பிடித்து
இழுத்துவந்து கண்முன் வைக்கும்
ஆடை உரியும்
அலுத்துக்கொண்டு சுருட்டிப் படுத்தால்
ஆளை உசுப்பும்

சும்மா எனக்கு முதுகில் தட்டும்
சுகமாய் இருக்கும்
இருந்தாற்போல குணத்தை மாற்றி
புழுத்துக் கிடக்கும் பொன்னாங்கண்ணியை
கந்தப்பார்க்கும்[1]

கொத்தைக் காட்டி
ஆட்டைக் கூட்டும்
குதி[2]யில் தேனைத் திறாவி விட்டு[3]
நக்கச் சொல்லும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓ
அவைகளுக்குத்தான் அற்புதம் தெரியும்
அவைகளுக்குதான் அபார சக்தி

நுரையாகவும்
குமிழியாகவும்
முட்டையாகவும்
நினைவுகள்

அலையாகவும்
சிலநேரம்
சீறிக் கொத்தும் பாம்பாகவும்
அவைதான்

●

*23.04.1985*

[1] கந்தப்பார்க்கும் – கிள்ளி எடுக்கப்பார்க்கும்

[2] குதி – குதிகால்

[3] திறாவி விட்டு – தடவி விட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18

## எனது தாய்ப்பால்

எனது தாய்ப்பால் ஒரு
ஈயக் குழம்பாக இருந்திருக்க வேண்டும்

எப்படி முடியும்
மிகவும் பசுமையாக
இன்னொரு முலையும் இல்லையா
என்பதைப்போல்
அந்தப் பாலில் குளிர்மை நிறைந்திருந்தால்

இன்று
சுற்றி வரவும் அக்கினிக்குள்ளே
வாழ்ந்து தொலைக்க

அப்போது நான்
மெதுமெதுப்பான
முலைகளின் கறுத்தக் காம்புகளைச்
சப்பியிருக்க நியாயமில்லை

சூரியனின் மையப் புள்ளியில்
வெறும் முரசுடன் கூடிய
வாயை வைத்து
சூப்பிடும் துணிச்சலைப்போல
எதையோ சூப்பியிருக்கவேண்டும்

அதனால்தான்
எனது தாயும் ஒரு
சாதாரண பெண்ணாக இருந்திருக்க
முடியாதென்று நம்புகிறேன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள்
நரகத்து நெருப்புகளின்
மொத்த வடிவமாகத் திகழ்ந்திருக்க வேண்டும்

இல்லையென்றால்
இவை எல்லாமே கற்பனையாகி
ஒரு
சாதாரண
பெண்ணுக்கே நான்
மகனாகப் பிறந்திருந்தால்

ஒரு குண்டுவெடிப்பின் பயங்கர வெளிச்சமே
என்
இரண்டு கண்ணிலும் முதன்முதலாய் தெரிந்து
தைரியமூட்டி

எதுவோ
நடந்திருக்க வேண்டும்
பச்சையுடன்
நெருப்புகளைத் தின்ன
எங்கிருந்து கிடைத்தது இத்தனை சக்தி

●

*04.05.1985*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம்
மாநகர சபை

# 19

## எட்டாவது நரகம்

நீ
நரகத்தைப்பற்றியா அச்சப்படுகிறாய்
அது இலகுவானது
அங்கே மலைப்பாம்புகள் ஆயிரமாய் இருந்தாலும்
அஞ்சத் தேவையில்லை அதைப்பற்றி

வேதம் சொல்வதைப் போல
சீழிலாலான ஆறுகளும்
செந்தீயில் காய்ச்சிய ஈயக் குழம்புகளும்
பாவ ஆத்மாக்களுக்காய் படைக்கப்பட்டிருக்கலாம்

செவிட்டு 'மாலிக்' அதன்
அதிபதியாகி
பலநூறு தடவைகளுக்கு ஒருதடவை
'பேசாமல் கிடவுங்கள்' என்று
கட்டளை இடலாம்

அழு குரல்கள்
சொர்க்கத்தில் உள்ளோரை சிரமத்துக் குள்ளாக்கி
அவர்களின் கோபத்தையும்
சாபத்தையும் சம்பாதித்தும் கொள்ளலாம்

நீ நரகத்தைப்பற்றியா அச்சப்படுகிறாய்
நான் அதைப்பற்றி நினைப்பதே கிடையாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழு நரகங்கள் உண்டென்று சொல்வார்கள்
நாம் கொடுமைகள் நிறைந்த
ஏழாவது நரகம்தான் சென்றாலும்
பின்னொரு நாளில் மன்னிப்புக் கிடைக்குமாம்

நான் நினைப்பதும்
ஒரு பொட்டுப்பூச்சியைப்போல் பயந்து சாவதும்
மன்னிப்பே கிடைக்காத எட்டாவது நரகமாம்
இந்த உலகத்தைப் பற்றித்தான்

●

*13.06.1985*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20

## என் வரிக்குதிரைச் சவாரி

நானும் ஒரு
வரிக்குதிரை ஓட்டுகிறேன்

என் தலைமுறைக்குள் ஒரு
பெரு வெளியைக் கடக்க

இந்த யானைவிழுந்த பள்ளத்துள் இருந்து
மீண்டு
நிம்மதியாய் மூச்சுவிட

என்
ஆசைகள் நிறைவேறப்
பிரார்த்தியுங்கள்

ஒரு கோழியின் இறகு உதிர்ந்தால்
மறுகோழி
கொக்கரிக்குமே
அதைப்போல

அண்டி தகராத குஞ்சுக்கும்
சிறுதுன்பம்
நேர்ந்தால்
வேலியெல்லாம் காக்கைகள்
கொடிகட்டிக் கதறிடுமே
அதைப்போல

என்
ஆசைகள் நிறைவேறப்
பிரார்த்தியுங்கள்

உங்கள் பிரார்த்தனைகள் ஓடுகின்ற
தண்ணியிலே
எறியப் பட்டதுவாய்
ஒருபோதும் இருக்காது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் பிரார்த்தனைகள் இருதயமே
இல்லாத
காதலிக்கு வரைந்த
மடல்போல ஆகாது

நீங்கள்
மனிதர்கள்

நானும் உங்களைப்போல்
நகத்தாலே சுரண்டுபவன்
வேதனைகள் வரும்போது
அதையேதான் சப்புபவன்

நாங்கள்
மனிதர்கள்

ஒரு பெண்ணோடு சேர்ந்தே
பிள்ளை பெறுபவர்கள்
அவள்
முழுகி முடிந்ததும்
மீண்டும் பிணைபவர்கள்
என்
ஆசைகள் தீரப்
பிரார்த்தியுங்கள்

அதுவும்
உயிரோடு கிளப்பப்பட்ட
ஈசா நபி* மீண்டும்
டமஸ்கஸில் இறங்கும்
முன்பாக முன்பாக
●

*06.07.1985*

* ஈசா நபி – ஏசுநாதர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21

## உயில்

ஒரு மண்ணறையாச்சும் கிடைக்குமென்பார்களே
எனக்கு
அதுவும் வேண்டாம்

இரண்டு மீசான் கட்டைகள்[1]
ஓநாய் விரட்டும் வெள்ளைக் கொடி
நான் நரகவாதியா
இல்லை
சொர்க்கவாதியா என்று நிர்ணயிக்க
நடும்
குடை மல்லிகைக் கிளை
எதுவும் எனக்கு இல்லத்துப் போகட்டும்

ஒரு குழி
குஞ்சிக் கோழிபுதைக்கும் மடு
அல்லது
சிறுநீர் பாய்ந்து சுருப்பெழும்பிய[2]
துளை

இறந்து
என்னாவி
தென்னோலைக் குருத்தில் தங்கிவிட்ட பிற்பாடு
கிடைத்தென்ன
அதுவும் போனால்தான் என்ன

ஒரு சோடி இழந்த குருவி
என் மீசான் கட்டையில்
குந்தி இளைப்பாறத் தேவையில்லை

மயானத்தில் மேய்கின்ற
ஆடு
எனக்காகக் குத்தப்பட்ட குடை மல்லிகைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துளிரை
வாயில் வைத்து அமர்த்தி
கத்திப் புழுக்கையிட வேண்டாம்

என் அடக்கஸ்தலத்தைச் சூழவும்
புல் பூண்டே முளைத்து
தும்பி தொத்தாட்டிக்
களையில்லை

நீங்கள் பாவிக்கும் விதமாக
மூலைக்குள் செத்த எலியாய்
நிலத்தோடு கிடந்து ஊதி வெடிக்கிறேன்
என் மண்ணறையை உங்களுக்கே
தாரை வார்க்கிறேன்

●

*08.07.1985*

[1] மீசான் கட்டைகள் - முஸ்லிம்கள் புதைகுழியின் இரு முனைகளிலும் நடும் மரத் துண்டுகள்.

[2] சுருப்பெழும்பிய - நுரை எழுந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22

## நான்

எனது நடை
சறுக்குமென்றா
நீ நினைத்தாய்...

தாமரையில் தெளித்துவிட்ட
தண்ணீரா எனது நடை
தோட்பட்டை நனையும்படி
காகம் முக்கிவிட்ட எச்சத்தின்
இரு சொட்டா
எனது நடை

சொல்லிவிடத்
தேவையில்லை

உன்
தலைக்குமேல் என்பாதம்
பதிவதனை நீயறிவாய்
பதிந்து அது உன்னுடைய
விதை வரைக்கும் மிக எளிதாய்
புதைவதையும் நீயுணர்வாய்

என்னுடைய
பாதங்கள்
இரும்பு கொண்டு செய்ததல்ல

நீ வைத்த நெருப்பினிலே
சூடு கண்டு இறுகியது
சுட்டுப்போய் சுட்டுப்போய்
அக்கினியைப் பழக்கியது

கல்லென்ன மேடென்ன
என்பாதம் நடைபோடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீயென்ன தீயென்ன
கூசாமல் அடிவைக்கும்

ஒரு பூவும்
நுனிப்புல்லும்
சிறு புள்ளும்
சிற்றெறும்பும்
செத்ததென்றால் கேளு

இதயத்தைக் கழற்றி எறிந்து விடுகிறேன்
அது
திராட்சைப் பழம்போல சுருங்கச் செய்கிறேன்
●

*09.09.1985*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23

## இறகு உதிர்ந்த கிராமம்

ஊரே
நெட்டை சொல்லி அடி[1]பட்ட
அப்பாவி போல
விக்கி
முகம் விறைத்தாற்போல் கிடக்கிறது

'ஊர்'
அது என்ன செய்யும்
யானையும் யானையும் மறியேறும்போது
சும்மாகிடந்த
தகரைப்பற்றை மிதிபடுமே, தகரைப்பற்றை
அதைப்போல
மிதிபட்டு
மிதிபட்டு
இறகுதிர்ந்த கோழியைப்போல உருக்குலைந்து
தவிக்கிறது

நிலவு ஒழுகுகிறது
வாயில்மண்
எதுவும்
செஞ்செழிப்பாய்த் தெரியவில்லை

சூத்தை பிடித்து இறந்த பற்க[2]ளின்
இடவு தெரியுமே, இடவு
அந்தமாதிரி
மனிதர் மிதித்துத் துவைத்த தடங்கள்
மிகவும் அசிங்கமாய்
மூக்கறை போலவும்
இலையான் பூரும் வாயனின் வடிவிலும்
தெரியத் தெரிய

இந்த
மனசு தாங்குமா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை
வாலைக் கட்டி விட்ட தும்பியாய்
திரிந்த காற்று
வளர்த்த பூனைபோல்
காலைக் கட்டிக் கொண்டு திரியுமா

எங்கள்
கிராமம் அவியுது

முக்கி முக்கிப் பிள்ளை பெறுகிற
மலட்டுச் சாதியாய்
பிறந்த
நாடு கிடந்து நெருப்பில் உழல்கையில்
என்ன புதுமை
என்ன இனிமை

நான்
அடையப் போகிறேன்[3]
வீணாக இந்த மினக்கட்ட நிலவு
இடும்புக்குக் கோர்க்கிறது மாலை
என்னவாம் சிவந்த கோப்பத்தைப் பூச்சிக்கு
வந்து விழுகிறது தோளில்...

●

*12.09.1985*

[1] நெட்டை சொல்லி அடித்தல் - மந்திரித்து அடித்தல்

[2] இறந்த பற்கள் - பழுதுபட்ட பற்கள்

[3] அடையப்போகிறேன் - முடங்கப் போகிறேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24

## ஒரு மாரி நோக்காடு

இருட்டுது
இனிப் பெய்யும்

பெய்யத்தானே வேண்டும்
ஒரு பாரிய மழை
பயிர் பச்சை தழைக்க

பொச்சுப் பொச்செனக் காற்று
தலைமயிரைப் பொசுக்கி விட்டதுபோல்
இடைக்கிடை
ஓலையிலே
உரசல்

அம்மி தகரும்
இல்லாட்டி
மலடு தட்டிப்போன வானம்
முக்கி முக்கி
இடி முழக்கத்தை ஈனாது

அதுதானே
எத்தனை நாளைக்கு அருங் கோடை
வெறும் உரலைப்போட்டு இடித்தாலும்
அவலைக் காணலாம்
ஒரு பாட்டம்
மழையைக் காண்பதுதான்
குருடனுக்குக் கட்டெறும்பு போலென்ற
கதைமாறி
மழை பெய்யும்

இந்தமாதிரி மின்னல் வெட்டினால்
ஒரு வானம் என்ன


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழு வானமும் பாளமாய்ப் பிளந்து
கடலைக் கொண்டுவந்து ஊற்றும்

பார்
நெருப்பில்
தீக்குச்சி கொளுத்துவதைப் போல
மின்னல்

எனக்குத் தெரியும்
ஒரு காலத்தைப் புரட்டுவது
அவ்வளவு இலகல்ல

இங்கே
கோடை
புரட்டப் படுகிறது
வா குடையைத் தேடுவோம்

●

*02.10.1985*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25

## பேய்

## நெல்லுக் காயவைக்கும் வெயில்

அடுப்பு நூர்ந்து புகைகிறது
யார் அதற்குள் தண்ணீரைச் சிலாவியது[1]
அல்லது
காலால் அடித்துக் கோடிக்குள் ஒற்றியது[2]

வானம் முழுக்கச் சிவப்பு
இளநீலம்
பச்சை
பழுப்பு

இது
பொன்னந்தி மாலை
ஒரு கிழவி
பொல்லை ஊன்றிக்கொண்டு திரிவதுபோல்
மேகம் வேடம் தரித்து
மனதை
வாலாயப் படுத்துகின்ற நேரம்[3]

இங்கே
இப்போது
மரங்களெல்லாம்
அரும்பாமல்
பூக்கும்
வாலறுந்த பட்டம்போல் நுனிவானில் தொங்கும்
துண்டு
கிழிந்த நிலவை
பார்த்து ஆசையினால்
கையுதறும்
காலுதறும்

சிறு வெள்ளி
வானத்தை
விரலாலே துளைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகல்
ஆடு கார்ந்த கிறுசலியாச் சிராம்பும்[4]
ஊதாமல்
குழையெடுத்து மந்திரித்து அடிக்காமல்
விஷமிறங்கி
இதுவரை செருகிய கண்திறந்து பார்க்கும்

மீண்டும்
கடியன்[5]
நிலத்திலே ஊரும்
கொக்குப்போல் வளர்ந்த
நெடிய வேப்பையின் துளிருக்குமட்டும்
மஞ்சள் வெயில்
இளஞ்சூட்டில் கொடுக்கின்ற ஒத்தடத்தைக் கவனித்து

பழந்தின்று
கொட்டையும் போட்ட நரைப்பூனை
தெள்ளுதிர்த்தும்
வைப்பு[6] முடிந்து அடைக்கிடந்த குறுக்கு[7]
இரு என்றால் படுக்கும்
படுவேசை போல
கப்பை அகட்டி மல்லாக்கப் புரளும்
பேய்
நெல்லுக் காயவைக்கும்

●

***25.10.1985***

[1] சிலாவியது - தெளித்தது

[2] கோடிக்குள் ஒற்றியது - வீட்டின் பின்புறத்திற்குத் தள்ளியது

[3] வாலாயப்படுத்துகின்ற நேரம் - (தன்) வயப்படுத்துகின்ற நேரம்

[4] ஆடுகார்ந்த கிறுசலியாச் சிராம்பு - ஆடு கடித்த வேலி மரப்பட்டை

[5] கடியன் - எறும்பு

[6] வைப்பு - கோழி முட்டையிடும் ஒரு தொடர்

[7] குறுக்கு - ஒரு தொடர் முடிந்து மறு தொடர் தொடங்கும் வரைக்கும் இடைப்பட்ட முட்டையிடாத காலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26

## வால் மனிதர்கள்

வெடிக்கும்
இன்னமும் குண்டுகள் வெடிக்கும்
இங்கிருந்து சுடப்போகும் துப்பாக்கி ரவையினால்
வெள்ளிகள் மரணிக்கும்
அதனால்
பொத்தல் விழுந்து ஆகாயம்
தொங்கும்
நிலவு சில நேரம் நாளைக்கே

இது விஞ்ஞானகாலம்
விரல்சூப்பும்
குஞ்சு நோனி[1]யும் போர்க்கருவி தயாரிக்க
ஆற்றல் பெற்ற நேரம்
நீ சொல்லு
சரியா
பிழையா

அந்த
காலம் போச்சு
நாலு வெற்றிலையை
ஒரு அள்ளு
பாக்குச் சீவலை
போட்டு இடியுரலை மொக்கு மொக்கென
குத்தி ஆத்திரத்தை மூத்தப்பா தணித்த
அந்த
காலம் போச்சு

இன்றைக்கு யார்தான்
இடியுரலைத் தாக்குவது
ஊரும்
கடியன் கடித்து தோற்சிவந்து விட்டாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறது குண்டு
எடுத்த எடுப்பினிலே ஒரு அந்தை கொழிக்க[2]
இருக்கிறது துப்பாக்கி

இது
விஞ்ஞான காலம்
தொட்டிலுக்குள் பிள்ளை பூப்பார்த்து மகிழாமல்
புதிதாக ஏதாச்சும் ஆயுதத்தைத் தயாரிக்க
என்ன வழியுண்டு
என்று ஆராயும் அளவுக்கு இரத்தவெறி
பாலருந்தும் போதே தலைக்கேறி ஆட்டும்
அநியாய யுகம்

வாப்பாவே
உன் இந்திரியத்தில் பிறந்த எனக்கே
ஆபத்து
இரண்டுகை
இரண்டுகால்
மனிதர்களால்தான்
மிகவும் அச்சுறுத்தல்
ஆனபடியினால்
என் இந்திரியத்தில் உயிர்ப்பிக்கும் சிசுவுக்கு
யுத்தப் பயிற்சியை கருப்பையுள் நடத்துவதே
கால்வாசித் தலைமுறைக்காவது
மிக்க
உசிதமாய் இருக்கும்
அல்லவா

●

*21.12.1985*

[1] குஞ்சு நோனி - சிறு பிள்ளை

[2] அந்தை கொழிக்க - ஒரு வரிசையை அழிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27

## பாலூட்டிகள்

குழந்தாய் உனக்கு நான்
முலையைத் திறந்து பாலூட்டுவது
சங்கடமாய் இருக்கிறது

நீ என்
பூவரசம் மொட்டுத்தான்
வால்வெள்ளி பார்க்கவென்று நானெழும்பிக் கண்ட
நடுச்சாமப் பிறைதான்

உயிர்தான்
இந்த உடம்பின் ஒவ்வொரு உரோமமும்
இன்னும் சொன்னால்
என்
ஈரல் இளமாங்காய் பித்து
எல்லாமே நீதான்
என்வயிற்றில்
உண்டான காய்தான்

அதிலொன்றும் குறையில்லை
என் முகவெட்டை அப்படியே
உரித்துக் கொண்டு பிறந்த கிளிதான்
அதிலொன்றும் குறையில்லை

என்றாலும் உனக்கு நான்
முலையைத் திறந்து பாலூட்டுவது
சங்கடமாய் இருக்கிறது

இந்த முலைப்பால்
என்
இரத்தம் நிறம்மாறி வருகின்ற அமுதம்

கோதுடைந்த[1]
கோழிக்கு கோழி ஊட்டாத ஒன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரங்களிலே கேருகின்ற
எந்தக் குயிற் பேடும்
தன்
நாக்குச் சிவந்த குஞ்சுக்குப் பிரியமுடன்
ஊட்ட விதியற்றுப்போன பொக்கிஷம்

இந்தப் பாலைத்தான்
பத்தியமாய் உனக்குத்தான்
ஊட்ட மிகவும் சங்கடமாய் இருக்கிறது

இன்றைக்கு நீ மொட்டு
பனங்குருத்தைப் போல
போட்ட இடத்தில் மல்லாக்கக் கிடந்து
'உம்மா' என
உச்சி குளிர்ந்திட
கத்தி விறைக்கின்ற பாலரசி
நாளைக்கு
இது
என்ர
திராய்க் குஞ்சு[2]

●

*25.04.1986*

[1] கோதுடைந்த - முட்டை ஓடு உடைந்த
[2] திராய்க் குஞ்சு - செல்லமாய்ப் பிள்ளைகளைக் குறிப்பிடுவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28

## கால்மாட்டுச் சுழற்சிகள்

மயிலா நானொரு
இறகை உதிர்த்திவிட்டுப் போவதற்கு
கண்ட இடத்திலும் நின்ற இடத்திலும்
சூடு சுணையின்றிப் பேட்டோடு புணர்கின்ற
பெரிய கழிசறை
சேவற் கோழியா
சூத்தாம் புட்டியில் திறாவிவிட்டுத் திரிய
என்னோடு எத்தனைபேர் மனக்குறுக்குத் தட்டினரோ!
இதயத்தை அடவுவைத்து
ஈக்கிற் சதையாட
வெந்து புழுங்கி காயத்தில் சுடுநீரை
ஊற்றிக் கொண்டு ஒப்பாரி வைப்பாரோ

உலகெங்கும் மேல்மண்ணைக்
கீழ்மண்ணாய் மாற்றுகின்ற
அநியாயம்
எழுகின்ற சூரியனைத்
துலாக்காலில் கட்டிவைத்து
ஈவு இரக்கமின்றி உரிக்கின்ற
அக்கிரமம்

தாய்க்குப் பிள்ளையில்லை
பிள்ளைக்குத் தாயில்லை
வாங்கும் இருதயத்தைப் பொருத்துகின்ற நவயுகத்தில்
கொட்டைப் பாக்கும்
துள்ளித்தான் தெறிக்கிறது

சகிக்க முடியுதில்லை
கண் மாணிக்கம் பார்க்குதில்லை
பூசி மினுக்கி அலங்காரம் பண்ணுகின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21429

முகத்தில் ஒட்டறையைப் படியவிட்டு மானிடர்கள்
காலைத்தான் பேணுகின்றார்
செருப்பணியும் அதற்குத்தான்
சிங்காரம் பண்ணி மருளுவதை யோசித்தால்
ஒரு மல்லிப் பேயனைப்போல்[2]
மூளை கூழாகிறது

கூசாமல்
ஒரு சொட்டுக்
கவலையுமே இல்லாமல்
சொன்னாலும் சொன்னான் நாற்றவாய் விஞ்ஞானி
உலகம் உருண்டையென்று

●

*25.04.1986*

[1] என்னோடு எத்தனை பேர் மனக்குறுக்குத் தட்டினரோ - எத்தனை பேர் மனத்தில் என்னைப் பற்றிய ஆசை உண்டாயிற்றோ?

[2] மல்லிப் பேயன் - முழுப்பைத்தியக்காரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29

## கொம்பன் காற்று

உசும்புது[1] காற்று

ஒருமாதிரி தலையைச் சவட்டி[2]

கொச்சிக்காய்[3] கடித்த பாலரசிபோல
முழிசி மிலாந்தி

பிச்சைக்காரச் சிறுமியின் மயிராய்
முடிச்சுக் கட்டிச் சுருண்டு கிடக்கிற
பச்சை சிவப்பு
குரோட்டன் இலைகளைத் தொட்டுத் தடவி

ஈரும்
ஒட்டும்
தேடித் தேடி
பெண்டுகள் பேன்பார்க்கும் விதத்தை ஒத்ததாய்
நீக்கி விலக்கி

இவர்
காலம் இல்லாக் காலம் வந்த
மனிதர்

என்னவோ எதையோ நினைத்துக்கொண்டு
நீண்ட நாட்களாய்
மிக நீண்ட நாட்களாய்
கோழி திருடிய கள்ளனைப்போல
நின்ற இடத்திற்கும் விசளம்[4] சொல்லாமல்
மாயமாய் மறைந்த திண்டான் பாஞ்சான்[5]

பூவைப் பார்க்கிறார்
புல்லைப் பார்க்கிறார்
புல்லின் ஓலையில் முட்டையிடுகிற
கைக்குச் சிறுத்த வெண்ஈ வரைக்கும்
இந்த மனிதர் நினைத்த மாதிரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுகவுமில்லை
அழியவுமில்லை
பழுக்கவுமில்லை
புழுக்கவுமில்லை

மனிதர் திகைத்து என்னை நோக்கினார்
கரப்பான் பூச்சியை உறுஞ்சிக் குடிக்கிற
சீனாக்காரனின் எழுத்தின் தோதாய்
வானம் முழுக்க ஒட்டியும் விலகியும்
அழகு தருகிற வெள்ளியைப் பார்த்து
நான் மருண்டிருந்தேன்
நான் மருண்டிருந்தேன்

உச்சந் தலையால் நடக்க நினைத்தவர்
குப்புற விழுந்தார்
எனினும் மீசையில்
மண்பட வில்லைபோல் நாலு பூக்களை
கிள்ளியெறிந்தார்
அவையும்
காய்ந்து போன சருகுச் சுக்குகள்

●

*10.06.1986*

1 உசும்புது - மெல்ல அடிக்கிறது
2 சவட்டி - சாய்த்து
3 கொச்சிக்காய் - மிளகாய்
4 விசளம் - செய்தி
5 திண்டான் பாஞ்சான் - நின்றாற்போல் மறைபவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30

## இதயத்துள் உறைகின்ற மேகம்

ஒரு சிறகுமுளைத்த கவிஞனைப்போல
மேகம்
சுதந்திரமாய் திரிகிறது

ஆகா
அது வானம்
அடியும் முடியும் தெரியவே மாட்டாத
திறந்து கிடக்கின்ற சுவனம்[1]

அதைப்பார்த்து மயங்குவதா
இல்லை
மேகத்தைப் பார்த்து மனம் ஏங்குவதா

நான் நினைக்கின்றேன்
இந்த நூற்றாண்டில் வெண்மேகம் மட்டும்தான்
பரி பூரணமான சுதந்திரத்தை
அனுபவிக்கின்ற ஒன்றென்று

இது
தும்பிக்குக் கூட
சிறகுகள் நோண்டப்பட்டு
வாலில் கடதாசி முடியப்பட்ட யுகம்

'மேகம்'
அதற்கு வாலும் இல்லை
சிறகும் இல்லை
வெட்டுதற்கு
அதனால்தான் அது
சிறு குழந்தையின் மனம்போல பூக்கிள்ளி முகருவதும்
பிறகு கழிப்பதுமாய்
வானப் பூந்தோப்பில் மேய்கிறது மேய்ச்சல்

இந்த வகையில்தான்
நான் வெண்மேகத்தை விரும்புகிறேன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதைப்போல நானுமொரு பஞ்சுப் பொதியாகி
நினைத்தால் நின்று
தேவையென்றால் நடைகட்டி
யாரின் கெடுபிடிக்கும் வால்முறுக்க மாட்டாமல்
வாழும் நிலையொன்று எனக்கும் கிடைக்குமென்றால்
எப்படி இனிக்கும் சுகம்

இன்று
மிகவும் சுதந்திரமாய்
ஒன்றுக்கு ஒன்று குதிநக்கும்[2] கொடுமைக்கே
இடமற்றுக் காற்றுப்போல்
திரிகின்ற ஒன்றென்றால்
நான்
மீண்டும் வலியுறுத்த நேர்கிறது
அது வெண்மேகமாகத்தான் இருக்க முடியுமென்று

என்பிரிய வெண்மேகத்தைப் பற்றி
இனியாச்சும் நானொரு
கவிதை எழுதவேண்டும்

மனம்
அதி காலையைப்போல குளிர்ந்து கிடக்கையில்
இருக்கின்ற கற்பனை அனைத்தையும் அனைத்தையும்
அள்ளித் தெளித்து
பஞ்சு மேகத்தைப் பாடி
சிம்மாசனமேற்றிப் பார்க்கத்தான் வேண்டும்

●

*11.06.1986*

[1] கவனம் - சொர்க்கம்

[2] குதிநக்குதல் - காக்காய்ப்பிடித்து இழிவாகுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31

## நவீன இலங்காபுரி

*(1986 ஆகஸ்ட் 10,கல்முனை இனக்கலவரத்தின் வெறுப்பாக....)*

சொன்னவன் யார்
கேளு
ஆம்ஸ்ரோங்* இன்னும் சந்திரனில் இறங்கவில்லை

இந்த 1986 லும்
விஞ்ஞானம் தழைத்ததென்று சொன்னவனின் வாய்க்குள்
மண்ணள்ளிக் குத்து
வாய்த்தையல் போடு
பேசாமல்
இளித்த வாயனை இருக்கச் சொல்

டேய்
முட்டாளே நம்பு
செய்மதியும் மிதக்கவில்லை
சத்தியமாய் பிள்ளை குழாய்களிலே பெற்று
கொஞ்சவில்லை இரத்தம் பச்சை சிவப்பென்று
எத்தனையோ வர்ணத்தில் இருக்குதென்று நினைக்கின்ற

யுகத்துக்குள் வாழ்ந்துகொண்டு
சந்திரனின் கற்கள் கொண்டுவந்தானென்று
யாரப்பா சொன்னான்
அடி பழசால் வாய்க்கு

இங்கே
கடலுக்குள் ஆய்வு நடத்துவதும் சுத்தப்பொய்
பெண்ணுடைய கருப்பைக்குள் உறைகின்ற சதைக்கட்டி
குஞ்சாமணியுள்ள குழந்தையா வேறேதுமா
என்றெல்லாம் இவர்கள் அறிகின்ற அளவுக்கு
முன்னேற்றம் நடந்திருந்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இராவணர்கள்
எங்கிருந்து வந்தார்கள்
முகத்தைப் பார்த்தால் மலைவிழுங்கிபோல
தெரிகின்ற அளவுக்கு அச்சத்தை உண்டுபண்ணும்
மனுக் குலத்தின் துரோகி
உருமாறும் அரக்கர்
பட்டாளம் எங்கிருந்து கண்முன்னே தோன்றியது

நீ நினைப்பது மாதிரி
இது நவயுலகே அல்ல
அனுமான் எரித்த இலங்காபுரி

போய்ப்பார்
இன்னும் சீதைகள் சிறையிருக்கக் கூடும்

●

*30.08.1986*

* (நீல்) ஆம்ஸ்ரோங் - சந்திரனில் இறங்கிய முதல் மனிதன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32

## பூனைக்கண் வெள்ளி

மூலைக்குள் இருக்கும்போதே எரிச்சல்
போதாக் குறைக்கு எழும்பி நிமிர்கின்ற
தலைவாசல் தொங்கலிலே
வந்திருக்கு சனியன்

பூனைக்கண் வெள்ளி
கண்டால் எனக்கு நரிவிரட்டுகின்ற[1]
பூனைக்கண் வெள்ளி

வெள்ளியென்றால் ஒரு வடிவு
அந்தாசி அசில்[2]
வேண்டாமா

நாலும் சேர்ந்திருக்கும்
அண்ணார்ந்து பார்த்தால் நக்கரைத்து[3]க் கைதட்டும்
குழந்தைகளின் கண்ணுக்கும்
ஏதோ போல்தெரியும்
பார்த்தாலும் பசியாறிப்போகும்

இது எந்தக் காலத்தில்
விதைவிழுந்து முளைத்ததுவோ

ஒரு காந்தம் தேய்ந்து
அதற்குள்ளும் ஆள்கொஞ்சம் எலிகொழுத்தாற்போல
கொழுத்துத் தனிமையிலே
தனியேதான் எந்நாளும்
குறட்டைமீன் இல்லாத பள்ளத்துப் பொட்டியானாய்[4]
திமிரோடு எழுகின்ற இவர்கண்ணில் வீரைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளித் தணலள்ளி நின்றாற்போல் எறிய
ஆளில்லை அங்கே
அடை
சாத்து
கதவை

●

*19.10.1986*

[1] நரிவிரட்டுகின்ற - பயமேற்படுகின்ற

[2] அந்தாசி அசில் - ஒழுங்கான கட்டுக்கோப்பு

[3] நக்கரைத்து - கேலி செய்து

[4] பொட்டியான் - சிறிய நன்னீர் மீனினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33

## தொப்பி சப்பாத்துச் சிசு

தொப்பி
காற்சட்டை சப்பாத்து
இடுப்பில் ஒரு கத்தி
மீசை
அனைத்தோடும் பிள்ளைகள் கருப்பைக்குள் இருந்து
குதிக்கின்ற ஒருகாலம் வரும்

அந்த
தொப்பி சப்பாத்துச் சிசுக்களின் காலத்தில்
பயிர்பச்சை கூட இப்படியாய் இருக்காது
எல்லாம்
தருணத்தில் ஒத்தோடும்

சோளம் மீசையுடன் நிற்காது
மனிதனைச் சுட்டுப் புழுப்போல குவிக்கின்ற
துவக்கை ஓலைக்குள் மறைத்துவைத்து ஈனும்

வெள்ளை சிவப்பு
இளநீலம் மஞ்சள்
என்று கண்ணுக்கு குளிர்த்தியினைத் தருகின்ற
பூமரங்கள் கூட
சமயத்திற்கொத்தாற்போல் துப்பாக்கிச் சன்னத்தை
அரும்பி அரும்பி
வாசலெல்லாம் சும்மா தேவையின்றிச் சொரியும்

குண்டு குலைகுலையாய் தென்னைகளில் தொங்கும்
இளநீர் எதற்கு
மனிதக் குருதியிலே தாகத்தைத் தணிக்கின்ற
தலைமுறைக்குள் சீவிக்கும்
கொய்யா முள்ளாத்தை
எலுமிச்சை அத்தனையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீருறுஞ்சி இப்போது காய்க்கின்ற பச்சைக்காய்
இரத்தம் உறுஞ்சும் அந்நேரம் காய்க்காது

வற்றாளைக் கொடி நட்டால்
அதில் விளையும் நிலக்கண்ணி
வெண்டி வரைப்பீக்கை
நிலக்கடலை தக்காளி
எல்லா உருப்படியும் சதை கொட்டை இல்லாமல்

முகர்ந்தால் இறக்கும்
நச்சுப் பொருளாக
எடுத்தால் அதிரும்
தெருக்குண்டு வடிவாக
உண்டாகிப் பிணமுண்ணும் பேய்யுகத்தை வழிநடத்த
உள்ளியும் உலுவா[1]வும் சமைத்துண்டு ருசிபார்க்கும்
மனிதர் எவரிருப்பார்
கடுகு பொரித்த வாசம்தான் கிளம்புதற்கும்
ஆட்கள் அன்றிருக்கார்

இவர்கள்
பொக்கணிக்கொடி[2]யோடு பிறந்த ஒருவகைப்
புராதன மனிதர்களாய் போவர்

●

*20.10.1986*

[1] உலுவா - வெந்தயம்

[2] பொக்கணிக் கொடி - தொப்புள்கொடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34

## தொட்டில்

பாப்பாக்கள் இனி
விரல் சூப்ப மாட்டார்கள்
ஒன்பதாம் நூற்றாண்டு யுகமா
விரல் சூப்ப
கை நக்க
காட்டுப் பீ[1] விட்டுக் கத்த

றப்பர் பொம்மையிலே உடலுறவு கொண்டு
கருக்கட்டும் காலத்துச் சிசுக்கள்
வாப்பாவின் பெயரென்ன
அவர்களுக்குத் தெரியும்
அவர் வந்த வழியென்ன
அவர்களுக்குப் புரியும்

உம்மா 'இசாக்காலம்'[2] புளிமாங்காய் சப்புகையில்
உப்புக்கல் வைத்துச் சப்பச் சொல்வார்கள்
கருப்பைக்குள் இருக்கையிலே ஆகாரம் விழும்போது
ருசிபார்த்து குறைநிறையை தெரிவிக்கும் குழந்தைகள்

நம்மைப்போல் கைசூப்பி
அண்ணார்ந்து பூப்பார்த்து
முலைப்பால் குடிப்பதற்கு அவர்களுக்கு நேரமில்லை

விழுந்தாற்போல் அவர்கள்
எழும்பி நடப்பார்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழும்பி நடக்கையிலே காலுக்குள் சிக்குகின்ற
பொக்கணிக் கொடியையும் கத்தரித்துக் கொள்வார்கள்

பாப்பாக்கள் இனி
விரல் சூப்ப மாட்டார்கள்
இந்தத் தொட்டில்
தாலாட்டுப் பாட்டெல்லாம்
ஆடவும் பாடவும் 'உருப்படிகள்' கிடையாதே

●

*23.10.1986*

[1] காட்டுப்பீ - பிறந்து முதன்முறையாகக் கழிக்கின்ற கறுப்பு மலம்

[2] இசாக்காலம் - மசக்கைக் காலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35

**கருக்கல்**

அந்தப் பெரிய கரிய வாயகன்ற
சூட்டு மலைகளுக்குள்
பேயுறையும் சூட்டு மலைகளுக்குள்
சூரியன் போய்
ஒரு சப்பாணி மாதிரி உட்கார்ந்து கொள்ளும்

வானமெல்லாம் என்னுடைய
இதயத்தைப் பிழிந்த குருதி
வியாபித்துக் கிடக்க

இரவுப் பறவைகளில் நாலைந்து
புறதானம்[1] காட்டித் திரிந்தாலும்
தலையாலே நெடுத்த
உலக்கை விழுங்கித் தென்னைகளின் மீது
இரத்தம் உறைந்து
முகம் செத்து
காகங்கள் விக்கிவிக்கித் துக்கிக்கும்

யார் அந்த
மேகத்தைப் பிடித்து
ஓடாமல் சும்மா பனியுறைந்த தடம்போல
கிடக்கச் சொல்லியது

இடைக்கிடை வீசுகின்ற காற்றில்
பூ கழன்று கொட்ட
அவளது ஞாபகம்
அந்த குதிரைவால் கூந்தல்
அமசடக்குக்காரி[2] தலையினில் முடிகின்ற
சின்ன மலர்களின் சாயல்
எல்லாம் மனக்கண்ணில் வந்துவந்து நிற்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்
மேலும் பலதடவை வானத்தை ஆராய்வேன்

திசையறி கருவியும் காட்டாத அந்த
திசையில் தெரிகின்ற இருண்ட கண்டத்தில்
இன்னும் ஒருவெள்ளி முளைக்கின்ற சாத்தியம்
இல்லை
ஏனிந்த இருள்

●

*24.10.1986*

[1] புறதானம் - பெருமை

[2] அமசடக்குக்காரி - எல்லாவற்றையும் மூடி மறைக்கின்றவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36

## சிலும்பல்கள்

உன்வரையில் இந்த
அத்திமரம் பூக்கவில்லை சகோதரி
வருந்துகிறேன்
நீ வாழ உத்தரிப்பேன்[1]
தள்ளி இருந்தேனும் உன்நலத்தில் கண்வைப்பேன்
விருப்பமென்றால் தொடர்ந்தும் பழகு

நான் அண்ணன் தம்பி உறவென்று நெசவடித்த
நமது உறவெல்லாம்
நெடுநாட் பழக்கத்தில் நீண்டதுதான்
ஓராண்டா
இல்லை, ஒன்றோடு இன்னும் ஒன்றைக் கூட்டுகின்ற
ஈராண்டா
ஆறாண்டு, ஆமாம் பிறந்தபிள்ளை பள்ளிக்கு ஓடுகின்ற
நெடிய காலகட்டம்
கிட்டத்தட்ட கழுதைக்கு ஒருவயதைக்
கூட்டிக் காட்டுகின்ற எல்லை

நினைத்துப் பார்த்தால் இனிப்பாயும் இருக்கிறது
வசந்தகாலத்து நிழல்வாகைக் கொப்பொன்று
பெயர்ந்து விழுந்ததுபோல்
உன்னை நினைத்தால்தான் மனச் சோர்வு எழுகிறது

இப்போது கேள்
நான் வருவேன், எங்கே
அலுவல் தளத்திற்கு
நீ தலையில் பூச்சூடி இருக்கின்ற சில காலைப் பொழுதுகளில்
நான் வருவேன், எனது
கடமை நினைப்புக்கு

உனக்கு குண்டுமல்லிகைப் பூவாசம் கொண்டுவந்து
நானெங்கே தந்தேன்
காற்றுக்குப் பறக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனது கொட்டான் கூந்தலிலே[2] ஒருமயிராய் மாறி
நானெங்கே சிக்குவைத்தேன்
நீயேன் கற்பனையில் மணங்குடித்தாய் என் ஈரல் கொழுந்தே

இந்தக் கவிஞனுக்கு இப்படியாய்
தொல்லைகள் சங்கடங்கள்
எல்லாமே உண்டேதான்
என்றாலும் உன்பெயரால் இதயம் நோவெடுக்கும்
நெருஞ்சி குத்தியதாய் ஒருசொட்டுக் கூடித்தான்
அதிலே வலியிருக்கும்

மடைச்சி என்பிரிய மடைச்சி
ஈர்க்கும் இல்லாமல் பசையும் இல்லாமல்
வெறும்தாள் ஒட்டி நூலில்லா பட்டம்
நீயேற்ற நினைத்தாலும் அது நடத்தல் சாத்தியமோ
இதோ என்னுடைய உள்ளத்தை எட்டிப்பார்
இதற்குள் உன் பரிவு
நீ அடிக்கடி சொண்டு நீட்டுகின்ற பொய்க்கோபம்
எல்லாம் இருக்கின்ற அந்தஸ்தை நோட்டமிடு

என் இரத்தம் தவறுதலாய் தீவளர்த்துக் கொண்டதையும்
மன்னிக்க முடியும்தான்

●

*30.11.1986*

[1] உத்தரிப்பேன் - வாழ்த்துகிறேன்

[2] கொட்டான் கூந்தல் - கட்டையான கூந்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

37

## ஒன்றிப்பு

ஆனாலும் மழைதான்
நீ கூப்பிட்டுக் கத்தியும் எழுந்துவர முடியாமல்
கவட்டுக்குள்[1] கைவைத்துப் படுப்பேன்
காலுக்குள் பூனை மனிதச் சூட்டிற்காய்
எப்போதோ வந்து வாடி அடித்த[2]தையும்
நீ கூப்பிட்ட சத்தத்தில் பதாலித்து முழித்துத்தான்[3]
அறிந்தேன் ஆனாலும் எழுந்துவர முடியவில்லை
கவட்டுக்குள் கைவைத்துப் படுப்பேன்

நீ வந்து திறந்த கதவின் இடுக்காலே
என் கண்பார்வை சென்று தலைவாசல் தங்குகையில்
தெரிகிறது அலரி தலைகவிழ்த்து நிற்பதுவும்
மல்லிகை சந்திறங்கி அடைமாரித்தாக்கத்தால்
கட்டுக்கோப்பே குலைந்து விரித்தவிரல்
போல தூங்குவதும் அதன்கீழே சில கோழி
தோப்புக்கரணம் போட நிற்பதைப்போல்
நிற்பதுவும் இன்னும் மண்ணூறிக்கிடப்பதுவும்
தெரிகிறது சிணுசிணுத்த மழைத்தூற்றல் கூடத்தான்

காலைப் பொழுது
சூரியனே வரவில்லை
அண்ணாவி[4] இல்லாமல் பொல்லடிக்கும்[5] விதமாக
எல்லோரும் பகலென்று எழுந்து செயற்படுதல்
மாரிமழைக்கும் உற்சாகம் ஊட்டியதோ
கொட்டைப் பாக்காய் துளியும் பெருக்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றாலும் எனது கவட்டுக்குள் கையிருக்கும்
கால்மாட்டில் படுக்கும் பூனைக்கும் எனக்குமொரு
இணக்கத்தைக் கொண்டுவந்த அடைமழைக்கு எங்களது

நிலைப்பாடு தெரியாது
அது அடிக்கும் பலத்த அடி
பாலம் உடையும்
நடைபாதை துண்டிக்கும்

உம்மா
நீமட்டும் கத்தாமல்
போ

●

*01.12.1986*

[1] கவட்டுக்குள் - தொடை இடுக்குக்குள்

[2] வாடி அடித்தல் - இடம் பிடித்தல்

[3] பதாலித்து முழித்தல்- திடுக்கிட்டு விழித்தெழுதல்

[4] அண்ணாவி - கூத்தை இயக்குபவர்

[5] பொல்லடிக்கும் -கோலடிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

38

## செத்தமரமும் சில மைனாக்களும்

சில மைனாக்கள் வரும்
இந்த மரத்தில் உட்கார்ந்து பேனுதிர்த்த
இந்த மரத்தின் பூவை
கொத்த
கோத
கொண்டாடிப் பறக்க
சின்னதும் பெரிசுமாய்
மைனாக்கள் வந்துவந்து சேரும்

மரம்
ஆணி வேரே அறுந்து நிற்பது
கோதவரும்
மைனாக்கள் பார்வைகளில் தெரியாது
கட்டிய கன்னி பூக்காமல் உதிர்கின்ற
சாபக் கேட்டிற்கு இந்தமரம் ஆளாகி
சும்மா இலை சலசலத்து
காற்றுக்கும் கொஞ்சம் அசைந்து
போலிப் பச்சையினை முகமெல்லாம் பூசி
உயிருக்குள் பழுக்கும்
இந்த மரத்தின் துயரங்கள் தெரியாமல்

'கீச்சென' மைனாக்கள் வரும்
ஒன்றாகி
இரண்டாகி
ஒரு கிளையாகி*ச் சிலவேளை
வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குந்தும்
பூக்களை மூக்காலே கோதும்
மரம்
சோகத்தைப் புதைத்த சிரிப்புடனே
பூவுதிர்த்தும்
மைனாக்கள் புறதானம் காட்டிக் களிக்கும்

தொலையாது
மீண்டும்
நாளையும்
மைனாக்கள் வரும்
ஆணி வேரே அறுந்து நிற்கின்ற
இந்த மரமோ
நிம்மதிக்காய் ஒருதடவை
சடசடவெனக் கிளைகளை உசுப்பும்
மைனாக்கள் வெருண்டு கலையும்
●

*08.12.1986*

* கிளையாகி - பாட்டமாகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 39

# அந்த வெல்வெட்டுப் பறவை

சா...நெடிய முடத்தென்னை அடியில் நானும் நீயும்
உட்கார்ந்து விரல்நசித்துக் கதைத்துச் சிரிக்கையில்
வருமே
சொல்லிவைத்தாற்போல கள்ளச் சந்திப்பு அனைத்திலும்
பங்கெடுத்து
நாம் பின்புறத்தைத் தட்டிவிட்டு எழும்வரைக்கும்
அந்தக்கால் மாறி இந்தக்கால்
இந்தக்கால் மாறி அந்தக்கால் என்று
ஒற்றைக் காலில்நின்று நமக்காக
ஆட்பார்த்து அறிகுறிகள் சொல்லிடுமே
வெல்வெட்டுப் பறவை
வால் மினுங்கும் வெல்வெட்டுப் பறவை
அது மூக்குத் தொங்கலில் எச்சம் அடித்தாலும்
அந்நேரம் மணம்தான்

அது ஒரு காலம்
காதல் கிறுக்கு தலையில் இருந்த
நாம் பெருவிரலில் நடந்த நேரம்

அப்போது வானம்
எட்டிப் பிடித்தால் கைக்குப் படுகின்ற
ஒரு முழ இரு முழத் தூரத்தில் இருந்தது

ஏன் உனக்குத் தெரியுமே
அண்ணார்ந்து நீ சிரித்தால்
நிலவிற்குக் கேட்கும்
வானுக்கும் உச்சியெல்லாம் பூப் பூக்கும்

நமக்காக அந்தத் தனியிடம் அமைந்தது
ஒரு வரப்பிரசாதம் இல்லையா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த யாருமறியாத இடுவலுக்குள்ளும்
நமது கள்ளச் சந்திப்பு நிகழ்வதை
அறிந்ததுபார் செங்கண் வெல்வெட்டுப் பறவை
ஞாபகம் இருக்குமே
நீ மண்கிள்ளி எறிந்து
'சூய்' என இடைக்கிடை அரட்டுகின்ற
வெல்வெட்டுப் பறவை

அதற்கும் அப்போது வால்முளைத்த பருவம்
சிறகின் ரெண்டு பொருத்துகளுக்குள்ளும்
சதை பிடிக்கும் வயசு
வாலுக்குள் இருந்த தூறல் மயிர்கள்
உதிர்ந்ததோ இப்போது உருமாறிப் போனதோ

'கீச்சென' வரும் என்ன
ஆனால் நாம் எழும்பும்வரைக்கும்
வாய் அசைக்காது

சே...தின்ற விதையைக் கக்கித் தரும்
வஞ்சகமே இல்லாத பட்சி
நம் காதலுக்கு அதுஒரு ஜீவன் போல,
யோசித்துப்பார்த்தால் நெருப்பு நெருப்பாக வருகிறது
ஒரு செங்கண் குருவிகூட அங்கீகரித்த நமது காதலை
இவர்களேன் பழமாகவும் கொட்டையாகவும் பிரித்துச்
சிதைத்தனர்

வைத்திருப்பேன்
உனது கடிதங்கள் அனைத்தையுமே வைத்திருப்பேன்
தைத்துப் பொருத்தி அவற்றை ஆடையாய் உடுத்துக்கொண்டு
திரிய

●

*13.03.1987*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம்.
மாநகர சபை - யாழ்ப்பாணம்.

40

## பூமரத்துச் சந்தி

சந்தியோ பெருஞ்சந்தி
ஒரு சாதிப் பொடியன்கள்[1] சுற்றுகின்ற வட்டாரம்
நாலுபக்கம் கண்ணெறிந்து துணிச்சலுடன்
பார்த்தால்
வேலிக்குள் ஆளுசும்பும் பகுதி

சந்தி முழுநாளும் இருளுறையக் காரணமாய்
நிற்கிறது வாகை
பேய்ச்சி பூஅள்ளித் தலையில் வைத்ததுபோல்
ஊத்தை நிழல் வாகை பூக்க

ஓராயிரம் இல்லை ஒன்பதினாயிரம் இல்லை
பதினையாயிரம்
காகங்கள் கூடும் பின்கலையும் கொப்புகளில்
கூட்டம் நடத்தும் கைதட்டும் ஒருசிலது
தலைகீழாய் கூடப் பறக்கும்

சந்தியோ பெருஞ்சந்தி
நாலு வாகனங்கள் பெயர்ந்து பிரியுமிடம்
வாகை பூத்து தெருவெல்லாம் பூப்பரவ
அப்பக் கிழவிக்கும் ஓராசை

பித்தம் வெடித்து தோற்சுருங்கிப் பொருக்குப்
பறந்த கால்களைத் தூக்கிவைத்துப் பூப்பூவாய்
கிளிப் பிள்ளை போல நடக்க

ஆசையைப்பார் ஆசை
வாலுசத்திப் பின்புறத்தைப் பணித்துப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புழுக்கையிடும்
மணியாட்டுப் பெட்டைக்கும் இப்பொழுது
பூத்தேவை

பள்ளிக்குப் போகின்ற சரக்குக[2]ளைக் கண்டு
உறுமி இளைக்கின்ற சொறி நாய்க்கும் கூடத்தான்

நிழல்வாகைப் பூப்பொறுக்க பிள்ளைகளும் வரும்
பள்ளிக்கூடம் இல்லாத நாள்பார்த்து
உருவி உதிர்த்தி பூப்பொறுக்கி விளையாடும்

சந்தியோ பெரும்சந்தி
ஒரு சாதிப் பொடியன்கள் சைக்கிள்விட்டு
சைக்கிள்விட்டு
பள்ளம் விழுந்த இவ்விடத்தில் இன்னுமொரு
'கொளுகல்'[3] கதைக்கும் கண்மூக்கு முளைக்கிறது

●

*15.05.1987*

[1] ஒரு சாதிப் பொடியன்கள் – ஒரு விதமான பொடியன்கள்

[2] சரக்குகள் – பெட்டைகள்

[3] கொளுகல் கதை – வம்புக் கதை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

41

## வெயிலை விழுங்கும் சிறுக்கி

நிறைமதியம் கூட இவளுக்கு விலக்கில்லை
கள்ளச் சிறுக்கி
கூந்தலுக்கு எண்ணெய்வைத்து மாதக்கணக்கிருக்கும்
முள்முருக்கம் மிலாற்றைப்போல் மயிர்கள்
கோரிக் கட்டி உச்சியிலே கொண்டை
இருந்தாலும் கைக்குள் அடங்காது பன்கூடை
போல கிளம்பியும் இந்தக் காப்பிலிச் சாதிக்கு[1]
சூடில்லை சுணையில்லை மின்னிச்[2]சுரை[3]கழன்று இருந்தாலும்
இறுக்க நேரமில்லை நாள்முழுக்க கடப்பு[4]க்குள்
நின்று கிறுக்கத்தான் பொடிச்சிக்குப் பகல்காணும்

சும்மா மூக்கோடித் திரிந்த பெட்டை
நான் பள்ளிக்குப் போகும் காலத்தில் இவள் தொடையில்
ஒரு கிள்ளுப் போட்டுவிட்டுப் போவேன்
அரையில் ஒரு தழும்பு இவளுக்கு உண்டு
கீரைப் பாம்பு விளைந்த வயிற்றோடு தெரிவாள்

இன்னும் நான் கலியாணம் செய்யாத கட்டை
இவளைப் பார்
பெண்பிள்ளை வளர்த்தி யாழ்ப்பாண முருங்கைக்கு ஒத்ததுதான்
என்னைக் கண்டாலும் இவளுக்கோர் சிலிர்ப்பு
பேய்ப் பெட்டை
ஆளறிந்து கொள்ளாத முன்சூத்தைப் பல்லீ

முகம் கொஞ்சம் வெளிப்புத்தான்
இடித்த மாவைப் போல இல்லாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தனத்தை உரைத்த நிறம்
உதட்டில் எவன்கடித்தான் ஒரு வெடிப்பு

இவளுக்கு மூத்தவள்
அவளுக்கும் மூத்தவள்
ஒருத்தியுமே இவள்போல இல்லை
கடப்புக்குள்[4] இவள் நின்று எடுக்கின்ற நளினம்
எவன் மனதைச் சுண்டா

கூசாமல் பார்ப்பாள்
நாம் குனிந்து போனால்
இன்னும் ஒருபடிக்கு ஏற இறங்க
நோக்கி விடுப்பெடுப்பாள்
பெட்டை உண்டான காலம்தான் சோற்றுக்கும் பஞ்சம்

'வாப்பா'
அவருமொரு வாப்பா
தொந்தி வயிறன் வீட்டுக்குள் கிடப்பான்
மகள் நின்று தெருவில் எடுக்கின்றாள் நெருப்பு

●

*06.08.1987*

[1] காப்பிலிச் சாதி – கறுத்த மேனியராய், சிக்குப்பிடித்த முடியுடன் அழுக்குப் பிடித்துத் திரிபவர்
[2] மின்னி - காதில் அணியும் ஆபரணம்
[3] சுரை - காதில் பின்புறத்தில் இருக்கும் மின்னியின் ஒரு பகுதி. இது மின்னி விழாமல் பாதுக்கும்.
[4] கடப்பு - வழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

42

## காதற் குதிரையும் அழுக்குப் பொதிசுமக்கும் கழுதைகளும்

நாணல்கள் எரிந்தனதான்
நாம் விட்ட பெருமூச்சு காடுகளும் எரிய
தீயாகிக் கொண்டதுதான்
என் தேவீ
என் இதயப் பசுந்தரையில் மேய்ந்த சிறுகுருவி
வேதனையின் வலைக்குள்ளே நாங்கள் அகப்பட்டோம்

உன் நுனிமூக்கில் தெரிகின்ற செந்நிறத்து மூக்குத்தி
இனியெந்த மதன்முகத்தைக் கிழிக்கும்
என் கன்னத்தை அது கிழிக்கும். காயங்கள் அதால் தோன்றும்
காயத்தை உனது விரல் தடவும்,உடனடியாய்
ஆறும் என்றெல்லாம் இரவுகளில் நான் நினைத்தேன்
அந்தச் செந்நிறத்து மூக்குத்தி என் முகத்தைக் கிழிப்பதற்கு
உன் மூக்கும் தவிக்கையிலே முயற்சி பிழைத்தது பார்

இது நுனிநாக்குக் காதலல்ல
குட்டி நாக்கிலுமே சொற்பிறந்து சரசங்கள்
பொழிந்த காதல்தான் பிறை நெற்றி கண் மீன்கள்
என்று வர்ணிக்கத் தெரியாத கவிஞனிவன்
உன் மனதை வர்ணித்தேன் மாளிகையை நானமைத்தேன்
ஒரு புறாவந்து உறங்காமல் துப்பரவாய் கவனித்தேன்

பார்
வேதனையின் வலைக்குள்ளே நாங்கள் அகப்பட்டோம்
உன் செந்நிறத்து மூக்குத்தி குதியுயர்ந்த செருப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கில வார்த்தைகள் 'வெரிநைஸ்' உங்கள் கவி
என்ற பாராட்டு அத்தனையும் உயிர்பெற்று
இப்பொழுது என்பின்னால் வரவர கனவுகளில்
பாம்பு கடிக்கிறது வெள்ளியுமே கருகி
என்மீது விழுகிறது நீ

காதற் குதிரையிலிருந்தும் விழுந்தோம்
நம்பெயரால் அழுக்குப் பொதிசுமந்து
மனிதக் கழுதைகள் திரிகிறதே கண்ணே

●

*06.08.1987*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

43

## உலுவாக் கொட்டைக் கறிசோறு

இன்னும் தூர வருகின்றேன்
இருந்த இடமும் தூரம்தான் ஆனாலும் இடம்மாறி
இன்னும் தூர வருகின்றேன்

நானே எனைவிட்டும் தூரித்த பிறகு
இந்த நிலமென்ன
நானிருந்த பழைய இடமென்ன
என்றும் காட்டு மல்லிகைப் பூவாசம் வீசும்
என்மனதில்
இந்தப் பயணத்தின் காரணமோ
தீத் தழும்பாய் விழுந்ததுதான்

இன்னும் உலகம் விடியவில்லை
நேற்று ராத்திரிகூட கூவிய சேவலின் தொண்டையை
அதன் கொண்டையைக், காதைக்
கிள்ளி எறியுங்கள்
இன்னும் உலகம் விடியவில்லை
விடிந்திருந்தால் எனைப்பிரிந்து தனிமையிலே
துவேஷித்த
'அயலூரான்' பேதம் ஜீவிக்க நியாயமில்லை

இருந்தாலும் எனக்குள்
காட்டு மல்லிகைப் பூவாசம் வீசும்
அயலூரான் என்ற தீத்தழும்பு இதயத்தின் ஓர்
மூலையில் விழுந்தாலும்
நான் துள்ளி விளையாடிய அந்த மாமரம்
என்னைப் புரிந்து நடந்து பூனைபோல் தனக்குப்
பணியவைத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புள்ள சகோதரி
ஒரு நாள் அவர் கிள்ளிதந்த முட்டையின்
மஞ்சள்கரு...
நாங்கள் இருவரும் ஒரு மாதம் வரை பேசாமலிருந்த
கொடியதுயரம்
சமையலறையில் நான் உணவும் பழப்புளி
எனது சப்பாத்தின் 'பிசுக்பிசுக்'சத்தத்தில்
தலையுசத்தும் சொறிநாய்
பிரியங்களைத் தந்த முகங்கள்

நினைத்துப் பார்ப்பதற்கும் சக்திகுன்றிப் போகிறது
என் மெல்லிதயம் புறாநடக்கும் தரை
சிறு பூவிழுந்தால்கூட சுள்ளென்று வலிக்கின்ற
வெண்பஞ்சுப் பொதி
நினைத்துப் பார்த்தாலும் சக்தியின்றிப் போகிறது

போகட்டும்
எனக்கு மீசை முளைத்த அந்த வசந்தகாலத்துக்
கட்டங்கள்
ஒரு எரி தழும்போடு பிரியாவிடை கூறட்டும்
பொறுப்பேன்
இரண்டு சொட்டுக் கண்ணீர் வடித்துவிட்டால் ஆறும்
ஒன்றுதான் மிகப்பெருங் கவலை ஒன்றுதான்
சகோதரி தருவதாய்சொன்ன எனக்குப்பிடித்த
உலுவாக்கொட்டைக் கறிசோறு
அங்கிருக்கும் காலத்தில் தின்னக் கிடைக்கவில்லை

●

*25.08.1987*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

44

## விபத்துகள்

என் தோட்டத்தில் இருந்த ரோஜாவில்
நேற்று விழுந்த பூ
இரவு வந்து என்னைத் தழுவி
சுகமா என்று குசலம் விசாரித்த தென்றல் காற்று
ஜன்னல் இடவால் என்னைப் பார்த்துச் சிரித்த
நிலவு நிலவோடு சேர்ந்த வெள்ளி
எல்லாமே என்னுடைய காதலியின் நினைவுகளைக்
கொண்டு வந்ததைப் போல
இன்று கந்தோரிலும் நீவந்து மனங்கிள்ளிப்போனாய்
கிழவி

நான் தொட்டால் அழும் நிலையிலுள்ள கவிஞன்
ஆகாயப் பூக்களையும் ஊர்கோல முகில்களையும்
அள்ளி அணைத்து விளையாடக் காத்திருந்து
ஏமாந்து போன உயிர்

இந்த காதலியை இழந்த
கோடை காலத்தில் நான்வரண்டு கிடந்தாலும்
மாரியிலே செழித்திருந்த பயல்
கொஞ்சம் வானம் இருண்டாலே எனக்குவரும்
பழைய
வெள்ளத்தின் ஞாபகங்கள்

நீயேன் என்கரம்பிடித்து அழுதாய்
எதற்கோ நீ அழுதாய் எனக்குள்ளே
நூறு குயில்கள் ஒன்றாகச் செத்தனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளும் இப்படித்தான் என்கரம்பிடித்து அழுதாள்
அந்த வண்ணத்துப்பூச்சி இறகுதிர்ந்த போது
தென்னைக்கு மறைவில்
அதன் உச்சிக் குலை அதிரும் சத்தத்தில்
இப்படித்தான் என்கரத்தை பிடித்து மடக்கி
அழுதாள் கிழவி இன்றேன் நீயழுதாய்

நான் தொட்டால் அழும் நிலையிலுள்ள கவிஞன்
ஆகாயப் பூக்களையும் ஊர்கோல முகில்களையும்
அள்ளி அணைத்து விளையாடக் காத்திருந்து
ஏமாந்து போன உயிர்

எதற்கோ நீ அழுதாய்
காரணத்தை அறிவதற்கு அவகாசம் கிடைக்கவில்லை
ஆறேழு புகையிரதம் எனக்குள்ளே மோதினவே
●

*18.10.1987*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காகம் கலைத்த கனவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

45

## பகுத்தறிவுத் தெருக்கள்

இரண்டொருநாள் நாங்கள் பிரிந்திருந்தோம்
ஒரு நெடுந்தூரப் பயணம் நீ சென்றுள்ளாய் என்று
எனக்குத் தெரியும்

நாங்கள் சந்திக்காத தினங்களில்தான்
எமது சமூகங்களுக்கிடையில்
திரும்பவும் தலையிடியும் காய்ச்சலும் வந்தன நண்ப

நமது நகரம்
மீண்டும்
தாலி அறுத்துக் கிடந்தது

எப்போதுமே காற்றுக்கு பொய்சொல்ல ஆசைதான்
அது பெருவிரலால் நடந்து
கண்டபடி தூவியது கதைகளை

நகரத்தில்
சுவரொட்டிகளும் அவைகளைத் தாங்கிய பழைய மதில்களும்
அமைதியாய் இருக்க
மற்றெல்லாம் அதற்குச் செவிமடுத்து ஆடியதால்
தலைமயிரைக்கூட எழுப்பிவிட்டது
உணர்ச்சி

இன்று
மூன்று தினங்களின் பிறகு
உன்னைச் சந்தித்தேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடுந்தூரப் பயணத்தின் களைப்பை
உன்முகத்தில் கண்டேன்

இருந்தாலும் நகரம் இயங்கவில்லை
அதன் நரம்புகளுக்கிடையில் தடைப்பட்ட இரத்தம்
இன்றும் சரியாகப் பாயவில்லை

நாம் மட்டும் சினேகித்தோம்
அந்தப் பொது இடத்தில் நின்றபடி
உன் கடைச் சிப்பந்தியின் பொறுப்பில்லாத்தனம் பற்றி
கருத்துகளை வெளியிட்டோம்

பழையபடி
உன்னோடு நானும்
என்னோடு நீயுமென
நாம் இருவரும் ஒன்றாக மனங்களுக்குள் காற்று
புகவிட்டுக் கதைக்கின்ற
தினமும்
கைசூப்பும் அந்தப் பருவத்தை அடைகின்ற
இடத்திற்கு நாம் போக மறியலுண்டு

தெருக்களுக்குத் தெரியும்
தூவானம் அடங்கும்வரை
அவைகள் தேடாது

●

*20.4.1984*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

46

## காகம் கலைத்த கனவு

கைவேறு
கால்வேறாய்
அங்கங்கள் பொருத்திப் பொருத்தி
மனிதர்கள் தயாரிக்கப்படுவதை
நேற்று என் கனவில் கண்டேன்

கண்கள் இருந்தன ஒரு பைக்குள்
மூக்கும் இருந்தது இன்னொன்றில்
மூழங்கால் பின் மூட்டு
விலா குதி எல்லாமே
எற்கனவே செய்து கடைகளிலே தொங்க
தம்பதியர் வந்தார்கள்
புரட்டிப் புரட்டிச் சிலதைப்
பார்த்தார்கள் பின்னர்
விரும்பியதை எடுத்தார்கள்
கொண்டுபோய் கோர்வைசெய்யக் கொடுத்தார்கள்

வானம் புடவையாய் வெட்டுண்டு
கிடந்தது வீதியாய்
நான் நின்ற பாதை

ஒருவன் வந்தான்
துவக்கோடு பூனை எலிதேடி அலைவதனைப்
பார்த்துப் புன்னகைத்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்புறமாய் வீட்டுக்குள் நுழைந்து
காலில் இருந்த இருதயத்தைக் கழற்றி
மனைவியிடம் கொடுத்துவிட்டுப் படுத்தான்

வெயிலோ கொடுமை
எரிச்சல் தாங்கவில்லை
அவன் பெண்டாட்டி எழுந்தாள் போனாள் அங்கிருந்த
பொத்தானை அழுத்திவிட்டு நிமிர்ந்தாள்
இரவு
உடனே சூரியன் மறைந்தது
நிலவு

நான் இன்னும் கொஞ்சம் கண்ணயர்ந்து போயிருந்தால்
ஆண்டவனைக் குடும்பியிலே* இழுத்து
தன்னுடைய புறங்காலை வணங்கச் செய்திருப்பாள்
மனிசி
காலம் எனக்கு அவ்வளவு மோசமில்லை
எங்கிருந்தோ இந்த நூற்றாண்டுக் காகம்
கத்தியது
இடையில் நின்று முக்கியது
கா...கா...

●

*14.03.1988*

* குடும்பி – குடுமி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

47

**வாசல்**

ஒரு காகம் மீன் தலை போட்டது
இன்னொன்று எச்சமடித்துப் பறந்தது
எனது காதலி எழுதிய கடிதத்தில்

நான் நிலாக்காலம் வந்தால் மகிழ்கின்ற இடம்
அழகிற்குப் பூமரம்
தோகை வளர்ந்து காற்று
சுற்றித் திரிய வசதியான வாசலுக்கு
என் காதலி அனுப்பிய கடிதத்தை ஒப்பிடுவேன்
வடிவு மிகுந்த அவளது கடிதமும்
எனது வாசலும் ஒன்றெனச் சொல்வேன்

இந்தக் காக்கைக்குக் கோபம்
பழுத்த பாக்கை உரித்துக் காயவைத்தால்
தெரிகின்ற தோற்றத்தில்
இருக்கின்ற கிழட்டுக் குருவிக்கும் மன எரிச்சல்

என் வாசலை நானும் இடைக்கிடை கெடுப்பதுண்டு
இருந்தாலும் அது என்னுடைய வாசல்
நான் காலையில் எழுந்ததும் துப்புவேன்
சிலவேளை மூக்கைச் சீறியும் எறிவேன்

அன்புள்ள நண்பனே
நீயும்
எனக்குச் சிறகு முளைக்கின்ற இடத்திற்கு வா

●

*12.07.1988*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 48

### ஓர் ஈர நாள்

வானம் வயிறூதித் தூங்கும்
கூன் கிழவி நாலுகாலில் நடந்து வீதியைக் கடப்பாள்
மழை
மொட்டைத் தலைகள் உடையும்
கொட்டைப் பாக்குகள் விழும்
மழை
மரங்கள் பூக்களை உதிர்த்தும் வாசலில்

ஒரு மின்னல் சரிபிழைபார்த்துவிட்டுப் போகும்
கடலின் மூலைக்குள் இருந்து
யாரோ வானத்தைப் பிளக்கின்ற சத்தம்
இடி.
நேற்றுப் பொரித்த குருவியின் குஞ்சொன்று
அதிர்ச்சியில் மரிக்க
துக்கத்தால் தாய்ப்பறவை வாய்விட்டுக் கத்தும்

நான்
கப்பல் விட்ட நாட்களை நினைத்திருப்பேன்
நாய் நனைந்து என் முன்னால் ஓடும்
அதன் இடுப்புப் புறத்தில் இருந்த சாம்பல்
கரைந்து ஒழுக
பைத்தியம்
இந்த நேரத்தில் கற்பனையில் இருக்கின்ற
படுபேயன் என்றெண்ணி
காற்று இலைகுழையைப் பிய்த்து வீசும் என் முகத்தில்
உம்மா ஜன்னலைச் சாத்திவிட்டுப் போக

இவை மழைநாளின் சம்பவங்கள்
பிறகு வாசலை கோழி கிழைக்கின்ற தினமொன்றின்
புதினங்கள்
வானம் சிறுபிள்ளை மாதிரிச் சிணுங்கும்
கொண்டுவா அந்தக் கிலுக்கியையும் சூப்பியையும்
அழுகையை நிறுத்தென்று கொடுக்க

●

*14.08.1988*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

49

## நான் - பிள்ளை

திடீரென வானம் விழுந்தது
நாலு தென்னைகளும் ஆறேழு பனையும்
தலையாலே முறிந்து தொங்கின
ஒரு கோழி வீறிட்டுக் கத்தியது

எனது பிள்ளை விளையாடிக் கொண்டிருந்தான்
வாசல் முழுக்க நட்சத்திரங்கள்
உடைந்து நொறுங்கிக் கிடந்தன
ஒரு முகிலை எடுத்து அளைந்துவிட்டு முத்தமிட்டான்

பின்னர் எழுந்து
அங்கே சிதறிக் கிடந்த நிலவின் துண்டுகளை
ஒட்டிப் பார்த்தான் பிறகு எறிந்தான்
இன்னொரு நிலவைச் செய்யலாம் என்று
தனக்குள் சொல்லிக் கொண்டு நடந்தான்

நான் வீட்டுக்குள் இருந்தேன்
என் சின்ன வயதில் இந்த நிலவிற்காய்
அழுத அழுகையை நினைத்தேன்
ஒரு நட்சத்திரம்கூட என்னால் அந்த நாட்களில்
பிடித்துப் பார்க்க முடியாமல் போயிற்று
வானம் என்னைவிட வெகு தொலைவில் இருந்தது

என் தலைமுறைக்குள் இப்படியொரு பெரிய மாறுதல்
மாங்காய்க்குக் கல்லை எறிவதுபோல்
வானுக்கு எறிந்து
நிலத்தில் கிடத்துகின்ற பிள்ளை

இப்போது அவன் வானத்தை
மீண்டும் சரிசெய்துவிட்டு நடக்கிறான்

●

*25.3.1989*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

50

## ஒரு மனிதனுக்காகக் காத்திருந்த அன்றைய தினம்

அன்றையக் காலை
கல்விழுந்த குளம்போன்ற முகத்தோடுதான் விடிந்தது

தெருவெங்கும் வாகனங்கள் சிறகுகட்டிப் பறந்தன
சில சில்லாட்டு வண்டிகளும்*
குடல் தெறிக்க
இருந்த வேகத்தை எல்லாமே ஒன்றுசேர்த்து
ஓடித் தொலைந்தன புழுதியுடன் புழுதியைப்போல்

நான் மட்டும்
அந்தக் கடையடியில் காத்திருந்தேன்
முன்னர் கொடுத்த வாக்குறுதி மீறாது
எனக்குள்ளும் இதயம்
அரிசி அரைக்கின்ற இயந்திரத்தைப் போன்று
சத்தமிட்டு என்னை அச்சப் படுத்தியும்
சொன்னபடி அந்த மனிதன் வருவான்
என்ற நினைப்பில்
சந்தியிலே மேய்கின்ற மாடுகளும் ஓடிய அன்றைய தினத்தில்
என் கண்களை மேயவிட்டுக் காத்திருந்தேன்

மனிதர்கள்
காலாலே பறந்தார்கள்
எல்லோருக்கும்
பிடரியிலே குதி பட்டது

சில கிழவிகள்
அன்றுதான் வேகமாய் நடந்ததை நான் கண்டேன்
அன்று ஆமை கூடப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலிப்பாய்ச்சல் பாய்ந்திருக்கும்
அந்த அளவுக்கு பயங்கரமாய் இருந்தது நகரம்

நானோ
கடையடியில் அவனைக் காத்தபடி
பால்மணம் மாறாத சூரியன்
கடலுக்குள் இருந்து நடைபழகி வருவதற்குள்
எனது நகரம் கறுத்தது

இருந்தும் கண்களை மேயவிட்டுக் காத்திருந்தேன்
எனது நினைவில் வரும்போது உம்மா
பழுக்காத மாங்காய்மாதிரி விறைத்த முகத்தோடு
இன்னொரு தரமும் அகதியாய் போவதற்கு
ஆயத்தங்கள் செய்துகொண்டிருந்த
காட்சிகள் வந்து போயின

அந்த மனிதன்
வந்தானோ போனானோ
நானறியேன்
காற்று மட்டும் பொய்யையும் மெய்யையும் கலந்து
எதையோ சொல்லிக்கொண்டு போனது
காதில் விழுந்தது

●

*19.04.1989*

* சில்லாட்டு வண்டிகள் – மாட்டு வண்டிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

51

## இனி அவளுக்கு எழுதப்போவது

அநேகமாய்
ஒவ்வொரு நாளும் துக்கம்
தீன் பொறுத்த கோழி* மாதிரி
விக்கும் அளவுக்கு

எறிந்து விட்டேன் சிரிப்பை
போய் ரோஜாப் பூவாய் மலர்க
அல்லது
மல்லிகையில் கன்னிகட்டு என்று

நான்
கண்ணவிந்த குரங்கு
சிரிப்பை எறியாமல் பிறகென்ன செய்வேன்
கனவில்கூட அநீதியும் பயங்கரமும்
வாற்பூட்டி
என்னை வதைப்பதனால்

தானாக எனது முகம்
'ஐஸ்' அடித்த மீன் சதையைப்போல
விறைத்து
உதடு பிரியுதில்லை

என் சிரிப்பை அவள்
இடைக்கிடை கேட்டுக் கடிதம் எழுதுவாள்
இனி நான் எழுதுவேன்
வெள்ளியைப் பார்த்துத் திருப்தியுறு
முடிந்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெங்காயத் தொலிகளைப் போட்டாவது
பழைய காற்றுகளை வாசலுக்குக் கூட்டிக்
காது கொடு
நான் வரவில்லை
வேண்டுமென்றால் என் முப்பத்திரெண்டு பற்களையும்
முரசுகளையும்
அனுப்புகிறேன் என்று

●

*20.04.1986*

* தீன் பொறுத்த கோழி – தொண்டைக் குழியில் தீனி உள்ள கோழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

52

## குழம்பிச் சண்டையிட்டு பிறகு புன்னகைத்து

முட்டைகளை விட்டு வெளியேறிய
குஞ்சுகள் மாதிரி
மனிதர்கள்
மீண்டும் நகருக்கு வந்தார்கள்

மரத்தை மரம் கிள்ளியது
மண்ணோடு மண் உரஞ்சியது
பொதுக் கட்டிடங்களில் கூரைக்குப் பாரம் வைத்திருந்த
காகங்கள் கண்கெழித்துப் பார்த்தன

இவர்களும் இவர்களுடைய கூத்தும்
என்று நினைத்தது தெருநாய்

பல நாள் அடைபட்ட மனிதன்
கோடுகளைப் போட்டுச் சீரழிந்த சாதி
வருகின்றான் என்று
மாடு கத்தியது சாணம் விழ

இவர்கள்
பழையபடி சிரித்தார்கள்
எதுவுமே நடக்காத மாதிரி
ஆடை உடுத்துத் திரிந்தார்கள்
அந்த ஆடைக்குள் இருந்தது
மானம்

காக்கைக்கும் நாய்க்கும்
ஆடைகள் இல்லை

●

*21.04.1989*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம்.
மாநகர சபை — யாழ்ப்பாணம்.

53

## ஓர் உறவு பூத்த பாட்டு

மிக நீண்ட நாட்கள்
இந்தப் பூமிக்கும் வானுக்கும் இடையில் நிலவுகின்ற
தூரத்தின் அளவுக்கு
உனக்கும் எனக்கும் பிரிவு இருந்தது
நட்பில்லை

இருந்தாலும் நாம்
புறாக்களைச் சாகடித்தல் கிடையாது
நாம் நடந்த பாதைகளில்
கிடந்த புழுக்கள்
நசிபட்டுச் செத்ததாய் வரலாறு இல்லை

நாம் சந்திக்கும் வேளைகளில்
உன் முகத்தில் சந்திரன் உதிக்கவில்லை
என் முகத்தில்
ரோஜா மலரவில்லை
அவ்வளவே

நீயும் நானும்
அண்மையில்தான் இருந்தோம்
நம் உறவுதான்
நான் முன்னர் சொன்னதைப்போல் பூமிக்கும் வானுக்கும்
இடைப்பட்ட தூரமாய்
நெருங்க முடியாமல் தினசரியும் நீண்டது

இன்று
தற்செயலாய் நெருங்கிவிட்டோம்
வானமும் பூமியும் ஒட்டினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் இருக்காது
அதைப்போல
நமக்குள்ளும் இருந்த உறவில்லாத் தன்மை
சிதறியது

நீ சந்திரனை மட்டுமல்ல
இரவு பூத்த வெள்ளிகளையும் உன் முகத்தில்
சுமந்து கொண்டு சிரித்தாய்

நான்
நமக்குத் தெரியாமல் ஏற்பட்ட
மனிதாபிமானத்தின் பாரிய இணைப்புபற்றி
வியந்தபடி
ரோஜாக்களுக்குப் பாத்திகட்டி நீர்விட்டேன்

உன் பற்கள் இன்னும் கறள்பிடிக்கவில்லைதான்

●

*22.04.1989*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

54

## வெயில் மழை புழுதி

சில நாளின் முன்பு
எனக்குள்ளே ஒருவன் இருந்தான்
அவனுக்கும் கண்கள் இருந்தன
காதுகளும் உண்டு
இதயம் மட்டும் மற்றவர் போல் இல்லாமல்
மென்மையாய் இருந்ததனால் அவன்
இந்த உலகத்தைப் பார்த்து அழுதான்
அதுதான் மழை

அவன் இங்குள்ள கொடுமைகள் தாங்காமல்
விட்ட பெருமூச்சு
இப்போது மரங்களிலே படிந்துள்ள புழுதி
அவன் எப்போதுமே குறைகளைத் தேடிக்கொண்டிருந்தான்

பறவைகளுக்கு
இரு சிறகுகள் போதாது
நான்கு சிறகு தேவையென்று நினைத்தான்

இந்தச் சூரியனையும்
அதைக் கண்டு பயருகின்ற நிலவையும்
சேர்த்துவைத்துச் சந்தோஷம் பார்க்க
ஒரு பாலம் போடத் துணிந்தான்
மனிதர்கள் சிரித்தார்கள்
தம் பலங்கள் தெரியாமல்தான்
அவர்கள் நகைத்தார்கள்
எல்லோரும் ஒன்றுபட்டால் பூமியின் சுழற்சியையும்
நிறுத்த முடியுமென்று
அவர்களுக்கு விளங்கவில்லை
எரிச்சல் பட்ட அவன்தான்
வானத்தின் இரவுகளில் வெள்ளியைப்போல் ஓடுபவன்

அவனது கோபம்தான்
வெயில்

●

*22.09.1989*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

55

## ஓர் அகதிக் கவிஞன் நிலாவைப் பார்த்து

நிலாவே இன்று நான்
பாடல் எழுதமாட்டேன்

ஒரு தற்காலிக வீட்டில்
சொந்தமாய் வாசலில்லை
உரிமையோடு பூப்பறித்து முகர
ஒரு மரமில்லை

நீகூட எனக்கு ஓர் அந்நிய நிலவுதான்
எனது வாசலில் விழுகின்ற உன்னுடைய வெளிச்சமும்
இந்த அந்நிய வாசல் ஒளியும்
எனக்குள்ளே பேதத்தைக் கிளப்பி மனநிலையைக் கெடுக்கிறது

நான் மூன்று தினங்களாய் அகதி
இந்த உயிரையும், அதற்குள்ளே ஊறுகின்ற கவிதையையும்
காப்பாற்றி வெற்றிகண்ட ஒருவன்

என் வீட்டைப் பார்த்தவர்கள் கூறுகிறார்கள்
அது மூக்குடைந்து விட்டதாய்
நான் நேசித்து வளர்த்த பூமரங்கள் எல்லாம்
மாட்டின் மலக் குடலில்
தங்கிப் பின்னர் வெளியேறி விட்டதென்றும்
அறிகிறேன்

இங்கே
சொந்த வானமில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் சுவாசிக்கின்ற காற்றுக்கூட
இன்னொரு வீட்டாரின் உடமைபோல் இருக்கிறது

எப்படிப் பாடல் எழுதுவேன் நிலவே
தொண்ணூறாயிரம் வெள்ளிகளையும் உன்னையும் வானத்தையும்
தொலைத்த நிலையில்
என் வண்ணத்துப் பூச்சியையும்
கட்டிலின் இடவில் வாழ்ந்த பல்லியையும்
இழந்த நிலையில்

நீ மேகத்தை எடுத்து முகத்தை மூடிக்கொள்
கவிஞன் பெருமூச்சு விட்டால்
குளிர் தென்றலும் கருகும்
●

*27.11.1989*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

56

## எனது நகரத்தின் பைத்தியக்காரி

இன்றும் எனது நகரம்
கையையும் வாயையும் பொத்தி
மௌனித்திருக்கிறது

இடைக்கிடை இப்படித்தான் விரதம் அனுஷ்டிக்கும் எனது நகரம்
இன்றும் ஏதோ ஒரு நிர்ப்பந்தத்தின் பேரில்
நோன்பிருக்கிறது

பாதைகள்
சூரியன் பட்டுப் பொசுங்கின
முதுகு சொறிந்து ஆறுதல் சொல்ல
ஒரு மனிதனின் காலடி இல்லை

அவள்
அந்தப் பைத்தியக்காரி
எந்த மூலையில் ஒரு கேள்விக்குறி மாதிரிக்
கிடப்பாள்
அந்த ஊத்தைக் கூடாரம்
இன்று
நடமாடித் திரியாது

அவள் எனது நகரத்தின் சின்னம்
தெருப் பசுக்களையும் வெற்றுத் தகரங்களையும் கூட
நேசிக்கத் தெரிந்த ஒருத்தி

இன்று
நகரமே இல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடிந்திருந்தும் நடமாடப் பேண்ாதிய வெளிச்சம் குவிந்திருந்தும்
குதிவெட்டப் பட்டவர்கள் போல
மனிதர்கள் ஊரடங்கிக் கிடப்பதால்

அவள் இன்னும் ஆடைகளை உரிந்து எறிந்திருப்பாள்
இந்த நகருக்குச் சின்னமாய்த் திகழ
இஷ்டமில்லை எனக்கு ஒரு மந்தியை வையுங்கள்
என்பதனைப் போல...

●

*8.12.1989*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

57

## ஒரு கவிதைக்கான நேரத்துக் கோரிக்கை

பொங்கட்டும் கவிதை
பொங்கி வழியட்டும்
பூமரத்தின் அடியெல்லாம் நனையட்டும்

அந்தப் பூமரத்தை வண்டு முகரட்டும்
கன்னியிலும் குருத்திலும்
எனது பெயர் கண்டு வியக்கட்டும்

நீ விளக்கை அணை
நிலவு வருகிறது ஜன்னலுக்குள்
நேற்றுத்தான் பக்குவப்பட்ட காற்றும்
ஓடி வருகிறது
உம்மா கொஞ்சம் வா
இந்தப் பூச்சியைத் தட்டு

இது புதுமை உலகம்
அதிலும் கவிதைக்கு வாழ்வை ஒப்படைத்த எனது
உலகம் மிகவும் புதுமை

இங்குதான் இதயம் கால் முளைத்து நடக்கிறது
நான் அசிங்கத்தைப் பழித்துக் காறித் துப்பிய
துப்பல்கள்கூட வெள்ளியாய் முளைக்கிறது

நீ என் உலகத்துள் நுழையாதே
சிறகு சிலிர்த்த பல நூறு பறவை
கலைந்துவிடும்
போய்
மேகத்தைக் கவனி
இனிப் பெய்யும் மழை
எனது கவிதை
நான்தான் தலைமாரிக்குத் தலைவன்

●

*10.12.1989*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

58

## பறவைக்குக் கடிதம் எழுது

கண் கழன்று விழுகிறது
இங்குள்ள அக்கிரமம் தாங்கொண்ணா
மனம் சிதறி வெடிக்கிறது
வா
எங்காவது தூரத்திற்கு ஓடுவோம்
மாலைக் கருக்கலில் வானத்தின் மூலைக்கு உள்ளால்
ஒரு பறவை பறக்குமே
அதனிடம் கேட்டு நிம்மதியான ஓர் இடத்தைத் தெரிவுசெய்து
கொள்ளலாம்

வா
மூட்டை முடிச்சுகளைக் கட்டு
இங்கிருந்தால்
உணர்ச்சி நரம்புகளில் வெடிப்புக் கூடிவிடும்
சதை நார்கள்கூடக்
கிழியும்
அந்தப் பறவைக்கு நீ
ஒரு கடிதம் எழுதியாவது போடு
உன் வாலில் தொங்குகிறோம் என்று சொல்

மூளை
அடைக்கோழியின் முட்டைபோல்
இப்போது இருக்கிறது
அதில் பதிவு செய்யப்பட்ட அவளது நினைவுகளும்
ஞாபக மறதியாய்ப் போகின்ற அளவுக்கு
ஒவ்வொரு மண்ணுக்கும் ஒவ்வொரு சூரியனாய்
நிலம் கொதிக்கிறது

பறவையைக் கூப்பிடு
அதோ செக்கலுக்குள் வருகிறது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்றில் மிதந்து வருகின்ற அதற்கு
நமது பெருமூச்சுகளைத் தூதனுப்பு
அதற்கென்ன
இறக்கையெல்லாம் சுதந்திரத்தின் சிரிப்பு
தனை மறந்த பாட்டு
காற்று மெத்தையிலே பயணம்

பறவையைக் கூப்பிடு
உன் காலில் தொங்குகிறோம் என்றாவது சொல்
அதன் நகம் கிழித்து நமக்கு முடை வராது
உயிரைச் சீலைக்குள் முடிந்து வாழுதல் கடினம்

●

*10.12.1989*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

59

## என் வேப்பமரப் பெண்டாட்டி

என் வேப்பமரப் பெண்டாட்டியின்
தலை புழுத்துப் போச்சு
காகமே நீ வா
என் சம்பளமில்லாத ஊழியனாக நீ மாறு
பிறகு கவனிப்பேன்

நான் தொழிலுக்கு வரும்போது புன்னகைக்கும் பெண்டாட்டி
என் கந்தோரின் அருகே சிரித்திருந்து
காற்றைத் தீன்போட்டு வளர்த்து
என் அறைக்குள்ளே துரத்தும் பிரியமுள்ள மனைவி
தலை புழுத்துப் போனாள்
காய் பழுத்து நிலம் விழுந்தால் கூட
பழைய அழகில்லை பார்ப்பதற்கு சொறி ஆடு
கழித்து விட்டதைப் போல் அசிங்கம்
வா
என் மனைவிக்குப் பேன் பாரு
பெட்டைக் குயில் கத்திப் பீச்சத்தான் வருகிறது
மனது தாங்குதில்லை

நான் தாவணியும் ரவிக்கைகளும் வாங்கிக் கொடுத்த மரம்
இளம் பெண்ணுக்குப் பிறந்த அழகுள்ள வேம்புக்கு
பூச்சேலை வாங்கத்தான் நானிருந்தேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மை
தலை முழுக்கப் புழு
நோய் என் பெண்ணுக்கு தீரும் நோய்

காகமே வா
உன் குஞ்சு இப்போது தத்திப் பறக்கிறது
இந்தக் கிராமத்து அதிகாரி என் முன்னால் குழந்தைகளின்
உணவைப் பறிக்கிறது

காகமே
இரையூட்டத் தேவையில்லை
என் பெண்ணுக்குப் புழுவெடுத்து புழுப் பறந்து அவள்
பொலிந்தால்
உன் கைக்குக் காப்பு
அவளுக்குக் குதிச் செருப்பு
வா

●

*23.11.1990*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60

## நாயோடு சம்பாசித்தல்

இன்னும் வண்டி வரவில்லை
நிற்கிறேன் நிற்கிறேன் நிற்கிறேன்
தெருவில்

கண்ணெதிரே ஒரு மரம்
நான் பார்த்திருக்கத் துளிர்விட்டது
அதன் கன்னி
பூவாக மலர்ந்தது
இனி காய்க்கலாம் பழுக்கலாம் பழத்தின் விதையும்
நிலத்தில் விழுந்து இன்னொரு மரமும்
முளைக்கலாம் முளைக்கிறது

எனக்கான வண்டி இன்னும் இல்லை
நான் நிற்கும் இடத்தில்
எனது குதிகாலில்
வேர் எழுகிறது இனி நானும் தழைக்க

நாயே
நான் நிற்கின்ற இடத்திற்குப் பக்கத்தில் படுக்கின்ற
அநாதரவான பிராணியே
நான் நடக்க முடியாது தழைத்தால்
நீ காவல் செய்

சிலநேரம் என்னில் ஒருவிதப் பூப்பூக்கும்
நீயே பறித்து முகர்ந்துகொள்

பிரதேச நூலகம்.
ஊர்காவற்றுறை சபை - வேலணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் காயை
அது முதிர்ந்து கனியை
நீயே புசி

இந்த மனிதன்
தினமும் தொழிலுக்காய்ப் பயணித்த பிறவி
வாகனம் காத்து நின்று தழைத்தான்
என்பதை நீ
குரைத்தாவது ஊருக்கு விளக்கு

இனி மக்கள்
கால்களுக்கு சக்கரம் பூட்டிப் பயணிக்கும்
தலைமுறையும் வந்துவிடும்
என் வண்டிதான் வராது
எந்த மலையோடு மோதிப் புரண்டதோ
கண்கெட்ட பாதை விழுங்கி
மலமாகத் தள்ளியதோ
என் தலையில் குருத்து
நிலத்தில் ஆணிவேர்

●

*14.12.1990*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆணிவேர் அறுந்த நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

61

## 1989 நவம்பர் உறவுகள்

நீ பதறுவாய்
எனக்குத் தெரியும்
உன்னுடைய காற்சட்டை தொளதொளுத்து விழும்
என் நினைவில் உடல் மெலிந்து

நண்ப
தொடர்புகள் அறுந்தன
உன் பக்கமாவது பெருமூச்சைவிட
நீயிருக்கும் திக்கு விளங்கவில்லை

என் கண்ணைப் பிடுங்கி உன்பக்கம் எறிவேன்
உன் முகத்தைக் காணத்தான்
இரு காதுகளுக்கும் சிறகுதைத்து விடுவேன்
உன் சிரிப்பைக் கேட்டுவர

உன் திக்கு விளங்கவில்லை
நீ சுவாசித்து விட்ட காற்று இறந்ததுவோ
என்னிடத்தில் வருகின்ற அதிலே
உன் மணத்தைக் காணவில்லை
நீ காறித் துப்பிய துப்பலாவது இந்த
மழைத் துளியில் தெரியவில்லை

நீ எங்கிருந்தாவது உரக்கக் கத்தேன்
இந்தத் தலைமாரிக் காலத்து இடி முழக்கத்திலாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரொலிக்கட்டும்
இல்லையென்றால் கனவிலாவது வாவேன்
காது பிய்ந்தபடி
முகம் கறுத்தபடி

எனக்குள்ளும் குருவிகள் செத்துப்போயின
இந்த *1989* நவம்பர் அப்படி

●

***26.11.1989***

(இலங்கையில் உள்ள கல்முனை என்னும் ஊரில் 1989 நவம்பர் மாதம் அசம்பாவிதங்கள் நடந்து மக்கள் சிலகாலம் இடம்பெயர்ந்தனர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

62

## என்னோடு அகதி முகாமிலிருந்த மற்றவருக்கு

ஓர் அகதிப் பாடலைப் பாடு
கவிதையாய் வடி
தேவையென்றால்
காற்றில் ஒலிப் பதிவு செய்து
உலகமெங்கும் பரப்பு

ஓரிரவு ஒருவன் அழுதான்
மலம் நாற்ற மென்று
இன்னொருவன் எழுந்தான் நடந்தான் முகாமெல்லாம்
மனைவியைத் தேடி அலுத்தான்

இரவு அழுதது
சிணு சிணுத்த மழை
பிள்ளையைக் கிள்ள

தொட்டிலாட்ட வந்தது குளிர்காற்று
ஒரு பெண்ணின் அழுக்குத் துணிக்குள் நுழைந்து
அவளது வாசத்தை சபைக்கு விட்டது

கரித்துண்டுப் பாண்கள் மழைக்கு ஊதின
நேற்றுக் கண்ட சவத்தைப் போல
ஐயோ இது அகதிமுகாம் என்று
ஒரு பிள்ளைகூடப் பிறந்தது

வானம் மட்டும்
முக்கி முக்கிப் பெய்தது
தனக்குள் இருக்கின்ற வெள்ளிகளையாவது உதிர்த்தி
இவர்கள் முகத்தில் புன்னகையைக் கொண்டுவர

நான் அகதிப்பாடலை இதயத்தில் அச்சடித்து
குருதியை வாசிக்கச் சொன்னேன்
வியர்வையும் படித்தது

●

*08.12.1989*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 63

### குருட்டு வண்ணாத்தி மோதிய காலை

ஒரு நாளும்
குருட்டு வண்ணாத்தி மோதவே கூடாது
இன்றுதான் உடைந்தது என் வானம்
என் நிலம் இன்றுதான்
பிளந்தது
என் மரம் சாய்ந்தது
என் காற்று கல்லாகி உருண்டது

என் வாசலின் பூ
விரியாமல் விம்மியது இன்றுதான்
அந்தக் குருட்டு வண்ணாத்தி மோதிய மோதலால்
என் நெஞ்சு வெடித்த மாதிரி
நான் ரசிக்கும் வண்டும்
ஏமாந்து சிதறியது
குருத்துக்கள் சுருண்டு தீக்குச்சி மாதிரி
எரிந்தன
பூ மரத்தில்

இன்று காலை
ஒரு கொலைஞனுக்கு ஒப்பான பொழுது
என்னில் குருட்டு வண்ணாத்தியை மோதவைத்த இளந்தென்றல்
கொடிது
குடும்பத்தோடு கொல்லப்பட நியாயமுள்ளது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் கண்கள் புழுத்துத் தெறிக்கின்றன இறைவனே
மனம் முழுக்க எறும்புகள்

இன்று உனக்கு மழை பெய்வது விருப்பமில்லையா
ஊர் குளிராவது பிடிக்காதா
எங்கும் எரிகிறது நெருப்பு
'அவள்' போன திசையெல்லாம்
ஈயம் உறைகிறது
விஷ ஆறு ஊற்றெடுத்துப் பாய்கிறது
என் இதயத்தைக் குத்திக் கையில் எடுத்தபடி
ஒரு பெண் பேய் நிற்கிறது
அதைப் பார்த்து நாய்
குரைத்து நாக்கால் ஒழுக
அதை
இன்னொருவன் நக்கியபடி
●

*13.10.1991*

பொது நூலகம்.
நகர சபை - கல்முனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

64

## மின்வெட்டுக் குருவி

நேற்றுத்தான்
நேற்று இரவு நின்றவர்தான்
நேற்றுத்தான்
நிலா பொசுங்கிய நேற்று இரவு
தன் குழந்தையைத் தூக்கி மடிக்குள்ளே வைத்து
தொப்புளுக்குக் கீழே கிள்ளி மகிழ்ந்தவர்தான்
நேற்றுத்தான்
நேற்று இரவேதான்
உண்ட களைப்புத் தீர
வீதியில் அங்கும் இங்கும் அங்குமாய்
நடந்தவர்தான்
ஆடையை அவிழ்த்து உயர்த்தி
தன் உள் உறுப்புகளுக்கு
உற்சாகமூட்டியவர்தான்
நேற்றுத்தான்
நேற்று இரவேதான்

நாமென்ன
வானத்தைக் கரத்தால் தாங்குகின்ற ஆட்களா
வரும் போகும்
அந்த திகதி சொல்லாத மின்வெட்டுக் குருவியை
அறிய

உனக்கும் எனக்கும்தான் அந்தத் திறன் இருந்திருந்தால்
நிலம் சுழலுமே
நம் மூச்சுப் பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனக்கும் எனக்கும்தான் அந்தத் திறன் இருந்திருந்தால்
சூரியன் உதிருமே
நம் காற்று விழுந்து

போ
நேற்று இரவுதான்
நேற்று இரவேதான்
சிரித்தவர் கதைத்தவர்
ஒரு காலுக்கு மேலே ஒரு காலைப் போட்டு
ஆறுதலாக இருந்தவர்
நேற்று இரவுதான்
நேற்று இரவேதான்
நேற்று
ஆமாம் நேற்று
நிலா பொசுங்கிய நேற்று
நேற்று இரவேதான்
பாவம்

●

*13.10.1991*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

65

## அன்னியப் பூனை

ஓர் அன்னியப் பூனைபோல் வளவுக்குள் நுழையாதே
வளர்ப்பு நாயாய் வா

ஒற்றுமையே ஊர்முழுக்கத் தேடுகின்ற ஒற்றுமையே
வா
என்னைக் கட்டிப் பிடி
கொண்டாடு

நான் நாக்கை வெட்டி எறிந்தால்
அவள் துடிக்கட்டும்
என் தோலில் எறும்பு கடித்தால்
அவள் துடிக்கட்டும்

என் தலையில் ஏறி என்னை வழிநடத்து
ஒற்றுமையே ஊர்முழுக்கத் தேடுகின்ற ஒற்றுமையே
என் நரம்புக்குள் புகுந்து ஏற்கனவே படிந்துள்ள
ஒட்டடையைத் துடை

நீ வரத்தானே என் வாசலில் பூமரங்கள் நட்டுள்ளேன்
என்றோ ஒருநாள் நீ வருவாய் என்றேதான்
அந்த மரங்களில் குருவிகளை வளர்க்கின்றேன்
ஒவ்வொரு காலையிலும் உனது நினைவாய்த்தான்
பழுத்த இலைகளை இணுங்குகிறேன்
உன் வரவை எதிர்பார்த்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளை விரிய இருக்கின்ற கன்னிகளை
ஆட்டிப் பார்த்து நேரத்தைத் தொலைக்கின்றேன்

வா
தொலைந்த மனிதனது ஒற்றுமையே
வந்து
குயில்போல கூவு
காய்கள் பழுக்கட்டும்
அவற்றின் விதைவிழுந்து மரங்கள் மீண்டும்
மீண்டும் மீண்டும்
மண்ணில் முளைக்கட்டும்
அந்த மரங்களின் கிளைகளில்
நான் ஒருநாள் ஏறித் தொங்குவேன்
●

*02.09.1991*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

66

## செருப்புக்குத் தாலாட்டு

நீ எக்கேடு கெட்டாலும்
வெறுப்பில்லை
நிழலுக்குள் இரு
உன்னில்
சிறு தூசி படிந்தாலும் நீ என்னைக் கேட்கலாம்
என் பெட்டிக்குள் படு
ஆராரோ என் அன்பே...

இன்று காலையில்
உன்னில் யார் கண்ணை வைத்தது
சிறு காய்ச்சல்கூட உனக்கு வந்ததுபோல்
தடமும் இல்லையே

என் அன்பே
அழகிய ராணியே
புனிதச் செருப்பே
புறாவே
இன்று ஏன்
வழியில் இடையில்
காது அறுந்து கெழிந்தாய்

நீ
கொடு வெயில் தின்ற தியாகிதான்
என் காலின் அழகாகி
நான் கூப்பிட்டால் 'ஆம்' போடும்
உயிர்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னை ஒருநாள் நாய் கௌவிக்கொண்டு ஓடுகையில்
நான் பட்ட அவதி
இன்னும் மறக்கவில்லை
கடந்த மாரிக்குள் உனது நுனி மூக்கின்
குண்டு பறக்க எனக்கு வந்த துயரம்
நெஞ்சுக்குள் இருக்கிறது

இருந்தாலும் என்ன
உன் புத்தி போகவில்லை
நடுத் தெருவில் கழுத்தறுத்தாய்
இதுவரைக்கும் நீ செய்த
தியாகத்தை அழித்தாய்
விஷப் பாம்பே
நரியே
மந்திக் குரங்கே
உன்னைப் போல் நானில்லை
என் காலின் அழகை நீ குறைத்துக் கொண்டாலும்
வாலில் பிடித்து உன்னை எறியேன்
பெட்டிக்குள் உறங்கு
விழி மூடு
என்றும் நீ எனக்கு கலியாணப் பெண்தான்
மாமன் அடித்தாரோ மல்லிகைப் பூச் செண்டாலே

●

*05.09.1991*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

67

## சிறகோடு பறந்த நரி

நான் வெடித்தேன்
எனக்குள் இருந்த கவிதைகள் எல்லாம்
தெருவிலும் ஓரங்களில் இருந்த மரங்களிலுமாய்
சிதறின
அவைகளில் எல்லாம் எறும்புகள் ஊர்ந்தன
இனிப்பில்

நரி
சிறகோடு பறந்ததை
அன்றுதான் நான் கண்டேன்
இரும்புத் திரைபோட்டு
அந்த நரியை
வாழ்க்கையில் ஒரு கணப் பொழுதாவது
காணக் கூடாதென
நான் வைத்திருந்த கண்கள்
அன்று விஷம் குடித்தன

கொடிய வெயிலுக்குள்ளும்
அவளது நிழல்
பாம்பாகத் தெரிந்தது
அவள் அசைந்து அசைந்து போனாள்
எனது உயிரைத் தின்றபடி
நிழல்
பேயாகவும் சிலநேரம் தெரிந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் அவளின்
துரோகத்தின் கலங்களை ஆராய்ந்தேன்
பழைய ஞாபகங்கள்
முகத்திலும் மண்டையிலும் அடித்தன
நான் வெடித்தேன்
அந்தச் சத்தத்தில் குருவிகள் கத்தின
வாகனம் நூறு ஓரத்தில் எறியப்பட்டு
நசிந்தன

அவள்
என்னை வென்றபடி போனாள்
அவள் கரத்தில்
அவளின்
சுயரூபக் கொடி பறந்தது

●

*06.01.1992*

உதாத்தூமை பகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 68

# சோறுபோடும் பீங்கானின் புள்ளி

கடல்நீரில் முளைத்ததுதான் இந்தக் கிராமம்
எனக்கு
சோறு போடும் பீங்கான்

தென்னைகளும் பனைகளும்தான்
இந்தக் கிராமத்தின் கால்கள்
கடல்
இது ஒத்தி விளையாடும் பொருள்

இங்கு பட்டம் விடுவதில்லை சிறுவர்கள்
உயிருள்ள பட்டங்களாய்
நூல் இன்றி
வாலும் இன்றித்தான்
யாரும் விடாமலே பலநூறு பறவைகள்
பறக்கின்றன

ஒரு நாள்
ஒரு பறவைப் பட்டம்
மரத்தில் தொங்கியது
பிணமாய்
என் கண் கலங்கியது

காகங்கள் சத்தம்போட்டுச் சொல்லின
நாங்கள் ஒற்றுமையாய் இருக்கிறோம்
சிறுதவறு நடந்துவிட்டது
இது இயற்கை மரணம்
என்று

இருந்தாலும் என் மனம் அழுதது
என் சோறு போடும் பீங்கானில்
ஒரு புள்ளி
அழிந்ததைப்போல இருந்தது எனக்கு

●

*06.01.1992*

(குறிப்பிட்ட கிராமத்தில்தான் எனது தொழில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

69

## வேர் விழுங்காத பறவை

உனது எச்சில்
இனிப் படக்கூடாது
என்பதற்காகவே விலகினேன்

பழைய காலங்களின் நினைவுகள் வருகின்றன
ஒரு பாத்திரம்
இரு கைகள்
நான் இழுக்கிறேன்
நீ கடிக்கிறாய்
இருவரும்
புசிக்கிறோம்

மலம்கழிக்க வேண்டுமென்று நீ சொன்னால்
நான் கழித்தேன்
உனக்கு வயிறு
ஆறுதலாக இருந்தது

நான் தூங்கவேண்டும் என்பதற்காக
நீ
பாய்போட்டுப் படுத்தாய்
நீ நகம் அறுத்தாய்
எனது நகம் அழகாக வெட்டப்பட்டது
நான் பல் விளக்கினேன்
வாய் கழுவாமலே நீ கோப்பி குடித்தாய்

இறந்த காலங்கள் மறைகின்றன
நிகழ் காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பிட்டும் எனக்குப் பசி
உன் நினைவில்
குறட்டை விட்டுத் தூங்கியும்
விழிப்பு
உனது எண்ணத்தால்

என் மனதின் காற்றோடு கலந்த உன்னுடைய வாசம்
இன்னும் இருக்கிறது
நெஞ்சுச் சுவர்களில் மோதியபடி
என் கண்கள் தூக்கிய உனது முகத்தை
இன்னும் அதன் கைகள் வைக்கவில்லை

இருந்தாலும்
உன் எச்சில் படவேண்டாம் என்னில்
விலகிக் கொள்கிறேன்
பறவை பழம் கொத்தும்
வேர் விழுங்காது

●

*06.01.1992*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

70

## மீன் கடித்த கவிதை

மனதை அறுத்தெறிந்தால்
பொறுக்கி வந்து ஒட்டும்
இரத்தத்தில் குந்தி
உன்னும்

நெஞ்சு மயிர்களிலே ஊஞ்சலைக் கட்டும்
நான் புத்தகத்தில்
கொட்டக் கொட்ட
அற்புதமாய் குவியும்

எனக்கு கவிதை என்ற ஒரு சிறுபிள்ளை உண்டு
அதன் ஷேட்டை
முன் சொன்னேன்
இன்னும் சொல்கிறேன்

வண்ணாத்திப் பூச்சியிலே தானேறிக் குந்தும்
ஊரெல்லாம் பறந்து
பூவைக் காதலிக்கும்
அவள் வீட்டு வாசலுக்கு
கள்ளனைப்போல் போகும்
தூக்கி வரும் அவளை என் மனதுக்குள் தூங்க வைக்கும்

ஆராரோப் பாடும்
நிலவுக்கு சிலநாளில்
எவனுக்கும் இரங்கி
தன் கழுத்தைக் கொடுக்கும்

ஒருநாள் என்கவிதை கடலுக்குள் மூழ்கியது
மீன்கள் கடித்து
உடம்பெல்லாம் சிறுகாயம்

●

*06.01.1992*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

71

## விளையாடப் போன மனதுக்கு

வா
கம்போடு வருகிறேன்
முகத்தைக் கழுவு
படி

என்ன முகமெல்லாம் ஊத்தை
எந்தப் புழுதியிலே விழுந்தாய்
நெஞ்சுக்குள் ஏறு
நீ இருக்கும் இடத்தில்
போய் இரு
தொழு

ஊர்ப் புழுதியிலே விழாதே
நல்ல பிள்ளையாய் இரு
தேவையென்றால் மாத்திரம் வெளிக்கிறங்கு
இல்லையென்றால்
பூக்களை முகரு
காற்றை உரசும் தென்னங்குருத்தை ரசி
உனக்கென்ன கவலை

ஊர் கெட்டுவிட்டது
இங்குள்ள பிள்ளைகள் எல்லாம்
தலையாலே தெறித்து
முண்டமாய் திரிகின்றார்

அவர்களுடன் உனக்கென்ன விளையாட்டு
உனக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலா மாமா நான் வாங்கித்தர வில்லையா
கடல் மைதானம் உனக்கு போட்டுத் தந்துள்ளேன்
குதித்து விளையாட

வீட்டில் இவை இருக்க
நீயேன் வெளியில்
போ
காலையும் முகத்தையும் கழுவு
வா
அன்புக் குழந்தையே
என் 'மனராஜா'

●

*06.01.1992*

பொது நூலகம்.
மாநகர் சபை - கல்முனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

72

## ஆலாப் பாட்டு

வெட்ட வெட்ட முளைக்கிறது பூதம்
அற்ப புழுவும்
எளிய பூச்சியும்தான்
மனிதர்களாய் நிற்கின்றன ஊரில்
எனது கண்களை
ஆலா நீ கொண்டோடு ஆலா நீ கொண்டோடு

கொத்திப் புசி ஆலா என்னுடைய கண்ணிரண்டை
வெள்ளை மொழியை வேகவைத்துக் குடி
பச்சையாய் குடிக்காதே
கொடும் பாவம் பார்த்தகண்கள்
நெருப்பில் சுட்டு நீ புசித்தால் கூட
ஆகும் ஆலா கொண்டோடு என் கண்ணை

காற்றை வறுத்துக் கோதுகளைக் கசக்க
இயலாது ஆலா இயலாது எனக்கு
நள்ளிரவின் கறுப்பை சீலையிலே வடிக்க
முடியாது ஆலா என்னாலே இங்கு

நாய்குரைத்துக் கத்திவிட்டு என்னிடத்தில் சொல்கிறது
என் பாட்டைக் கேட்டாயா இனிமை அதிகமென்று
'துலா' அழுதுவிட்டு வீண்பெருமை அடிக்கிறது
சங்கீதம் வாசித்தேன் நானென்று மார்புதட்டி
எனக்கு
நெருப்புக் குளிர்கிறது
தண்ணீரே சுடுகிறது
வா ஆலா என்னை உருப்படியாய் நீ தூக்கிப்
பறந்தாலும் சந்தோஷம் வந்து தரை இறங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறகை மடித்துக் கப்பல்போல் நீ இறங்கு
கோழிக் குஞ்சுகளில்
உனக்கு ருசி இருக்காது
தலையை வெட்டி உயிரோடு எறிந்ததனைப்
பார்த்த கண்கள்
என்னுடைய மாணிக்கம்
கூட்டி வைத்து மனிதர்களை அழித்ததனைக்
கண்ட விழிகள்
என்னுடைய இவை இரண்டும்

ருசி இருக்கும் ஆலா நாக்கில் எச்சில் வரும்
உண்மை ஒரு நாளும் நீ மறக்காய் கண் ருசியை
நிலவின் நுனி மூக்கு
வானத்தில் தெரிகிறது
ஊர் உழுத சூரியனார் முகில் சாய்த்துப் போகின்றார்
வா ஆலா வா செக்கலுக்குள் யாருக்கும்
சொல்லாமல் காரியத்தை முடிப்போம்
ருசிக் கண்கள்

●

*03.01.1992*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

73

## சிறப்பாக விளையாடிய சென்ற ஆண்டு

நானும் சென்ற ஆண்டுடன்
காற்பந்து விளையாடினேன்
தோற்றது
நான்தான்

ஒவ்வொரு பந்தையும் வெகு நுட்பமாக அடித்தது
சென்ற ஆண்டு
என் பக்கமே அதிகம் பந்துகள் விழுந்தன
சென்ற ஆண்டு
பெரிய
வீரன்

நல்ல முறையில் அதிகம் பயிற்சிபெற்று வந்ததுதான்
போன ஆண்டு
ஒவ்வொரு பந்தையும் அது அடித்த விதம்
மெய் சிலிர்த்தது

கெட்டித்தனமான மாதங்கள் இருந்தன அதற்கு
நான் எதிர்த்து அடித்த பந்துகளை
அவை ஒவ்வொன்றும்
தடுத்த விதம்
மிக இலகுவாக இருந்தன

நடுவரால் சென்ற ஆண்டின்
ஒரு மாதத்தையாவது பிழைகண்டு வெளியேற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாமல் போனதுதான்
அந்த ஆண்டின்
மிகப் பெரிய விளையாட்டுச் சிறப்பு
இந்த ஆண்டுடன் நான் போட்டிக்குப் போகப் போவதில்லை

கடந்த ஆண்டுடன் மோதிய
உடைவுகளும்
மன முறிவுகளும்
எனக்குள் இருக்கின்றன
வேண்டுமென்றால் நீ மோது
இந்த ஆண்டும் தங்கப் பதக்கம் பெற்றுப் போகுமென்றுதான்
நான் கருதுகிறேன்
உன் அதிஷ்டம் எப்படியோ

●

*07.10.1992*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

74

## கவிஞன் முளைக்கும் கட்டில்

நான் என்னுடைய இந்தக்
கட்டிலில்தான் முளைக்கிறேன்
தலையணையைப் பற்றிப் பிடித்தபடி
படருகிறேன்

இடைக்கிடை சில இரவுகளில்
என் கட்டிலில்
வெயில் விழுகிறது
சில கோடைகளில்
மழை பெய்கிறது இதில்

எது எப்படித்தான் இருந்தாலும்
மொத்தமாக
நான் பூப்பது என்னுடைய கட்டிலில்தான்
காய்ப்பதும் பழுப்பதும்
இதிலேயே

என் பூவாசம் குடிக்க சில எச்சில் காற்று வரும்
என் கட்டிலுக்கு
என் ஆடை இலைகளைக் குலைக்கும்
காயைத் தடவும்

என் கட்டில்
அதுதான் நான் முளைக்கும் நிலம்
நான் வேர்விட்டு வேர்விட்டு பழசாகிப் போனதுதான்
பசளை
நிலா சிலநாளில் ஊற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில் வண்டு
என்னைச் சுற்றிப் பறந்து பறந்து
புழுவுக்கு மருந்தடிக்கும்

இன்றிரவு
வெயில் விழவில்லை
மா பெரிய மழை பொழிகிறது
நான் பூக்கிறேன்

அதிகம் அதிகமாய் காய்க்கிறேன்
பழுக்கிறேன்
கூடையைத் தூக்கிக் கொண்டு வருகிறது காற்று
ஊரெல்லாம் கூறி விற்க

●

*07.01.1992*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 75

### களை

அறுத்து எறிந்தும் பார்க்கிறேன்
வாலை வெட்டுகிறேன்
காலால் நசிக்கிறேன்
குழி தோண்டியும் புதைக்கிறேன்
ஆசை
எதற்கும் அடங்கவில்லை
விளைகிறது

கொண்டுபோய் கடலுக்குள் கொட்டுகிறேன்
தனிய இருந்து சிந்தித்து நெருப்பில்
எரித்துக் கருக்குகிறேன்
மனதுக்குள்
பசளை போடுகிறேன்
அற்ப ஆசைகள் விளையாமல் நல்ல
எண்ணங்கள் பிஞ்சுவிட
முளைத்துக்கொண்டுதான் இருக்கிறது
களை

வானின் பறவைகளை நான் ஒருநாள் கூப்பிட்டேன்
எப்படி உங்களின் அற்ப ஆசைகளை
கொன்றீர்கள் என்று வினவ
கண்ணின் மயிர்களை நான் இணுங்கிக் கேட்கின்றேன்
நெடுக்க விரும்பாமல் குட்டையாய் இருக்கின்றீர்
எப்படி

எல்லாம் தத்தம் பாட்டில் பறந்தன
கண்ணில் இருந்தன


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்குள் முளைக்கும் கொடிய ஆசையோ
இன்னும் வளர்ந்து
நானும் பறக்கலாம்
சே... சிறகு இல்லையே
மயிராய் இருக்கலாம்
கண்ணின் அருகிலே
என்று விளைந்தது
வாலை ஆட்டியே

நான் எந்த மடுவுக்குள் இதனைப் புதைக்க

●

*07.01.1992*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

76

## நாய் குரைக்கும் இவர்கள்

மரணிக்க எனக்குப் பயமாக இருக்கிறது
குழியைத் தோண்டுவார்கள்
என்னை இலகுவாகத் தாக்க

எந்த எதிர்த் தாக்குதலும் இன்றி
பச்சை காயுமுன்னர்
என் இதயத்தைக் குத்துவார்கள்
கண்களைப் பிடுங்குவார்கள்
நாக்கை அறுத்து
ஓர் இலையில் எடுத்துக் கொண்டு
கொடுப்பை வெட்டிக் கிழிப்பார்கள்

நான் மரணிக்க மாட்டேன்
இரும்பாகவும் உருக்காகவும் மாறிவிடுகிறேன்
என் இதயம் இருக்கட்டும் இவர்களைப்
பாடிய படியே
என் கண்கள் இன்னும் இவர்களை
நன்றாக அவதானிக்கட்டும்
நாக்கு இவர்களின் குறையைச்
சொல்லட்டும்

என் அடக்கப் பலகையைக் கூட
இவர்கள் எரிப்பார்கள்
என் மீசான்கட்டையில்* குந்தும்
குருவியைக் கூட
இவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடுவார்கள்
மண் குவியலில் முளைக்கும் புல்லையும்
இவர்கள் அரிவார்கள்

நான் இறக்கமாட்டேன்
எனக்காக வரப்போகின்ற பேய்
வேறு யாரின் பேரிலாவது
ஊரில் திரியட்டும்
அதன் பின்னால் குரைக்க இருக்கின்ற நாய்கள்
தங்கள் வீடுகளைக் காவல் காக்கட்டும்

இப்போதும் குரைப்பது நாய்கள்
இவர்களைப் பார்த்துதான்
இரவுகளிலும் பகல்களிலும்

*06.01.1992*

* மீசான்கட்டை – முஸ்லிம்களின் அடக்கஸ்தலத்தில் நடப்படும் மரத் துண்டுகள்

பொது நூலகம் - கல்முனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

77

## தமிழ் பேசும் நாய்

நான் கரைகிறேன்
அள்ளி ஊற்றுங்கள் மல்லிகை மரத்திற்கு
பூக்கட்டும்

வெள்ளை மலர்களைப் பூத்த மல்லிகை
இனி
என்போல முகச்சாயலில் பூக்களை
கக்கட்டும்
உடம்பெல்லாம் உரோமங்கள் முளைக்கட்டும்
இலையிலும் குருத்திலும்
தாடி மீசை எல்லாம் அரும்பட்டும்
ஆண்குறி தொங்கட்டும்

என்தேகம் முழுக்கக் கரைந்துவிட்டது
வாளியைக் கொண்டு வாருங்கள்
கிணற்றடியில் நிற்கும் தென்னைக்கும் தோடைக்கும்
பாத்தி பிடித்துப் பாய்ச்சுங்கள்
தேங்காயில் என் காது முளைக்கட்டும்
மூக்கும் தோலும்
தோடம் பழத்தில் வரும்

வெக்கை தாங்கவில்லை
மிகவும் உருகுகிறேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீணாக என்னுடம்பு ஒழுகிக் காய்வதிலும்
கொசு நக்கி ரசிப்பதிலும்
பயன் - மரங்களுக்குப் பாய்ச்சுதல்
வாருங்கள்
பாத்திரம் நிறைய அள்ளுங்கள்
முருங்கைக்கும் காய்க்கட்டும் என்னைக் கொண்டு ஊற்றுங்கள்

என் விரல்கள் காய்க்கும்
கண்ணிமைகள் கிளையில் துளிர்க்கும்
பூ
என் பல்

வாளி நிறைய நான் நிறைகிறேன்
நீராக
நாய்க்கும் வேண்டுமென்றால் கொடுங்கள் குடித்துவிட்டு
தமிழ் பேசும்
குரைக்காது
●

*08.01.1992*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

78

## நான் பறக்கின்ற சிட்டுக் குருவி

சும்மா உசுப்பாதே பூமரத்தை
காற்றுக் குடிக்காத கன்னிகள்
விழும்

சிறகில் சுளுக்கெடுத்து விட்டாயா
சொண்டில் எண்ணெய் தடவி
பயணத்திற்குத் தயாரா

சரி வருகிறேன் இந்த உலகை வட்டமிட
ஒரு சிட்டுக் குருவியின் விமானியாக
உன்னை ஓட்டிச்செல்கிறேன்
துணிவாய்

கால்களுக்கு ஒத்தடம் கொடுத்துக் கொண்டாயா
உன்னில் நானேறி இருக்கின்ற நேரத்தில்
ஏற்படும் நோவைத் தாங்க
முட்டை குடிக்கும் வசதியுண்டா

சிட்டுக் குருவியே
என் பூமரத்தை ஆட்டாதே
அடிப் பலமே இல்லாத
ஒரு கீரைத் தண்டை நிலம் ஒட்டி வைத்துள்ளேன்
பசையில்

காதை அடைத்து
பயணிக்க தயாராகு
விண்வெளியில் முகில்கள்
இரையும் அதைத் தடுக்க
உதறு மயிரை
புழுக்களினைக் கொட்டு
வெள்ளிகளில் விழுந்து அவை புழுத்துப் போகும்
பூ மரத்தை உசுப்பாதே
போவோம்

●

*19.02.1992*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

79

## தேசம் எரிகின்ற கனவு

எனது தேசம் எரிகின்ற கனவு
இன்னும் கலையவில்லை
கண்களைக் கசக்கினேன்
தண்ணீர் கொண்டு கழுவினேன்
மெல்லிய சீலையால் துடைத்தேன்
இன்னும் கலையவில்லை
படம்
ஓடிக் கொண்டுதான் இருக்கிறது

கனவு கலையாத எனது கண்களை
நான் என்ன செய்ய
சூரியனைப் பார்க்கிறேன்
பகல் வேளையாய் இருந்த பொழுதும்
மங்கிய வெள்ளிகளை எண்ணி
கண்ணின் கூர்மையை அதிகப்படுத்துகிறேன்
கலையவில்லை கனவு
இன்னும் என்தேசம் எரிந்துகொண்டுதான் இருக்கிறது

நான் இன்னும்
தெருவில் உதிர்ந்து காலுக்குள் நசிபடும்
பெண்ணின் முலைகளைப் பொறுக்குகிறேன்
எறும்பின் இரைப் பைக்குள்
சிறைவைத்துத் தடுத்திருக்கும்
மனிதர்களைப் பார்த்து அழுகிறேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றப்பர் மரங்களை நிமிர்த்துகிறேன்
எரிந்த தேயிலையின்
கொழுந்தை மூக்கில் பிடித்து அழுகிறேன்
இன்னும் கனவு நீண்டுதான் போகிறது
கலையவில்லை

என் தேசமே
நீ எரியும் கனவுக்கு இவ்வளவு சக்தியா
விடிய விடியக் கண்டும்
விடிந்தும் ஓடுகிறதே திரை
என் கண்களாகி
உன் தோஷம்

●

*17.02.1992*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 80

# இது அவளுக்குரிய நேரம்

இது அவளுக்குரிய நேரம்
என் மூளையின் மின்சாரமே தடைப்படு
இதயம் இயங்கட்டும்
அவளை நினைக்க

என் இதயத்தின் குருவிகள் பறந்து
அவளிடம் போகட்டும்
அவளின் வாசத்தைச் சுமந்துவந்து
என் மனதுக்குள் இருக்கின்ற மரத்தில்
கூடுகட்டி
முட்டை இடட்டும்
அவள் பெயரால்

இது அவளுக்குரிய நேரமேதான்
தொடர்ந்து
சூரியனைச் சாப்பிடுவது பற்றியும்
நிலவைக் குடிக்காத குறையைச் சொல்லியும்
அழுதல் நியாயமல்ல

இந்த இரவிலும் என் நினைவின் குருவிகள்
அவளிடத்தில் போகட்டும்
அவள் ஆடை கலைந்து தூங்குதல் கண்டால்
அதைச் சரி செய்யட்டும்
என் பூவைக் கடித்த நுளம்பைக்
கொல்லட்டும்

என் மூளையே
இப்போது இதயம் இயங்கட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவுக் குருவிகளைப் பறக்கவிட்டு
ஒரு நாளில் ஒரு நிமிடமாவது
நான் அவளை நினைக்க
என் இதயம் இயங்குவது
வீணா

சொண்டில் ஒரு தலை முடியைச் சுமந்துவந்து
அவை எனக்குத் தரட்டும்
உயிரின்

●

20.02.1992

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

81

## ஆணிவேர் அறுந்த நான்

எனது ஆணிவேர் அறுந்தமாதிரி இருந்தது
இன்று
என் குருத்துக்கள் கருகின
நாளை நான்விட எண்ணியிருந்த
கன்னிகளும் கிளைகளும்
நொறுங்கின
தோல் உரிய உரிய
வேதனை தாங்காமல்
துடித்தேன்

என்ன இருந்தாலும்
அவன் 'அப்படிச்' சொல்லியிருக்கக் கூடாது
அவன் வாயில் இருந்து
பாய்ந்த ஈட்டியால்
என் குடற் புழுவும் செத்தது
அது இரவு புணர்ந்து
உண்டான கர்ப்பமும்
என் வயிற்றுக்குள் இனிப்
புழு உண்டாகும் சாத்தியமே இல்லாமல்
தொலைந்தது
என்ன இருந்தாலும் அவன் 'அப்படிச்'
சொல்லியிருக்கக் கூடாது

என் தலையின் மயிர்கள் உதிர்கின்றன
மூளை கலங்கிவிட்டது
நான் அடைந்த வேதனையில் உறைந்த இரத்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லாகி உருள்வது எனக்குள்ளே கேட்கிறது
என் உரோமக்கண் எல்லாம்
கண்ணீர் வழிகிறது
அவனின் சொல் அம்பு பாய்ந்து நான்பட்ட அவமானத்தால்
தானாக மடிந்து
கையின் இரேகைகள்
அழிந்து ஒழிந்தே போயின
வா
நான் நிலத்துக்குள் புதைந்துவிட்டேன்
மூடிவிட்டு புல்லொன்றை நடு
என் நினைவாய்

●

*05.05.1992*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாம்பு நரம்பு மனிதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

82

## என் பேனை ஓடிய கனவு

இன்று
கனவில் என்பேனை ஓடியது
இளைக்க இளைக்க
அதைத் துரத்திப்
பல பாம்புகள் சென்றன

ஆம் மிகவும் நீண்ட பாம்புகள் சினந்தே
என் பேனையைத் துரத்தின
மூடியைத் தரையில் கழற்றிவிட்டு
ஒரு பெரிய மரத்தில்
ஏறி நின்றது
என்பேனை
புறா மாதிரி

துரத்தி வந்த பாம்புகள்
அந்த மூடியைக் கொத்தின
ஆத்திரத்தில்
என் இதயத்தில்
அந்த ஒவ்வொரு கொத்தும்
விண் விண் என விழ
நான் வாய்விட்டே கத்தினேன்

என் பேனை என்னோடு
கண்களால் பேசியது
'பாம்புகள் போகட்டும்
அதுவரை படுக்கவும்'
என்று சொல்லி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த மரத்தின் பெரிய கிளையொன்றினுள்
என் பேனை புகுந்தது
நரிமாதிரி

கெட்ட பாம்புகளுக்கு
என் பேனை புகுந்த சத்தம்
கேட்டிருக்க வேண்டும்
உரத்துச் சீறிக்கொண்டே மரத்தில் தாவின
அத்தனை பாம்பும்
அந்த
மரத்தின் கிளைக்குள் இலைக்குள் நுழைந்து
என் பேனையைத் தேடின
அவை
என் பேனை
இப்போது
புயலாகவும் புயலின் கருவாகவும்
மாறியே விட்டது
அந்த மரம்கூடச் சாய

●

*15.09.1993*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 83

### உணவுகள்

எந்த வேளையிலும் உண்டுகொண்டே இருக்கின்றேன்
ஒரு வினாடிகூட என்வாய்
இருக்கவில்லை ஓய்வாய்
பசுமாட்டின் இறைச்சியைப்போல
இந்த மலைகளை
நான் கடித்து இழுத்துத் தின்னத் தின்னக்
குறைவதைப் போன்றும் காணவில்லை
கடலும் குடிக்கக் குடிக்க
வற்றவில்லை

தென்னைமரங்களை நான்
முருங்கைக்காயைக் கார்வதைபோல
புயல்போல வந்து தான்
கார்ந்து எறிந்தும்
அவை குறைந்ததாய்
தெரியவில்லை எனக்கு

நீ இன்னும் நம்பவில்லை
தொடர்ந்து நான்
சாப்பிட்டுக்கொண்டே இருப்பதை
மீன்கறி சமைத்து வெண் பாத்திரத்தில் சோறு
போட்டுக் கொண்டு தருகிறாய்
தாயே

நான் இடிமுழக்கத்திற்குள் பீங்கான் கழுவுகின்ற சத்தமாவது
உன் காதுகளுக்கு இதுவரை
கேட்கவே இல்லையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட்சத்திரங்களைப் பொரித்துத் தருகிறது வெயில்
நீ சின்னமீன் பொரிக்கும்
விதம்போல

அற்புதம் தாயே
நட்சத்திரப் பொரியல்
அற்புதம்
நீ என்ன மீன் சமைத்துள்ளாய் இன்று
இப்போது நான் சாப்பிட்டுக்கொண்டிருக்கிறேன்
நிலவுப் பப்படமும்
பகல் பிடித்து சமைத்துவைத்து இரவுதரும்
சூரிய முள்ளின் சூப்பும்
வேண்டாம்தாயே சாப்பாடு என்னைஇந்த
தினுசுகளை உண்ணவிடு
●

*8.12.1994*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 84

### நானும் நண்டும் ஒரு தேர்தலும்

மணல்கள் எழுந்து கையடித்தன
அலை பூமாலை போட்டது
எந்த வேட்பாளனுக்கு என்பதுதான்
எனக்குத் தெரியவில்லை
காரணம்
பார்வைக்குத் தெரியாத வேட்பாளர்கள் எல்லாம்
போட்டியிடும் ஒரு தேசம்
இது

நான் கடற்கரையில் இனி இருக்க முடியாது
வேறு எங்காவது ஒரு கிடங்குள் விழுந்து
மாய வேண்டும்
ஊருக்குள் அடிக்கின்ற
தேர்தல் நாற்றம்
பொறுக்க முடியாது வந்தேன்
என் மூக்கை
இந்தக் கடற்கரைக் காற்றில் கழுவிச் சுத்தமாக்க

கெடுத்தான்
யாரோ ஒரு கண்ணுக்குத் தெரியாத
வேட்பாளன் இங்கும்
திடீரென வந்தருளி
நண்டும் தேடுகிறது அவனை
மீன் நெஞ்சு மணத்த கடற்கரைக் காற்றைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெடுத்த அவன்
அதன் கண்ணுக்கும் தெரியவில்லை
கலங்கியேனும்

அது
படித்த நண்டு
தன் வாழ்க்கை முழுக்க தனது முழுப்பெயரை
சிறு பிசகும் இல்லாமல்
எழுதி எழுதி இந்தக் கடற்கரை மணலில்
திருத்தித் தெளிந்தது
இம்முறையும் எம்மண்ணில் தேர்தலிலே நிற்கின்ற
வேட்பாளர் போலல்ல அது
அது
கனமும் காத்திரமும் உள்ளது
'நண்டு' என்ற மூன்றெழுத்தை
இன்னும் நினைவுவைத்து எழுதிக்கொண்டே இருப்பது
●

*8.2.1994*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 85

### சிறு மரங்கள் தீயணைக்கும் மழை

ஆலாக்கள் இறந்து கனகாலம் ஐயையோ
கோழிக் குஞ்சும்
கருகிக்கனகாலம்
வண்ணத்துப் பூச்சி
தலை உருட்டும் சிறுதும்பி
முழுவதையும் பொசுக்கி
ஊருக்கு நெருப்பு வைக்கும்

வானமே நீ பாடாதே மழைப்பாட்டு
தவளை இங்கில்லை
மேளம் கொட்ட

என் வீட்டின் கூரையிலே
ஆவி பறக்கிறது
இந்த வெள்ளத்தின் மேல்வெள்ளம் வெள்ளத்தின் மேல்வெள்ளம்
வெள்ளம்வெள்ளம் ஒன்றின்மேல் ஒன்றாக
போடும் மழைக்குள்ளே
ஊரே எரிகிறது

குளிர்மழை தேன்மழை நான் விரும்பும் அழகுமழை
எல்லாம் நீங்கி இப்போது விஷமழை
நெளிய நிலத்திற்குள் மண்புழுவும் இல்லை
அது பொசுங்கி
சாம்பல் பறந்தது

எல்லாம் அளவோடு இருந்தால்தான் அனைத்திற்கும்
நல்லது இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழை மாதம் மாதம் மாதமாய்
கனத்துக் கனத்து
தீயாய் ஒழுக
ஒழுகி ஒழுகி
உஷ்ணத்தைக் கூட்ட
முழுமரமும் இப்போது தீயணைக்கும் படைவீரர்
ஆகி வாகனத்துள்
பாய்வதற்கு ஆயத்தம்

என் வீடெரிந்தால்
தப்பும்
இனிச் சிறுமரமும்
தீயணைக்க

●

*8.2.1994*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 86

## என் காற்றுமுட்டை குடிக்காத வண்டு

தென்றல் கருக்கட்டி பூமரத்தில் இடறியது
நேற்று
என் காற்றுமுட்டை குடிக்காது வண்டு

வண்டு குடிக்காத காற்றுமுட்டை எல்லாமே
நேற்றிரவே பொரித்து
மேய்கிறது வாசல் அறை மேசை எனது
தலைமுடி என்றெல்லாம்
என் வளவு ஒரு பண்ணை
வீடும் தலைமுடியும்
அதுபோல்தான் காற்றுக்கு

போன வாரமெல்லாம் ஒரு தென்றல் முகம் தேடி
நானும் என்னுடைய
மனமும் பட்ட விதம்
வண்டுக்குத் தெரியும்
ஆனால் அது காட்டவில்லை
வாசல் மலர்தான்
பொறு கொஞ்சம் என்று சொல்லும்
அரைகுறையாய்
இதழ் விரித்து வாய் உசும்ப

அது சொன்ன விதம்போன்றே பொறுத்திருந்தேன் நாலைந்து
தினங்கள் தோல் வெந்து
உடற்குளிரும் சூடேற
நேற்றுத் தான் ஒரு
தாய்க்காற்றை விடியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் வளவுக்குள் இருத்திச் சொல்லிவிட்டுப் போனது
இரு இங்கே இவன்
மலரில் சீவிப்போன்
விரிகின்ற குருத்துக்களில்
வசிக்கும் திறனுள்ளோன்
என்றெல்லாம் சிபார்சித்து

கேட்டுத்தான் இருக்கிறது என்னருமைக் காற்று
அந்த அதிகாலை விடிவின்
கதையை
என் வளவுக்குள் உடனே எனக்காகக் கருக்கட்டி
முட்டை இட்டுமல்ல
பொரித்தும் காட்டியது
வண்டுக்கும் வாய்இருந்தும் குடிக்காத ஒத்துழைப்பால்

●

*8.2.1994*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

87

## பூனை மலங்கழித்த முகம்

பூனை மலங்கழித்த முகம்
இன்று
நான் இன்னும் பல்தீட்டிக் குளிக்கவில்லை

இந்த உலகத்தை நான்தூக்கி வைத்திருக்கும் பாரம்போல்
நெஞ்சுக்குள் பெரியதொரு சுமை
நடக்க முடியாது
கால்கள் தடுமாறும்
எழுந்து கதிரையிலே இருந்தாலும் கதிரைக்கு
ஆபத்து நிகழும்

இன்னும் புரண்டு புரண்டே கிடக்கின்றேன் பூத்த
மலர்கள் வாடி வீழ
வாசலில் வயதேறி
என் கட்டில்
பேசுகிறது
இன்று என்பாரம் மிகவும் அதிகரித்து
விடிந்தும் எழும்பாமல்
மாலையாய் போகையிலும்
கிடக்கக் கிடக்க அதில்
நொந்து
மரமென்ற நிலைமாறி மனிதனாய்

மரத்திற்கும்
நோவு வந்தால்
மனிதனாய் வாய் திறக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் கட்டிலுக்கும் இன்று அதுதான் நடக்கிறது
கத்துகிறது என்னுடைய கட்டில்
மிகவும் சத்தமாய்
அடுத்த வீட்டுப் பெண்
வந்து ஜன்னலுக்குள்
நின்று பார்க்கின்றாள்
எழும்பு
போய் எனக்கு
ஒய்வு தர
என்றெல்லாம்
சொல்லி வெடிக்கிறது மெத்தை

●

*20.2.1994*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 88

**வானம் பத்திரிகையான**
**நான்போன புதுக்கிராமம்**

இவ்வளவு காலமும் நான் எங்கு இருந்தேன்
பக்கத்து வீட்டில் ஒரு கட்டழகி
இருந்தும்
காணாத நிலையாக

கவிஞனுக்கும் அழகிற்கும்
ஒரு தொடர்பு உண்டு
அது இருக்கும் இடத்தில் அது அவனை இழுக்கும்
இப்படித்தான் இழுத்ததுவோ இந்தக் கிராமத்திற்கு இன்று
பூச்சி தும்பியைப்போல்
திட்டம் இடா விதமாக
பறந்து நான் வர

கவிதை வெறும்
இனிப்பல்ல
மந்திரமும் கூட
நான் கவிஞனன்றிப்போயிருந்தால் அழகுணர்ச்சி இருக்காது
இந்தக் கிராமமும்
என்னை இழுத்திருக்காது

ஆலமரம் காவல்செய்யும் கிராமமிது
நான் இன்று வரும்போது
முகிலின் நெய்யில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிர்கள் முடி நனைத்து
சின்னப் பற்கள் உள்ள சூரியனைக் கொண்டு
தலை வாரும் தருணம்

பறவையெல்லாம் கண்ணால் கருவிசெய்து
நான் வந்த நேரம்தொட்டு
என்னை வண்ணப் புகைப்படமாய் பிடித்து
தள்ளுகின்றன ஏன்
ஒரு பூவைக்கேட்டேன்
அது இன்னொரு இதழை விரித்தபடி சொல்லியது
இந்த ஊர்
ஒரு சிறிய ஊர்
வானமே இவ்வூரின் பத்திரிகை எந்தச்
செய்தியையும் சொல்லும் சாதனம்
இன்று அந்தியிலே
நீங்கள் வந்ததன் சிறப்புமலர்போட

●

*200.2.1994*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

89

## உன் சிரிப்பென்ற மாயப் பொடி

தங்க நகை சுற்றுகின்ற
பட்டுக் காகிதத்துள் மடித்தா
இல்லை
வெயில் கொஞ்சம் குறைந்திருக்கும் பொதுநிறத்துப் பகலில்
நீ விரும்பி அணிகின்ற நீலநிற
பூப்போட்ட பூ மணக்கும் சேலையுள்ளா
சிரிப்பை
மடித்து வைத்துவிட்டு வந்துள்ளாய் வீட்டில்

நான் கடிதமாகிவந்து உன்வீட்டில் சீவிக்கும்
உனது இரகசிய
பொன்முலாம் பூசிய அந்தப்
பெட்டிக் கண்ணுள்ளா

நீ இன்று
சிலந்தி வலைபின்னி அதில் கொசுபட்டுத் தொங்கி
முகத்தை வைத்திருப்பது
இந்தக் கந்தோர் நிலத்தின் அடிக்குப்போய்
மேலும் மேலும் புதையத்தான் சதைப்புஷ்பம்

நீ சிரித்தால்
இக் கந்தோர்
ஆகாயம் போய் நிற்கும்
அலுவலுக்கு வருகின்ற ஊர்மக்கள்
தேவ குதிரைகளில் ஏறிவந்து பணிமுடிப்பர்
உன் சிரிப்பு எங்கே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணக்கும் அந்த
மாயப் பொடி எந்த
மணிக்குள் மூடி வைத்துவர இருக்கிறது

கந்தோர் கட்டிடத்தின்
கூரை புதைகிறது
அது இறங்கி முடிவதற்குள்
சொல்லு நான்போய் எடுத்துவர காற்றாவேன்

●

*21.2.1994*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

90

## பாம்பு நரம்பு மனிதன்

வலி தாங்கமுடியவில்லை
எனது கண்களை யாரோ ஒரு கல்லில் வைத்து
இன்னுமொரு கல்லால்
தட்டுகின்றனர்

என் கண்
ஒவ்வொரு நாளுமே கெடுகிறது
அது இருந்த இடத்தில்
பாம்புகள் நுழைகின்றன
எனக்குள்

ஆம் என் நரம்புகளெல்லாம் இப்போது பாம்புகளா
ஒவ்வொரு நரம்பும்
ஊர்வதைப் போலவும்
நெஞ்சைக்
கொத்துதல் மாதிரியும்
உணர்கிறேன்

ஊரே
நான் பார்க்கும் உலகே
என் கண் தட்டும் மனிதரை
விழுங்கு
கையிலொரு பூவோடு
பிறர் நெஞ்சை

பொது நூலகம்
யாழ்ப்பாணம் மாநகர சபை - (stamp)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடவிச் சுகம் கொடுக்கும் மானிடராய்
மண்ணில் பிறக்க
தவம் செய்

ஒரு நரம்பு
இப்போது
என் மூளையைக் கொத்துகிறதா
இன்று காலையில்தான் இந்தப் பாம்பு
எனக்குள்ளே வந்தது
நேற்று முன்தினம்
இரு தரப்பிலும்
சுமார் நூறுபேர்வரை மரணம் என்ற
பத்திரிகைச் செய்தியைப் பார்க்கையில்
யாரோ என் கண்ணை
கல்லால் தட்ட
நுழைந்தது

●

*5.12.1994*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

91

## கொலையுண்ட என் மனம்

காகங்களே
போய் விழுங்கள் கடலில்
என் மனதில் குடியிருந்த தும்பியே புழுவே
விழுந்து இறவுங்கள் நெருப்பில்
கொன்றுவிட்டார் என் மனதை
இலையாய் பூவாய் குருத்தாய்
என் மனது
செத்துச் சுடு வெயிலில்

என் மனதை வெட்டியவன்
தன் பெண்டாட்டியை ஒருபோதும்
வைத்திருக்கமாட்டான்
அவளையும் வெட்டுவான்
குத்துவான் குடைவான்
துண்டு துண்டாய் உடம்பை
அரிவான்

தொப்புளைத்
துளைப்பான்
அவளை அப்படியே அடுப்பில் வைத்து
நெருப்பு மூட்டி வறுப்பான்

என் மனதை வெட்டியவன்
தன் பிள்ளையைப் பச்சையுடன் தின்பான்
அவன் தின்னாது போனாலும்
அவன் பிள்ளை ஒரு நாளும்
நிம்மதியாய் இராது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூனாகி இடறும்
முழங்கால் வரைக்கும் அவிந்து புழுத்தெறித்து
தவளைபோல் துள்ளும்

என் மனம்
வானத்தை
புதுக் குருத்தாய்
கக்கி வளர்த்த என்மனம்
ஆம் கொலையுண்ட
சந்திப் பூவரசு

விழுங்க கனவுகண்டு
நாளும்
புதுப் புதுக்குருத்தாய்
●

*2.6.1993*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

92

## குருவிக்கு அறைந்ததும் பெண்ணின் கொண்டைப்பூவைச் சோதித்ததும்

அடித்தாயே
உன் கையானையைத் தூக்கி
அவன் முகத்தில்

என்ன பிழைசெய்தான் அப்பையன்
படிக்கின்ற மாணவன்
போகும்போது சிறிது சத்தமிட்டான்
உன் தலையைச்
சுற்றிப் பறக்கின்ற குருவிகள்போல்
அது தவறா
தவறென்றால் ஏனந்த வெண்குருவி பச்சை
வாலில் சிவப்புக் கலந்தது நீலம்
மஞ்சள் இவைக்கெல்லாம்
நிற்பாட்டி வைத்து அடிகொடுக்கவில்லை

அந்தப் பிள்ளைக் குருவிக்கு அறைந்த
கொடூரனே கேள்
அச் சத்தம்
அவன் வாயால் வந்ததல்ல
சலசலத்து அவனுடம்புள் இருந்து ஓடும்
மீசை
முளைக்கின்ற இரத்தத்தின் ஒலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் நெஞ்சுக்குள்ளால்
பொத்து வெளிவந்த கானம்

இனிய கானம் ரசிக்காத நீயெல்லாம் படைவீரன்
பாடித் திரியும்
பள்ளிக் குருவியை நிற்பாட்டித் தட்டுவதும்
அழகுக் கோயில் புறாவின் கழுத்து மயிரை
நடுவீதி வைத்து நிறுத்திப் பிடுங்குவதும்
பூனைக்கு உறுக்குவதும்
தெள்ளுக்குச் சீறுவதும்
வீரனுக்கே அல்ல கோழைக்கும் நம்பலாம்
இருக்காத தன்மைகள்

நீ அன்று
ஒரு பெண்ணின் கொண்டைப்
பூவையும் சோதித்தாய்
இன்று குருவிக்கு அறைந்த கதைபோல்தான் அதுவும்

●

*8.12.1994*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

93

## என் ஆமை தவளை வாகனம்

தவிட்டைக் கரைத்துவந்து வையுங்கள் இதற்கு
வைக்கோலைக் கொண்டுவந்து கொட்டுங்கள்
வாலைப் பிடித்து
ஒருதரம் முறுக்குங்கள்
பின் பக்கம்
ஓர் ஈட்டிக் கம்பால்
குத்துங்கள் உஷாராகி நகரட்டும்

வாகனமாம் இது
நான் வேலைக்குத் தினசரியும் போய்வந்து ஒருநாளில்
ஒன்றரை நாள் செலவுசெய்யும்
நாலு சக்கரத்துக் கழுதையென்றால் தகுதி
இதற்கு உயரும்
பசுமாடு அதைவிடமேல்
சொறி எருது என்று
குறிப்பிடுதல் பொருத்தமோ

இல்லை
அதுவும் இதற்கு மிகப்
பெரியதொரு கௌரவம்
இந்த
எரிபொருளைக் குடித்து
புகையாக மலங்கக்கி
மண் எண்ணி எண்ணி உருளுகின்ற
புழுதி படிந்த வண்டிக்கு
பிணம் பேயன்
கண்ணயரும் தெரு வீடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21429

வழிப்போக்கன் வந்து
கழிக்கின்ற ஒரு மறைப்பு
நரை ஆமை
தவளை
என்றெல்லாம் சாடுவதே
சிறப்பு

இன்று காற்றுப்போய் குட்டி
ஈன்ற தெருநாயின்
வயிற்றைப்போல் ஒரு சக்கரம் உருமாறி
பயணத்தின் இடையில் போட்டது என்னை
இனிநான் கரையேற
பகல் இரவு என்று நாலைந்து வந்து செல்லும்

●

*3.11.1993*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

94

## பல்லியின் எச்சமாய் நான்

என்னை விழுங்கியது பல்லி
நான் அதன் வயிற்றுக்குள் இருந்தேன்
இன்னும் சில நாளில் அது இட இருந்த முட்டை
என் பக்கத்தில்
இருந்தது

என்னை விழுங்கிச் சுமந்தபடியே ஏறியது
சுவரின் உச்சிக்கு
அப் பல்லி
இடையில் இன்னொரு கொசுவையும் விழுங்கியது

நான் இன்று
மிகவும் சிறுத்திருந்தேன்
ஏன்
இன்றுநான் அவனுடன் கதைத்திருந்தபோது
சாடையாய் ஊர்வாதம் என்வாயால்
வழியத் தொடங்கியதே
அதை நினைத்து

என் பல்லி என்னைச்
சமிபாடடையச் செய்வதற்காய்
ஏறிப்போய் ஒரு வசதியான விளிம்பில்
படுத்துக்கொண்டது
அதன் வயிற்றுக்குள் சரியான இரைச்சல்
இட இருக்கும் முட்டைக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரேறிக் கொண்டிருக்கும் கருவின் சத்தமும்
என் காதுக்குக் கேட்டு
பின் நான்
சமிக்கச் சமிக்க
மறைந்துகொண்டே போனது

அதிகாலையில் நான் கிடந்தேன்
நேற்று நான் எழுதி மடித்துவைத்த தாளில்
பல்லியின் எச்சமாய்
மேசையில்

●

*3.11.93*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

95

## அந்தக் கிராமத்தை நினைத்து

கட்டிலில் படுத்திருந்த நான்
எழுந்து துள்ளினேன்
சுவரில் ஓடிப்போய் முட்டினேன்
மேசையில் ஒருதரம் கையால் அடித்தேன்
கதவுக்கு இரண்டு உதை கொடுத்தேன்
தரையைக் குதிகாலால் இடித்தேன்
கிட்ட இருந்த காகிதத்தைக் கிழித்து
எறிந்தேன்

அப்பாவிக் கிராமம்
பனியும் கூதலால் படுத்திருந்தபோது
சிதைக்கப்பட்ட ஊர்

நிலவு அந்தக் கிராமத்தில் இருந்து உயிர் தப்பி
என் வானத்தில் நின்றது
அதனது உதட்டில்
இரத்தம் வழிய
காற்று
ஓடி வந்த ஓட்டத்தில்
களைத்து தண்ணீர் கேட்டது
என்னிடத்தில்

அந்தக் கிராமத்தின் குழந்தைகளை
பேய்கள் சப்பியதாக
நட்சத்திரங்கள் சொல்லிச் சொல்லி விழுந்தன
என் தலையில்
ஒரு நாய்
துயரத்தில்
ஊளையிட்ட வேகத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் வயிற்றுக்குள் கருவறைக்குள் இருந்த குறைக்குட்டி
வழுக்கி வாய்க்குள்ளால் விழுந்தது தரையில்
கட்டியாய்

நான் வானத்தில் ஓங்கிப் பலமுறை குத்தினேன்
சூரியனைக் காலுக்குள்
போட்டுக் கசக்கினேன்
இந்தத் துயரிலும் உனக்கு மகிழ்ச்சியா
என்று என்றே
இரைந்த கடலை எரித்தேன்
என்னில் இருந்த அனல்பட்டு அந்த
மாபெரிய விரிகுடா கருகியது புகைந்து
பனை ஓலைப் பாய்போல

●

*3.11.1993*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

96

## என்மனம் என்னுடன் இருந்த இன்று

எழுந்து துள்ளினேன்
கவிதை உதிர்ந்தது
நான் ஓட ஓட வீதி எங்கும்
கவிதை விழுந்தது
ஒரு மரத்தின் நிழலில் இருந்தேன்
என்னால் வழிந்த கவிதை
நிலத்தில் ஊறி
தமிழ் மணத்து மயக்கும் ஓர் ஆறு பாய்ந்தது
சீறி

தோணி விட்டபடி வந்தது
கானா
ஆனாவும் ஆவென்னாவும் அதில்
பூப்பறித்து விளையாடிக்
களைத்தன
மீயென்னா
அந்த ஆற்றின் செழிப்பில் ஓரத்தில் முளைத்து
நின்ற புற்களில்
ஏறி ஏறிக் குதித்து மகிழ்ந்தது

பாட்டுப் பாடியபடி குளித்தது
அந்த ஆற்றிலே
தேன் நிலவு
மேகக் குமரிகள் வலையை வீசிப்
பிடித்த மீன்கள்
உயிருடன் துடிக்கத் துடிக்க
கூவென்னா
கீயென்னா
பீயென்னா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டூவென்னா
டூனா

ம்மென்னா ஆற்றின் கரையெல்லாம் துள்ளித் திரிந்தது
மிட்டாய் உண்ணும் குழந்தையைப்போல
விரலை
வாய்க்குள் விட்டபடி
கோனாவும் தேனாவும்
ஆற்றில் மலர்ந்திருந்த வெண்டாமரையைத் தலையில்
சூடியபடி நின்றன
ஆயுத எழுத்தைத்தேடி
காதலிக்க

ஔவென்னா ஒரு கிழவியைப்போலதான் ஆற்றின் மறைவில்
காலை நீட்டி நெட்டி முறித்தது
ச்சும் ப்பும்
அதனைப் பார்த்துச் சிரித்தன
'மை' கிழட்டு ஆமையின் முதுகில் ஏறி அந்த
வட்டாரமெங்கும் வந்தது
வலம்
வெண்கொக்கின் தோளில்
தோனா

நான் இன்னும் இருந்தபடி
மனிதர்கள் வாழும் சூழலில் இருந்ததைப்போல்
என்மனம் இன்று தொலையாமல் இருக்கிறது
பஞ்சுவாய், மெத்தையாய், பூக்கள் மலரும்
திடலாய்
குளிராய்
●

*3.11.1993*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

97

## பொய்சொல்லி இன்று
## பூமரம் வாங்கியவன்

பொய்சொல்லி இன்று பூமரம் வாங்கிய மனிதன்
போய்விட்டான்
என்னை மிகவும் நெருக்கமான நண்பனென்று
எனது உடன் பிறப்பிடம்
கதைவிட்டு
நான் மறைந்திருக்கவே
அள்ளிக் கட்டிக் கிளைகளைப் போனவன்
இப்போது
வீடும் சேர்ந்திருப்பான்
நான் இதுவரையும் சுணங்கி வருகின்றேன்
வெளியில்
அவன் என்னைக் கண்டு
அசடு வழியக்கூடாது என்பதற்காக

மழைக்காலம் வந்தால் சிலருக்கு மரம் வேண்டும்
அதுவும் பூமரமாகவே
கோடையில் அவற்றைக் கருகவைத்து வெயிலுக்கு
சாப்பாடு போடும் பழக்கம்
நம்மில் பலருக்கு
இன்னும் உண்டு

இவனும்
கோழிக்கு உணர்ச்சி வந்ததைப்போல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தவன்தான்
பொய்சொல்லி எனது கைகளையும் கால்களையும்
தங்கையிடம்
குழைந்து குழைந்தே கறந்தெடுத்த பாவி
எங்கள் வீட்டை விட்டு வெளியேறிச் சில நிமிடம்
செல்லும் முன்னர் இழந்திருப்பான்
விருப்பம்

எது எப்படித்தான் இருந்தாலும்
முன் பின் பழக்கமில்லா ஒருவன்
என்னை நண்பனென்று எனது கரம் காலையுமே
கொள்ளையடித்தான் இன்று
நானோ
அவன்
நாணாமல் இருக்க
வீட்டிற்குள்

●

*14.3.994*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 98

### சப்பாத்துக்கள் பற்றிய
### எனது அபிப்பிராயம்

சப்பாத்துக்களே கால்களுக்கு வசதி
அழகும் கூட
நாய் குரைத்துத் துரத்தினால்கூட
ஓடத் தேவையில்லை
எட்டி உதைக்கலாம் நாய்க்கு

சப்பாத்து அணிந்தால்
கால்களுக்கு தனிப்பலம்
முள்ளைக் கசக்கிக்கொண்டு போவதுதானே சப்பாத்து
நெல்லில் மிதிபட்டால்
உமி தெறிக்கும் ஒருபக்கம்

வீதிகளில் கிடந்து
கால்களைக் குத்தும்
சின்னக் கற்களுக்குக்கூட
சப்பாத்து என்றால் பயம்
அது ஏறினாலே
தவிடுபொடியாகும் அவை

இந்த நடக்கப்பழகிய மண்புழுக்களுக்கு சப்பாத்து இல்லாமல்
துள்ளி எழுந்து ஓட முடியவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சப்பாத்து அணிந்தால்
ஓடுவதற்கும் வாய்ப்பு
உன்னிப் பாய்வதற்கும் துணிச்சல் வரும்

நான் அண்மையில் வாங்கிய சப்பாத்து
கறுப்பு
சொண்டு உள்ளது
முன்னர் வாங்கியதன் சிறிய சாயலும்
இல்லை
மண்ணுக்குள் நெளியாமல்
தலைமுறையை மாற்றி
இரும்பைத் தூக்கிப் போகின்ற மண்புழுவே
கேட்டாயா
சப்பாத்துகள் பற்றிய எனது அபிப்பிராயத்தை
●

*15.3.1994*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

99

## ஓய்வெடுக்கப்போன என் ஆறு

மூன்று நாட்களாய் எனக்குள் பாய்ந்த ஆறு
கொஞ்சம் ஓய்வெடுத்திருக்கிறது
மலைக்குப் போய்வர
நான் இப்போதுதான்
எல்லோர் போலவும் இருக்கிறேன்

அந்த ஆறு
எனக்குள் இருக்கையில் நான்
எல்லோர் போலும் இருப்பதில்லை
காலால் நடந்தாலும்
வானத்தில் பறப்பது
வீட்டில் இருந்தாலும்
சந்திரனில் குளிப்பது

அந்த ஆறு
தொடர்ந்து ஓடிய ஓட்டத்தில்
மூன்று தினங்களாய்
என் இதயம்
களைத்துச் சோர்ந்து விட்டது
சிறிது ஓய்வு வேண்டாமா என் இதயம்
இளைப்பாற
அந்த ஆறும் கூட

இருந்தாலும்
எனக்கு
அந்த ஆறு இருப்பது மாதிரியே இல்லை
உணர்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசிக்கிறது
கண் சாதாரண காட்சிகளைக் காண
சலிக்கிறது

மரத்தை மரம்மாதிரிப் பார்ப்பதில்லையே நான்
அந்த ஆறு இருந்தால்
வீதி வெறும் மணலாய் தெரியாது
தங்கக் கட்டிகளைக் கொண்டு நசித்து
செப்பனிட்ட
ஒரு புதுமைபோல
முக்காற் பகலும் நுனி இரவும் சந்திக்கும்
அந்தி நேரங்களில் இருக்கும்

அந்தச் செண்பகத்தின் கண்
எனக்குள் ஆறு இருந்தால் அழகு
சிலநேரம் எரிச்சல்வரும்
அது அந்த ஆற்றின் போக்கை ஒத்தது

●

*8.3.1994*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

100

## மாடு சப்பிய சூரியன்

சூரியனைச் சப்பியது மாடு
வைக்கோலைத் தின்பதைப்போல அதன் கதிர்களை
மாடு கடித்தது
நண்பகல் அளவிருக்கும்
அந்தப் பரந்த புல்வெளியில்
சூரியன் விழுந்து கிடந்தது
எங்கும் இருட்டேதான்
ஆனால் காகங்கள் அதன் முளையில்
குந்தி இருந்து கரைந்தன

முதலில் ஒரு சிறுவன்தான் குதித்தான்
பின்னர் ஒரு பெட்டையும் விழுந்தாள்
ஆம் சூரியன் இருந்த ஓட்டையால் ஒரு சில
பிள்ளைகள் துள்ளிக் குதித்தன
விளையாட்டாய்

புல்வெளி எங்கும் ஏராளம் காகங்கள்
உலகமே இருண்ட பயத்தில்
அவை அலறியிருக்கலாம்

இன்னும் குறிவைக்கப்படாத ஓர் இளைய மாடு
ஓடி வந்தது
சூரியன் கிடந்த இடத்தை நோக்கி
தலையால் நாலு தட்டுத் தட்டியது
சூரியனின் முதுகுப் புறத்தில்
கொம்பால் ஒருதரம் புரட்டிப் போட்டது
மண் அப்பியபடி கிடந்த சூரியனை
சாணம் அடித்துக்கொண்டே சப்பியது

ஏராளம் காகங்கள்
உலகம் இருண்ட பயத்தில்
அவை அலறியிருக்கலாம்

●

*16.6.1993*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

101

## முடிவு திகதியற்ற விண்ணப்பம்
## (புதிய ஒப்பனையாளர்களுக்கானது)

இந்தமாதிரி என்னுடைய தேசத்திற்கு
பல் விளக்கக்கூடாது
முடி வெட்டுவதிலும்
புதுமை வேண்டும்

சந்தனப் பொட்டு இந்தமாதிரி
வைக்கக்கூடாது
கண்ணுக்கு மை
தீட்டுவதில் பிழையுண்டு

என் தேசத்திற்கு
தொடர்ந்து
இந்தமாதிரி அலங்கோலமாக
சேலை உடுப்பிப்பவன்
விரைவில் ஓய்வுபெற வேண்டும்
அவன் இடத்தை
வடிவுச் சேலை ஆம் மிகவும் நவீன
வடிவுச் சேலை
கெட்டித்தனமாகத் தெரிவுசெய்து உடுப்பிப்போன்
நிரப்பல் முக்கியம்

இப்போது பார் என் தாய் நாட்டிற்கு
கவுண் அணிவிப்பவனின் ரசனையை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருத்தமில்லா அளவில்
ஒத்துவரா நிறத்தில்

முடி வெட்டுபவன் இப்போதும் ஒரு பழைய
கத்திரியால் கொத்துகிறான்
செழிப்புள்ள
என் தேசத்தின் தலை முடியை
நாடு அணிந்திருக்கும் செருப்பைப்பார் உற்று
ஊதிய தோல் உள்ள
காலத்தைக் காட்டாத மொக்கு

என் நாட்டை நன்கு பராமரிக்க நவீனமாய் சோடிக்க
அது - சுய
இயல்பிற்குத் திரும்பும்வரை
புதிய ஒப்பனையாளர்கள் சிலர் வேண்டும்
விண்ணப்பம் முடிவு திகதி அற்றது

●

*16.6.1993*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

102

## நின்று தூங்கும் நான்

நான் நின்று தூங்குகிறேன்
என் கட்டிலில் கள்ளி விதைகள் விழுந்து
தினமும் முளைப்பதனால்
நான் நின்றுகொண்டே குப்பறப் படுத்து
குறட்டையும் விடுகிறேன்

இப்போதெல்லாம் நான் அவளைக் கனவில் காண்பது
நின்று தூங்கியபடியேதான்
அன்றும் அவள் என் நின்று தூங்கலின்
கனவில் வந்தாள்
கொண்டையில் என் முகத்தைப்போன்ற பூ
சூடியிருந்தாள்

அன்று நான் நின்று தூங்கியபோது
வீரிட்டுக் கத்தினேன்
இருட்டுக்குள் ஒரு பூதம் வந்து
ஏறி என் நெஞ்சில்
இருந்ததைப்போன்று இருந்தது
என்னை அறியாமலே சிறுநீர் விட்டேன்
நின்று தூங்கியபடியே

நின்று தூங்குவதும் அவ்வளவு சிரமமல்ல
எனக்குள் இருக்கின்ற புற்கள் எப்போதும்
மலர்வதைப்போலவே
மலருகின்றன
ஒரு குலைப் பூவை
மூன்றுபேர் முக்கி
தூக்கும் அளவுக்கு மிகவும் பாரமாய்

●

*16.6.1993*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 103

### என் அறைக்குள் விளக்குவைக்க வந்தவளுக்கு

சிற்றெறும்பு ஊருவதும் எனக்குத் தெரிகிறது
இருண்டுள்ள என் அறைக்குள்
பூத்து நட்சத்திரங்கள் மினுங்குகின்றன
என் உரோமக்கண் அனைத்தும்
நான் தலையணையில் கிடக்கவில்லை
நிலவில் தலை சாய்த்துள்ளேன்
உன் கூந்தலிலே ஒருகோடி இருபத்தி நான்குஇலட்சம்
தலைமயிர்கள் உள்ளன
சரியா

இங்கே பார்
நான் நேற்றுப் பெய்த
மழையில் நனைந்த
தும்மலைத் தான் தும்முகிறேன்
தங்கம் பறக்கிறதே மூக்கால்
நான் கலண்டர் கொளுக
அடித்த ஆணிகளில்
இந்த இருண்ட அறைக்குள்ளே
புதிய சூரியன்கள் எழுகின்றன

இருநூற்றிப் பதின்மூன்று
நுளம்புகள் திரிகின்றன
இந்த அறைக்குள்ளே
எனக்குக் கவிதை உணர்ச்சி பொங்கி வழிகின்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருண்ட
இந்த அறைக்குள்ளே
ஐம்பதாயிரத்தி எழுநூற்றிப் பதின்நான்கு
மண் கிடக்கிறது

உன் தலைக்குள்
அறுபத்திமூன்று பேன்
ஈரு பதினாறு
உன் எண்ணெய் விளக்கு வேண்டாம் போ
அறையை விட்டு
பேன் தெறிக்கும் எனக்கும்

●

***16.6.1993***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

104

## பைத்தியக்கார எருமைமாடு

எவரின் தலையிலும் எவரும் ஏறிநிற்க
நான் அனுமதிக்கமாட்டேன்
காகங்களின் எச்சம்
வாசம்தான்
அதற்காக
என் தோளைக் கொடுப்பேனா
என்றெல்லாம் அந்த எருமைமாடு
பைத்தியத்தில் கத்தியது

அந்த எருமைமாட்டிற்குச்
சரியான பைத்தியம்
குணமாக்க முடியாத அளவுக்கு
குணக்கேடு

நான் தண்ணீரைக் கொதிக்கவைத்து ஆறவைத்து வடித்தேதான்
பருகுகிறேன் என்று
அந்த எருமைமாடுதான்
சேற்றைக் குடித்தபடி சொல்லியது
எவரின் வயலுக்குள்ளும்
எவரும் நுழைவது
பூரணமாகவே தடை
என்று சட்டம் இயற்றியது

நல்ல உச்சி வெயில்
அந்த எருமைமாட்டின் பைத்தியம்
இன்னும் உரத்திருக்க வேண்டும்
சவர்க்காரம்போட்டே குளித்தது சேற்றில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த எருமைமாடு
பூக்களால் தலையைத் துடைத்தது

அசிங்கமானவர்களை எனக்குப் பிடிக்காது
என்று சொல்லியபடியே துரத்தியது
அந்த எருமைமாடு
வெண் கொக்குகளை
அந்த எருமைமாட்டின் படங்களும் உரைகளும்
நாளைய பத்திரிகைகளில் வரலாம்

●

*16.6.1993*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 105

## குருத்துகள் வாசி

மரங்களின் குருத்துகளில்
தலையணை போட்டுப் படுப்பது
சுகம்
அதிலும் சாய்ந்திருந்து புத்தகம் படிப்பது
பாடலை முணுமுணுத்துக்கொண்டு காலாட்டிக் கிடப்பது
பெரிய இன்பம்

நான் நேற்று முழுக்க
ஒரு வேப்பை மரத்தின் குருத்தில் படுத்தேன்
அற்புதமான இனிமை
புள்ளிக் குயில்கள்
என் அருகில் படுத்தன
ஒட்டி

அன்றுநான் அவளது புகைப்படத்தை
யாருக்கும் தெரியாதபடி
ஆலமரத்தின் குருத்தில் இருந்து
பார்த்தவாறே
அழுதேன்
மரத்தின் குருத்தில் இருந்து அழுவதும்
சொல்ல முடியாத பேறு

நிலாக்காலங்களில் நான் படுப்பது
என் பூமரத்தின் குருத்துகளில்
அப்போதுதான் நான் வண்டுகளுக்குப் பாடல்
வகுப்பு நடத்துவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநாள் ஒரு கருவண்டு
என் வகுப்பில் கலந்துகொண்டபடியே
தூங்கியது
இப்படியான மாணவர்களை
என் நிலாக்கால குருத்து வகுப்புகளில்
நான் விரும்புவதில்லை
ஆத்திரத்துடனே கத்தினேன்
வண்டு இறந்ததோ அல்லது எழுந்து பறந்ததோ
எனக்குத் தெரியாது
என் சத்தத்தில் முகில் அதிர்ந்து
மழை சொரிந்தது
ஆம் நிலாக்கால நாளில் பூமரத்தின் குருத்தில்
இருந்து மழையில் குளித்தலும்
கொடை

●

*16.6.1993*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 106

### மீன்களுக்காகப் பாடப்போன குயில்

என்னை நான் எறிந்தேன்
ஒரு மரத்தில்
நான் வெடித்துச் சிதறிய துண்டுகளில் இருந்து
மீன் குஞ்சுகள் உயிர்த்தன

என் அழகிய குயில்
பூக்களில் எனக்கு
கடிதம் எழுதிவிட்டுப் போயிருக்கிறது
கடலுக்குள் இருக்கும்
மீன்களுக்குப் பாட

பூக்களில் எனக்கு கருங்குயில் எழுதிய புதிய பாஷையை
வாசித்துத் தெளிவாக விளங்க
பறந்த இளைய வண்ணத்துப் பூச்சிகளை
அழைத்தேன்
ஆயிரத்துப் பதின்மூன்று மலர்களிலே மொத்தமாய்
கானக் குயில்
அந்த நெடிய கடிதத்தை
மிகவும் துயருடனே எழுதியிருக்கிறது

'தலைக்குமேலே போகிறது வெள்ளம்
எறும்புகள் புல்லுத்தின்னுகின்றன
போகின்ற போக்கைப்பார்த்தால் வரும்நாளில் நாம்
எறும்புப்பாலே பருக நேரிடும்
இங்கிருக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்பமில்லை எனக்கு
கடலுக்குள் விழுந்து மீன்களுக்காய் பாட
முடிவுசெய்து போகின்றேன்
ஒருகோடியே இருபத்திநாலுலட்சத்தி முப்பத்தி நாலாயிரம்
தடவைகள் பாடும் அளவுக்கு
எனது குரலில் சிறிதளவை
உனக்காக ஒரு போத்தலில் ஊற்றி இந்த மரத்தின் குருத்தில்
வைத்துள்ளேன் எடு
கழுதையின் வாய்க்குள் ஊற்றினால் கூட
என் பாட்டு வரும்.'

வாசித்த வண்ணத்துப் பூச்சிகளும்
தங்கள் சிறகுகளில் இருந்த புள்ளிகளை அழித்தன
அழுது

●

*18.4.1993*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

107

## காகத்தின் கால்மொழிக் கடிதம்

நீ தேவைக்காகவே கடிதம் எழுதுவாய்
இடையில் சுகம் விசாரித்தோ
நட்பைப் பேணியோ
ஒரு கடிதம் எழுதவில்லை இதுவரை நீ
நினைத்துப்பார்

இன்றும் எழுதியிருக்கிறாய்
ஒரு தேவையை மையமாகவைத்து
விரல் தேய்ந்த
ஒரு காகம் கிழித்த மடல்

நீ பேனாக்களைப் பூட்டிவைத்து எவ்வளவு காலம்
எதையும் எழுதி
கிறுக்கி அனுப்ப எனில்
விரல் தேய்ந்த
அல்லது நகம் உதிர்ந்த
காகங்களைத் தேடிப் போகிறதே உன் நெஞ்சு
தமிழென்ன அவ்வளவு இழிவா

நான் தேவைக்குப் பாவிக்கும் ஒருபண்டம் அல்ல
மனம் வைத்தால்
நானும் மனம்வைத்து
என்னை அள்ளி வார்க்கின்ற ஒருவன்
உறவுள்ளோர்
தினம் நனைகின்ற தேன் குடம்

எப்படி எழுதுவேன் இதற்கு நான் பதில்
முழுமையாய் வாசிக்க
படித்த காகமும் என்னிடம் இல்லையே
இன்னுமொரு
காகத்தின் கால் மொழி அறிய

●

*20.6.1993*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வருவேன் என்று சொன்ன அவர்

*அவர் இன்னும் வரவில்லை
அவர் வருகின்ற திசை இன்னும்
திறக்கவில்லை
நான் நெருப்புச் சட்டிகளை ஏந்தியபடி
நிற்கின்றேன்*

*என் கண் நீண்டு நிலத்தில்
இறங்கி அவர்
வருகின்ற திசைப்பக்கம்
ஓடி மறைகிறது
மனதுக்குள் சாம்பல்
உதிர்கிறது*

*வருவேன் என்று சொன்ன அவர்
என்னானார்
குளிர் அவ்வளவாய் இறைக்கவுமில்லையே
கரைய
இப்போது என் கண் இருந்த இடத்தின் உள்ளால்
பாதி செத்த இதயம்
விழுகிறது
அதைத் தொடர்ந்து இரத்தம்
கசிகிறது*

*இனி அவர் வரும் திசையால்
சுலபமாய் வரவே முடியாது
என் இரத்தத்தில் தோய்ந்து
ஆடைகள் சேதமுற்று
என் கண்ணிலும்
இதயத்திலும்
தடுக்கி விழுந்து விழுந்து எழும்பியே
வருதல் வேண்டும்
வருவதாய் இருந்தால்*

●

*21.6.1993*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

109

## கதிரையில் வந்தமர்ந்த பூமரம்

பூமரம் வந்தமர்ந்தது கதிரையில்
தன் குறையைச் சொன்னது
மழை இல்லை
முகில்கள் கருகிச் சாம்பல் பறக்கிறது
இந்த நிலைக்குள்ளே
கன்னி கட்டுவது எப்படி
உங்கள் மூக்கில்
இனிக்கின்ற வாசம்
உற்பத்தி செய்வது சிரமமே

எழுந்து அசைந்து இருந்தது ஒருதரம்
பூமரம்
நான் குடிக்கக் கொடுத்த தண்ணீரைக்கூட
அன்று அது மறுத்தது
முன்பு வருகின்ற வண்ணத்துப்பூச்சிகள்
கோடையில் கருகிநான்
மெலிந்த பிற்பாடு
வருவதில்லையே என்று சொன்னதும்
அதன் கண்களில்
நீர் சுரந்தது

பருகுக என்று நான்
கோப்பியைக் கொடுத்தேன்
இரண்டு கையாலும் வாங்கிய பூமரம்
இந்த நிலையிலும் காகங்கள் வந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது கிளைகளில்
குந்திக் கழிப்பதும்
செத்த இலைகளைக்
கொத்திவிடுவதும்
பெரிய வருத்தமே

பூமரம் கோப்பியைப் பருகவே இல்லை
சொல்லிச் சொல்லியே
கதிரையைச் சுரண்டி சுரண்டி இருந்தது

●

***22.6.1993***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 110

### என் மாடு

அவிழ்த்துவிட்ட மாடு
இன்னும் வரவில்லை
அவள் வதனத்துத் தோட்டத்தில்
புல்மேய்ந்து கிடக்கிறது
என்நெஞ்சு வெறும்
மரக்கொட்டில் போல
இங்கு
இங்கு
இங்கு

தினசரியும் பனி பெய்து
புல் செழித்த முகம்
அவள் நீளக் கூந்தல்
மழைகளைக் கூட்டும்
காலையிலே வந்து
அலுவலகம் வீற்றிருந்தாள்
என் மாடு துள்ளியது
கயிற்றை அறுத்து
பாய்வதற்கு எத்தனிக்க

போய்வா பிசாசே போய்வா பெண்ணழகுப்
புல்மேய்ந்து பசியாறி வந்தமர்ந்து கொள்ளென்று
கடமைகளை
எழுதிக் கொண்டே மிருகத்தை அவிழ்த்து விட்டேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனது
போனது
இன்னும் வரவில்லை

என் எழுத்துப் பிழைத்து
பிசகாகி எங்கோ
எல்லாம் ஓடி
புத்தகம் மட்டுமல்ல நானும் பழுதாகி
இந்தத் தொழிலின்
இன்றையத் தினமும்
புனிதம் கெட்டு
என் பெயரைக் கெடுக்கிறது

மாடே வா
அவள் அழகுப் புல்லை
மேய்ந்தது போதும்
பெண் முகத்தில் இருந்து மீள்

●

*21.1.1993*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 111

# பாரதியும் நானும் சாப்பிட்ட இரவு

பாரதி முட்டை உண்பதில்லை
அதற்குப் பதிலாகத்தான்அவன்
உலகத்தை விழுங்கினான்
நான் அவனோடு நேற்றிரவு
சாப்பிட்டுக் கொண்டிருந்தேன்
மிகவும் பசி என்றான்
பாத்திரத்தைச் சேர்த்து உண்டான்

நிலவை அவன்
உடைத்து நசித்துப் பிசைந்து உண்ட விதம்
எனக்கு வியப்பாக இருந்தது
கடலைச் சிறு கோப்பைக்குள் நிறைத்தெடுத்தான்
உண்டு உண்டே அவன் அதனைக் குடித்து முடிக்கையில்
சமுத்திரத்தில் நீந்திக்கொண்டிருந்த
கப்பல்களும் அவன் வயிற்றுள் சமித்தன

எனக்கும் நல்லபசிதான்
நான் வானத்தைப் பிடித்து விழுங்கினேன்
இன்று விடிய அதன் வயிற்றுள் இருந்த சூரியன் எனது
தொண்டையில் சிக்கிக் குத்தியது
பாரதி விழுந்து விழுந்து சிரித்தான்
நட்சத்திரங்களை மிட்டாய்போல் உணவியபடி பலமாய்

பாரதியின் மீசையில் இருந்து இப்போதும் தேன் வடிவதனை
அந்த இரவு வேளையிலும் நான் கண்டேன்
காற்று வழக்கம்போல் இப்போதும் அவனின்
குதிகாலைத் தடவி
பிடரியை முகர்ந்து
வாசத்தையும் இனிப்பையும் பெற்றுக்கொண்டுதான்
காதலர்களைத் தாலாட்டப் போகிறது
நானும் பாரதியும் பூக்களைப்பற்றிப்
பேசிக்கொண்டே சாப்பிட்டோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணம்மாவைப் பற்றிய கதையும் வந்தது
வயது போனாலும் கண்ணம்மா இப்போதும்
அதே இளமை குளுகுளுப்பு என்றான்
நம்மூர் பெண்களது நலத்தை அவன் அக்கறையாய்
என்னிடத்தில்
துருவி விசாரித்தான்
ஆண்களைத் தோளில் சுமந்தபடி இருந்தாலும் பாதகமில்லை
பார்த்துக் கொண்டிருக்கலாம்
இங்கு நடப்பதோ
மிகக் கொடுமை

பெண்குடித்து அவள் வயிற்றுள் இருக்கின்ற நீரில்தான்
ஆண் குளிக்கின்றான்
பெண்ணின் வாய்க்குள்ளால் தன் குதிகாலை விட்டே
கால் கழுவுகின்றான்
என்றெல்லாம்
நான் சொன்னேன்

உண்ட இடத்திலேயே வெடித்தான் பாரதி
எனது வீடு முழுக்க
அவனது கவிதைகள்
சிதறித் தெறித்தன
போத்தல் உடைந்து தேன் வழியும் விதம்போல
அவனில் இருந்து
கவிதைகள் ஒழுகின
நான் கையைக் கொடுத்து நாக்கில்
தொட்டு வைத்ததுகூட
மறக்க முடியாத இனிப்பாய்
இருந்தது
தமிழின் ஒவ்வொரு எழுத்தும் உயிர்த்து உயிர்த்து
நாங்கள் சாப்பிட்ட இடமெல்லாம்
பாரதியை வணங்க வந்தன
ஏதோ ஓர் எழுத்து என்னை வந்து
தொடையில் குத்தியது
பாரதியை நான் உடைத்த ஆத்திரத்தில்
இரட்டைக் கொம்பை நீட்டியபடி

●

*28.8.1992*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

112

## அபிமானக் கவிஞனைத் தின்ற கரப்பான்

இன்று முழுக்க
நான் புத்தகம் படிக்கவில்லை
கரப்பான் அரித்த எனக்கு விருப்பமான அந்த
இதயம் போன்ற
கவிதைத் தொகுதியை
பார்த்துப் பார்த்தே அழுதேன்
விரிக்க விரிக்க ஓட்டை
சில இடத்தில்
தாள் தொட்டால் கழன்றுவரும் தன்மை

அந்தக் கவிஞனின்
எத்தனை உணர்ச்சிகளைக் குடித்தது
பொல்லாத கரப்பான்
அவனொரு உலகக் கவிஞன்
என்னைப்போன்று ஒரு சிறுதுரும்பு அல்ல

அந்தக் கவிஞனின் படைப்புகள்
தின்று குவித்த
கரப்பானுக்கு இனித்திருக்க வேண்டும்
சிலது உறைத்திருக்கும்
ஆனாலும் துப்பவில்லை
அப்படி ருசியாய் இருந்திருக்கும் அவனின்
மன எண்ணத்தில் நெளிந்த மொழி

என் மனம் சொன்னது
இந்த கொடுமையைப் பார்த்துப் பார்த்து, அழுவதைவிட
பூரணமாய் பார்க்காமல்
இரண்டு கண்களையும் கோழி முட்டைபோல் பொரித்து
தின்ற கரப்பானுக்கே மீண்டும்
தீனாகப் போடென்று
போடுவேன்

●

*3.11.1993*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

113

## எனது உள்ளங்கையில் நான்

என்னை நான்
எனது உள்ளங்கையில் இருத்திவைத்துப்
பார்த்தேன் அழகு

ஒரு மதியத்தில்
கிழட்டு மரமொன்றின் நிழலின் கீழ்
நான் இருந்தபடி
கையை நீட்டி
எனது உள்ளங் கையில் இருத்திவைத்த என்னை
திடீரெனப் பொத்தினேன்
உள்ளே அகப்பட்ட நான்
திமிறவில்லை

எழுந்து
உடைகளைத் தட்டிக்கொண்டு
என்னை நான்
எனது சட்டைப் பைக்குள் போட்டபடி
இன்னொரு நிழலின்கீழ் சென்றேன்

அங்கு இருந்து சட்டைப்பைக்குள்
இருந்த என்னை
நான்
மீண்டும் மற்ற உள்ளங் கையில்
வைக்க எடுத்தேன்
முன்னர் கையில் இருந்ததை விடவும்
இப்போது கருகிப் பொசுங்கி இருந்ததால்
அந்த உள்ளங் கையில் இருந்தும் நான்
இருந்ததைப்போல தெரியவே இல்லை
அவ்வளவு தீ
ஊரில்

●

*3.11.1993*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 114

## செத்த முகிலின் மழை

நனையாதே சீ... ஊத்தைமழை
முகில் அவிந்த
நாற்ற மழை
மணலும் குடிக்காமல் வாந்தி எடுப்பதனால்
ஓடிப்போய்
வளவின் மூலையிலே சுரக்கிறது
விடும் வரைக்கும்
நீ வந்து
உள்ளே இரு தும்மும்

பார்
நெளிந்த மண்புழு
மீண்டும்
நெளிய விரும்பாமல் மண்ணுக்குள் புதைவதை
மரம்
முகத்தை மூடி
பூக்களை
கையால் பொத்துவதால்
ஒன்றும் உதிரவில்லை இந்த ஊத்தை மழை பட்டு
நாற்றம்தான்
நமது மூக்குள் வருகிறது

மழையென்றால் வெள்ளை
ஆசையுடன்
அள்ளிக் குடிக்கும் நீர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரங்கள் குளித்து
சில்லென்ற காற்று அவற்றிற்குச் சவர்க்காரம் தேய்த்து
கழுவி எடுக்கும் நிகழ்வு

இது மழையா
நாட்பட்ட சீழ்
வானத்தில் ஓடாமல் எப்போதோ எதனாலோ
செத்து அந்தரத்தில்
புல் முளைக்காத இடத்தில் கிடந்து அவிந்த
முகிலின் ஊனம்

●

*4.11.1993*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

115

## மனித நேயத்தின் வெளிச்சம்

வீதியில் இருந்து என் மனைக்குள் வரும்போதே
நமக்குள் இருந்த பகைமைகளை எரித்துவந்தாய்
உன் புன்சிரிப்பை
ஒரு தீப்பந்தமாய் பிடித்து
என் நெஞ்சில்

இன்று காலையில் வந்த நீ
வெயில் மூத்து
மதியம் தட்டும்வரை
என்னைச் சீனிபோட்டுக் கரைத்துக் குடித்தாய்
பாலாய்
என் நெஞ்சை
விரித்துவைத்து
பலாப்பழமாய் உண்டாய்
ஏன் நண்பனே அதன் கொட்டைகளைக்கூட
துப்பாமல் விழுங்குகிறாய்
முழுதாய்

ஓர் ஆண்டு இருக்கும்
இல்லை
மாதங்களோடு மாதங்கள் முட்டி
காலம் உடைந்து தூளாகி
இரண்டு ஆண்டுகளின் நஷ்டத்திலாவது
நாம் இந்தநிலை வந்தோம்
மகிழ்ச்சிதான்

உண்ணு
இன்னும் எனது பழத்தை மட்டுமல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ முன்பு சுவைப்பதுவாய்
அதன் தோலையும் வைக்கோலையும் கூட

சே
அதில் ஒட்டும் ஈயைத் துரத்தி விரட்டாமல்
உண்ணாதே நண்ப
எனது பிரியத்தில்
வெயில் மூத்துப் போகிறது
நமது நட்பைப்போல்
கால் உடைந்த வெள்ளிகளும் இன்றிரவு மினுங்கும்
நமது முகங்கள்போல்
பற்கள்போல்
மனித நேயத்தின் வெளிச்சம்போல்
●

*5.11.1993*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

116

## என் கந்தோர் முழுமதி

கப்பல் விட்டபடி குதூகலிப்பாய்
நான் சிரித்தால்
கடலை உன் மேசையிலே கூட்டி இருத்திவைத்து
அதற்குள்

மலையைத் தலைமயிரில் கட்டிக் கிறுக்குவாய்
தென்றலைக் கூட்டும் நெடிய கூந்தலல்லவா உன்னுடைய
தலையின் மயிர்கள்
அவைகளால் கதிரையிலே
இருந்தபடி
மலைகளைக் கிறுக்கி
உனது
வேலைகளையும் சாட்டுக்குச் செய்தபடி

அன்று நீ
வானம் விட்டாய்
சீறி வீசும் பெருங்காற்றும் இல்லை
அன்று
மரங்கள் வேர் ஆட்டி எச்சரித்த
செத்துப்போகும் அளவுக்கு இருந்த
தினம்
இருந்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ இருப்பிடத்தில் இருந்து விட்ட வானம்
சிறிய நெடு நூலில்
பறந்தது மிக நன்றாய்

நான் சிரித்தால்
அல்லது கதைத்தால்
நீ இவ்வளவும் செய்கிறாய்
செய்யாதமாதிரி இருக்கும் ஒருவிதமாய்
இன்றுநான் கதைக்கவில்லை என்ன செய்வாய்
நெஞ்சு பிய்ந்து
அதன் துண்டுகளை நான் பொறுக்கி
ஒட்ட முடியாத ஒரு நிலையில்
தனிப்பட்ட வேதனையில்

ஓ... உன் கண்ணைக் கழற்றி மேசையிலா வைத்துவிட்டாய்
முகத்தால் இரத்தம் வடியும்
என் கந்தோர் முழுமதி

●

*5.11.1993*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

117

## நான் மடித்து வைத்த பிணம்

மிக நீண்ட நாட்களுக்குப் பிறகு
அவன்
சிறிய கடிதமாகி
தபாற்காரன் கொண்டுதர வந்தான்

ஒருவாறு போய்ச் சேர்ந்து விட்டதாகவும்
இருந்தாலும்
அங்கு படுக்கும் அறைக்குள்
இங்குதான் கிடப்பதுமாய்
சொன்னான்

நீ சுகமா எனவிசாரித்தான்
பின்வரும் பாணியில்
பல நாட்கள் போரிட்டு
நான் ஒருநாள் கண்ணயரும்
நிர்ப்பந்த நித்திரையைப்போல
என

தான் தினமும்
இரு வானம் பார்ப்பதாயும்
ஒன்று பூத்து
மற்றையது கருகியும்
இரண்டு நிலத்தின் நீரில் குளித்து
அங்கிருந்து கைநீட்டி
இங்குள்ள துவாயை இழுத்து
துடைப்பதாயும்
வாங்கி
உடைத்த நேரம்முதல் அழுதான்

நான் அவனை
மடித்துவைத்தேன் பத்திரமாய்
பிணமென்று பூச்சி அறிந்து ஊராமல்

●

*5.11.1993*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

118

## தூரம் போய்விட்ட எனது ஒற்றைக்கு

போன யுகத்தில் வந்ததற்கு
இந்த யுகத்தில் வந்திருந்தாய்
நேற்று
அதுவும்
வந்தாயா
இல்லை வரவில்லையா என்பது
நல்ல தெளிவில்லை எனக்கு
அவ்வளவு அவசரம் உனக்கு

உன் தலையில்
பெரியதொரு சாக்கு இருந்தது
அது நிறைய
வினாடியும் நிமிடமுமாய் காலத்தின் கனம்
பாரம்தான்
வீட்டுக்குள் வா
நீர் அருந்தியாவது போக
என்றழைத்தேன் உன்னை
இல்லையென்றாய் ஒரு கதையை
தின்றாய் இன்னுமொன்றை
தந்தாய் அவசரத்தில்
சிலதை துப்பிக்கொண்டே வழிநெடுகப் போனாய்

போ நண்ப
என்னை விட்டும்
கொஞ்சம் கொஞ்சமாக குறைகின்றாய் நீ
தூரம் போய்
உன் வாழ்க்கையை இருத்திக்கொண்டதால் ஒரு நிகழ்வால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமக்குள்
இப்படியொரு பேய்
நேரமாய்

நீ நேற்று
வழிநெடுக
துப்பிய துப்பல்களை நான்பொறுக்கி அவற்றின்
பொருள் அறிந்தேன்
உனக்கு
நீயும் நானும் அங்கு நீ செல்லுமுன்னர்
பகல் ஊத்தை அப்பும் மாலைகளில் போனால்
காற்று தன்னிடம் இல்லாத வேளையிலும்
மரங்களிடம் வட்டிக்குக் கடன் வாங்கி
வீசும் கடற்கரை நினைவுண்டா
அந்தத் தினங்களிலே
நாம் பறந்த தெருவையும்
அதில் ஒரு வேலிக்குள்
நம்மை ஒருமித்தே ரசித்து தினம் படம்பிடித்த
அந்தப் பொதுநிறத்துப் பூவையும்

அந்தப் பூ
இப்போது
கண்ணைக் கழற்றி பிடரியிலே பூட்டியது
அழுது
எடுத்த படங்களைக்
கிழித்தும் எறிந்து
நான் ஒற்றையாய் போக

●

*5.11.1993*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

119

## பொன் ஆற்றின் ஒரு கதை

குளித்து முடிந்ததா சூரியனே
மீன்கள் கடித்தனவா
தாமரைக்குள் நீ விழுந்து
குளிக்கும் அழகே தனி

மஞ்சள் அரைத்துக் கரைத்த ஆறு இது
ஆம்
பொன் அருவி
எருமைமாடுகளும் தங்கமுலாம் பூசிய
அழகுப் பதுமைகள்போல்
எந்த நேரத்திலும்
இந்த ஆற்றில்
குளிக்கும்

ஒருநாள்
ஒரு தங்க எருமைமாட்டிற்கும்
அழகிய ஒரு வெண் கொக்கிற்கும்
காதல் மலர்ந்தது
இந்த ஆற்றில்தான்

பிறகென்ன
கொக்கு
மீன் தேடுவதே இல்லை
அந்த எருமைமாட்டில் மையல் கொண்டு
தினம் தினம் இந்த ஆற்றைச் சுற்றிப்
பறக்கத் தொடங்கியது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்க எருமைமாடும் அப்பிடித்தான்
கொக்குப் பறக்காத நேரத்தில்
சோர்ந்திருக்கும்

ஒருநாள்
தாமரைகள் அதிகம் பூத்திருந்த தினத்தில்
தவளைகள் கீதம் பாட
தங்க எருமைமாட்டைத் தூக்கிப் பறந்தது
அந்த வெண்கொக்கு
எருமைமாடு
அட்டையைப்போல அதன் காலில்
ஒட்டியிருந்தது
காதலில்

●

*6.11.1993*

உசாத்துணைப் பகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

120

## ஆடுகள் உலகமே

தொடர்ந்து அந்த மரத்தை அந்த ஆடு
கடித்துக்கொண்டே வந்தது
நாட்போக்கில் மரம்
குட்டையானது

முந்தநாள் இரவு
மழை கொஞ்சம் பெய்திருந்தது
விரல் உதிர்ந்து மொட்டையாய் நின்ற கையில்
சில துளிர்களை
எழுப்பி முனைந்தது மரம்
உயிர்க்க

அதற்கு
சரியான ஏக்கமொன்று மனதிற்குள் இருந்தது
தன்னோடு ஒன்றாக முளைத்து ஒன்றாக வளர்ந்த
பக்கத்து வீட்டின் கன்று
அந்த ஆடு புக முடியாதபடி
வளர்க்கப்பட்டதால்
அழகு ததும்ப காற்றில் படம்
கீறிக் கொண்டு நிற்பதை
பார்த்து அழுது
ஆட்டைக் கண்டதும் பல்லைக் கடித்தது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தாலும்
ஆட்டைக் கடிக்க அது இதுவரை முடியவில்லை
என்றோ கடிப்பேன் என்ற சத்தத்துடன்
ஒரு வேர்
நேற்றுத்தான் ஓடியது
அந்த வேர்தான்
பூமியை உசுப்பி
சில மலைகளைச் சரித்தது

பாவம் இவை ஒன்றுமே ஆட்டுக்குத் தெரியாது
வழக்கம்போலதான் கடிக்கவந்தது இன்றும்
அந்த ஆடு
மரத்தை

●

*6.11.1993*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

121

## நத்தை பறந்த கண்ணிமை இலை மரம்

நத்தை
இன்னொரு தடவை முட்டி உசுப்பியது
அந்தச் சிறிய மரத்தை
பாடுவது அந்தச் சிறிய மரம்தானா
என்ற சந்தேகம் அதற்கு

ஆம் மரம்தான் பாடியது
வாயைப் பிளந்தபடி
தன் சதையை ஓட்டிற்குள்
இழுக்காமலே வெளியில் வைத்தபடி
நின்றது
நத்தை
அந்தச் சிறிய மரத்தின் பாடலில்
தன்னை மறந்தது

அந்த மரம் பாடிய பாடல் அனைத்தும்
நத்தைக்கு மிக அழகாகக் கேட்டது
அந்த மரத்தின் பாடல் முழுக்க
இழந்த
ஒரு நிறைவேறாத காதலைப்பற்றியதாய்
அமைந்ததால்
நத்தைக்கும் மிகத் துக்கம்

உன் காதல் கடிதங்கள் துடிக்கின்றன கண்ணே
நான் அடுக்கிவைத்துப் பூட்டி
வைத்திருக்கும் பெட்டிக்குள்
வா
இருவருமாகவே திறந்து விடுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை பறந்து
எங்காவது ஒரு வனத்தில்
கூடுகட்டிப் புணரட்டும்
உன் காதல் கடிதங்கள்
இந்த உலகத்தில்
ஒரு புது இனப் பறவைகளாக
இனம் பெருக்கி வாழட்டும்

என்று
அந்த மரம்
பாடிக்கொண்டே இருக்க இருக்க
நத்தைக்குக்
கண்ணீர் வந்தது
மீண்டும் ஒருதரம் உசுப்பியது மரத்தை
அந்த சிறிய மரத்தில் இருந்து
ஒரு புதிய இலை
அதன் அருகில் வந்து விழுந்தது
ஆம் அது
ஒருவனது கண்ணிமை
நத்தை ஓடிக்கொண்டே கத்தியது
நிறைவேறாத காதலுடன்
செத்த ஒருவன்
முளைத்துள்ளான் மரமாய் முளைத்துள்ளான் மரமாய்
என்று அந்த
வட்டாரம் முழுக்க
பலமாய் இப்போது
சிறகடித்துப் பறந்தபடி

●

*6.11.1993*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

122

## பிச்சைக்கார வானம்

எலி கடித்து
வானம் தொங்குகின்ற சங்கிலிகள்
சாடையாய் அறுந்திருப்பதாக
கதைகள் அடிபடுகின்றன

இங்கிருந்து எப்படி எலி துள்ளியது
அந்த இடத்திற்கு
இரும்புச் சங்கிலியைக் கடிக்கும் பற்கள் உள்ள எலிகள்
மிக முக்கியமான அந்த இடத்திற்கு
போகும் வரைக்கும்
அதுதான் போக
கடிக்கும் வரையாச்சும்
எவரும் காணாமல் இருந்தது மாபெரிய தவறு

விரைவில்
வானம்
கூரை வந்து விழுவதைப்போல
தரையில் விழும் என்பதை
அதற்குள் இருந்து தினமும் வருகின்ற
காரமுள்ள பிறவி
சூரியன் சொன்னதாய்
நேற்று ஒரு குயில் கத்திக் கத்திப் பறந்தது
ஊரெல்லாம்

சா... எலிகள்
கொடூரமுள்ள எலிகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட்சத்திரங்களைத் தானியங்கள் கொறிப்பதைப்போல்
கொறித்துப் புசித்தே
நிலவு
காதல் கடிதங்கள் வைத்திருக்கும்
பெட்டிக்குள்
படுப்பதாக
காற்று சொல்லியதாக நேற்று பூவும் பேசியது

அதுதான் முன்போல
வானத்தில் வெள்ளிகளைக்
காணவேஇல்லை
ஒன்று... இரண்டு... மூன்று... ஆமாம்
எல்லாமாகப் பத்து
அதில் ஒன்று
என்னுடைய அவள்
போனால் ஒன்பது
இன்றைய வானத்தில் பூத்த வெள்ளிகள்
பிச்சைக்கார வானம்

●

*16.6.1993*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

123

## நான் சந்தோஷமாக இருந்த அன்று

என்னைச் சுமந்தபடி போயின
வண்ணத்துப் பூச்சிகள்
கொண்டுபோய்
ஒரு மரத்தின் பழுத்த இலையில் வைத்தன
இருக்க

தூங்குக என்று
பூக்களைக் கொண்டுவந்து விசிறியாய் வீசின
காற்று மணக்க மணக்க
பூச்சிகள்
உண்ணத் தேன் கொடுத்தன வாய்க்குள்
நான் அங்கிருந்து பாடிய கவிதையை
சிறகிற்குள் பத்திரமாய்
கொண்டு சென்று பூமரத்தின் கன்னிக்குள்
ஊற்றின
நாளைய மலர்கள் இனிக்க

கால் ஊன்றியது ஒரு பூச்சி
ஒவ்வொரு உரோமம் உரோமமாக
மினுக்கி மினுக்கி
காலில்
அடுக்கி வைத்தது இன்னொன்று

ஒரு பூச்சி
என்னை இழுத்து
முகர்ந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தோஷமாக இருக்கின்றான்
இவன் 'மனிதன்தான்' என்றது
எல்லாப் பூச்சிகளும் கையடித்து மகிழ்ந்தன

நான் இருந்த
பழுத்த இலை முனகியது
ஆனாலும் விழவில்லை
பாரமே இல்லை நான் இன்று
பாரமே இல்லை
ஒரு பூச்சி சொல்லியது
உன்னை நான்
சிறு விரலால் தூக்கிக் காட்டுகிறேன் என்று
தூக்கியபடி

ஆம் வண்ணத்துப் பூச்சிகள் இராட்சதப் பறவைகள்
பலம் மிக்கவை

●

*18.7.1993*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தக் காட்டுப் பூமரம்

இன்றிரவு
ஒரு காட்டுப் பூமரத்தை நான் பிரசவித்தேன்
பூக்கள் நிறைந்திருந்தன நான் பிரசவித்த பூமரத்தில்
பறவைகளும் கத்தின

கோடான கோடி வண்ணத்துப் பூச்சிகள்
நான் பிரசவித்த பூமரத்தைச்
சுற்றிச் சுற்றிப் பறந்தன
நிலவு
வானத்தின்
முக்கால் தூரம் வந்துவிட்ட நேரம்
நான் பிரசவித்துக்
களைத்திருந்தேன்

நான் ஆண்
எங்கிருந்து எப்படிக் கருக்கட்டியது
இந்தப் பூமரம்
ஓ... அன்று நான் அந்தப் பயணத்தில் கண்ட
காட்டுப் பூமரத்தின் முகம்
இந்த மரத்திற்கும்

அந்த ஆற்றின் ஓரத்தில் அந்தமரம் நிற்கிறது
தலையில் பல வர்ணத்தில்
மை பூசியதுமாதிரி
பூக்கள்
அந்த மரத்தில் அன்று என் மனதைக்
கொளுவி வைத்துவிட்டு வந்தேன்

ஆம் அந்த மரத்தின் முகமே
இந்த மரத்தின் முகம்
தூக்கிக் கொஞ்சி பெயர்சூட்டித் தாலாட்ட
விடியட்டும்

●

*15.9.1993*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

125

## காணாமல் போன அவனின் பாடல்

அவன் கட்டிடங்களில் குந்தியிருக்கிறான்
கிளியாய்
குயிலாய்
யார்சொன்னது அவன் காணாமல் போய்விட்டானென்று
வீதியின் ஓரத்தில் நிற்கின்ற புற்களிலும்
அவன்
பனி விழும் காலையில்
சில இரவுகளிலும்
வீற்றிருந்ததை நான் கண்டிருக்கிறேன்

அன்று நான்
மிக அவசரமாக யோசனையுடன்
சென்று கொண்டிருந்தேன்
அவன் ஒரு புறாவின் வடிவில்
பெரிய நிழல் மரம் ஒன்றில்
கால்நீட்டிப் படுத்திருந்து
அவன் விருப்பத்துடன் படிக்கும் புத்தகத்தைப்
படித்துக்கொண்டிருந்தான்
நான் கை அசைத்துவிட்டுப் போனேன்

அன்று
அவன் என்னைக்கண்டு சிரித்தான்
எங்கென்று ஞாபகமில்லை
அன்றைக்கு முதல்நாளும்
நான் அவனைச் சந்தித்தேன்
சந்தையில் பழம் வாங்கியபடி
நின்றதாய் நினைவுண்டு
யார் சொன்னது
அவனை யாரோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடத்திப்போய்
கொன்றதாய்

அவன் பாடிய பாடலை நேற்றும் கேட்டேனே
மிகவும் இனிமையாய்
ஒரு மழையின் ஓசையாய்
அவன் இப்போதும் மிக அற்புதமாகப் பாடுகிறான்
நாளை வரும் மழையில்
காதுகொடு
அவன் பாடுவான்
கேட்கலாம்
மாம்பழத்துள் இருக்கும் புழுத்தெறித்து நிலத்தில்
ஆடும் அளவுக்கு
அவன் பாடல் இனிக்கிறது

●

*19.10.1993*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

126

## பல்லிகள் கத்தும் துயர்

ஒருவன் அவனுடைய
அவளை விட்டுப் பிரியலாம்
மண்டை புழுத்து அவளது கூந்தல்
கொட்டி மொட்டையாய் இருப்பதைக் கண்டும்
நெஞ்சை நெஞ்சாய் வைத்துக் கொள்ளலாம்
அவள் தொப்புள் ஊதி
பலுனாய் பருத்து
நின்ற போதும்
தாங்கலாம்

அவள் மூக்கு நெடுத்து நிலத்தில் விழுந்தால்
அதுவும் அழகென
மனதை ஆற்றலாம்
காது நீண்டு தோளைத் தடவி
ஒரு கண் மூடி
மறுகண் அவிந்தும்
அழகி நீயே அழகி என்று
தேற்றி மனதை வாழலாம்

நிலவில்
சவம் அடக்குதல்
பெரிய துயரல்ல
மையவாடிகள் பூமியில் குறைந்தால்
வேறென்ன செய்வது என்று சொல்லலாம்

தும்பியை வண்டை
பிடித்து நசுக்கலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் உள்ள மரங்கள் அனைத்தையும்
எரித்துக் கருக்கலாம்
கைகோர்த்துப் போகும் அழகிய சோடியை
வாகனம்மோதிச் சிதைக்கலாம்
துயரில்லை ஒன்றும்
கட்டிலில் இருந்த ஒருவனின் மனைவியின்
முப்பது பல்லும்
இருபது நகமும்
அவன் கண்ணின் முன்னே உதிரலாம்
மார்பு வற்றலாம்
துயரிலும் துயர்
அதுவும் இல்லை
துயர்
வாழ்ந்த அறையை விட்டுப் பிரிவது
பல்லிகள் கத்த
பூச்சிகள் இரைய
●

*4.3.1993*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

127

## நான் போகமுடியாத அயலூர்

அந்த ஊரை
நாலு மூலையிலும் நாலு குயில் தூக்கி
கொண்டுவந்து
என் நெஞ்சுக்குள் வைத்தன
இன்று காலையிலே

அந்தக் கிராமத்தின் பெரு வாவி
இப்போது எனக்குள்ளே ஓடியது
அதில் பூத்திருக்கும் தாமரைகள்
வண்டு குந்தப் பூத்தபடி

துப்பாக்கி வேலிகளால் அடைபட்டுக் கிடந்த அந்த
சர்க்கரை மணக்கும் மணல் கிராமம்
எனக்குள்ளேயே இன்று விடிந்தது
சந்தைக்குப் போகின்றார் சில மனிதர்கள்
சில மனிதர்கள்
வயலில் உழைத்தபடி நிற்கின்றனர்

நான் முன்பு பார்க்கும்
அந்தப் பாடசாலை வண்ணாத்தி
இப்போது சற்றுப் பருத்தபடி
பறக்கிறது
நான் அங்கு போய்த்திரிந்த காலத்தில்
புன்னகைத்த விதம் போன்றே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்குள் இருக்கின்ற கிராமத்தில்
என்னைப் பார்த்துப்
புன்னகைக்கிறது

சரி இளம் அதிகாலைக் குயில்களே
மீண்டும் தூக்குங்கள் கிராமத்தை
கொண்டுபோய் இது
இருந்த இடத்தில் வையுங்கள்
நாடு நலமுற்று
ஒரே கொடியில் வெள்ளை பச்சை நீலமாய்
சிவப்பும் மஞ்சளுமெனப்
பூக்கள் விரிகின்ற காலம் வரைக்கும்
நான் போக முடியாது இந்த ஊருக்கு
இப்படித்தான் இடைக்கிடை
தூக்கிவந்து எனக்குள்
வையுங்கள் ரசித்துவிட்டு
தருகிறேன் எனது
பொன்னூரை அழகுக்
கண்ணூரை பாடசாலை
வண்ணாத்தி பறக்கின்ற அயலூரை

●

*6.12.1993*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

128

## மலங்கழிக்கும் பேய்க்காற்று

இன்றும் மனதுக்குள் மலங்கழித்து விட்டது
காற்று
இருபத்தி ஐந்துபேர்
அதில் ஏழுபேர் ஆண்கள்
பதின்மூன்று பெண்கள்
நாலு குழந்தை
ஒரு பிள்ளைத்தாய்ச்சியும் என
அது கழித்த மலம்
வயிற்றைக் குமட்டியது

ஐயோ
வாகனத்தை மறித்தனர்
இறக்கினர்
இழுத்தனர்
இனம் இனமாகப் பிரித்தனர்
ஓர் இனம்போக ஓர் இனத்தை வெட்டினர்
குத்தினர் சுட்டனர்
பிள்ளைத்தாய்ச்சியை வெட்டிச் சிசுவை
எடுத்துத் தெருவில் நசித்தனர்

என்றெல்லாம் இன்றையக் காற்று
என் மனதுக்குள் கழித்த மலத்தில்
மனிதத்தின் நாற்றம் தாங்காமல்
சூரியன் ஒருதரம் ஆடி நின்றது
அதன் கதிர்கள் சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறிந்து தொங்கின
குடையின் கம்பிபோல்

அனைவருமே பயணிகள்
ஒன்றும் விளங்காத மாடுகள்
புத்தி இருந்தால் யோசித்து நடந்திருக்கும்
கட்டை போட்டு வாகனத்தை மறித்துத்தான்
அக்கிரமம் நடந்திருக்கு
சிலருக்குப் படுகாயம்
தப்பிப் பிழைத்த ஒருவன் இன்னும்
நினைவின்றிக் கிடக்கின்றான்
ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் மொத்தமாய்
கிழவி உட்பட
என்றெல்லாம் இன்றையப் பேய்க்காற்று நாய்க்காற்று
தெருவெல்லாம் நடந்தபடி ஊரெல்லாம் மேய்ந்தபடி
கழிக்கிறது மலம்
மூக்கைப் பொத்தியும் நாற்றம் அடங்கவில்லை
என் மனதுக்குள் மலம்

●

*8.8.1992*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

129

## நானான உருண்டை

என்னை உருட்டி உருட்டித் திரட்டியது
சாணமுருட்டும் கருவண்டு
'நாற்றம்' என்று முகத்தைச் சுழித்தது
இடுப்புக்குள் இருந்த
கைக்குட்டையால்
முகத்தைத் துடைத்தது
திரும்பவும் உருட்டி குப்பையில் தள்ளிவிட்டு
தள்ளி நின்றது

குப்பையில் கிடந்த ஒரு தவளைப் பிணம்
வண்டு
உருட்டித் திரட்டி
தள்ளிய 'நானான' உருண்டையைப் பார்த்து
சற்று விலகிப்போய்
குப்பையின் ஓரத்தில்
குந்தி இருந்து எடுத்தது வாந்தி
தலையில் கைவைத்து

வெறுப்போடு
காளானின் அடியிலே
இளைப்பாறிக் கொண்டிருந்த
வண்டு அழுதது
நான் இந்த நாற்ற மனிதனை
உருட்டி வந்ததே தவறு
பல விதத்தில் கொடிய நெடி
இவர்களுக்குண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்போதும் நான்
சாணமே உருட்டுவேன்
என்னசெய்ய
ஓர் ஆசையில் உருட்டினேன்
தாங்கமுடியாத நாற்றம்

சொல்லிக்கொண்டே வண்டு திரும்பவும்
கைக்குட்டையை எடுத்து துடைத்தது முகத்தை
மூக்கையும் சீறி

●

*20.6.1993*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம்
வடமராட்சி தெற்கு - மேற்கு
பிரதேச சபை

130

## கடல் அழுத தலைவெட்டிய பிணம்

கடல் குமுறிக் குமுறி அழுதது
தன்னில் மிதந்த தலை வெட்டிய பிணத்தை
நினைத்து நினைத்து

அதைச் செய்தவன் யார்
என்று மிக ஆத்திரமாய்
ஒரு மீன் துள்ளி
எழுந்தபடி கேட்டது

வெட்கம் மிக வெட்கம் ஆனால்
எனக்குத் தெரியாது
என் அடியில் பிணம் ஒதுங்கிய பிறகு
கரையில்
நிற்க மனமில்லை எனக்கு
என்றபடி
நான் எப்போதும் சாய்ந்திருக்கும் நெடிய முடித்தென்னை
கடலுக்குள் ஓடியது ஓலைகள் உதிர

எனக்கும் 'மனம்' உண்டு என்றது கடல்
சீறிச் சிறிது ஆத்திரமாய்
என்னைப் பார்த்து
மீன் வளர்ப்பதற்கும்
அவை சினைவைத்துப் பொரிப்பதற்கும்
மட்டும் நானில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் கரையில் இருக்கின்ற காதலனின் காதலியின்
கதைகளிலும் பங்குண்டு
எனக்கு என்றபடி
சுறாமீன்களே இனிக் காவலுக்குப் போங்கள் இரவுகளில்
என்கரையில்
என்று கத்தியது

இனி யாராலும் முடியாது இரவுகளில் கடலில்
தலை வெட்டிய பிணம் மிதக்கவிட
அது விடாது

●

*3.11.1993*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 131

### உலகின் முள்ளந்தண்டில் ஒரு பாடல்

என்னைப் பற்றி
ஒரு பாடல் எழுதிக்கொடுத்திருந்தேன்
இந்த உலகின்
முள்ளந் தண்டில் ஒட்ட

ஒட்டியது காலம்
அதை வாசித்துப் பார்த்த நாட்கள்
ஏங்கினவே நின்று

நான் அந்தப் பாடலில்
மனித இரத்தத்தை குருவிக்குள் பாய்ச்சுவோம்
குருவியின் உதிரத்தை
மனிதருக்குள் ஊற்றுவோம்
என்றெல்லாம் எழுதிய வரிகளை
ரசித்து ரசித்து விடிந்த இராக்களும்
மகிழ்ந்து வியந்து தூங்கிய பகல்களும்
அதிகம் ஆனால்
மனிதன் உணரவில்லை

மனித இரத்தம்
குருவியுள் போவதா
குருவியின் உதிரமா
நமக்குள் வருவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று மனிதன் நகைத்தானே தவிர
அந்தப் பாடலைப் பிரிக்கவில்லை
பொருள் தேடி

குருவியோ குருவி ஊரெல்லாம் பறக்கும்
உயிர் மனிதா
நீயும் பற
என்றெல்லாம் அந்தப் பாடலில் பின் வரும்
அதைப் படிக்க பொறுமையே இல்லை
இந்த மனிதனுக்கு
நுனிப்புல் மேய்ந்தபடி
என் பாடலைப் பழித்தபடி

குருவிக்குள் மனிதனின் இரத்தத்தை ஊற்றுவது
ஏனென்றும் எனது
பாடலில் பின் வரும்

●

*3.11.1993*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

132

## எனக்குள் விழுந்த எனக்குள் இருப்பவர்

எனக்குள் இருந்தவர் ஓடிப்போனார்
கையில் ஒரு விளக்கை எடுத்துக்கொண்டு
வாசல் முழுக்கத் தேடினார்
பின் ஓர் இடத்தில் நின்றார்
தோண்டினார்
எடுத்துப்போட்டார்
என் செத்துப்போன இதயம்
அதற்குள் இருந்த மயில்
நான் பறந்த சிறகு
குடியிருந்த பூ

இரவு மிகவும் நேரமாய் பனிபெய்யவில்லை
மிகவும் உஷ்ணமாய் இருந்தது

தோண்டி எடுத்த பிணங்களை
சிறிது நேரம் தூக்கிப்பார்த்தார்
மூக்கில் வைத்து முகர்ந்தார்
கண்ணில் எடுத்து சிலதை ஒற்றினார்
அருகில் இருந்த
வெண் பூக்களைப் பறித்து
அவைகளின் மேலே தூவினார்

இரவு துயரம் தாங்காமல்
மழையே பெய்தது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசர அவசரமாய் எனக்குள் இருந்த
அவர்
அந்த இடத்திலேயே அவைகளைப் புதைத்தார்
மண்ணை இழுத்து மூட விரும்பாமல்
பூக்களைக் கொண்டே மடுவை மூடினார்
மிகவும் சோகம் அவரது முகத்தில்
ஓடி வந்து எனக்குள் விழுந்தார்
முகம் அடிபட
குப்பற

●

*30.6.1993*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

133

## என் காகங்களுக்காக

நான் காறித் துப்பினேன்
அதற்குள் இருந்து மனிதனின் மானம்
நாறியது

தெருவெல்லாம்
காகங்கள் கரைந்தன
எனது காறித் துப்பலுக்குள் நாறிய மனிதனின்
மானத்தைத் தூக்கிப்
பறந்து அழுக்குண்ண
அவைகளுக்கு முடியாமல்
விக்கி விக்கி அழுதன
தன் மானம் மேலிட்டு

ஆம் என்னுடைய காகங்களே
தவறுதான் செய்துவிட்டேன்
உங்கள் தன்மானத்தை மதிக்காமல்
மனிதனின் மானத்தை
உங்களைப் பார்த்துக் காறித் துப்பினேனே
'புசிக்கும்படி'
பெரிய தவறுதான்

நான் துப்பிய துப்பலை
மண்ணுக்குள் புதைக்கின்றேன்
நீங்கள் பறவுங்கள்
தன்மானத்தோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எலிப் பிணத்தை அல்லது மாட்டின் சாணத்தை
உண்ணுங்கள் மனிதனின்
மானம் இழிவு

ஒருவனை ஒருவன் தின்னுபவன்
பல
விதமாகப் பிரிந்தவன்

மண்ணுக்குள் அவனது மானத்தை நான் புதைப்பேன்
அவ்விடத்தில்
மரம் முளைக்காது
என் காகங்களுக்காக

●

*30.6.1993*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

134

## துள்ளி விளையாடும் மரணம்

எனது மரணம்
இருக்க இருக்கப் பெருக்கிறது
சொற்ப காலத்திற்கு முன்னர்தான்
என் கண்முன்னே தெரியத்தொடங்கிய அது
இப்போது
என் வாசலில்
வால் முறுக்கிய ஒரு கன்றுக்குட்டியைப்போல்
தினம் விளையாடிக் களிக்கிறது

முதன் முதலாக என் கண்ணுக்குத் தெரியும்போது அது
சிறு
எறும்பைப்போன்றுதான்
இருந்தது
அதன் வளர்ச்சி
மிகவும்
வேகமான ஒன்று
இந்தக் குறுகிய காலத்திற்குள்
அது வளர்ந்திருக்கும் விதம்
பயங்கரம்

மண்ணின் ராசி அப்படி கேட்டீரோ
கடலும் சுருங்கி ஒரு போத்தலுக்குள் ஊற்றி
மேசையிலே வைக்கும் அளவுக்கு
அச்சம் நிறைந்த என் தரையில்
மரணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாடுமாதிரி என்ன
யானையைப்போன்றும் கொழுக்கும்

என் மரணம் இப்போது மிகவும் மகிழ்ச்சியுடன்
துள்ளி ஓடி வந்து
சற்று
விலகிக்கொண்டு போகிறது
நான் -இன்று -பாவமென்று நினைத்திருக்கும்

●

*30.6.1993*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

135

## அப்பாவிச் சனங்களின் சந்தை

அந்தச் சந்தை
பேயாகி அலைவதாக சொல்லப்படுகிறது
நான் நம்பவில்லை

ஊரின்
மூலையிலே நிற்கின்ற
பெரிய ஆலமரத்தில் அன்றிரவு
அந்தச் சந்தை
அலறிக்கொண்டு தூங்கியதாக
நேற்றும் ஒருவர்
ஒரு பொது இடத்தில் கதைத்தார்
நான் ஏற்கவில்லை

போன வெள்ளிக்கிழமை
தான் படம்பார்த்து வரும்போது
முச் சந்தியில் நின்று
அந்தச் சந்தை
மிகவும் உஷாராக இயங்கியதாகவும்
அதை வளைத்து
மாடுகளும் ஆடுகளும் மேய்ந்ததைப்போலவும்
தான் கண்டதாய்
அந்தப் பையன் சொன்ன கதையைக்கூட
என் மனம்
ஒரு பொருட்டாகத் தூக்கவில்லை

மீன்பெட்டி எமனாகி
வெடித்துப்பறந்த சந்தையது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனையோ உயிர்கள்
போன இடம்

இருந்தாலும்
அது பேயாய் அலைவதுவை
என்னால் இயலாது ஏற்க
என்றிருந்தேன்
அந்தப் பெண்மணி சொன்ன
கூவிக்கொண்டு சந்தை
இரண்டு வண்டிகள் சாமான் இறக்க அதற்குள்
போன புதன்கிழமை
நள்ளிரவுக்குப் பின்
கடற்கரை ஓரத்தில் குந்தி இருந்த
படலத்தைக் கேட்டபின்பும்

●

*26.12.1993*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

136

## நிலவிற்குள் பாலூற்றுபவன்

முன்னர் வரும்போது
சுட்டதுதான் சூரியன்
பிறகு
போதுமான அளவுக்குக் குளிர்
நான் நட்ட வெங்காயமும் இப்போது முளைக்கிறது

உருளைக்கிழங்கு விளைகின்ற தரையாக
நான் சூரியனை மாற்றிவிட்டேன்
இடைக்கிடை வல்லாரை செய்வேன்

நான் சூரியனில் வீடுகட்டி
பசுமாடு வளர்ப்பதற்கு
இடமும் அமைத்து
இதன் வாசியாய் ஆவேன் என்று
யார் நினைத்தது

அண்மையில்தான்
ஒரு கிணறு தோண்டினேன்
மனிதன் வசிப்பதற்கு வசதியான சூழல்
இந்தச் சூரியனில் உண்டு
ஒருநாள்
என் வெள்ளைப் பசு
மேய்ந்து போனபடியே
சூரியனின் விளிம்பிற்கு வந்தது
அப்போது அது உங்கள் நிலத்தை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய ஞாபகத்தில்
எட்டிப் பார்த்திருக்கவேண்டும்
உஷ்ணமடித்து முகம் கருகிக் கறுத்தது மாட்டிற்கு

நேற்று
நான் நட்டிருக்கும் கொய்யாவில்
ஓர் அணில் தாவுவதைக் கண்டேன்
வண்ணத்துப் பூச்சிகளும் வரட்டும்
கொதிக்கும் நிலத்தில் கிடக்காமல்

பசுப்பால் குடிப்பதற்கு
ஆளில்லை
நாங்கள் சூரியனில் நிரந்தரமாய் குடியேறிக்கொண்ட பின்பு

என் பசுக்கள்
பால் கறப்பது அதிகம்
அன்றையப் பூரணையில்
நான் நிலவிற்குள்
அள்ளி அள்ளி ஊற்றினேன் பால்
நான் பூமியில் இருக்கையில் என் கண்முன்னால் சரசமிடும்
அந்தக் காதலனும் காதலியும்
குளித்திருப்பர்

●

*15.3.1993*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

137

## ஏழாவது உலகம் போனவன்

போனவன் போனவன் போனவன் போனவன்
வரவில்லை
ஏழாவது உலகத்திற்கு

இந்த முதலாவது உலகத்தில் என்னை
நடுத் தெரு ஒன்றில்
கொஞ்சம் நில்லென்றான்
தான் வருவதாய்

நின்றேன் நின்றேன் நின்றேன் நின்றேன்
இன்னும் நிற்கின்றேன்
தன் அலுவல் முடிக்க
ஏழாவது உலகம் போனவன்
திரும்பவில்லை வெயிலின்
தோள்பிடித்து இறங்கி

அவன் போன
நான் கண்டறியாத அந்த உலகத்தில்
மடு குட்டை உண்டா
அல்லது முதலைகளா
வெள்ளைப் பெண்கள் நீலநிறக் கண்ணில்
பவனிவரும் பூந்தோட்டம்
அவர்கள் அலுத்து
தம் வியர்வையினைத் துடைக்கும்
காகிதமாய் அவன் நெஞ்சு
முறையே
உண்டா போச்சா எனக்கொன்றும் விளங்கவில்லை
வெயில் நிற்கப் போகிறது

●

*15.3.1993*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

138

## புனரமைக்கப்பட்ட கடலருகு ஊர்

அழிந்தவர் போக மிஞ்சி இருந்த மனிதர்களைத் தேடி
கொண்டுவந்து
பொய்ச் சிறகு கட்டிப்
பறக்கவிட்டிருந்தனர் மீண்டும் புனரமைக்கப்பட்ட
அந்தக் கிராமத்தில்

காக்கைகளை
குருவிகளை
குயில்களை
அனைத்தையுமே
வண்டையும்கூட
புதியதும் தப்பிய பழையதுமாய் எங்கிருந்தோ
ஏற்றிவந்து
கொட்டி அந்தக் கிராமத்தின் முகத்தைக்
கீறி இருந்தனர் படமாய்
வர்ணமில்லை

அந்தக் கிராமத்தின் கடலை
முழுமையாய் இறைத்து
இரத்தம் கலந்திருந்த நீரை நீக்கி
நீல நீராய்
பார்வைக்குப் பழையபடி
வைத்ததுதான் திறமை

ஆனால் கடல்
சொல்லியே விட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள்
என் அருகில் குடியிருந்த
பழைய மக்களே அல்ல
அவர்கள்
உரோமத்தால் பறந்தவர்கள்
பெரிய பரந்த இங்குள்ள மரங்களிலும்
சிறிய புற்களிலும்
குந்தி மகிழ்ந்த பாரமற்ற ஆத்மாக்கள்

அவர்கள் வளர்த்த நாய்கூட அப்போது
பக்கத்து ஊருக்கு தன் சகாவைத்தேடி
வால் முறுக்கி
எழுந்து பறந்தே போகும்
அந்த ஊரின் மரக் கிளையொன்றில் குந்தி
இருந்து குரைத்தே
பேசும்

ஆனாலும் ஓர் உதவி
முகம் செத்து
விலா எலும்புள் நோவிருந்தும்
நிலவு உடைந்து வானம் பொரிப்பறந்த
இந்த
அச்சம் நிறை ஊருக்கு
வாழ வந்தோர்க்காய்
என் கரையில் நிற்கின்ற தென்னைகளைக் கேட்டுள்ளேன்
கூடுதலாய்
ஓலை வீச
இவர்கள் குடிலமைக்க
●

*5.11.1993*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

139

## அறையில் படுக்கும் மரங்கள்

என் மரங்களெல்லாம் அறைக்குள் வருகின்றன
வாசலில் நிற்கப் பயம்
நெருப்பு உதிரும்
கட்டிலின் அடியிலும்
கதிரையின் கீழுமாய்
ஒன்றின் மேலே ஒன்று கிடந்து
இரவைப் போக்க
தங்கள் வேர்களைத் தாங்களே தூக்கி
மரங்கள் வருகின்றன
கிளைகளைக்கூட மடித்து

வாருங்கள் மரங்களே அமருங்கள் உறங்குங்கள்
உங்களில் அடைந்த பறவைகளைக்கூட
கூட்டி வந்திருந்தால் சிறப்பு
மெய்தான் உங்கள் இலைகளில் இருந்த புழுக்கள் எங்கே
கடல் எரிந்து மீன்கள் பொசுங்கும்
எமது இரவுகளில்
புழுக்களை நீங்கள் வெளியில் விடுதல்
என்ன நியாயம்

இந்த இருளிலும் காகங்கள் பறக்கும்
அருமை மரங்களே
எரியும் கடலுள் பொசுங்கும் மீனின்
சினைகளைக் கொத்த
அதுசரி எனது அறைக்குள் இடம் போதாது
என அறிந்தா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமரங்களே நீங்கள் சொல்லுங்கள் உங்கள் வண்டுகளை
இதய வண்ணத்துப் பூச்சிகளை
கூட்டி வராமல் கன்னிகளைப் பூட்டி
திறப்பை
வண்டுகளிடமே கொடுத்துவிட்டு
படுக்கைக்கு வந்தீர்கள்

பாவம் வண்டுகளும்
வண்ணத்துப் பூச்சிகளும்
மரங்கள் போய் அறையில் படுக்க
நெருப்பு உதிரும் தரையில்
இரவைக் கழிக்குமோ

●

*5.11.1993*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 140

### சீறி ஓடாத வருங்கால மனித நதி

அந்த எழுதத் தெரியாத பையன்
இன்று என்னைச் சந்தித்தான்
பெரிய பரிதாபத்தின் முழு மொத்த வடிவமாய்
என் முன்னே நின்றான்

மீசைக்கு விதைதூவி இளமை மழை பெய்ய
பயிர் முளைத்த பருவம்
ஏதோ  அலுவலுக்கு வந்திருந்தான்
கையொப்பம் இடு என்றேன்
இடது கையின் பெரு விரலை ஊன்றி
வெட்கிச் சிரித்தான்
அது ஒரு
செத்த சிரிப்பு

என் இதயம் கழன்று
அவன் இட்ட
ஒப்பத்தின் மேல் விழுந்து
கத்தியது பின் கருகிப்
பற்றியது
அவன் காதல் உணர்வுகளை என்னென்று ஒருத்திக்கு
எழுதுவான் வருங்காலம்
அழகு முகம்
கீழுதடு
இரத்தச் சிவப்பு
பெண் விழுவாள் இவற்றில் மயங்கி
காகம்போல் அவன் விழுந்தவளின் வேலி ஓரமெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரைந்து திரிவானோ
எழுத வருகின்ற உணர்ச்சிகளை
ஒலியாக்கி

வந்திருக்கக் கூடாது அவன் இன்று அலுவலுக்கு
எனக்கு
நிறைய வேலைகள் இருக்கின்ற தினம் இன்று
இனியென்ன
நானில்லை
அந்த எழுதத் தெரியாத வருங்கால மனித நதி
போனாலும் நான்
இருந்தபடி கதிரையிலே
உலகப் பாடசாலை அனைத்தையுமே நினைத்துவிட்டு
எண்ணுகிறேன்
அந்த நதி வரும் நாளில்
சீறி ஒலியெழுப்பி பாய்ந்து ஓடாது
உறையும் சிறு துளியாய்

●

*5.11.1993*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

141

## வானம் பூட்டி

உன் வானத்தை இழுத்துப் பூட்டு
வெள்ளிகளும் வேண்டாம்
முகிலும் வேண்டாம் மழையும் வேண்டாம்
பகலிலும் நான் பால் குடித்த
உன் நிலவும் வேண்டாம்

நான் உன்னிடத்தில் வந்தால்
இதுவரைக்கும் நீ எனக்காய் முளைக்கவைத்து
காற்றிறைத்த
தென்னைமரங்களை வெட்டு
வீதியில் பறக்கின்ற
குப்பைகளில் ஒன்று
எனக்காய் வீசும்
இனிக் காற்று

உன்னிடத்தில்
நான்
முத்துக் குளிக்கவா வந்தேன்
போகாத பொழுதை
ஓட்டி கொஞ்சம்
ஆறுதலாய் மூச்சுவிட பின்னேரத் தேனருந்த

போடு
உன் கண்டத்தைச் சுற்றியொரு இரும்பு வேலி
உன் முகத்தைச் சுழித்தே
இனி என்கால் படாமல்
உன் பசிய நிலத்தில் என் பறவைகள் வராமல்
கறுப்புப் பல் காட்டி நகை
பாவி

●

*30.05.1995*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனியில் மொழி எழுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

142

## நவீன தமிழ் அப்பம்

உடம்பெல்லாம் எங்களுக்கு
சக்கரங்கள் முளைத்த தினம்
அன்று
பொன்வண்டின் குணம்கூடி பூ மொய்க்கும் தனத்தோடு
இந்த உலகிற்கு அப்பாலும் போகின்ற வேகமுடன்
தவழ்ந்தோம்
தவழ்ந்தோம்
ஒன்று ... இரண்டு...மூன்று...
சிறு மிட்டாய் உண்பதற்குள்
கடந்த தூரம் அதிகம்
மனிதனென்றால்
இருநாள் எடுக்கும் பயணம்

புரிகிறதா
இப்படிச் சொன்னால் புரியாது உங்களுக்கு
போங்கள்
நீங்கள்
புளித்த கவிதை உண்ட ஜீவன்கள்
தமிழில்
நவீன
கவிதை அப்பம் தந்தால் விரைவில்
விளங்காது உங்களுக்கு
இனிக்காது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் சைக்கிளில் நெடுந்தூரம் போன கதையைத்தான்
சொல்லுகிறேன் கேளுங்கள்

என்னோடு இருவர்
இருவருக்கும் இரு சைக்கிள்
மிதி வண்டி
ஆம்
எனக்கும் ஒரு வண்டி
தவழ்ந்தோம் தவழ்ந்தோம் இன்பம் பெருங்காடாய்
தலை உச்சியிலும் விளைய

நீங்கள் சந்திரனில் கல்பொறுக்கி கொண்டுவந்து வீடுகட்ட
பூ மொய்க்கும் தனத்தோடு சைக்கிளிலே போங்கள்
ஒரு மிட்டாய் உண்பதற்குள் நடக்கும்
உங்கள் பல்லும் உருளும்
தேன் காற்றுவந்து உருட்டி

●

*31.7.1994*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

143

## வண்டு வணங்கிகள்

நான் கோயிலுக்குப் போகவேண்டும்
ஊத்தை வண்டை வணங்க
என் தலை எழுத்து இது
வெறும் கரித்துண்டால் எழுதப்பட்டு
அவமானப்படுத்தப்படுகிறது

தவளையை தோளில் வைத்துக்கொண்டு திரியட்டாம்
இன்றைய சமூக விதி
அப்படிச் சொல்கிறது
எறும்பைக் கண்டால்
நான் எழுந்து நிற்க வேண்டும்
அதைப் பகைத்துக்கொண்டால்
எனது உணவு வாசல்கள் அடைக்கப்படும்

ஊரில்
வெயில் இல்லாத
அற்பர்களின் கோடை இறைக்கிறது
புழுதான் சொல்கிறது
இரவையும் பகலையும்
நாங்களே நிர்ணயிக்கிறோம் என்று

இங்கு வணக்கஸ்தலங்களில் உள்ள தெய்வங்கள் எல்லாம்
சோறும் கஞ்சியும் வழங்கப்படாத
சிறையில் உள்ளன
பல்லியும் பூச்சியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன் தெள்ளும் ஈரும்தான்
தமது சிலைகளைத் தாங்களே நட்டு
வணங்கச் சொல்லுகின்றன எம்மை

என் பயிர் வாடுகிறது
மழை வேண்டும்
முதலையைப் பிரார்த்திக்கப்போகிறேன் வழியில்
பூனை இல்லையே நல்ல சகுனம்தான்

●

*6.1.1992*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 144

### எனது கவிஞனுக்குச் செதுக்கியது

நச்சு மரம்
அப்படித்தான் துப்பும்
நீ கவலைப்படக்கூடாது

கவிஞனாய் ஓர் அணிலிருந்தால்கூட
உறுதியுடன் பழங்கடிக்கும்
அந்த மரத்திலேயே
அந்த மரத்திற்கே
பாடி
போதையூட்டி இலைகள் உதிரவைக்கும்

ஒரு
மூன்று கோட்டு
அணிலை விடவா
முள்ளந்தண்டுள்ள கவிஞன் பலயீனம்
அவன் 'அப்படிச் சொன்னதற்காக
தலையை முழங்காலில்
முழங்காலைக் கழுத்தில்
தொப்புளைக் குதியில்
விதையில் குதியை
இடம்மாற்றிக்கொண்டா நீ உருக்குலைந்து போவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வை கவிஞனே தலையை தலையுள்ள இடத்திலேயே
தொப்புளையும் அப்படிச் செய்
குதியை முழங்காலை
விதையை அனைத்தையுமே
அவை இருந்த இடத்திலேயே வைத்துவிட்டு மீண்டும்
பாடு நிலம்மலர

கவிஞனுக்கு நஞ்சு
ஏறியதாய் உயிர்குடித்து
அவன் மாண்ட சங்கதிகள்
உலகத்தில் ஒன்றுமில்லை
வேண்டுமென்றால் அந்த அணிலைக்கேள் கூறும்
கொய்யாமரப் புலவனது
நெடுநாளாய்

●

*20.1.1995*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

145

## விஷர்நாய்க்குப் பூத்த புன்னகை

பிடித்துப் பொத்தி எறி
நான் உனக்குப் பூத்த புன்னகையை
எனக்கு

நான் என்பாட்டில் போயிருக்கலாம்
உன் முகத்தைப் பார்த்து
நான் பூத்த புன்னகையை
நுளம்புக்கும் கொசுவுக்கும்
பூத்துக் காட்டியிருக்கலாம்

சரி என் புன்னகையைச் சிதைத்து
என் முகத்தில் வீசு
நீ மனதுக்குள் வளர்க்கும் விஷர்நாய்க்கு
நான் மிட்டாய்போட்டு
உறவாக்கிக் கொள்ள நினைத்தது தவறேதான்
எறி
என் புன்னகையை நான் மீண்டும்
சப்பி விழுங்கிக் கொள்கிறேன்

உன்னைக் கண்டால்
நான் இனி
எட்ட நடந்து கொள்கிறேன்
உன்னைப் பார்த்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் பூவைப் பூக்காமல்
தோளில் என்முகத்தைச் சுமந்தபடி நான்தான்
போகிறேன்

உன் இதயத்தின் இரத்தத்தின் நிறமோ
கறுப்பு
அதை நான்
எப்படிச் சிவப்பாக்குவது
சரி உன் பல்லின் ஒட்டறையை
இனி நான்
பார்க்க விரும்பவில்லை
இன்று நீ சிதைத்த என் புன்னகையின் துயரத்தால்
மழையில் நனைந்த காகம்
கொடுகுவது மாதிரி
கொடுகுகிறேன்
ஒரு பட்ட மரத்தின் கிளையில்
குந்தி இருந்து
அழுகிறேன்
உன் விஷர்நாய் மகிழட்டும்
●

*14.5.1992*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

146

## நண்பரின் 'நான்'

உனது 'நான்'
ஓங்கி நின்றது
மலையாய்

தேயிலை நடுவதற்கு மிகச் சிறந்த இடம்
உனது 'நான்'
உல்லாசப் பயணிகள் தங்கி
உனது நானின் அழகை ரசிக்க
வசதி செய்தால் வருவர்
உனது நானுக்கு

உனது நானில்
ஓர் அருவியும் ஓடினால் மிக அழகாக இருக்குமே
நண்ப
மிகக் குளிர்ப் பிரதேசமாக உன் நான் இருக்கட்டும்

மேகங்கள் உன் நானில்
இனி தவழ்ந்து விளையாடட்டும்
பனிக் குருவிகள்
ஆமாம் கண் கறுத்த சிவந்த
பனிக் குருவிகள்
உன் நானில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடுகட்டியும் கூடியும் புணர்ந்தும்
கத்தித் திரியட்டும் நான் ரசிக்க

நண்ப உனது நானில்
சிலர்
வீடுகட்ட வருவார்கள்
மிகவும் அடிவாரத்தில் கட்டிக்கொள்ள வைக்காதே
அவர்களை
உனது நான் சரிந்தால்
அவர்கள்
அழிவர் இல்லையா
●

*21.9.1993*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

147

## மேற்குத் திசையான என் கண்

இந்த உலகைப்பற்றி
தனித்துச் சிந்திப்பவன் கண்
மேற்குத் திசைதான்
சூரியன் அதற்குள்தான் மறையும்

ஆய் எரிகிறது கண்
கொண்டுவா நீர் ஊற்று

மண்டைக்குள் பல காகங்கள்
கரைய மறைந்தது என் கண்ணுக்குள் சூரியன்
ஆய் கருகி எரிகிறது இமை
தூக்கமே இழந்துபோய்
அந்தியில் மேய்ந்த எருமைகளும் வந்து
நெஞ்சுக்குள் கிடக்க அவதிதான்

இவ்வுலகில்
தனித்துச் சிந்திப்பவனே
ஆம் எனக்கு
நானே சொல்லுகிறேன்
ஒவ்வொரு இரவும் இப்படி சூரியன் மறையும் மேற்குத்
திசையாய் உன் கண்மாறி
போனாலும் போலிகள்போல் மாறாதே
உன் கண்ணுக்குள் இரவெல்லாம்
சூரியன் ஒளித்திருந்து
இமைக்குள் மலங்கழித்து விடிந்தபின்பு சென்றாலும்
உண்மையாய் நேர்மையாய் தனித்துவமாய்
சிந்தி
சூரியனின் மலமாவது சேரும்
இந்த உலகிற்குப் பசளையிட ஒளி முளைக்க

●

*25.4.1994*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

148

**கண்**

எனது கண் உருண்டுபோகிறது
கடலுக்குள்
விலகுங்கள் நண்டுகளே விலகுங்கள்
முட்டி
கோழி முட்டைபோல்
உடைந்துபோகாமல்
பத்திரமாய்ச் சேர

பெருங்கடலே என் கண்ணை
மீன் விழுங்கி அதன் வயிற்றுள்
சமிப்பதற்கு முன்னர்
தக்க
நடவடிக்கை மேற்கொண்டு
உன் இரகசிய அறையினிலே பூட்டு
முத்து
விளைகின்ற பெட்டிக்குள் எனினும்
அது இருக்க வழிசெய்

பின்னொருநாள்
அது வேண்டும் பெருங்கடலே எனக்கு அது வேண்டும்
அதற்குள்தான்
அவள் உள்ளாள்
அதனாலும்
நான் பூவுண்டு இயற்கை அழகுண்டு
பசியாறும் வழியாக
அது அமைந்த படியாலும்
வேண்டும் அது வேண்டும் என் கண்ணுண்டு பெருமீன்
பாறைகளில் கழிக்காமல்
கடற்கன்னி உறங்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளிர் அறைக்குள் உள்ள
மெத்தைக்குக் கீழே என்
கண்ணைக் கொஞ்சம் வை

என் முகத்தில் அது இருக்க
உலகம் தரமில்லை
ஒரு தரமான உலகத்தை
தேடி எனது மனம்
வெண்புறாவின் வாலினிலே
தொங்கித் திரிகிறது

அதுவரைக்கும்
என் கண்
தானாகக் கழன்று
உருண்டு வந்த
என் கண்

●

*23.3.1995*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

149

## காக்கை நாய்ச் சவாரி

ஒவ்வொரு காகமும் இப்படி மாறவேண்டும்
ஒவ்வொரு நாயும் இப்படி உதவவேண்டும்

தான் கடிக்கும் எலும்பை தனது தோழனுக்குக் கொடுக்க வேண்டும்
நாய்
தான் கொத்தும் பிணத்தை தனது நண்பனுக்கு வழங்க வேண்டும்
காகம்

அருமை
அற்புதம்
அழகு
ஒரு நாயின் தோளில் ஒரு காகம் பயணம்

இந்த மனிதன் வெட்கப்படவேண்டும்
'மனிதம்' இவைகளிடம் இருக்கிறது
பொருத்தமுடியாத இரு ஜீவராசிகள்
பொருந்திக்கொண்ட வியப்பில்
சேவலுடன் கூடிவிட்டு குளிக்கமுடியாமல் நீரின்றி இருந்த குருவி
ஆனந்தக் கண்ணீர் விட்டே
அதனை அது நீராட்டிக்கொள்கிறது

இன்னும் நாய் போகிறது
அதன் தோளில்
இன்னும் காகம் இருக்கிறது

இது உலக சமாதானம் ஏற்படும் சகுனமா
மனித அழிவுகள் நிற்கும் நேரமா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓராயிரம் காகங்கள் பாடி மகிழட்டும்
பல்லாயிரம் நாய்கள் குரைத்துக் களிக்கட்டும்

ஒரு கவிஞன்
அது நான்தான்
தினமும் கண்ணீர் விடுகிறேன்
மனித அழிவுகளுக்காக
இந்த காக்கை நாய்ச் சவாரி
திருப்தி தருகிறது
பார்க்க

●

*23.11.1991*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21429

150

## பல் முளைத்த பனை

தென்னைமரத்தைப் பனைமரம் அடித்துத் தள்ளியது
குலை தெறித்து
அது சாக
உலகில் தேங்காயே இருக்கக்கூடாது
என்று கத்தியது

நுங்கு தள்ளிய பனைமரம்தான்
ஏனோ இன்று அதற்கு வெறி
ஓலைகளை ஒருதரம் சடசடவென அடித்தது
பொத்தடா வாயை
என்று குட்டியது
இன்னொரு தென்னம் பிள்ளையை

எல்லாம்
ஒரு தோட்டத்தில் நின்ற மரங்கள்தான்
என்ன நடந்ததோ நான் அறியேன்

பாய்ந்து
இன்னொரு தென்னையின் பழுக்காத ஓலையை
பிடித்து இழுத்தது
கையோடு பிடுங்கி
தரையில் எறிந்தது

பச்சை ஓலை
இலகுவில் சரிப்படுமா
அந்தத் தென்னைமரம் அலறிய அலறலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவிகள் பறந்தன
ஆனால் பனைமரம் சிரித்தது

என் தோட்டத்தில் நிற்கின்ற பல் உள்ள பனைமரமே
அதைவிடு அதைவிடு
நேற்று வைத்த மஞ்சள் சிறு பிள்ளை
சே
உனக்குப் பல்லும் முளைத்து
நடக்கப் பெரியதொரு காற்றும் அடித்தால்
●

*18.2.1995*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 151

## கல்லில் நட்ட கிராமம்

இது கல்லில் நட்ட கிராமம்
கிழங்கே இறங்காது
இருவருடம் இந்தக் கிராமம் நடப்பட்டு
தலையில் துளிருமில்லை
சிறு வேரும் ஓடவில்லை

கல்லில்
பனங்கொட்டைகளைக் கூட புத்தியுள்ளோர் நடுவதில்லை
கிழங்கு முடங்கும்
அல்லது உருண்டையாகும்

இந்தக் கிராமத்தின் வருங்காலக் கிழங்குகளை
முடக்கி
உருண்டையாக்கும் முயற்சி யாருக்கோ இருக்கிறது
இருப்பதனால்
இந்தக் குடியேற்றம்
அகதிக் கிராமமென்ற பெயரில் இந்த
பனங்கிழங்கை முடக்கும் முயற்சி

பாருங்கள் சிறு குடில்கள் ஆட்டுப் புளுக்கைகள்போல்
தள்ளி இருந்தால் தெரிகின்ற அதற்குள்ளே
குமரும் வாலிபனும்
மருமகனும் மாமியும்

தகப்பன் படுக்கின்ற இடத்தில்
மகன் சாப்பிடுகின்றான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமியின் புடவை
மருமகனில் படுகிறது

அடேய் தம்பி வெள்ளைநிறக் கோழிக்குப் பின்னால்
ஓடுகின்ற பையா
கல்லுடைத்துக் கொஞ்சம்
தூள்கொண்டு வாடா
நான் குடிக்க
தாகம் உனதூரில் அதிகம் வந்தவுடன்
என் குதியும் தவிக்கிறது
நீர்கேட்டு

●

*20.1.1995*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

152

## நாய் நக்கிய தெரு

இது நாய்நக்கிய தெரு
நட
இன்னும் பிணநாற்றம் எழுகிறது

மூக்கைப் பொத்தி மூக்கைப் பொத்தி
நுனி வீங்கிப் போச்சு
இன்னும் கால்த்துண்டு விலா
முதுகெலும்பு எல்லாம்
தெரிகிறது போ தள்ளி

எட்டிப் போட்டு நட
தெருவில் குருவி தும்பியும் இல்லை
யுத்தகாலத்துத் தினத்தில்
பயணங்கள் கூடாது
இருந்தும்
தேவைக்காய் வெளிக்கிட்டோம்
வேகமாய் ஓடு

அவன் தப்பியிருப்பானோ தெரியவில்லை
நமக்குத் தெரிந்த அந்தப் பெட்டை
செத்தாள்

உன் காதலி என்னானாள்
எனக்கும் விளங்கவில்லை
பெருவிரல் முறிந்து நொண்டித் திரியிது காற்றும்
தூதனுப்பத் தோதில்லை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது மனிதர் இல்லாத உலகம்தான்
பார்
யுத்தகாலத்து அந்தி வானத்தை

ஒரு பூவும் பூக்கவில்லை
எழுதி அழித்து எழுதி அழித்து
என்னுடைய அவளின் பெயரை
காட்டுகின்ற ஆகாயம்
பெண்டாட்டி செத்த பறவைகள் புலம்ப
அழுகிறது
நிலவில்
நாயேறி நிற்கிறது

அட நீ
பிணத்தில் இடறி விழாதே
போ

●

*15.7.1990*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

153

## மூடப்படும் கடற்கரைப் படைவீடு

கிண்டியெடு
உன்னுடைய படைவீட்டை ஆட்டி அசைத்துப்
பிடுங்கி

இந்தக் கடற்கரையில் சுமார் ஆறு ஆண்டுகளாய்
முளைத்திருந்த இந்தப் படைவீட்டின்
கிழங்கைக் கூடத் தோண்டு
மழை வந்தால்
பொச்சென முளைக்காத விதமாய்

நான் வாய்க்குள் போடும் சீனிமணல் கடற்கரை இது
தென்றல் தனது கரங்களில் ரோஜாப்பூவை
ஒவ்வொரு மாலையிலும் இந்தக் கடற்கரையில்
வைத்துக்கொண்டே வருவோரை
தடவிக்கொடுத்து
இதயத்தின் கோளாறு திருத்தி
வழியனுப்பிவைக்கும்
தொழில்நுட்ப மேதை

அந்த மேதையை நீ மீண்டும் அழைத்துத்
தந்துவிட்டுப் போ போர்வீரா
நீ இந்தப் பால்நிலத்தில் வந்து குடியிருந்த காலம்முதல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் இதயம் இயங்கவில்லை
அதன் சக்கரங்கள் காற்றுப்போய்
நசிந்து கிடக்கின்றன நெஞ்சுள்

விரைவாய்
உன் படைவீட்டைப் பிடுங்கு
இது இருந்த இடத்தின்மேல் இருந்த வான்கூட
உன் உடுப்பின் நிறத்தில்
மாறி இருக்கிறது

அதைக்கூட உடைத்தெடுத்துப்போ
வெண் கடற்கரைக்கு மேலிருந்து
அவளின் கண் நீல வானம்
மீண்டும் படரட்டும் அந்தரம் ஒரு கொப்பாகி

●

*25.4.1994*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

154

## போரில் பிழைத்த

பூவே அவள் பெயரைச் சொல்வாயா
யுத்தத்தில் பெருவிரல் கருகி
நொண்டி வருகின்ற என் இனிய காற்றே
அவள் மணத்தை ஒருதரம் ஞாபகப்படுத்தேன்
மழை இறுகி முகம் பிதுங்கி பின் பிழைத்த முகிலே
வா
அவள் கூந்தலை ஒருதரம் விரித்துக்காட்டு

இந்த இயற்கை செத்த காலத்தில்
நாம் மரணத்தின் மணத்தைச் சுவாசித்த காலத்தில்
நம்மையே நாம் தொலைத்தோம்

ஏன்
பூமியே சுழலவில்லை
சூரியனையும் சேர்த்து சுற்றி வரவுமில்லை
என் மூச்சுகள் உறைந்தன பயத்தில்
ஒரு பல்லி இலகுவாய் இழுத்துப்போகும் அளவுக்கே
பலம் இருந்தது

பூவே
நீயும் மூழ் அவிந்து போனாய்
இருந்தாலும் பிழைத்துவிட்டாய்
நான் ரசிக்க உன்னை மொய்க்கும் வண்டுதான்
இறகு கருகி கோது உதிர்ந்து கிடக்கிறது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவம் மேனி வெடித்த வானம்
தொலைந்த நட்சத்திரங்கள் போக
மீதியை ஏங்கித் தேடிக்கொண்டிருக்கிறது

பொதுவாகச் சொன்னால்
சூரியன் தன் அறுந்த கதிர்களை
இன்னும் திருத்தவில்லை

குருவிகள் வால் எரிந்து மரங்களில் முனகுகையில்
பழம் வெடித்துச் சொண்டு பறந்த
கொடூரத்தின் பீதி கலையவில்லை

ஏதோ நாம்
நம்மைப் பொறுக்கி எடுத்தது மாத்திரம்தான்
மெய்
அவள் பெயரென்ன

●

*23.6.1990*

மட்டு நூல் நிலையம் - கல்முனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

155

## எனது இனத்துப் பேனையால் அழுதது

நிலவுக்கு வேலியிடு
சூரியனையும் பங்குபோட்டுப் பகிர்ந்துகொள்
வெள்ளிகளை எண்ணு
இன விகிதாசாரப்படி பிரி
நாகரீக யுகத்து மனிதர்கள் நாம்

கடலை அளந்து எடு
வானத்தைப் பிளந்து துண்டாடு
சமயம் வந்தால்
காற்றைக் கடத்து
அல்லது
சூறாவளியைக் கொண்டு சகோதர இனத்தை அழி
அங்கே
செவ்வாய் கிரகத்தில் நம்மில் ஒருவன் இறங்கட்டும்

எறும்புக்கும்
இன முத்திரை இடு
மரத்திற்குக் கூட
சாதி சமயத்தைப் புகட்டு
புறா முக்கட்டும்
இன்னொரு இனத்தை நகைத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லியும் பூச்சியும் நத்தையும் தவளையும்
கத்தும் ஒலியிலெல்லாம் பேதங்கள் தொனிக்கட்டும்
வா
வண்ணத்துப் பூச்சியே
இது உன்னுடைய இனத்து மலர்தான் நுகர்

பாவம்
மனிதன் பிரிந்த விதம்
நான் கூட இந்தக் கவிதை எழுதுகையில்
ஒரு பேனை மறுத்தது
'உனது இனத்துப் பொருளல்ல நானென்று'
ஓ... அது வேறு இனத்துப் பேனை

●

*26.11.1989*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

156

## மிக நவீன ஈழத்துக் கனவு

மூன்று ரயில்வண்டி
ஆமாம் மூன்று ரயில்வண்டி
என் மண்டைக்குள் மோதிப் புரண்டு சிதறின

அனைத்து வண்டியிலும்
சனங்கள் மிக அதிகம்
என் நெஞ்சுக்குப் போக
வந்தவர்கள் அனைவருமே

கண்ணருகில் வருவதற்கு
முன்னாலே கோளாறு
யாரும் உயிர்தப்பி என் மூளையிலே குதித்ததுவாய்
இன்னும் தகவலில்லை
பெருவிபத்து
என் மண்டை
இன்று பிணக்காடு

பல உயிரை உடனடியாய் குடித்த ரயில் விபத்து
நிகழ்ந்த என்னுடைய தலையே
உன்னைத் தாங்கி
நான் இன்னும் உலவுவது
மெய்தான் ஆனால் உற்றுப்பார் உன்னை
கழற்றி அந்த
மூலையிலே போட்டுவிட்டு
உயிர் முண்டமாய் திரிவதை

என் நெஞ்சுக்கு வந்தவர்கள்
அகதிகள்
மேற்சொன்ன சம்பவமும் அதன் துயரும்கூட
எங்கள் ஈழத்துக் கனவொன்றே
மிகநவீன

●

*23.3.1995*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 157

### நாட்டுக் காட்டில் குறையாய் கேட்ட மனிதனின் சத்தம்

பொத்தி என் சட்டைப் பைக்குள்
வைத்துவிட்டுப் போனான்
அவன் உயிரை
கண்ணுறங்கு அவன் உயிரே
கண்ணுறங்கு
புல் நாக்கு நீட்டி
காற்றில் கொடி படர்ந்து
தவிக்கின்ற மதியத்தில்
பிசாசு நடமாட்டம் இருக்கிறது
கண்ணுறங்கு

வெண்கொக்கு கருங்கல்
முள்ளு மலை வேம்பு
யானை குள்ளநரி
விஷப்பாம்பு என்றிருந்தால்
உலகம் பயமில்லை

கண்ணுறங்கு அவன் உயிரே
கண்ணுறங்கு என் சட்டை
பல்லில்லா அப்பாவி
கடித்துக் குதறாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் வருவான் வந்து
உனக்குக் கண்ணேறு
கழித்துப் பின் எடுப்பான்
அப்படியா இது
என்ன ஆச்சரியம் என்றெல்லாம்
நீ எனது சட்டைப்
பைக்குள்ளே கிடந்து
முனகுவது கேட்கிறது

இது புதிய நடைமுறைகள்
ஒரு பயணி உயிரைத்
தொலைக்காமல் இருப்பதற்கும்
●

*20.3.1995*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 158

### பாம்பு பாம்பு பாம்பு

பாம்பு பாம்பு பாம்பு
கண்ணுக்குள் ஒன்று
காதுக்குள் ஆறேழு
மூக்குக்குள் இரண்டு
பிடரியில் நாலைந்து
பாம்பு
பாம்பு
பாம்பு

தெருவில்
குதிவரைக்கும் எரிந்த
அரை உயிருப் பிணத்தை
கண்டுவிட்டு வந்தேன்
பாம்பு
பாம்பு
பாம்பு

தோளில் ஒரு பாம்பு
என் தொடையில் எட்டு
தொப்புளுக்குள் மூன்று
குதியில் விஷ நாகம்

ஒருபாம்பு இழுத்துப்போய்
என் ஈரலைத்தான் புசிக்கிறது
இன்னொன்று கண்ணை
முட்டைபோல் குடிக்கிறது
நெஞ்சைப் பிளக்கிறது ஒருபாம்பு வெறியோடு
இதயத்தைச் சப்பி ருசிக்கிறது இன்னொன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாம்பு
பாம்பு
பாம்பு

என் கட்டிலெல்லாம் பாம்பு
அறையெல்லாம் அரவங்கள்
நித்திரையில் வருகின்ற அவள்கனவைக்கூட
ஒரு பாம்பு கொத்தி
அவள் முடியைத் தின்கிறது
காற்றில் பல பாம்பு
வாசலிலே விரிந்திருக்கும்
பூவுக்குள் கண்கொத்தி
பாம்பு
பாம்பு
பாம்பு

●

*20.2.1995*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

159

## கர்ப்பிணிப் பெண்களைக் கண்ட தினம்

இன்று தெருவெல்லாம் கண்டது
கர்ப்பிணிப் பெண்களைத்தான்
முட்டை தள்ளிய பல்லிமாதிரி
சில பெண்கள்
மேளம் அடிப்பவனைப்போன்று
ஒரு சிலர்

கூடை நிறையப் பூ
அவன்
சுமந்தபடி போகின்றான்
மாட்டு வண்டி நிறைய
காய்கறியும்
தூப்பானும்

தேனீர்க்கடைக்கு இழுத்து வருகின்றான்
நீர்
கூலிக்கு மாரடிக்கும் தொழிலாளி
சாப்பாட்டுக் கடையில் எறிந்த பாண்துண்டை
தூக்கமுடியாமல் அவதி
காக்கைக்கு

எங்கும் பெரிய சுமை
யாருக்கும் இயலாமை

முலைபெருத்த அவளும் தள்ளாடி வருகின்றாள்
இன்று காலையில்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலிஸ்வண்டி நிறைய
சந்தேகப்பேர்வழிகள்
இட நெருக்கம் அதற்குள்

வாகனத்துள் நான்
எனக்குள்ளே ஐவர்
அடிவயிற்றின் சதைகொழுத்த இறைச்சியினப் பெண்ணும்
என் உரோமத்தின்
கண்ணுள்

இன்று காலையில்கண்டதெல்லாம் கர்ப்பிணிப்பெண்களைத்தான்

●

*18.2.1992*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 160

## பென் குலிக்கும் அறை

இன்று எங்கும் நான்போகத் தயாரில்லை
வண்ணத்துப் பூச்சிகளே ஓய்வெடுங்கள்
உங்கள் சிறகை
இன்னும் சற்று மினுக்கி

நீங்கள்தானே என்னுடைய வாகனம்
பூக்கள் என்னுடைய
தோழர்கள்

ஒரு கவிஞன் இருந்தானாம்
தேன் நிலவில் சோறுவைத்து
பிசைந்து அவன் உண்டு
வெளிக்கிட்டுப் போனால்
வண்ணத்துப் பூச்சிகளின்
தோளில் அவனேறிப் போவானாம் என்றெல்லாம்
நாளைய வானத்தில்
முகில் எழுதிப் பாடட்டும்
இன்று
நம் அனைவருக்கும் ஓய்வு
போய்
பூமரத்தில் குந்துங்கள்

இன்றும்
பிள்ளைத்தாய்ச்சியாய் போனேனே பூச்சிகளே
என் கண்ணுள்ளால் சிலகவிதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதின் துவாரத்தால்
விரல் இடுக்கின் வழியால்
தொப்புளாலும் ஒன்றிரண்டு
பிறக்கின்றன அழகுகளே இந்நிலையில் நாம்போனால்
வழி நெடுக உதிரும்
அந்த இனிப்பை நாய் நக்கும்
பின் அதுவும் கவிபாடி
தமிழை இழிவாக்கும்
பெயர்ப்பலகைக் கொலைபோல ஆம் நம்நாட்டின் கொடிய தமிழ்
பெயர்ப்பலகைக் கொலைபோல
உதாரணமாய்
'பென் குலிக்கும் அறை'

●

*9.3.1995*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

161

## கோழிமுட்டைக் கோது வீதி

கோழிமுட்டைக் கோதினிலே பூ எறிந்து திரியாதே
கன்னிப்பூ சிறுபூ
மழையின்றி வெம்பியது
எந்தப் பூ எறிந்தாலும் இவ்வீதி உடையும்
இவ்வீதி கடந்த
தேர்தலுக்குள் ஓடியது
தண்ணீரில் கரி-கலந்து
'தார்' என்ற பேர் சொல்லி
ஊற்றிக் காட்டியது நான் மூக்கைச் சீறி
எறிந்தாலும் விளிம்பு நசுங்கும் விதமாக

கையிலென்ன நகம் வளர்ந்து
நீண்ட செயற்பாடோ
எங்கள் தார்த் தெருவில் பூ எறிந்து
கோழிமுட்டைக் கோதுடைத்து
விளையாடும் காற்றே நிறுத்து இன்று பகல்
கொழுத்த விரால்மீனை
எண்ணையிலே பொரித்து
நீ உண்டுவந்த வாசம்
எனக்கும் அடிக்கிறது

தயிர் உண்ண நீ பழகி
ஊரில் அது பஞ்சம்
கிழமைகளில் சில நாளில் குளிரான பொழுதுகளில்
மாலைகளில் தென்னையிலே
நீ அவல் பிசைந்து உண்ணும் பழக்கம் வந்தபின்தான்
ஊரில் அவல் ஒறுப்பு

இந்த உஷாரையெல்லாம் மாமரத்தில் போய்க்காட்டு

●

*28.4.1994*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

162

## பல்லில் ஒட்டிய பொய்

விடிவதற்கு முன்பாகவே
இன்று அவன் வந்தான்
ஓராயிரம் பொய்களையும் நம்பமுடியாத பல செய்திகளையும்
என் அறைக்குள் இருந்து என்னுடன்
கொட்டினான்
கேட்ட என் காது வழிந்து
நிலத்திலும் சிந்தி
கிடந்தன அவனது பொய்கள்

பொய்யின் நிறத்தை
நான் அவனால்தான் அறிந்தது
பச்சை
அவன் அடிக்கடி வந்து
கொட்டுகின்ற பொய்களுக்கு
நாற்றம்கூட உண்டு
கொடிய

இன்று காலையிலே ஏன்வந்தான்
அவன்
நான் விளக்காத பல்லில்
அவனின் சில பொய்கள் ஒட்டி
காய்ந்து போனதே பச்சையாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் கக்குகின்ற பொய்யில்
உயிர் இருக்கும்
ஆனால் சுவாசம் இருக்காது
ஒவ்வொரு செய்திக்கும்
கையும் காலும்
அவ்விடத்தில் செய்வான்
வாலும் வைப்பான்
மூக்கையும் நீட்டிவைத்து

இன்று அவன் சொன்ன ஒரு பொய்க்கு
நான்கு தலை
பதினெட்டுக் கண்கள்
வால் இருபத்திமூன்று
கழுத்துகள் பதினாறு

அந்தப் பொய்தான் எனது பற்களிலும்
கெட்டியாய் ஒட்டியது
யாவரும் இங்கு சமமென்ற பழைய
பெரும் பொய்யைப்போல
நாற்றத்துடன்

●

*7.4.1994*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

163

## நஞ்சு பூசிச் சிரிக்கின்ற யுகத்தில்

உன்னைப்பார்த்துச் சிரிக்கத்தான் வேண்டும்
ஆனாலும் நான் தயங்குகிறேன் பேரன்பே
நஞ்சு பூசிச் சிரிக்கின்ற ஒரு யுகத்தில்
ஒரு குழந்தைபோல் மனதை
திறந்துவைத்து உன்னை
பூங்கொத்தைப்போல பார்த்துச் சிரிக்க
வெட்கம்வருகிறது

மழைக்குள்ளே சிறியகுடை கொண்டுவந்து இருந்தால்
உனக்கிந்த வீண்சிரமம் இல்லை அறிந்துகொள்
வெள்ளை ஆடையில்
தெருநீர்த் துளிகள்

நீ பாடம் எழுதிப் பயிலுகின்ற புதுக்கொப்பி
மழையில்
நனையக்கூடாது அழகே
வா
உள்ளே வந்து இரு
இது பெருமாரிப் பாட்டம்
விடக் கொஞ்சம் சுணங்கும்
உன் கண்ணழகில் மின்னல்கள்
தெறிக்கும்

நேரம் அதிகமில்லை இன்னும் பாடசாலைக்
கதவு திறந்திருக்க நியாயமில்லை
யார்தான் இப்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரப்படி இயங்குகின்றார்
கடமைக்கு வராமலே சம்பளத்தை வாங்குகின்ற
ஆசிரியர் உன் பள்ளியிலும் உண்டு

மறுபாட்டம் வருகிறது
இது விடாது பெரிய மழை
உள்ளே வா கோழி
ஓரத்தில் நிற்கட்டும்
வீட்டுக்குள் எடுத்தால் நாறும்

●

*23.1.1995*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

164

## என் பிரியமுள்ள உனக்கு

பிடி அந்தக் குருவியைப் பிடி
என் நெஞ்சுக்குள் நுழை

அவர்களைக் கண்டதும் எனக்குள் இருந்த
குருவிகள் செத்தன
அந்த
இரண்டு கையிலும் தங்கள் முகங்களைத்
தூக்கி வந்தவர் துயரை

அறிந்ததும் எனக்குள் ஆறுகள் வற்றின
மலை இடிந்து சரிந்தது
உடம்பெல்லாம் வெந்து புழுத்தது
நான்
நார் நாராய் கிழிந்தும் போனேன்

வா என்னைக் கூட்டிப் பெருக்கு
திரும்பவும் என்னை உருப்படியாய் சமை
குயில்களைச் சாய்த்து எனக்குள்ளே புகுத்து
சின்னக் குருவியையும் எனக்குள் நுழை
நான் மீண்டும் பாட

ஆமாம் என் ஆறுகளே
பொங்குங்கள்
அருவியே நீ பாய்ந்து தமிழைக் குளிப்பாட்டு
'அகதிகள்' போய்விட்டார்கள்
ஒருவாறு என்னுடைய வாசல் விரிந்தும்
பூமரங்கள் விலகி வழிவிட்டும்
அவர்களை ஆதரித்ததால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் கரத்தில் முகங்களைத் தூக்காமல்
கண்ணுக்குள் எரிந்த தீயைத் தணித்தபடி
போனார்கள் பறவைகள்போல் இன்னொரு மரத்திற்கு

அங்கும் பழம் பழுக்கும்
அவர்கள் புசிப்பார்கள்
மீண்டும் பழையபடி
சிறகுயர்த்திப் பறப்பார்கள்
என் மலையே எழு எனக்குள்
உன்னில் இருந்து ஊற்றுப் பிறக்கட்டும்
நான் பாட
அவர்கள் எங்கிருந்தாலும் கேட்கலாம்
காற்றுமாமி பாட்டுச் சுமந்தே பைத்தியமாய் போனவள்
அலைகிறாள்
நூறு குருவிகளை நுழை

●

27.1.1990



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

165

## பனியில் மொழி எழுதி

உனக்காகவே கவிதை எழுதுகிறேன்
எனது ஒவ்வொரு மூச்சையும் உனக்காகவே
விட்டு அதில் பூச்சூடிக் காட்டுகிறேன்
பொதுவாகச் சொன்னால்
எல்லாம் உனக்காகத்தான்
மணல்களுக்கு உயிரேற்றி அவைகளுக்குக் கண்வைத்து
நீ போகின்ற இடமெல்லாம் கவனிப்பது
நீராகி வந்து
நீ குளிக்கக் குளிர்வது
எல்லாம்
எல்லாம்
எல்லாமேதான்
நித்திரையில்
நான் எழும்பி நடப்பது
உனக்காகத்தான்
வெயிலுக்குள் நான் முளைத்து
கன்னிகட்டிப் பூப்பது
நெருப்பில்
சீனி செய்வது
பனியில் மொழி எழுதி பத்திரிகை தயாரித்து
உன் செய்திகளை உலகு அறியப் பரப்புவது
அனைத்தும்
ஆம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத்தைத் தூக்குவது
என் உள்ளங் கையுள்
அதைப் பொத்திக் காட்டுவது
நிலவை
அடைக்கு வைப்பது
அதன் குஞ்சுகளை
என் கவிதைக்குத் தீன் கொடுத்து
அது குளிர்ந்து கொழுக்க
செய்வது கூட

யார் அந்த நீ

யாருமில்லை

●

*2.8.1994*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

166

## மனதை உடைத்த வெண் வண்ணாத்தி

சிலநேரங்களில் சில பறவைகள்
மனதை உடைக்கத்தான் செய்கின்றன
கண்ணாடித் தூள்போல மனதின் கதவு தகர்ந்து
கொட்டித்தான் விடுகிறது

நான் என் மனதின் கதவைப் பூட்டி
திறப்பை
இடுப்பில் செருகியிருக்கிறேன்
ஒரு புறாவும் அதில்
மேயக்கூடாது
அதற்குள் பூத்திருக்கும் புல்லின் பனியை
சொண்டால் முட்டையுடைத்து
விளையாடக்கூடாது
என்று

சில மைனாக்கள் தகர்க்கின்றன
என் மனதின் கதவை
பெயர்த்து எறிந்துவிட்டு
அதற்குள் புதிய ஆறுகளையும்
சலசலக்கும் நீரோடைகளையும்
எளிதில் உருவாக்கி
என் திறப்பை
நகைக்கின்றன

இன்றும் ஒரு வெண் வண்ணாத்தி
நிலவில் நட்ட மல்லிகைமரத்தின் பூவொன்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூத்தது
தெருவில் ஆமாம்

உடைந்தது என் நெஞ்சு
கதவு ஆடியது
மனதுக்குள் திடீரென கொய்யாமரம் முளைத்து
பழுத்துச் சொரிந்தது
பெரிய அழகுதான் ஆமாம் இளஞ்சிவப்பு
கொக்குத்தோல் மேனி வண்ணாத்தி

என் காலடியில் மனதின்
கதவின் உடைந்த
தூள்கள்
திறப்பு இன்னும் இடுப்பில்தான்
●

*19.2.1992*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

167

## தோல் கறுத்த புறா

அவள் இன்று என்னைப்
பார்த்த விதம்
அதிசயம்
ஒரு கண்முளைத்த பூவாய்
இன்று என்னைப் பார்த்தபடி
என் முகத்தில் மெல்ல
மெல்ல மெல்ல விரிந்தாள்
தன் நெஞ்சை
என் உள்ளத்தில் தேய்த்தபடி

முன்பெல்லாம் நிலம் நோக்கி
உதடு கடிக்கும் புறாவே
என்னைப் பார்க்கின்ற துணிச்சல்
இன்றுனக்கு ஏன் எங்கிருந்து
வந்தது கண்ணுசுப்பிச் சொல்லு
என் உயிருள்
ஒவ்வொரு பாட்டமாய் மழைபெய்ய

தோல் கறுத்த புறா
காதலுக்கு ஆகாதா
யார் சொன்னது நிலா
நீ என்னைப் பார்க்கையிலே
மினுங்குகின்ற மினுக்கத்தில்
சூரியன் கண்கூசும் பகற்சேற்றில் விழுந்த வெள்ளி
நல்ல துல்லிமாய் தெரியும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளிருக்கும்
என் குடலும் தெரியப் பிறருக்கும்

எண்ணு நிலா எண்ணு
உன் பார்வை பட்டு என் உரோமங்கள் சிலிர்த்து
அவற்றிலெல்லாம் பனி பிடித்து
இந்த மதியத்தில் நான் தெருவில் உலகத்தை
வென்று உயிருக்குள் குதிக்க
குதிப்புகளை
பின்னொருநாள் நான் கேட்க
நீ சொல்ல
சிரிப்புடன் தான்

●

*13.10.1994*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 168

### அரை அங்குலமாய் பூனை பூச்சியாய் நான்

இரவு பயங்கரமாய் இருக்கும்
வா நெஞ்சோடு அணைந்துகொள்
என் பூனைக் குட்டியே

உன் மியோவ் மியோவ் சத்தம்
இன்றிரவு ஒலிக்காது
எலிகள் பொந்துக்குள் செத்திருக்கும்
என்னைப்போலதான் உனக்கும்
பிணம்தின்ன இஸ்டமில்லை

என் பூனைக்குட்டியே
இது
தென்னைகளும் பயங்கரக் கனவுகண்டு
குரும்பைகளை உதிர்த்துகின்ற இரவு

குருட்டு நிலா வானத்தில்
ஓடாமல் உசும்பாமல்
துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிக் கிடக்கிறது
நெஞ்சுக்குள்
என் பூனைக் குட்டியே
புகுந்துகொள்
இதயம் உனக்கொரு தொல்லையில்லை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது எப்போதோ
தண்ணியாய் கரைந்து வியர்வையாய் வந்துவிட்டது

பார்
பூமரம் பயங்கரமாய் நடந்து வருகிறது
நிலம் வெடிக்கும் சத்தத்தில்
தண்ணி தெறித்து வெள்ளிகள் அழிகின்றன
என் பூனைக்குட்டியே
உன் மயிரும் உதிர்கிறது அச்சத்தில்

எங்கே உன்
காலை முடக்கு
வாலைச் சுருட்டு
உடம்பை அரை அங்குலமாய் மடக்கி
எனக்குள்ளே நுழைந்துகொள்
நான் ஒரு கோழிமுட்டைக்குள் ஒளிக்கிறேன்
பூச்சியாய் சிறுத்து

●

*13.6.1990*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 169

# இளந்தாரி வெயில்

விலகு
ஓடிப்போய் நிழலுக்குள் ஒளி
குளிராக எதையாவது குடி
காலில் நீருற்றிச் சூடாற்று
அடித்த மாரிக்குச் சவாலாக இறைக்கிறது
சரியான இளந்தாரி வெயில்

இரத்தம் கொதிக்கும் வயது
வெயிலுக்கு
மரங்களின் குருத்தைத் தின்னும் வெறி
நான் பிடுங்கி நட்ட பூமரத்தைத் திமிரோடு
சாறு குடித்துக் கொன்ற துரோகி

என் ஆடை வெயிலில் கொடியில் எரிகிறது
ஆண் வெயில் அதுவும் இளந்தாரி
உலர
பெண்கள் உடுதுணி வெயில் இடுதல்
முறையல்ல

போ
அந்த ரவிக்கையை எடு
உனது குடைவெட்டுப் பாவாடை மணத்தை வெயில் சுவைக்கும்

எடு
கொஞ்சம் கேள்
இது இளந்தாரி வெயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்று முன்னர் உடுத்துக் களைந்த
சேலை உலரவிட கொடிநோக்கி நீ வருதல்
எனக்கு விருப்பமில்லை

இரவும்
குளிர் பெறுவது கடினம்
இந்த வெயில் நடந்து நாக்கால் தடவியதில்
கிணறு கொதிக்கிறது

இனி சுடுநீர் குடித்து குளித்து உடல் நோவைப்
போக்க ஒரு வசதி
இந்த இளந்தாரி வெயில்
குமர்குட்டி உடுதுணி உலர்த்தல் சங்கடம்தான்
அது ஒரு குறை

வெயிலே
நீ என்று கிழடாகி
உடல் கூனி
என் முற்றத்தின் முதுகில் விழுவாய்
அதுவரை என் புறா
ரவிக்கை பாவாடை சட்டை தாவணியும்
உலர்த்தல் தடை

குளிராக எதையாவது தா

●

9.2.1991


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 170

## இதயமுள்ள பிரிய தென்னைகள்

ஒரு பாய்போல சுருட்டி
தென்னைகள் கடலை
வைத்திருந்தன தலையில்
என் அறைக்குக் கொண்டுவர

போடுங்கள் கடலை விரித்து மரங்களே
மீண்டும் அலை எழும்ப அதை விடுங்கள்
சிலநாள் தானே நான் வராமல் மறந்திருந்தேன்
அதற்குள்ளா இந்த அவசரம் பெருங்கடலை
சுற்றி ஒரு பாயாய்
எல்லோரும் ஒருமித்து
தூக்கி மிகப் பாரம்
தாங்காமல் விழி பிதுங்கி
என் வீடுவர எத்தனித்த உங்கள் புத்திக்கு
நானென்ன செய்ய

ஒரு சின்ன வருத்தம்
குலை தள்ளிய தென்னைகளே
மனதுக்குள் சுண்டெலி
புகுந்து நிம்மதியை அறுத்துத் தள்ளியதால்
வந்துகொள்ளக் கிடைக்கவில்லை

நேற்றுத்தான் மனதை
ஒருவாறு சரிசெய்தேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எலியறுத்த குப்பைகளை வெளியேற்றி அதற்குள்ளே
பூவாசம் செலுத்தி
சிதைந்த அவள் படத்தை மீண்டுமந்த உயிர் நரம்பில்
புதுப்பித்து மாட்டியதால்

புதுத் தெம்பு இன்று உலகத்தைத் தூக்கி
என் சட்டைப் பைக்குள் போட்டுக் கடற்கரையில்
உருட்டி உருட்டிக் குழந்தைபோல் விளையாட
வந்தேன் அதற்குள்ளே

உங்கள் தலைகளில் கடல் பாயாய் இருக்கிறது

●

*20.1.1995*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

171

## ஆடு கார்வதைப் போன்ற ஓவிய அந்தி

யாரடா இந்த அந்திவானத்தில் சித்திரம் கீறியது
பட்டும் படாமலும்
நாய் நக்கிய விதமாக
கடமைக்குக் கீறி என்னை ரசி என்று நிர்ப்பந்தித்த
ஓவியன் எவன்

அவன் மீசையை
வழித்து நான் விடுவேன்
பலர் பார்த்துச் சிரிக்க
கண் புருவத்தையும் இறக்கி
பெண்களுக்கு மத்தியிலே துரத்தி
கேலிக்கு ஆளாக்கிக் காட்டுவேன்
தெரிந்தால்
கை முடங்கிய பயல்

அங்கொரு நீலம்
இங்கொரு பச்சை
ஊதா சில இடத்தில்
பன்னீர் தெளிப்பதுபோல் நிறத்தைத் தெளித்து
இன்றைய
அந்தி வானத்தை
ஏழைப்பெண் சோடித்தல் போல
செய்த ஓவியா
உனக்கு
கரி கிடைக்கவில்லையா கொஞ்சம் வானத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைய நிறையத் தீட்ட
சுண்ணக் கட்டியாலும் சித்திரங்கள் தீட்டுகின்றோர்
இந் நிலத்தில் உண்டு

மாடு ஓடுவதுமாதிரி
முன்பெல்லாம்
ஓர் ஓவியன் கீறுவான்
பார்க்க அழகாக இருக்கும்
அந்திப் பொழுதுகளில்
பாலத்தை ஒரு கிழவி கடப்பாள்
காலுக்குள்
பூச்சிவந்த மீன் துடிக்கும்

அந்த ஓவியனின் கரத்தை எந்த
மரம் அரிபவன் மெஷின்
அரிந்து தள்ளியது
பூக்களுக்கு எருவாக
நீ மரத்தை ஆடு கார்வதைப்போன்று கீற முயன்றாலும்
அழகாகக் கீறு
கீழிருந்து நான்மட்டும் இல்லை
என் நெஞ்சுக்குள் இருக்கும்
புறாக் குஞ்சும் ரசிக்க
பூப்படர நாம் நீந்தி பொன்னந்திச் சுகம் உண்டு
போகப் போக எங்கென்றே தெரியாமல்

●

*28.7.1994*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

172

## இரத்தம் மினுக்கும் பொன்மாலைப் பொழுது

வருகின்றேன்
இருண்டுவிடாதே
பொன்மாலைப்பொழுதே கொஞ்சம் பொறு
உலகிற்கு இதம்கொடுத்து நில்லு

ஒரு கோழிமுட்டைக்குள் கிடப்பதனைப்போல
இந்த அறைக்குள்ளே கிடந்துவிட்டேன்
கவிதை எழுதித்தான்
உயிர் பூக்கும் குயிலைப்
பற்றி ஒரு கவிதை
கடற்கரையில் நிற்கின்ற என்னில் பிரியமுள்ள
தென்னைமரங்களைப் பற்றியும் ஒன்று

ஒரு பொன்மாலைப்பொழுதே மறக்கின்ற அளவுக்கு
இன்று கவிதை எனக்கு வரல் மகிழ்ச்சியேதான்
ஆனாலும் உன்முகத்தைக்
காணாமல் இருப்பதற்கும்
முடியாது பொழுதே கொஞ்சம் பொறு மரங்களிலே
உன்கரத்தால் தங்கத்தைப் பூசி நேரத்தை
மினக்கெடுத்திக் கொள்ளு நான் வந்துவிட சற்று

உன் காற்று வாங்காமல் எனதுமனம் பூக்காது
மாலைத் தங்கநிறம் பட்டால்தான் என்குருதி மினுமினுக்கும்
ஆம் என் குருதி மினுமினுக்க
பொன்மாலை நீ வேண்டும்
மினுங்காத இரத்தத்தை நான்சுமக்க முடியாது

●

*23.1.1995*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

173

## மனதுக்குள் மரம்விழுந்த ஒரு மாலைப்பொழுது

இன்று கடற்கரைக்குப் போகவில்லை
புல்லாங் குழலூதும் இளந்தாரிக் காற்றுக்கு
நெஞ்சு மயிர்களை விளையாடக் கொடுத்து
ரசிக்க மனமுமில்லை
பாவம் அந்த
இலைப் பச்சை நிறப் பறவை
நெத்தலிமீன் விட்ட கடதாசி பட்டம்போல்
என்னைத் தேடி அலைகளுக்கு மேலால்
ஆடிப் பறந்திருக்கும்

துக்கம்தான்
மனதுக்குக் குறுக்காலே விழுந்துள்ள மரத்தை
தூக்கி வீசி எறிந்துவிட்டுப் போனால்
உதிக்கும்
நிலவென்ன குளிர்ந்திடுமோ
கொச்சிக்காய் கரைத்த
பால்தான் வழியும்

நான்
தோல் கழற்றி எறிந்து
நரம்பில் நெருப்புவைத்து
கொழுப்போடு சேர்ந்து கரைகின்றேன் நீ போ

ஏன்
அந்தி மாலையிலும் சூரியன் நடுவானில்
நின்று எரிகிறது

என் மண்டை ஓடு பறந்து எங்கோ
போக மூளை
கொதித்து வழிந்து நிலத்தில் கசிகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ போ
கடற்கரைக்கு நீ போ
பாவம் அந்த இலைப் பச்சை நிறப் பறவை
எதிர்பார்த்துத் திரியும்
அதனிடத்தில் போய் சொல்லு
'அவர் வரமாட்டார்'

அங்கே அதோ அங்கே
என் இதயத்தின் பாதியை கொத்திப் புசித்தபடி
ஒரு குருவி
●

*6.9.1991*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

174

## மரங்கள் காய்ப்பதைப் போன்ற இரவு

மிக நீண்ட நாட்களுக்குப் பிறகு அழகிய நிலவும்
நிம்மதியான ஓர் இரவும் இது
கதவைத் திற
வாசலுக்கு வா
வானத்தின் ஓரங்களில் புல்முளைத்துப் பூக்கிறது

மணல்
தானாக உயிர்த்து நகர்கிறது
இரவுகள் கொதித்ததால்
கரியமிலவாய்வை விட முடியாமல் தவித்திருந்த
மரங்கள் தப்பிப் பிழைத்து
எதிர்காலத்தில் அரும்ப வைத்திருந்த
குருத்துக்களை மொத்தமாய் கக்கி
வியக்கின்றன

எவ்வளவு காலம் இப்படி ஓர் இரவை நாங்கள் தரிசித்து
நீ
கால் நீட்டிப் போட்டு வாசலில் கிட
மணல்களை அள்ளி
முகர்

மரங்கள் காய்ப்பதைப்போலவும் வெயில் உறைப்பது மாதிரியும்
இயற்கையாய் குளிர்கிறது இரவு
ஒன்றும் வெடிக்கவில்லை இன்றிரவு
எந்தப் பயங்கரமும் இல்லை

நேற்றுவரைக்கும் இரத்தம் குடித்தவன்
தெவிட்டி வாந்தி எடுத்து
நீர் அருந்த நினைத்தானோ இன்று
பால் வார்க்கிறது நிலவு
இரண்டு
கைகளையும் நீட்டிக் குடி

●

*19.11.1991*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

175

## பூதங்கள் இறங்கிய இரவு

வானம் சிலநாளில்
பூதங்களை இறக்கும்
நிலவை மடிக்குள்ளே பதுக்கிவிட்டு
நட்சத்திரத்தை மட்டும் குருட்டொளியில் ஆங்காங்கே
எரியவிட்டு மேகத்தை
எண்ணெய் தேடி அலையவைக்கும்

இன்றும்
நான் வாலுதிர்ந்து கிடப்பேன்
ஒரு கொட்டைவால் குருவி துடிக்கின்ற வேதனைக்கு
தென்னை தலைகுனிந்து என்ன பயன்
தும்பிக்கு 'றாங்கி'
முகத்தில் அடிக்கிறது
வெள்ளியே நீ கறுத்துக் கொழுத்துப் பூதமாய்
இறங்காமல் போ
இதயம் சாவீடாய் இருக்கிறது

நேற்றுப் பால்பொழிந்த நிலவிற்குக் கைவிலங்கு
எனது மண்ணில் நடக்கின்ற அக்கிரமம்
வானுக்கும் தொற்றியது
மேகம் எல்லாம் இப்போது தொப்பியுடன்
ஊர்காவல் செய்ய
இரவு மகாராஜா சட்டம் இயற்றிவிட்டார்
காற்றுக்கும் பூரணமாய் தடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கிருந்து அந்தப் பறவை அழுகிறது
இதுதானா சுதந்திரத்தைக் கேட்கின்ற பறவை
அவள் பறந்த மனதுள்
புற்கள் கருகி
நான் கிடக்கின்ற நேரத்தில்
எங்கிருந்து அந்தப் பறவை அழுகிறது
இது இரவுகளைத் தின்று பசியாறிக் கொள்ளும்
ஒரு கவிஞன் கேள்வி
●

*15.8.1988*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

176

## நகம் உரசும் வட்ட நிலா

என் பறவைகள் கொடுகுகின்றன
இறகுகள் ஊறி
நெஞ்சுக்குள் கிடக்கின்றன
நிலவே
பனி இன்றிரவு மிக அதிகம்
கொஞ்சம் கிட்ட வந்து எரி
பறவைகள் குளிர்காய
இறகு உலர்ந்து துள்ள

இன்றிரவு பனி ஊசியின் வடிவில் பொழிகிறது
எனது உரோமக் கண்களின் ஊடாக
தேகத்துள் நுழைகிறது
பறவைகள் துடிக்கின்றன
குளிரின் கொடுமை கண்டு
அவை முடங்க முடங்க
நான் வானத்தில் பறப்பது
மிக சிரமமாக இருக்கிறது

நான் உரசி முத்தமிடும் சிறிய நட்சத்திரம்
என் வரவைக் காத்து வானத்தில் குருட்டு லாம்பு கொளுத்துகிறது
கண்ணில் எடுத்து நான் ஒற்றுகின்ற வெள்ளி
நான் வராதது கண்டு
கால் பூட்டுகிறது
என்னைத் தேடி வர

போயும் போயும்
ஒரு நட்சத்திரம் தேடிவரும் அளவுக்கு
நான் கொடூரமாய் இருக்கக்கூடாது
கொஞ்சம் கிட்டவந்து காய்
என் பறவைகளின் இறகுகள் சூடாகட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவைகள் சுமந்து பறக்க
நான்
அதைக் கண்ணில் ஒற்றிக் கொள்வேன்

இன்றிரவு
காற்றும் சூடில்லை
எந்தக் குளத்திலோ குளித்துவிட்டு தலை துடைக்காமல்
வருகிறது போலும்
தோல் கரைகிறது
சதை அவிந்து தரையில் விழும் அபாயம்
இருக்கிறது

கொஞ்சம் ஒரு எட்டுவைத்துக் கிட்டாகு
பறவைகள் குளிரில் புரளப் புரள
நெஞ்சுக்குள் ஒரே கடகடப்பு
அவஸ்தையின் ஓலங்கள்
உன் காதைக் கொடுத்துக் கேள்
இரக்கம் வரும்
நகம் உரசி நகம் உரசி தன்னைச் சூடாக்கிப்
பாலிறைக்கும் வட்ட நிலா

●

*7.1.1992*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

177

## இன்றிரவு கட்டிலுடன்

கட்டிலே கட்டிலே
நீ குப்பறக் கிடப்பது எப்போது
எப்போதும் நீ
மல்லாக்கக் கிடக்கிறாய்
அதனால் உன்மீது
குப்பறப் படுக்கிறேன்

என் நரம்புகளின் இரைச்சல்
உனக்குத் தெரியும்
அவைகளின் பாஷைகூட
உனக்குப் புரியும்

நேற்றிரவும் முணுமுணுத்தேன்
அதை நீ
பதிவுசெய்து வைத்திருப்பாய்
ஆடை உரிய
இன்றிரவும் கிடக்கின்றேன்
இதையும் நீ
படம்பிடித்துக் கொள்வாய்தான்

உனக்கு வாய் முளைத்தால்
எனக்கு மிக அவதி
என் கட்டிலே
என் முனகல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் அனுகல்
அவளது பெயரை நான் சொல்லுகின்ற நளினம்
எல்லாம் உனக்குத் தெரியும்

எங்கே உன்னுடைய இதயத்தைத் தேடுகிறேன்
கழற்றி எடுப்பதற்கு
எங்கே உன்னுடைய இரத்தத்தைத் தேடுகிறேன்
குடிப்பதற்கு

இளம் பெண்ணின் தேகம்போல் உன் மெத்தை
அந்தச் சுகத்தில் நான் மயங்கி உழறுகிறேன்

எங்கே உன் நரம்புகளைத் தேடுகின்றேன்
கொல்ல

●

*20.6.1991*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுவர்கள் நடந்துவரும் அறை

உன் மூச்சுக்குள் வரவா
நான் குடியிருக்க
அழகு வெள்ளைப் பூக்களில் குளிர்காலைச் சுகத்தில்
குந்திப் பின்னெழும்பி
பின்னொரு பூவில்
குந்தி எழும்பி குந்தி
பறக்கும் சிறு பூச்சே

இது பெரிய உலகம்தான்
ஆனாலும் எனக்கு இருக்க இடமில்லை
எறும்பின் வயிற்றுக்குள் போயிருந்து வாழ்வதற்கும்
விண்ணப்பம் செய்துள்ளேன்
இன்னும் பதிலில்லை

நானிருக்கும் அறைக்குள்
சுவர்கள் நடக்கின்றன
தினசரியும் அவைநடந்து என்னை நசுக்க
வருகின்றன
வெறியோடு

எழும்பி ஓடினால்
வாசல் உதைக்கிறது
தெருவில் நடந்து மரத்திற்குக் கீழ் நின்றால்
என்னைக்
காகம் தூக்க வருகிறது சிறு பூச்சே-
உன் மூச்சுள்
ஒரு குட்டிச் சுவர்வைத்து
சிறு இல்லம் அமைக்க
தயவுசெய்து இடம்தா
நீ பூக்குந்திப் பின்னெழுந்து பூக்குந்திப் பின்னெழுந்து
போவதற்குள் நிரந்தரமாய்
பதில்சொல்லு என் தலையில் வந்து குந்தி

●

*29.7.1994*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

179

## விரால்மீன் துள்ளாத குளம்

ஒவ்வொரு இரவும் எழுதவேண்டும்
கவிதை
நான் குதிரையிலே பறக்கவேண்டும்
நீச்சல் குளத்தில்
விரிந்திருக்கும் ஒரு பூவாய் நானும் விரிந்து
என்னில் வண்டு குந்த மனம்
குளிரவேண்டும்

வெண்கொக்கின் தோகையைப்போல் எனக்கும் பெரிய தோகை
ஒவ்வொரு இரவும்
முளைக்கவேண்டும்
அதிலே பலபெண்கள் ஊஞ்சல் ஆடி
என் மீசையைப் பிடித்துக் குதித்து
களைப்பாற வந்து இருக்கவேண்டும் என் இதயத்துள்

கவிதை எழுதாத இரவே
இனி எனக்கு வராதே
நீ சுருங்கி
ஒரு சிறிய
கருகிய மலர்போன்று
குப்பைகளில் ஒதுங்கு
எப்போதாவது என் வீட்டுப் பையன் நெருப்புடன் வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொளுத்தி எரிப்பான் தெருவில்
உன்னை

நேற்றைய இரவே
உனக்குத்தான் நான் மேற்சொன்ன கதை
கேட்டுக்கொள்
ஒரு கவிதை எழுதாமல் எனக்குத் தோகை வளர்ந்து
என் விரலால் தேன் வடியாமல்
நாட்டின் சுதந்திரம்போல்
பொய்யாய்
குளிரையும் கறுப்பையும் கொண்டுவந்து என்னை
உலர்ந்த பொருளாக்கி
கட்டிலில்
பல்லிச் சத்தம் இரசிக்கச் செய்த இரா
நீ
நான் விரால்மீன் துள்ளாத குளம்
●

*13.5.1994*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 180

# என்னை வாழ்க்கையில் எழுதும் செய்தியொன்று

பறக்கின்ற பூவின் அழகுவரும்
நிலா எனக்குள் பயிர்செய்யும் அது நீர் இறைக்கும் வாய்க்காலில்
வெள்ளி மீன்கள் சினை பீச்சி
பொரித்து
கோடிக் கணக்கில் துள்ளும் என்னை-
பொறாமையின்றி
இந்த
வாழ்க்கையிலே எழுதினால்

கன்னிகட்டுகிறேன் என்று உணருகிறேன்
பறக்கும் அழகுவர நான்
நிலா இப்போது
என் தலையில் காய்கிறது

நாம் திறந்து
கொட்ட முடியாத பொருளா
நமது நெஞ்சு

எனது அசிங்கத்தையெல்லாம் பெருங்கடலில் கொட்டுகிறேன்
வரவர அதன் நிறம்
கறுப்பாகிப் போவதற்கு
காரணத்தில் என்னுடைய அசிங்கமும் ஒன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசிங்கத்தில் பெரிய
அசிங்கமென்று நான் நினைப்பேன்
உனக்குள் விளைந்துள்ள பொறாமைகளின் மலையில்
ஒரு துண்டு
எனக்குள் விளைந்ததைத்தான்
நீ எங்குபோனாலும் யாரிலும் எரிச்சல்படும் அளவுக்கு
என் சிறுமலை பெருக்காமல்
முளையோடு கொத்தி கடலுக்குள் கொட்டுகிறேன்
எனக்கு
நான் நடந்தால்
பறக்கின்ற பூவின் அழகுவர

●

*15.5.1994*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

181

## தலைக்கிறுக்குப் புல்

ஒரு மரியாதை தெரியாத தலைக்கிறுக்குப் புல் நீ
கொண்டையில் பூ

நான் எழும்பி நிமிர்கின்ற முன்வாசல் என்று
தெரியாதா உனக்கு
இந்த இடத்தில்தான் நிலாப்பால் நான் குடித்து
சில இரவில் கிடப்பேன்
அவளை நினைத்து இந்த வாசலில்தான்
விம்முவேன்
அழுவேன்
உம்மா பார்த்தால்
சாட்டுக்குச் சிரிப்பேன்

நீ இதில் முளைத்ததை
என் மெத்தையில் போய் முளைத்திருக்கலாம்
அதைவிட எனக்கு
இதுதான் குளிர்
என் தலையணைக்குள்ளும் நீ முளைத்தால் மகிழ்ச்சிதான்
அதை நான்
தூக்கி எறிந்து மிகக்காலம் அவள் தொலைந்த
தினத்தில் இருந்து

ஓம் புல்லே
என் சோற்றுப் பாத்திரத்துள் நீ முளைத்தால் கூட
துக்கம் இருக்காது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் ஏன்
என் பெண்ணின் தொப்புளுக்குள்கூட குருத்துவிட்டு நீ கொழுத்து
நின்றால் கூட கோபிக்கேன்

பார்
இது ஒரு தவறு
மிகப் பெரிய குற்றம்
என் உள்ளங்கையில் முளைத்தமாதிரி ஒரு
மாபெரிய குற்றம்
யோசித்துச் செய்
இரவைக்கு நான் அவளை நினைக்கவேண்டும்
●

*5.11.1992*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

182

## ஆட்டுக்குட்டிக்கு அஞ்சலி

புல்லை இனிநான் உண்கிறேன்
கோடி வேலியிலே தழைத்துள்ள கிறுசிலியாக்
கம்பை இனிநான் காருகிறேன்
ஆலங் கொத்தைப் புசிக்கிறேன்
யார் கையை நீட்டினாலும்
துள்ளுகிறேன்
குதிக்கிறேன்
எவரும் தூக்கினால்
இரண்டு கைகளுக்குள்ளும் இருந்து
'மே' என்கிறேன்

என் ஆட்டுக் குட்டி
என் ஆத்மா
தலையில் கறுப்பும்
புறங்காலில் வெள்ளையுமாய்
சித்திரம் கீறிய தோலுள்ள என் உயிர்

இனி என் ஜன்னலுக்குள்ளால் என்னை எட்டிப் பார்ப்பதற்கு
யார் உண்டு
நான் நடக்கின்றபோது ஓடிவந்து என் காலை
கட்டி மகிழ எந்தச் சீவன் இனிப் பிறக்கும்

இனி நான்
மழை வந்தால்
'மே' எனக் கத்துகிறேன்
கொச்சிக் காயை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிள்ளித் தேய்க்கும்
வெயில் வந்தாலும்
'மே' என்றே கத்துகிறேன்
என்னை நானே என் ஜன்னலுக்குள்ளால்
எட்டிப் பார்க்கிறேன்
நேற்று இரவு
செத்த எனது
ஆட்டுக் குட்டியைப்போல்
புழுக்கை புழுக்கையாய்
கழிக்கிறேன்
எறும்பு கடித்தால் நிலத்தில் சடாரென
விழுந்து துடிக்கிறேன்
உம்மா துரத்தட்டும்

●

***26.6.1991***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

183

## பூத்தல்

ஒரு கவிதை பறந்துவந்து
பூமரத்தில் குந்தி
இன்று காலையிலும் எதையோ சொன்னது
கொஞ்சம் அழகாகத்தான் பூமரம்
தன்னைச் சோடித்துக்கொண்டு நின்றது

நேற்றுக் காலையிலும் இக்கவிதை வந்தது
பூமரத்தின் நெஞ்சிருக்கும்
கன்னிக்குலை அதிகமுள்ள பகுதியிலே குந்தி
சொண்டாலே எதையோ எழுதி விளக்கியது
பூமரமும் நேற்றும்
தலையாலும் சோடித்து
காலாலும் அலங்கரித்து
நின்றது பார்க்க
என்னுடம்பில் மயிர் மணக்க

கவிதை சிறு கவிதை
ஆனாலும் அழகு
பூமரத்தில் நின்றால் இரண்டிற்கும் புத்துணர்ச்சி
காலையிலே பனியில்
அழகுக் கவிதைவந்து குந்தி
ஓதுகின்ற பாட்டால் இம் மரவேரும் பூக்கிறது

பூமரமே பூமரமே
உன் வேரும் பூக்கின்ற
அதிசயத்தை நான்கண்டு வியக்கத் தயாரில்லை
உன் பொருத்தக் குருவி
உன் நெஞ்சுக்குள் பாலாறு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கச்செய்து உன் கொண்டையிலும் இன்பத்தை
கொட்டி வார்ப்பதனால்

பூக்கின்றாய் பூக்கின்றாய் பூக்கின்றாய் பூக்கின்றாய்
பூக்கின்றாய் அவன்போல
அவனுடைய பெண்போல

●

*23.1.1995*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

184

## தோணி ஆடும் பாட்டு

தோணி ஆடும் பாட்டு
எனதூரின் மீனவரின் ஏலேலோக் கீதம்
உங்கள் அழகு நாட்டிய மேடைகளில்
இனி எங்கள்
தோணிகளை அழையுங்கள்
அமைச்சர்களையும் விருந்தினராய் எடுத்துவைத்து

கவிஞன் கட்டாமல் இயற்கை கட்டிய பாட்டு
மீன் மயங்கி வலைக்குள்
ஏறிவந்து கரைக்கு
குதித்துத் தாளம் போட்டுப் பின் காசாகும்
செம்படவன் குரல் சொத்து

இந்தச் சொத்து
கடல் நெஞ்சைக் கிழிக்கையில்தான்
எங்கள் ஊர்த்தோணி ஆடும் வாரும்
பாரும்
பின் அழைத்து
நகரத்து மேடையிலே ஏற்றும்

உங்கள் நர்த்தகிக்கு
கால் முடம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருத்திக்கு இடுப்புவலி
கழுத்துச் சுளுக்கு ஒருத்திக்கு
முழங்காலில் நோவு இன்னொருத்தி வாதை

இவர்கள் ஆடித்தான் நீங்கள் ரசிக்கின்றீர்
கையடித்து மாலையிட்டு
பொட்டுவைத்த பிறைத்தோணி
போ இவர்கள் மேடைக்கு
ஏலேலோப் பாட்டுக்கு நீ ஆடித் தேர்ச்சிபெற்ற
அழகு நாட்டியத்தை ஆடு
அமைச்சர்கள் மட்டுமல்ல
வந்திருக்கும் பிரமுகர்கள்
கையெல்லாம் வாய்மொய்க்கும் கொசுத்தட்டி விரச
அவர்கள் ரசித்த
நர்த்தகிகள் குனிந்துவந்து
உன் கால் தூசைத் தட்டிக் கொஞ்ச

●

***28.4.1994***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

185

## படைபோன பிறகுகண்ட
## என் அலரிமர மாமி

கண்ணாடி போட்டிருந்தாள் மாமி
யாரோ ஓர் ஆமிக்காரன் வாங்கிக்கொடுத்திருந்தான்

அவளின் முத்துப்போன்ற பற்களில் சிலதை
முன் முரசில் காணவில்லை
தலைக்கு நிறச் சாயம்
இருந்தாலும் முகம் சுருங்கி புன்னகைக்கும் பூ வெந்து
இளமையை
ஒரு நூலில்கட்டி அவள் உடம்பில் வைத்ததுபோல்
இருக்கிறது இன்றுநான் பார்க்க

மாமி
என்னைத் தெரிகிறதா உங்களுக்கு
நான்தான்
வெயில் மங்கி நிலா விதைக்க இருள்
வானம் உழும் நேரம்
ஊர் இருந்து பறந்துவந்து
இந்தப் பெருங்கொப்புள் குந்தியிருந்த
தினம் வரும் குருவி

நீங்கள் என்னைக் கக்கத்தில் இடுக்கி இருப்பதுபோல் இருக்கும்
உங்கள் கொப்புக்குள் இருந்தால் நான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்ப்போர்க்கு
மாமி
ஆமி வந்து உங்களைத் தமது
படைவளவுள் சிறைப்படுத்த
அறுந்தது நமது தொடர்பு
ஆரம்பத்தில்
காற்றில்
இரண்டொரு கடிதம்
பூக்கேட்டு
வேரில்
சப்பாத்துக் காலால் உதைக்கின்றான் என்றுசொல்லி
அழுதெல்லாம்

பின் காற்றும் இறந்தது
நாம் கடிதம் எழுதி வாசிக்கும் எழுத்துகளும்
மறந்தன

மாமி என்னைத் தெரிகிறதா உங்களுக்கு

●

*25.4.1994*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

186

## தமிழ் எழுத்து ஓட்டு வீடு

வானின் உச்சிக்கு உயரத் தொடங்கி
இன்னும் மூன்றடி குறைவாய்
நிற்பதுதான் எனது ஊர்

கத்துங்கள் பறவைகளே கத்துங்கள் தேன்காற்றில்
இனிமை கலந்து பூசுங்கள் மரங்களுக்கு
மாடு கத்தும் சத்தத்தில் தமைமறந்து
நீர்த்தவளை வந்து
குடிக்கட்டும் எருமை
மாட்டின் ஒலியைத்தான் பூவிரிய பின் அவைகள்
பாட தன்னினத்தின்
குரல் வடிவே மாறி

ஆம் எருமைமாடும் மிக இனிமையாய் பாடி
தவளைக்கும் குயில் தன்மை கொடுக்கும் எனதூரில்
ஒரு பெண் இருந்தாள்
அவள் கண்ணுள் நிலவு
சட்டை மாற்றி
வானுக்குத் தினம் போகும்

அந்த நிலவு உடைமாற்றும் நம்பிக்கைக் கண்ணுப் பெண்
வாழ்ந்த குளிர் வீடே
இந்தப் பாழ்வீடு
கற்கண்டால் கல்செய்து
சீனிப் பா காய்ச்சி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் பலர் வந்து
கட்டி கூரைக்கு
தமிழெழுத்தால் ஓடுவேய்ந்த
அழகு வீடே
இந்த அழுக்கு மனை

ஊரழிந்து மரமெரிந்து மண்ணும் கருகி
மனிதர்
ஊரோமங்களும் பொசுங்கி

●

*19.3.1995*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

187

## அவள் கூந்தலில் சூடிய காற்று

காற்றைக் கிள்ளி
தன் தலையில் சூடி
போனாள் அவள்

எங்கு தேடிக் கொய்தெடுத்தாள் இந்த
நறுமணக் காற்றை
தெருவின் தொடக்கத்தில்
அவள் நுழையும்போதே
வாசம்
வீசத் தொடங்கிய அது
இன்னொரு தெருவின்
வாய்க்குள் விழுந்து
அதன் பற்கள் அவளை
அரைத்துப் புசித்து
தூங்கிக் கிடந்த பின்னரும்கூட
என் மூக்கைக் கொளுவி
அவள் பின்னால் இழுத்து
செல்லும் அவள் கூந்தலில் சூடிய காற்றின்
தேசம் எங்கே உண்டு

●

*15.5.1994*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

188

## பிள்ளைத்தாய்ச்சிக் கவிஞன்

பொக்கணிக்கொடி வெட்டாமல் நாலைந்து
கை சூப்பியபடி இதோ ஒன்று
காலையில் தேனீருடன் வருகின்ற தாயே தொட்டில்கள்
சில கொண்டு வா

இன்றிரவு
விடிய விடியப் பிரசவம்தான்
வேதனை அதிகம்
எலும்புகள் வாய்முளைத்துப் பேசிய பேச்சில்
ஒரே களைப்பு

என் தாயே
கவிஞனும் ஒரு பிள்ளைத்தாய்ச்சிதான்
என் இதயத்தின் பெண்குறி
நன்றாக விரிந்துவிட்டது
துவாலை கட்டி கட்டியாய் பாய்ந்து
அவளை அணைக்கின்றபோது ஏற்படும் மயக்கம்போல்
மயக்கமும் வெப்பமும்

இதோ இன்னும் வருகிறது நோக்காடு
மனதோடு உணர்வு புணர்ந்து
இரட்டைக் குழந்தையும் ஒரே சூலில்
பத்தும் இருபதுமாய்
பிள்ளை பிள்ளை பன்னீர்க்குடம் உடைகிறது
மாக்கொடி விழுகிறது
அவதிதான் கவிதைப் பிரசவம் அவதிதான்
கத்துகிறது கவிதை
என் தாயே எடுத்துப் படி
உன்பேரக் குழந்தையைப்போல்

●

*20.2.1995*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 189

### எனக்கான இரங்கற்பா

இவனொரு பொதுநலப் பிறவி
நிலவை-
இல்லை
இயற்கையின் அத்தனை செல்வங்களையும்
பூசி மினுக்கிய மனிதன்

இவன் கண்மூடித் தூங்குவது மரணித்து அல்ல
கண்கள் இவனுக்கு இரண்டென்றால்
நம்பலாம்
உரோமங்கள் எல்லாம் இவனுக்குக் கண்கள்
இவன் உயிர்கள் கவிதைகள்
அவைகள் மரித்தல் கடினம்

இவனை நீங்கள் கொண்டுபோய் புதையாதீர்
மணல்கள் எழுத்துகளாய் மாறும்
இவன் சாவில் நீங்கள் இடுகின்ற ஓலங்கள்
இனிய கீதங்களாய் மாறி
காற்றோடு கலப்பதால்
பாட்டுப் பாடித்தான் புயல்வரும் இனி

கவிஞன்
நீடுழி வாழும் கவிஞன்
அமைதியாய் போனதுபற்றி அலட்டாதீர்
இவன் இனிப் பேசத் தேவையில்லை
இவனுடைய பேச்சை கடலலைகள் பேசிடுதே

ஊர் ஒருநாள்
இந்த மைந்தனையும் இழப்போமென
எண்ணித்தான் இருந்திருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவனோ இதயத்தின் நரம்புகளால் கவிதை மழை பொழிந்து
அந்த மழைக்குள்ளே தன்விதையைப் பயிரிட்டான்

பார்க்கும் இடமெல்லாம் இக்கவிஞன் நிற்கின்றான்
நன்றாக முற்றி விளைந்து குலுங்குகிறான்
மண்ணெல்லாம் கவிதை உறைந்து கிடக்கிறது
இந்த மண்ணிலே அடிமரத்தை இடலாமா
உயிர்க்கவிதை துடிக்கும் மணல்
எழுத்தாகும்

தயவுசெய்து இந்த
உடலைச் சுணக்காதீர்
இனிப்புக் கண்டு எறும்பு படையெடுக்கும்
கொண்டுபோய்
அடைவைத்துப் பாருங்கள்
கோடிக்கணக்கில் குயில்கள் உருவாகும்
வானம் பாடிகள் உயிர்க்கும்
தாமதித்தால்
கவிஞனைத்தேடி மேகம் வரும் கொண்டுசெல்ல
●

*24.2.1990*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன செப்பங்கா நீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

190

## காதல் கடிதம் வாசிக்கும் மழை

பின்னேரமானால் பின்னேரமானால்
மழை
உலாத்த* வந்திருக்கு ஊர்

கன்னி மழை
சிரித்தால்
பூ கொட்டும் அழகு
இது வந்துபோய் சிலநேரம் வரைக்கும்
வாசம்
ஊர் மூக்கு நிறைய

இன்று
இங்கு வந்திருக்கும்
கன்னி மழைக்கு
யாரோ காளை மழை அழகன்
நீல
முகிலில் மொழி எழுதி
காதல் கடிதம் கொடுத்துவிட்டான் கைகளுக்குள்
சிணுங்கி
பெண்ணாள் கொஞ்சம் நாணி
இந்த ஊரின் எல்லைக்குள் பெய்து பெய்து
படிக்கின்றாள்
வாய் பேசாப் பூமரங்கள்
ரசித்து இலை மினுங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
21429

யார் அந்த மழைக் காளை
இந்தக் கன்னி மழையின் கரம்பிடித்து முத்தமிட்டு
கூர் மார்பும் கசங்க
தன் நெஞ்சோடு அணைத்து
கன்னத்தைக் கடித்து கரத்துள் கடிதம் திணித்த
அந்தக் காவாலி மழை அழகன் எவன்
நானில்லை

●

*20.11.1995*

* உலாத்த - சுற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

191

## உள்ளதும் ஒரு நிலாப்போல மரம்போல

உம்மோய்... என்ன அழகு குருவி
யாரோ
வெற்றிலை சப்பித் துப்பிய சாயம்
வாலில்

இந்த ஊரில் நிற்கின்ற ஆலமரம்போல
உள்ளதும் ஒரு குருவி இது
இந்த ஊருக்கு வந்து வானத்தில் பால் வார்த்து
வாழைப் பாத்திக்கும் ஒழுகுகின்ற
அவள் முகம்போன்ற நிலவைப்போல்
உள்ளதும் ஒன்று மெய்தான்
எங்களூர்
ஓடாவி மாமா முதிரை மரம் கடைந்து
வடித்த சிறு உருவம்

ஓடாவி மாமா ஓடாவி மாமா
காற்றில் கத்துகிறேன் கேட்கும் உனக்கு
உன் கையை
மண்ணும் தின்னாது பார்
நீ செய்த கதிரைகளே செழிப்பு
தயிரை
வெட்டி வார்த்ததைப்போல் வனப்பு
குருவிசெய்தால் பிறகென்ன உயிர்கூடிப் பறக்காதா
கருங்காலி மரமெடுத்தா கண் வைத்தாய்
புதுமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடாவி மாமா ஓடாவி மாமா
என்னைப் போன்றதொரு உருவம் செய்வாயா
நான் பறக்க அதற்குச் சிறகும் சில பொருத்தி

இப்போது எனக்கு
பறக்க முடிவதில்லை
குதியைச் சிலர் வெட்டி
விலங்கினிலே போட்டுள்ளார்
உம்மோய்....என்ன அழகு நீ செய்த குருவி
அப்படியாய் என்னை
மரத்தினிலே கடை மாமா
நான் பறந்து வந்து முதல் வேலை என நினைத்து
உன் தோள்களிலே நிற்பேன்
பின்னர்தான் அவனின்
கண்ணுக்குள் சிறகடிப்பேன்

ஓடாவி மாமா ஓடாவி மாமா

வாலில் துப்பியதைப்போல் சாயம்
மழை வந்தால் கலங்காதா

●

*13.5.1996*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

192

## தாளத்தில் புழு நெளிந்த காலம்

ஆமாம் அந்த ஆண்டு
மலர்கள் நிறையப் பூத்திருந்த ஓர் ஆண்டு
கண்ணுக்கு மை தீட்டிய பல பெண்கள்
அந்த ஆண்டில்
வீதிகளில் உலவினர் தேர்போல்

அந்த ஆண்டில்
குளிர் மிகவும் அதிகம் உலகிற்குள்
சூரியன் பெயருக்கே வந்தது
ஆனால் பால்தான் ஒழுகியது

நுங்கு குடித்துப் பல சிறுவர்
அணிலுக்கும் விருந்துவைத்த
அந்த ஆண்டில்
சுவாத்தியம் மிக நன்று அதனாலே மரங்கள்
கனிகள் உதிர கிளிக் கத்தலுக்குத் தாளமிடும்
கிளைகள் முறியாது
கையடிக்கும் கன்னிகளும்
கசங்கிச் சிறு காயம் ஏற்பட்டு நோகாமல்

இந்த ஆண்டிற்கும் அந்த ஆண்டிற்கும்
எவ்வளவு தூரம் நண்பனே
நாம் முதன் முதலாய் சந்தித்த அந்த ஆண்டின்
சிறுநீரைப் பருக்கினால்கூட இந்த ஆண்டிற்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகும்
இந்த ஆண்டு
ஆண்டிகள் நடமாடும் ஊர் வறண்ட பூதம்

அந்த ஆண்டின்
ஒரு மழைக் காலத்தில்
நாம் வீதியொன்றில் கதைத்திருந்தோம்
நினைவுண்டா
காக்கை குயில்போல பாட
நீ கேட்டாயே
மிக அருமையான சங்கீதம் அல்லவா இதுவென்று

எனக்கு நினைவுண்டு
உனக்கும் நினைவிருக்கும்
காக்கையென்ன புழுவும்
தாளத்தில் நெளிந்த காலமடா அது

அது சரி அப்போது வந்த பெரும் மழையென்ற
இசைக் கலைஞன்
மனிதப் பஞ்சம் ஏற்பட்டு
தன் வாத்தியத்தை விற்று
வெட்கத்தால் நஞ்சருந்திச் செத்தானாம் மெய்யா
உயிர் இருந்தால் வந்திருப்பான்
அவன் ஆவிதானா இடைக்கிடை அழுவதும்
நாம் ஜன்னலைத் திறந்தால் மறைவதுமாய்
அலைவது

பேராசைப் பாடகன் இன்னும் இந்த மண்ணில்
பற்றுவைத்த
மரணக் குழிக்குள் அடங்காத ஆத்மா
●

*6.6.1996*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

193

## ஒட்டு வெயில்

வலை எறிந்த செம்படவன்
அதை மீண்டும் கொசுவுதல் போல்
வெயிலை
கொசுவிக்கொண்டிருந்தது சூரியன்

மரங்களுக்கு
பச்சையமில்லாமல் போனாலும் பாதகமில்லை
இந்த ஊத்தை நிலத்தில் இன்று வெடித்த பெரும்
குண்டில்
தன் இளவெயிலின் நுனிவாலும் சிதைந்து
நசிந்ததனால்
புசுபுசுவென
பேய் அறைந்தவனைப்போல
வேகமாய் கொசுவி வெயிலை மடித்தது
கைக்கடங்காத் தொங்கல் ஒருபக்கம் நிலம் வழுக

சிகப்பு மீசை துடிதுடித்து
சில மயிர்கள் நிலம் உதிர
வால் நசிந்த வெயில் கொசுவி மடிக்கும் சூரியனே
வெயில் வீசி ஊரில்
மீன் பிடித்த செம்படவா
வெயில் ஒட்டும் தொழிற்சாலை
வானத்தில் இருக்கிறதா
உன் வெயில் இல்லா ஒரு தினத்தில்
நான் பூக்களுக்கு ஒளியூட்ட
ஒரு சின்னக் கிண்ணத்தில் கொஞ்சம் குருத்து
வெயில் நோண்டி
சேமிக்கத்தானிருந்தேன்
கை விரல் நகத்தில் கூரில்லை

அள்ளு சுடுவெயிலை உன் நெருப்பு மனைக்குள்ளே
கொண்டுபோய் குவித்துவிட்டு
என் மரத்தின் துளிரில் கறுப்பால் கரைகளிலே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலாம் பூசும் சாச்சா
இதுதான் எங்கள் மண்
இதற்குள்தான் நாங்கள் இரவுகளில் நிலா பார்த்து
கடற்கரையில் புரள்வதெல்லாம்

பல நிலாபார்த்த இரவுகளில்
இருள் பிசுபிசுக்கும்
பிசுபிசுக்கும் அதை முகர்ந்தால்
இரத்த வெடுக்கிருக்கும்
சாச்சா கேள் கடற்கரையில் நுரைபோல மனிதன்
இதயம் மிதந்துவந்து
குருட்டு நண்டின் கால் இடறி உடையும்
ஊர் மூக்கைப் பொத்தும்
நாற்றம்

நாங்களென்ன நிலாபார்த்து ரசிக்காமல்
புரண்டோமா
ரசித்தோம்தான்
சா பூமி பிறந்தால்
சாவே பெரு வாழ்வு

நீமட்டும் கண்கலங்கி என் பெண்டாட்டி
பிடவையினை
கொசுவிக் கட்டி கடப்புக்குள் ஓடுதல்போல்
மீன்வாங்கத் தெருவில்
ஓடுகின்றாய் அவசரமாய் சாச்சா இது
நியாயமில்லை
வால் ஒட்டி
உன் வெயிலை மீண்டும்
அள்ளியெறி ஒரு துண்டு போட்டேனும் பொருத்தி
ஓட்டு வெயில் விழுந்ததினம் என்றாலும்
எங்களூரில்
பச்சை கருகாது எங்கள் மூத்தம்மா அவித்த
நெல்லுப்
பாயும் கிடக்கிறதே காயாமல்

●

*10.6.1996*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

194

## இரவைப்போல இனி விவசாயி

எல்லோர் மனங்களும்
இப்படிப் பசுமையாய் பரந்து பசுமையாய்
ஆகும் காலம் வரும்
இந்த வயல் வெளி மாதிரி

குழந்தைக் காற்று தவழ்ந்து விளையாடும்
ஆகா....வேளாண்மை ஓலைகளின் தொங்கலிலே
மூன்று சக்கரத்தில்
சின்னச் சைக்கிள் வாங்கிக் கொடுக்க
மகிழ்ந்திருப்போன் போல
நெல் விதைத்தோன்
ஓரிடத்தில் கொக்குகளை
எண்ணிக்கொண்டு ரசித்தபடி உயிர்த்திருந்தான்
அவ்விடத்தில் ஒரு மரமும்
பாதி முடி வெட்டி
சடையாய் மீதி முடியை வளர்த்தபடி துளிர்த்து

என் நெஞ்சம் இறங்கி
கொஞ்சம் நீர் அளைந்து விளையாடி
பின்னர் இணைந்தது என்னோடு
அதன் உடம்பு முழுக்க புது இரத்தம்
தலைக்கு
உற்சாகம் பொங்கி
இந்த வயல்வெளி எங்குமே
பறக்கும் தும்பிகளாய் என்னை மாற்றி
தானும் நடந்தது கைவீசி

ஒரு பூங் கதிரில்
சிகப்பு யானைத் தும்பியாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் அமர்ந்து எழுந்தேன்
அவ்வளவும் இனிமை

விளை

நிலத்தை இப்படியாய் வரம்புகளால் வரம்புகளால்
கூறு போட்டவர்கள் ஒழிக
இரவு- வானத்தில் வரம்பிட்டா விதைக்கிறது
அழகுத் தாரகையாம் முத்தை
வீசி எறிகிறது பொதுவாய்
முகம் கறுத்த நிறமாக இருந்தும்

காலை புசிக்கிறது
இரவு
விளைந்த விண்மீனை
ஊர் எங்கும் பொன் வெயிலால் சோடித்து

இரவைப்போல இனி விவசாயி வரவேண்டும்

●

*05.03.1997*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

195

## அவள் புறங்காலில் என் புதைகுழியின் தடம்

பழைய கதை
பழைய கதையாகவே
எழுதவேண்டியிருக்கிறது
உன்னை முதன் முதலாய் சந்தித்து
என் புன்னகையின் பாஷையை உன்னைப்
புரியவைத்து
என் நரம்பின் ஓசையை விளக்கி
உன்னை என் நெஞ்சுக்குள் நெளியும் கிளியாக்கி
பின்னர் தொலைத்தது
மிகப் பழைய கதை
எண்பதுகளில் நடந்த
ஒரு சோக நாடகம்

உன் கண்கள் அழகுதான்
அதற்கு என்ன செய்வது
வண்டின் கறுப்பை அரைத்து நிலவின் ஒளியில் குழைத்து
உருட்டி இரு இமைக்குள் பிதுக்கியது

நான் அதனருகில் நின்றால்
என் உரோமங்கள் நிமிரும்
அவற்றின் கொண்டையெல்லாம் பூக்கள் பூத்து
குலுங்க உன் கண்கள்
தேவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு என்னசெய்வது எல்லாம்
பழையகதை பழையகதையாகவே
எழுதவேண்டியிருக்கிறது

வாழ்வதும் ஒரு வகையில் அவமானம் தெரியுமா உனக்கு
பழைய கதைகளை எழுதி எழுதியே
ஒருவன்
ஆயுளைப் போக்கலாம் உலகில்

ஓ... புதிய கதையை எழுதிய பெண்ணே
எப்படி சுகமா
நான் முழுமுட்டை விழுங்கி
சமியாக் கோளாறால் துடிக்க
பூவுண்ட வண்டே உன் புறங்காலில் என்ன
என் செத்துப்போன பிணத்தைப்
புதைத்த தடமா
அல்லது சிரங்கா

●

*15.2.1997*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 196

### உன் உள்ளம் என்ற துணியை

கொஞ்சம் பிழிந்து வடிக்கவேண்டும் என்னை
வெள்ளை மல்லிகையே
உன் உள்ளத்தைத் தருவாயா துணியாக்கி

வேறொன்றுமில்லை
எனக்குள் அப்பியுள்ள சிறு அழுக்கை
மனதுக்குள் ஊத்தை
உலகத்துள் வாழ்ந்ததனால் உருவான
சின்னப் புழுக்களினை
அகற்றி என்னைப் பால்வெள்ளையாக்கி
இந்த
வாழ்க்கையிலே மினுங்க

ஒளி நட்சத்திரம்போன்று நான் மினுங்க
நிலவின் ஒளியாகி தேன் சுரக்க
தினசரி என்னைப் பிழிந்து வடிப்பது
கட்டாயத் தேவை

என் வெள்ளை மல்லிகையே
உன் உள்ளத்துள் ஒரு
கறுப்பும் இல்லை இருந்திருந்தால் இந்த
பொன் இரவில் வாசம்
ஊர் பரவி வீசிடுமா தென்றல்
அதில் குளித்து ஓதிடுமா வேதம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு
வேதம் ஓதுகின்ற தென்றலைப்போல் நானும்
மாறப் பேராசை மல்லிகையே என்னைப்
பிழிந்து வடிக்க நீ உதவு
உன் உள்ளத்துச் சீலையிலே
சில் வண்டு முகர்ந்த ஒரு வடுவும் இல்லையென்று
ஓர் இரைச்சல் வருகிறது

அது - ஆறு
தினமும் தான் ஓடி
உடம்பை மட்டுமல்ல
மீன் ஒளித்திருக்கும் இருதயமும்
சுத்தமாக்கிப் பாய்வதுதான் ஊர் குடிக்க

என்னை எப்போது மல்லிகையே இந்த உலகம் பருகுவது

●

*19.1.1998*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 197

### எனது புத்தகத்தைப் படித்த என்னிடம்

நேற்றிரவு
உன் புத்தகத்தைப் படித்தேனே
நான்
அதாவது உன்னுடைய உள்ளத்தை
வெள்ளமாய் ஓடியதே உன் எண்ணம்
அதில் தோணி விட்டேனே நான்

சரிதான் அழுது நீ சொல்லுவது
நாம் தவறிப் பிறந்த உலகம்தான்
இது
உன் நட்பையும் வேண்டுமென்றால் பாடிக்
கிழித்துவிட்டு
துண்டுதுண்டாய் வெடித்து அனல் காற்றில்
பறக்கின்றேன்
எந்த
அழகியின் விழிக்குள்ளும் விழுந்து கரிக்காமல்
கரித்து நீள் விழிகள்
சிவந்து பழுக்காமல்

என்றெல்லாம் ஓடும் உன்னுடைய வெள்ளத்தில்
மூழ்கிக் குளித்தேனே நான்
தலை துவட்ட நேரமில்லை
உனது புதுமைக்குள் நான் புதைந்து
என்னை மறந்தேன்
இப்படியும் நீதான் சொல்லுகையில்
அதுதான்
நீ என்நெஞ்சை சிலநாளில் கடன் கேட்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலைப் பொழுதுகளில்
தனிமையிலே நீ மூழ்கி
அதன் பாடல்களைக் கேட்டு ரசிக்க
மரங்கள் மழை விழுங்கி
பூக்கின்ற காலங்களில்
உன் கண்ணிரண்டை நான் வாங்கி என்
கண்ணோடு கண்ணாக
என் முகத்தில் கோர்த்து
பார்ப்பேனே அழகு
நான் பார்த்தால்
நீ பார்த்த மாதிரியாய்

என்றெல்லாம் நீ உன் நட்பொன்று பற்றி
பாடி வடித்தாயே மனம் பொங்க
யார் அந்த நட்பின் வேரறுத்தோன் நிறமென்ன
அவனின்
உடம்பெல்லாம் புள்ளியா பாம்பைப்போல்
●

*29.5.1998*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

198

## கட்டில் மெத்தை குடை

இது நான் படுத்த கட்டில்
பொரித்த
பப்படத்தைக் கடிப்பதுபோல் சத்தங்கள்
கேட்டாலும்

இழுத்துப் போடு
வெயிலுக்குள் உருகட்டும்
என் நாற்றம் கலைந்து
மூட்டை மணமும் ஒன்றாகி
காற்று
குழம்புகிறது

தட்டியெடு மெத்தையையும்
உதிர்ந்த
தமிழ் இருந்தால் அள்ளி
கொட்டிக் குவி
அதுவும் ஒரு தூணாகி

நான் பாவித்த இத்த
குடை கொளுசு வசதி

●

*10.07.2002*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

199

## வாழ்க்கை தெரிந்த ஓணானின் புன்னகை

இந்த இருப்பிடம் சிறியதுதான்
நாம் இருவர் நம்மோடு சில எறும்பு
ஊர்ந்து திரிய இடமுண்டு ஒரு காய்ச்சல்
வந்து கால் நீட்டிப் போட்டு முனகத்தான்
பருமனில்லை வாசல் ஓர் ஓணான் முக்கிப்
பொறுத்து ஒடித்தான் தப்பும்

இதற்குள் நானெங்கே உனக்குப் பூமரங்கள் நாட்டுவது
சிறு புல்லைத்தூவி வளர்த்து அதன் குருத்தில்
என் கண்மயிரால் உனக்கு ஓர் ஊஞ்சல்
கட்டக்கூட இடமற்ற நெருக்கத்தில்
நம் வாழ்க்கை ஆகாகா அழகு
என்னுடைய தோளில்
அல்லது மீசையிலே
நீ கூத்தாடிக் குதிக்கின்றாய் உலகம்
பள்ளம் விழுந்து இன்னும்
பழுதாக

ஒரு முடுக்கு
அதுதான்-
நாம் உறங்கும் படுக்கையறை
சிறு உடும்பா இல்லை
சுண்டெலியா நாம்
காலையிலே வெயில் வந்து
என் முதுகைத் தடவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனைகிறது ஆனால்
நெருக்கத்தில் வருந்தாமல்

போகிறது கவலைதான் நேற்றிரவு மழைகூட
நுனி நெருங்கி அது நசிந்து
உருமாறிப் பெய்ததனால்
கத்தியது தொண்டைப்பூ முறிந்து வலித்திருக்கும்

மழைக்குத் தெரியாது
வாழ்க்கை
வாசல் நெருக்கத்தில் நுழைந்து பிழைக்கின்ற ஓணானின்
புன் சிரிப்பில் மினுங்கும் தெளிவு
மழைக்கு வரவில்லை இந்த நிலம் குளிரச் சுணங்கும்

●

*15.5.1998*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஞ்சில் முளைக்கின்ற கூந்தலாளுக்கு

நீ கொஞ்சம் அசைந்து சிறு தலைமயிர்போல்
என்மார்பில்
உதிர்ந்து கிடந்திருந்தால் கூட
அந்த நுளம்பு பறந்திருக்கும் நசிவதற்கு
நியாயமில்லை
நீயெங்கே
விழுந்தால் செத்த பிணம்
ஒரு பூப்போல முளைத்தபடி உன் கண்ணிமைக்குள்
நானிருந்தும்
உன் உயிர் இரையும் இரைச்சல் எனக்குக்
கேட்பதில்லை

என்ன கனவோடு அந்த உயிர் வந்திருக்கும்
உன் துளிர் மூக்கில் பொன் நிறத்தை ஆராய்ந்து
அறிகின்ற ஆவலுடன் நின்றிருந்தால்
பெரிய அநியாயம் என் கைபட்டு நசிந்ததனால்
நிலவோடு ஒப்பிட்டு
அந் நுளம்பு உன் நிறத்தை
குறைந்தது கவிஞனாய் ஆகாதா
இசைப் பாடல் எழுத
அதற்குண்டு தகுதி
காலத்தால் அழியாத கவிதை செய்யும் தாகத்தால்
உன் குளிர் மூக்கில் குந்தி
பேனை திறக்கையிலே என் கை பட்டதுவா

படுத்துப் படுத்து மெத்தைக்குள் நீ ஊறி
உன் கூந்தலும் முளைக்கிறது பஞ்சில்
நான் ஒற்றை மீன் இந்தக் கட்டில்க் கருங்கல்லில்
துடிப்பதுவும் தெறிப்பதுவும்
உன் பிடரி முகருவதும்
எப்போதும் முளைத்திருந்து

●

*25.8.1995*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

201

## காகம் அழைத்தல் பிரச்சினைகள்

அந்தக் காகம் வரும் என்று சொல்லி
நீ எதிர்பார்த்திருப்பாய்
அந்தக் காலம்போல் அரசன் தெருவினிலே
இறங்கி நடந்து வந்து
ஊர்ப் பொதுக் கிணற்றில் நீர் குடித்த
பொற்கால நினைவினிலே

காகமெல்லாம் காகமாய் இல்லையே
இந்தக் காலத்தில்
கழுத்திலே சால்வை
நடையிலே பவிசு
மிகவும் யோக்கியனாய் போயின
காகங்கள்
நீ எப்படி இன்னும் மனிதனாய் வாழலாம்

தெருவில் நீ சோடனை செய்தாயா
பொய்யாகவேனும் சில விளம்பரங்கள் எழுதி
பன்னீர் தெளித்தாயா நிலத்தில்
கையில் பாற்குடத்தை வைத்தபடி காத்துக்
கிடந்தாயா
இல்லையென்றால்
காகம் வருமா பறந்து
இது நீயும் நானும் வாழும் உலகமா
காகம் வர
காகமும் நாமும் வாழும் உலகமே

காகம் காகம் எங்கும் காகம்
உனக்கு
காகம் அழைக்கத் தெரியாது
ஆனால் உணவில் மாற்றமில்லை

●

*3.11.1998*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 202

## பழத்தேங்காய் கேட்ட கதை

எதிலும்
சுதந்திரமும் நிம்மதியும் வேண்டும்
தொடத் தொட இனிமை தொட்டதெல்லாம் தங்கம்
மழைபெய்து
வீதியில் கிடக்கின்ற சேற்றுள்ளும்
தேன் என்ற ஒரு காலம்
இருந்ததாம் அது நமக்குத் தெரியாது
தெரிய ஆசையில்தான் இத்தனை கனவுகளும்
கற்பனையில் நான் எழுப்பும் மாளிகையும்

ஒரு பெரிய நிலம் வாங்கி புது வீடு கட்டி
வளவெல்லாம் மரம் வைத்து மரத்தில்
கனி தொங்க அதில் மயங்கிக் கிளி தொங்க என்று
என் கற்பனைகள் விரிகையிலே நீ வந்தாய்
தேங்காய் மிக இளசு
வழுக்கலினால் கறி சமைத்தால்
ருசியில்லை என்று சொல்லி
இந்தக் கனவுப் பொன் குடத்தை உடைத்தாய்
இது இன்று மட்டுமல்ல
எப்போதும் நிகழ்வதுதான்
உன்னோடு கைகோர்த்து
வாழ்க்கையிலே பறப்பதனால்
இந்த விபத்தெல்லாம் எனக்குண்டு புதிதல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழத்தேங்காய் எங்குண்டு
வழுக்கல்தான் ஊர் முழுக்க
யார் வீட்டுக் கறியும்
இப்போது மணப்பதில்லை
சும்மா கடுகு கொட்டி சூடேற்றி வாசத்தை
மூக்கிற்காய் உண்டாக்கிப் புசிக்கின்றார்
நாக்கிற்கு ருசியில்லை நீ போ
பழத்தேங்காய் கேட்டகதை பாட்டுக்குப்
பொருளாகும்
காலம் மாறி கவிதைகளில் பொன் உதிரும்

●

*15.3.1999*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 203

### சின்ன உடுப்புகளும் சிரிப்பும்

இன்னும் இருக்கிறது பணிகள்
பழுத்த
ஓலை இணுங்கி
சிறு ஈர்க்கு முறித்து
பல்லைக் குத்தி வீசுவதுபோன்று
சொற்ப நேரமல்ல வாழ்க்கை
ஒரு நொடிதான் எனினும்
பெரிய யுகம்
கடக்க வேண்டியதும் படிக்க வேண்டியதும்
என்று மிக அதிகம்

சின்ன
ஆடைகள் துவைத்து
காயவைத்து மடித்து
வைத்துப் பின் எடுத்து
உன் மகனுக்கு அணிகையிலே அலுத்து
வெறுத்துப் போனதென்று சொன்னாய்

சிரித்துவிட்டேன்
அவ்வப்போது பூக்கின்ற மரம்போல
இன்றும் மலர்ந்துவிட்டேன்

என் பல் வெளிச்சம் கண்டு
உன் முகப் பருவின் மூக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனிந்திருக்கக்கூடும்
உன்
கன்னத்தில் சிறு ஈரம்
துடைத்துவிடு
என் நெஞ்சில் உன் பையன்
இப்போது துள்ளியதால்
வலியில்லை இன்பம்
அவன் கழித்த சிறுநீர்
என் வாய்க்குள் இனிக்கிறது

சில சின்ன உடுப்பு
வீட்டில் அணிந்து
அவன் வளவில் விளையாடும்
வெள்ளை சிகப்புகள்
கழுவிக் கை நொந்து
போன உனக்கு

இந்தச் சிரிப்பே பதிலாக பதிலுக்குள் நூறு
பொருளே பொதியாகி
பாரத்தில் நிற்கின்றேன்
பெறு

●

29.2.2000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

204

## தொங்கும் வானமும் தடாகமும்

வானத்தையே பார்த்தபடி இருக்கிறேன்
எவ்வளவு காலமாய் இப்படி அந்தரத்தில்
தொங்குகிறது என்று
இனியாவது அதற்கு
தூணாகி நிற்போமா என்றும்
கழுத்தை முறித்து
இரு கண்ணுக்குள் வெள்ளிகளின்
கால்கள் நேரடியாய் இறங்க
வசதியாக அண்ணார்ந்தபடிக்கு

என்னவோ எவை எவையோவெல்லாம்
மனக் கண்ணில் வந்தன
மனக்கண் ஒரு திரை
நல்ல படங்களும் ஓடும்
ஓடக்கூடாதவைகளும்
எப்படியோ ஓடிவிடும்

இரண்டும் ஓடுவதனாலேயே அதற்கு
மனக்கண் என்கிறோம்
சும்மா எதற்கும்
யாரும்
பெயரிடவே இல்லை

பெயரிடுவது எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது
உலகத்தில்
இந்தப் பெரிய சமுத்திரத்திற்குக் கடல் என்று சொல்கிறார்கள்
அதுபோல இதயம் உள்ளவருக்கும்
அப்படித்தான் சொல்லுகிறார்கள்

மணல்களை இங்கே மணல்கள் என்றே
அழைக்கிறார்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதர்களையும் அப்படித்தான்
பதர் என்கிறார்கள்

நான் பதராக இருக்கக்கூடாதே என்று
நினைக்கும்போதுதான்
இந்த வானத்தைத் தாங்கவேண்டும்
அதைத் தொடர்ந்து அந்தரத்தில்
நிற்கவிடக்கூடாதென்ற
வெட்கமும் ரோஷமும்
எங்கிருந்து வருகிறதோ தெரியவில்லை
வருகிறது

அவை வருகின்ற இடத்தில்தான் இருக்கிறதா
பெயரிடுவதற்கான அர்த்தமுள்ள
கற்பனைத் தடாகம்

●

*2.2.2001*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

205

## கடதாசிப் பொடிச்சியும் கல்லு இளைஞனும்

விடிந்து எழும்பினால்
வாசல்
கூட்டலும் பெருக்கலும்தான்
நேற்றுவரை பெய்திருந்த
இடி முழக்க மழையில் மனம்
ஊறிக் கிடந்த கடதாசி
இன்று
புது வெயிலின் கரம்
தன் முகத்தில் பொட்டுவைக்க
உஷாராகிப் பறந்து கிடக்கிறது

பாவம்
கூட்டி எரிக்காதே
நரகம் நமக்குண்டு
நாக்கை
நீட்டியபடி

சின்னக் கல்லும்
அந்தக் கிழிந்த தாள் துண்டும்
கொள்ளும் காதலினைப் பார்த்தாயா
அது அன்பு
இந்த
உலகத்தின் ஆணிவேர்

இன்று நமது
வளவுக்குள் இன்னுமொன்றாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று நம்முடைய
ஓடும்போது தீப்பெட்டி

கோமாளி ராகத்தில்
பாடுவது அநியாயம்

தொடவேண்டாம்

அந்த
இருவரையும் பிரித்து
கடதாசி என்றெண்ணிக்
கொளுத்தி
நீயும் எரியாமல்

ரசி அவர்கள் காதலுக்கு
நம் வாசல் களமாகி
கடதாசிப் பொடிச்சிக்கும் கல்லு இளைஞனுக்கும்
உண்டான காதலுக்கு
டும் டும் டும் டும்
நான் கொட்டும்போது
நீயும் வந்து பூத்தட்டு ஏந்து
அழகான பால் முகத்தில்

●

*15.1.2002*

உசாத்துணைப் பகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

206

## இலைகள் பற்றிய கணிப்புகள்

இலைபற்றிய கணிப்புகளைச்
சொல்லத்தான் வேண்டும்
அதன் எந்த நரம்புகளிலும்
சுழுக்குகள் ஏற்படாமல்
கிளைகளில் நிமிர்ந்து நிற்கின்ற தன்மை
மகிழ்ச்சியானதே

இளைஞனுக்கு வழி விடுவதில்
இலைகளுக்கு நிகர் இலைகள்
இறுதிவரை தனது தாய் வீட்டைப் பேணி
கனிகளைக்கூடக் காப்பாற்றி
தாம் களைத்து
மரம் விட்டு
இறங்குகின்ற போதும்

தாய்வீட்டை
ஓர்
அங்குலமாவது உயர்த்திவிட்டு
வானின் முதுகு சொறிய என்றில்லை
அதற்குக் கூச்சம் காட்டி

நீலங்கள் கலங்கி
தனது கம்புக்கட்டுக்குள்
மரத்தலையை எடுத்துவைத்து
சூரியச் சீப்பாலே வார

வானை
ஒரு
வேலைக்காரியாய் மாற்றுகின்ற திறன்
இலைகளுக்கு அதிகமுண்டு
நம்மிடத்தில் இருக்கிறதா

●

*17.2.2002*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

207

## சீலை

புதிய புதிய விஷயங்களைப்
பேசுவதாக இருக்கிறது
நீ கழுகிப்போட்டு கொடியில் உலரும்
சீலை

என்னை வழியனுப்ப
கையசைப்பது போலவும்
இந்த அழகனைக் காதலித்து
கண்ணடிப்பதுமாக

பேசுகிறது
துணி
ஒவ்வொரு நூலும்
ஒவ்வொன்றேயாக
இணைக்கப்பட்டது பட்டு

பளபளப்பும் ஒரு கதை
என் கண் மயக்கி ஆடும்
ஆட்டமும் இன்னொன்று

கொடியில் முள் கொளுகி
கிழிந்து தொங்குகையில்
வடிகின்ற கண்ணீர்
அதை எடுத்துப் பக்குவமாய்
புரட்டி வேறிடத்தில்
போடுகின்ற நீ என்று

இந்தக் கைக்குட்டைத் துண்டுக்கு மடிப்புகளும்
கரையில் சிலும்பலென்றும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலம்பலும்
அல்லுத் தொல்லையுமாய்

இருக்கிறது
பார்த்தால்
வெறும் சீலை
நின்று புன்னகைத்தால்-
தாய் மண்போல பேசும்
நெருங்கும்
போதிக்கும்
அலசும்
பத்தும் பலதுமாய்

●

*12.7.2002*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 208

### வண்ணத்துப் பூச்சிகள்தான் பறப்பதா

வண்ணத்துப் பூச்சிகளும் பறக்கலாம்
தும்பிகளும் எந்தச் சுவரிலும் மொய்க்கலாம்
இந்த ஊர்க் காகம்
அந்த ஊர் வேலியில்
அந்த ஊர்க் குயில்கள்
இந்த ஊர் மாமரத்தில்
பாடலாம் கரையலாம் நினைத்த இடம்
அடையலாம்
விடிகின்ற பொழுது
எங்கும் ஒன்றென்று
சூரியன் எழுதிக் கொடுத்தது
அதைத் தடுப்பவர் கரமும் பணிந்தது

தினமும் நாட்டுக்குள்
சொர்க்கம் உருளுதென்று
தேன் குடிக்கும் புள்ளேய் நில்
உன் கக்கத்தில் இருந்த
கவலைகள் எங்கே கா
பிட்டுக் குழலுக்குள் போட்டாலும்
வேகாத மனதோடு
நீ கழித்த நாட்களுக்குப் பிரியாவிடை
ஒரு கத்தம் ஓதி சந்தூக்கை* அனுப்பிவிட்டாய்
வாப்பா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறால் வாங்க நேற்று
துறையடிக்குப் போனார்
பிரச்சினையே இல்லை

நான்
புது மோட்டார் சைக்கிள்
வாங்கி ஓடவேண்டும்
ஒரு வம்பு தும்பும்
இல்லாத காலத்தில்
வண்ணத்துப்பூச்சிகள்தான் பறப்பதா

எங்களுக்குச் சிறகு
இருந்தும் தெரியாத
பருவத்தில் தும்பிகளும் இல்லையே
சொல்லித் தருவதற்கு
அதனதன் ஊரிலே அடைந்தன

●

*17.7.2002*

* சந்தூக்கு - முஸ்லிம்களின் பிரேதத்தைச் சுமந்துசெல்ல உதவும் சாதனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

209

## பதினோராவது பாடலும்
## ஐந்து விரல் குருத்தும்

ஒவ்வொரு நாளும் எழுதலாம்
வெவ்வேறு விதமாக இந்த மழையை
முகில் கவிந்திருந்தபோது
அண்ணார்ந்து பார்த்து
வானம் விழப்போகுதென்று
நீ சொன்ன போது
இந்தப் பத்தாவது பாடல் பிறந்தது
மழைபற்றிய
பதினோராவது பாடலுக்கான ஆயத்தங்களுடன்

நீ சொன்னதைப் போன்றுதான்
பெய்யவில்லை வழிந்தது
வீட்டின்
ஓடு உடையுமா துளிகள் கொட்டையே
என் மண்டையிலே நேற்றும்
கல் உருட்டி எறிந்த மழை

பொத்தல் போட்டு என் வீட்டுக்குள்
அறைக்குளங்கள்
அமைக்க எடுக்கும் முயற்சி
எந்த
மீன் வளர்ப்புத் திட்டத்தைச் சார்ந்தது

உன் கண்ணும் முளை குடித்து
விதைப்புக்குள் கொழுத்த பனையான் மீன்
ஓரத்தில் முட்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை உனது இமை மயிர்கள்
நடுவில்தான் கறுப்பும் சதையும்
பளபளப்பாய்

கடுகே நீ பொரிந்து
இவை மிதக்கின்ற சட்டிக்குள்
விழவேண்டாம் என்று சொல்லி
என் சூட்டைத் தணிக்கின்ற மழை மாலை
போட்டபடி மரங்கள்
என்று தொடங்கவா என் பதினோராம் பாடலினை
அல்லது நான் பொரிய
உன் கையையேனும் தாவேன்
ஐந்து விரல் -குருத்தை
●

*17.7.2002*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

210

## அழகின் தலைப் பயிர்கள்

ஒரு பட்டாளம்
காற்றுக்குப் பூப்பதித்து உயரத்தில் வைத்ததுபோல்
வண்ணத்துப்பூச்சிகள்

எங்கே போகின்றன
இருள் தனது முதலாவது
குருத்தை விரித்து
இவற்றின் கண்களில் உரச உரச
பட்டும் படவில்லை
என்பதைப்போல்

அழகின்
தலைப் பயிர்கள்

போகும் திசையில்தான் அவள் வீடும்
இவை
அவள் வீட்டு எச்சங்களா
எங்கே போகின்றன

இப்பொழுது
என்னை விட்டும்
பெரும் தூரத்தில் அவைகள்
அவள்
காட்டியிருப்பாள்
எல்லைகளை
இப்போது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் வீட்டுப் புறத்தில்
ஒரு காகம் மட்டும்

என் இருதயத்தின் நூல் அறுந்து

தொங்கத் தொங்க
காலுக்குள் சிக்கியதே
இடறி விழுகின்றேன்
தூக்க இரு கை வேண்டும்
காக்கைக்குக் கால் மட்டும்

●

*27.3.2003*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

211

## சவர்க்காரம்

தலைக்குள்
பேன் கடிப்பதும் விளங்கவில்லை
என்னெய்வைத்தும் நாள்கணக்கு
சதாம்ஹுசைனும் புஷ்சும்
மல்லுக்
கட்டிக்கிப் புரள
சனங்கள் சாகின்ற கதைகள் கேட்டு
என் காதுகளும் அழுது பீ
ஒரு குச்சி தேவை
குடைந்தெடுக்க

நாற்றம்
செடி நாற்றம்
எல்லா இடங்களிலும் சண்டை

இந்தக் கடைக்கு நேரே
குப்பை கொட்டும் அவளுக்கும்
கடைக்காரன் பொண்டிக்கும்
போர்
விடிந்து
முகம் கழுக முன்னர்

அவர் கறிவாங்கிப் போட்டாலும்
சாம்பலில்லை அறுக்க
கொள்ளிக்கி நெருப்பு மூட்டி சுடுதண்ணீர் வைத்து
தேயிலையும் போடாமல் கை விறைத்து
மரத்துப் போனது
சனம் கதைக்கும் கதைகள் சில
வாயாலே சொல்லலாமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தோடு அழிந்ததாம்
ஒரு பிள்ளை தலை தெறித்து
முண்டமாய் கிடக்குதாம் படத்தில் பார்த்தனராம்

மோதிரம் வெட்டுது
நான் குளிச்சி ஒரு கிழமை

அவர் அருகாலும் வாறதில்லை வெடுக்கு
ஊத்தை
இஞ்சிக் கனத்தில்

என் கழுத்துக்குள் மூன்று கோடு
அரைக்கூட்டு நாடாபோல்

நேற்று அவர்
என்ன நினைத்தாரோ வெளிக்கிட்டு போய் வந்து
இஞ்ச
உன்னைத்தான்
சவர்க்காரம் பிடி என்றார்

என் சதிரமெல்லாம் கூசிச்சி

●

*25.4.2003*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

212

## எழுதுகின்ற வெண் கொக்கு

என்ன குறிக்கிறது
கொக்கு
வயல் பரப்பில்

குனிந்து எழுதுகின்ற பேனை
நீள் சொண்டு
அது இருக்கட்டும்-

இப்படி ஒவ்வொரு நாளும் வெள்ளை
வெள்ளையாய்
அணிந்து வருகின்ற உடுப்புக்கு
பதவி என்னவாம்
தொழில்
விவசாயம் இல்லை
இந்தப் பக்கம் வருவது
உலாத்தலுக்கு

மண் காய்ந்து வெடித்தது
பொது வரம்பில் ஆமைசெத்து
காகங்கள்

உலர்ந்து
கடதாசி போல் பறக்கப் பார்க்கின்ற நிலத்திற்கு
பாரமாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் மூலத்தை முக்கி
ஊன்றிக் கொண்டு நிற்கும்
பெயர் தெரியாத மரம்

நாக்கைக் காட்டியது
குடிக்க
தண்ணீர் வினவி

ஒரு கோப்பை வார்த்தால்
புண்ணியம்தான்
ஆகியதா
போய்க்கொண்டே இருக்கின்றேன்
நெரிச்சலுள்ள
புகை கக்கும் வாகனத்தில்
சிறுகச் சிறுக
இவ்விடத்தில் இருந்தும்
அழிந்து

நான் அழிவதனைப் பற்றித்தான்
வெண் கொக்கு எழுதும்
இரண்டு வரி

●

*30.4.2003*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 213

### பசை

கையில்
பணமில்லை செலவழிக்க
நீ சொரியும் புன்னகையை என்ன செய்வேன்

துளிர்
துவண்டு விழுந்தாலும்
பூக்கின்ற ஒரு சாதி
நீ
தன் கொப்பு முறிந்தாலும்
நிமிர்த்திப் பிடிக்கின்ற கொடிபோல
என்னைத் தாங்குகிறாய்
வீட்டில்
எண்ணெய் இல்லை என்றுமில்லை

பருப்புக் குறைகிறது
சீனி இனி ஒரு கரண்டி
கிடக்கிறது
மரக்கறியும்
தீர்ந்து நம் சட்டி நாறப்
போகிறது என்றுமில்லை
முருங்கை இலை உருவுகிறாய்
ஒரு சுண்டல் போட்டு இன்று
ஆணத்தில் நனைத்துவிட்டாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல ருசி
இரவு
பிட்டுக்குப் புளி ஆணம்
கறி மாங்காய்
வளவில்
காய்த்த கறி இதுவென்று
நீ அள்ளி ஊற்றும்போது
கை பிசைந்த பிடிக்குள்ளே
என்ன பசை
நம் உறவு
அரிசியிலும் அப்பியதா

●

*24.9.2003*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 214

### விக் விக் விக்

உன் சர்க்கஸ்
அற்புதம்டா
நீ முள்ளு முடி தரித்து போடுகின்ற கரணம்
வியப்பு தரும்

உன் கொட்டகை இந்தப் பெரிய மரம்
உன் காட்சிக்குக் கோமாளி
கருங்குரங்கு
வாத்தியக் கலைஞரென்ற குருவிகளின்
இன்னிசையில் நிகழும் உன் விளையாட்டு
ரசிக்கின்ற பிரியன் நான்
கட்டணமாய் எதுவுமில்லை

நீ இப்போது நிறம்மாறி நிமிருகிறாய்
தன் முதுகை வளைத்து
பின் வானத்தைப் பதம் பார்க்கும்
ஒரு கிளையில் ஏறி நின்று

தலை ஆட்டி ஆட்டி
கால் நகத்தில் பலம் கூட்டி
உன் முதுகுச் சீப்பை விரிக்கின்ற வடிவுக்கு
இந்தச் சருகுகளா கை அடித்தல்
கொட்டகையே அதிரவேண்டும்

ஒரு கிராமத்துக் கலைஞனுக்கு இது பற்றி
கவலையொன்றும் இருக்காது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் உண்மை
நீ ஓணான்
என்று உன்னை ஒதுக்கி
நான் உயர்ந்து நிற்க விரும்பவில்லை
பணிந்தே விடுகின்றேன்
இம் மரத்தடியில் இருக்கின்றேன்
உன் சர்க்கஸ் பார்க்க
இன்னும் பலர் கூட்ட
பேராசைப் பறவையொன்று அழைக்கிறது
விக் விக் விக் விக்

வருக வருக இங்கு
நிஜ ஓணானின் சர்க்கஸ்
என்பதுவா அதன் அர்த்தம்

தனி
இனிமைதானப்பா
இந்தத் தெருவும்
அசல் ஓணானின் புதினங்களும்
பல போலி ஓணான்கள்
சாகசங்கள் காணும்
ஊருக்கு இனிப்போக விருப்பமில்லை
●

*25.9.2003*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

215

## உச்சி விதைப்பு

காற்று ஓடிவந்து
என் தலை முடிக்குள் விதைக்கிறது
வேளாண்மை
பஞ்சமா
இதன் வயல்நிலத்தை உழவு செய்து
வேறு எவனேனும் உண்கிறானா
கேட்டாலும் சொல்லுதில்லை
முடி விலக்கி
வரம்பு வைக்கிறது
மாமரத்தின் பூ உதிர்த்தி
உச்சியிலும் விதைக்கிறது

தண்ணீர்க் குடமெடுத்து
என் தலை ஊற்ற வருகிறதா
காற்றுக்கு உதவி செய்யும் தென்னை

உன்னைத்தான்
நான் சிக்கலுக்குள் மாட்டிவிட்டேன்
மாடு பூட்டி
உழவு செய்யத் தேவையில்லை
உன் தலைக்குள் கிடந்த பேன்கள்
என் தலைக்குள் கிடக்கிறது
இரவு வந்து
அவை உழவும்

ஒரு பண்பட்ட நிலம்தாண்டி எனது தலை
பார்த்தாயா
குளிரெடுத்து மீசைவைத்து
முறுக்கிவிட்ட விவசாயி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிர் முளைத்த கையோடு
நடக்கின்றான் மண்டை ஓட்டில்

களை பிடுங்கி எறிகிறானா
சில மயிர்கள் முறிகிறதே
நீ வார்ந்து
எண்ணெய்வைத்து
சுருட்டி விட்ட கோபுரத்தில்
ஏறி நின்று நெல் தூற்றி
பதர் விட்டானோ கமக்காரன்
கண்முழுக்கத் தூசு சீ என்ன காற்று

●

*17.12.2003*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

216

## காது மின்னி

விமானமா
அது பெற்றோல் புறாவா
வெள்ளையாய் வானத்தில்

மேகம் கிழித்து வானுக்குச் சட்டைதைத்து
உடுத்தாட்டிப் போகும்
இரையும் வெள்ளி
வந்து
ஏற்றினால் போவேன்
பெயர் தெரியாத ஊர் அனைத்தும்

அங்கெல்லாம் பூவாக
பச்சைக் கிளிகளாக
புல்வெளியில் மிதக்கும் பனிகளென
மலைகளென
நதிகளென
கண்கொத்திப் பாம்பு கதைத்தால் இனிக்கிறது
தின்ற மனிதர்கள் வாழுகின்றார்
அங்கெல்லாம் போவேன்
ஒரு பூங்காற்றாய் நான் அலைவேன்
என் சுற்றம்
உறவு
நான் நன்கு பழகிய
கூட்டாளி தாய்
குழந்தை என்றெல்லாம்

யாதும் அறியாதோர் பலியாகி
காப்பாற்று காப்பாற்று
என்று ஊர் அழுகின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீர் ஒரு முட்டி
மட்டும் இருக்கிறது
ஆதனமாய்

அது பாரமா
என்னை
புறா இழுத்துப் போகுமா
ம்....மென்று போகின்ற ஓர் உசிரு
நான்
பெரியபிள்ளையாக
உம்மா ஓடிப்போய் அவசரமாய்
வாப்பாவின் காதுக்குள்
குசுகுசுக்க அவர் ஓடிப்
போய் வாங்கி வந்து
என் காதுகளில் கொளுகியது

மனக் கக்கிசத்தால் சுரை தேய்ந்து
கழன்று பறக்கிறதா
என் 'காதுமின்னி' ஓம்... புள்ள.
●

*17.12.2003*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

217

## உன் விரலின் நெட்டி

எதையோ சொல்லி
அப்படியாய்
உன்னை நோண்டிப் பார்த்தேன்

நீ முழுவதுமாய் இலை உதிர்ந்து
பட்டு விறகானாய் என்னுடைய கண்முன்னால்
உன் ஆணிவேரின் அறுதலினால்
அதில் ஒட்டியிருந்த மண்
எங்கும்
தெறித்துப் பறந்தது
என் முகத்தில் ஒன்றிரண்டும்
ஒட்ட

என்னுடைய
துர்நாற்றம் கிளம்புகின்ற
ஒரு வார்த்தைக்கு
நீ எவ்வளவு உலர்கின்றாய்

உன் முகத்தில்
வெண்ணிலவு
குளிக்கும் ஆறு
வற்றியது
உன் பிடரி மயிருக்குக் கீழிருந்த
சில பூனை மயிர்கள்
பொசுங்கி
என் மனதுக்குள் விரிந்திருந்த பூக்களுக்குள் நாற்றம்
பாய்ச்சி

உனது காலின் நகம்
நான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் சொன்னால்
உன் பிஞ்சு விரலின் மொழிக்குள்ளே இருந்து

நீ சுண்டி இழுத்தால் ஒலிக்கின்ற
நெட்டி

அப்படியாய்-

ஒரு கொட்டாவிவிட்டேன்
என்று வைத்துக்கொள்
வாய் நாற்றம் வாராதா
அதுபோல் எடுத்துக்கொள்
கண் குருவிகளைப் பறக்கவிடு
அழவேண்டாம்
உன்னை
சீலையால் மூடிப்
பொத்தியே தினசரி
என் கை ரேகைகூட உன்னில் பதியாமல்
என் நெஞ்சுக்குள் வைக்கிறேன்

இதயம் அடிக்கின்ற சத்தம்
படபடப்பா
காதடைத்துப்போகுமா
சரி அதை எடுத்து
குண்டிக்குக் கீழே
ஒரு மடுத்தோண்டிப் புதைக்கிறேன்

நீ
பழையபடி
பாடியபடி
இரு
நான் முறித்த இடத்தில்
இருந்து தழைத்தெழும்பி
●

*30.3.2004*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

218

## ஊத்தை மயிர்

உனது ஞாபகம் நேற்றிரவு வந்தது
ஒரு சிணுசிணுத்த மழைக்குள்
என் பூமரம் மட்டுமல்ல
பால் நிலவும் அகப்பட்டு
தும்மிச் சளி சீறி வாழை இலையினிலே வீசி
வெட்கித்துப் போயிருந்த
நேரத்தில்

நீ எங்கே இருக்கிறாய் அன்பே

உன் நினைவு முன்னரெல்லாம்
சிறு பிள்ளைபோல் ஓடி வந்து என்னுடைய
நெஞ்சின் சுவர்களிலே எழுதும்
நமது
அன்பின் கவிதைகளை
பிறகு
பந்தடித்து விளையாடும்
படுக்கும்
திடீரென்று
காணாமல் போகும்

இப்போது உன் நினைவு செய்வதில்லை
குறும்பு
உன் நினைவுக்குப் புத்தி
பிடிபட்ட காலம்
இதுவா
வரும்போதே
அது உரிமையுடன் வருகிறது
பக்குவமாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் உள்ளத்துள் இருக்கின்ற நூலகத்துள் நுழைந்து
உன்னைப் பற்றியும் உன்னோடு நான் வாழ்ந்த
வாழ்க்கையின் ரசத்தில்
மயங்கி நான் கிடந்த காலத்தைப் பற்றியுமாய்
நான் ஆய்வுசெய்த புத்தகங்கள்
அனைத்தையுமே படித்து
முடிக்கிறது
அப்புறமாய்
சத்தப்படாமலே போகிறது
ஞானியைப்போல்
நரைத்த
தாடியும்
மீசையுமாய்

நீ எங்கே இரைகின்றாய் கடலே

உன் பொன் கூந்தல் பிடித்து
வான் நிலவு இறங்கி வந்து
இன்னும் ஊர் மேய்ந்து போகிறதா
இல்லை
மயிர்
ஊத்தையா

●

*30.3.2004*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

219

## தாவணியே

கடிதம் எழுதுவது மாதிரி இல்லை
கவிதை எழுதுவது
அதுவும் உன்னைப்பற்றி
தமிழில் செதுக்குவது

ஒரு சீரான சூழ்நிலையும்
அந்தச் சூழ்நிலையின் தயவாலே
உள்ளத்துள் உதிக்கும் நதியும்
பெருகிப் பாயவேண்டும்
ஆகா
வந்ததுபார் நேரம்

என் வாசல் மரத்திலுள்ள
பூவொன்றில் இருந்தபடி
அப்பூவின் மணியிலுள்ள
மினுமினுப்பை எந்தன்
கண்களிலே தேய்த்தபடி
எழுதுகிறேன் கவிதை
ஆகா
பேனை எனக்கில்லை
நான் எழுத எழுத
காற்று குறித்துப்போய்
பாடிக் காட்டுகிறது
ஊரில்
ஆகா
ஊரெல்லாம் மழை
மரங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் பார்த்திருக்கும்போதே இடைக்குள்ளே
கைவிட்டு
தேய்த்துக் குளிக்கிறது ஊத்தை
ஆகா
எத்தனை நாள் இந்த
நிலைமைக்குத் தவமிருந்தேன்
ஆகா
உன் கன்னத்தை வர்ணிக்க தேனில் மொழி
பிசைந்தேன்
நூல் கனத்த
தாவணியே என்
சின்னக் கிளியை மூடாதே
பாரம்

இதோ
பூமரத்தின் பொன் குருத்தில்
என் பிரியத்தால் பூக்குத்தி
நான் அனுப்பும் ஆடைக்குள் அடங்கி என் நிலவு
ததும்பட்டும் தெருவில்

●

*30.3.2004*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 220

## வெகுளி

அவனைப்போல்
காதலியைச் சந்திக்காத முகில்களுக்கு
மனக்கசப்பு வந்திருக்கும்
அதுதான் மழையில்லை

வீதி இல்லையா வானத்தில்
இல்லை
ஒளித்திருந்து முடுக்கிற்குள் தன் மனக்கிளியை
அணைத்து
ஒரு முத்தம் கொடுத்து
விரல்களையும் கசக்கித்தான்
தம் சந்திப்பை தினசரியும் உறுதிசெய்து கொள்ள
சிறு பூச்சும் காணாத இடமொன்று ஏனில்லை
இக்காவ
காதலிகள் மனமெல்லாம் கூழ்
அவை நிறைய
அன்பின் எச்சம்தான்
நாற்றம்

யாரும்
நீரூற்றிப் பசளையிடத் தேவையில்லை
வானத்தில்
வெள்ளிகள் தினம் பூக்கும்
அவள்
பல்லைப்போல் முத்தாய்

ஒரு வெள்ளி
சிறு தூசு
வால் தேய்ந்து புகைந்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானப் பூ எதிலப்பா
குறை
காதலிகாள்
முகிற்கிளையின் துயரம்
அறியாத குமர்க்கிளிகாள்
அங்கே பார்
ஓர் இளசு
தலை வெள்ளிப் பூவை
கிள்ளித் தன் கரத்தில் வைத்திருந்து அழுகிறது
சூடத் தன் பெண்ணின்
தலை இல்லாத் துயரத்தில்

அது அவனா
அவன் நானா
பின்னே எவன்
எவனோ ஒரு வெகுளி

●

*30.3.2004*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

221

## வாப்பாவின் பூந்தோட்டம்

என் நாற்றம் பிடித்து என்னை
வந்து சுடும் அளவுக்கு
என் தோலென்ன அவ்வளவு ருசியா
கால் முளைத்த
சுடு வெயிலே
இந்த ஜன்னலுக்குள்ளால்
என் அறைக்குள்ளே நடந்து வந்து

கொதி வெயிலே
என் முகத்தில்
ஏன் நகத்தால் கீறுகிறாய்
உன் சிறுபிள்ளைத் தனம்
போகாது இறுதிவரை
நேற்று
கதவிடுக்கால் நீ நுழைந்து
என் முதுகில் நொண்டி
விளையாடிப் போன தடம்

இன்னும் இருப்பதுவாய் சொன்னா
உம்மா
சுட்ட
பணியாரம்போல


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போ வெயிலே
போய் அந்த
வாசலிலே உட்காரு

இரவில் நான் அமர்ந்தால்
சிற்றெறும்பு கடிக்கிறது
அதன் பொந்துக்குள் சென்று
பிடியேன் ஒரு தீப்பந்தம்
நூறு வெள்ளி எண்ணி
என் மடிக்குள் போட்டுவிட்டு
நூற்றியொன்றைத் தாண்டுகையில்
கடிக்கிறது
ஐயோ
இடையில் என் கணக்குப்
பிழைக்கிறது

இதோ
எனது
தொப்புளுக்குள் வந்துவிட்டாய்
இன்னும் விட்டால்
என் விதை தடவி எனது
பரம்பரையை ஆராய்வாய்

அப்படி அதிலொன்றும் குறையில்லை
என் உம்மா சுத்தத்
தங்கம்
வாப்பா இறக்கும்வரை
பூப்பூத்துக் காட்டிய ஒரு சாதி
வேறு எப்பூவும்
அவருக்கும் தெரியாது
மொத்தத்தில்
உம்மாவே வாப்பாவின் பூந்தோட்டம்

●

*30.3.2004*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

222

## பறவை பாடியமாதிரி

பிடித்துப்
பிடித்து
பெட்டிக்குள் வைக்க
துள்ளித் தெறிக்கிறது
நாய்
தின்னத் தின்ன
தீராத பசி
உலகத்தைப் பிடித்து
விழுங்கும் வெறி

நான் ஒட்ட நறுக்கிய
கொட்டைவால் இன்னும்
பல குட்டிகள் வெடித்து
தாய்க்குப் பலம் அதிகம்
என் சங்கிலியை உடைக்கிறது
சுவர் தாண்டி ஓடி
எள்ளுப்
பொரியினிலும் கழிவான இந்த
உலகச் சேற்றுக்குள் புதைந்து
குடித்து மகிழ்கிறது
நான் கால் முறித்துப் போட்டாலும்

கெட்ட நாய்
எனக்குத் தெரியாமல் எனக்குள்ளே
இருந்து
குரைத்து என்னோடு போட்டியிடும்
இந்த நாய் வெறும்
இயந்திரத்தில் இயங்கும் நாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகப் போக
நான்
நானாக ஆக
ஓடிவந்து அடங்கும்
அப்போது என்னுடைய
நெஞ்சுக் கூட்டுக்குள் சிறு தலைமயிரால் கட்டுண்டு
கட்டாது போனாலும்
கிடக்கும் நாய்

பலரையும்
ஊரில் கெடுத்த நாய்
கூப்பிட்டால் திரும்பாது
குதித்தோடும் அதைத் திருத்த
உன்னை நீ கூப்பிடு

என்று நான் சொன்னால்
அது ஊருக்குச் சொன்னது
தனக்கும் சேர்த்து
பறவை பாடியமாதிரி
●

*30.3.2004*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

223

## ஆசை இல்லாத மீன்

பார்க்கும் இடமெல்லாம் பச்சை
முருங்கைமரம் வாழைமரம் தென்னைமரம் மா
என்று
வளவு முழுக்கத் தோட்டம்
தோட்டத்தில் ஓர் இடத்தில்
புல் குவிந்து இருந்த திட்டி
மீதில் ஒரு கதிரை
கதிரையிலே நான்
இந்தக் காலைப்பொழுது சூரியனைக் காட்டவில்லை

நம் கடப்படியில் அழகியென தலைவிரித்துப்
பூக்கின்ற
மல்லிகையின் மனது வெண்தங்கம்
ஆயிரம் பூ உதிர்த்தி
ஆயிரம் பூ உடல் தாங்கி
நின்று யார் கண்களுக்கும் குளிர்ச்சிதரும்
கட்டழகி கூலியென்று ஒரு காசும் கேட்பதில்லை
நான் நீர்வார்த்தால் சிரிக்கும்
வார்க்காமல் விட்டாலும்
எப்படியோ கலகலக்கும்
இந்தத் தங்கமலர் அழகிக்கு
மழையில்தான் சிறு நாட்டாம்

ஒரு வாலிப மழை வரட்டும்
குமர் நெருப்புகளைத் தணிப்பதற்கு

கோடை வாலாட்டி என் வளவுமண் நக்காது
வெயில்
மரங்களுக்குக் கிணறுண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீருற்ற
நாம் ஆளுக்காள் சதைமுடிந்து ஒன்றாகும்
பாசம்போல்
தினம் ஊறி வற்றாமல்
அதன் உள்ளிருக்கும் மீனுக்கு எப்போதும் கடல்
இந்தக் கதிரைக்காரன் துயரம் என்னவென்றால்

ஒருநாளும் நான் அள்ள அது வாளியிலே
வரவில்லை
என் தோட்டம் பார்க்க

ஆசை இல்லாத மீன்
அது எனக்குள்
இருக்க வேண்டியது

●

*20.6.2004*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

224

## போடித் தாவரம்

இது காற்று அரண்மனையில் வாழுகின்ற பூ
உன் கொண்டைக்கு நோண்டிக் கெடுக்காதே

இலை கன்னி பூ பட்டை
மலர் உறவு
வேர் கடவுள்
ஒரு குடும்பமே நடக்கிறது தாவரத்தில்
குயிலும் கருவண்டும் ஊர் சுற்றும்
பொறுக்கியென
வந்து போவன
பெண்ணிருக்கும் தகப்பன்
மரமானபோதும் கம்பெடுப்பான்
காற்றின் துணைகொண்டு கிளை அடித்தல்
பார்த்தாயா

இந்த மரம் என்னைப்போல்
ஒரு தன்மானக் குடுக்கை
பழுத்து ஓர் இலை விழுந்தால்
நாளைக்கே குருத்துவிடும்
உழைப்பாளி

நான் இரவலுக்கு ஊற்றும் நீர்
அதிகமாய் பருகவில்லை
மரம்
எனக்கே பிச்சையிடும்
நிழல் என்று பொன் குளிரை
அதற்கும் நாலு ஏக்கர்
முகில் உண்டு



21429

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால்
விளையும் மழையில்தான்
பிழைக்கும்

இப்படியாய்
நல்ல
கண்ணியத்திற்கிடமான
இடத்தில் உன் நகத்தைப் பதித்து
ஊரிலுள்ள சிலபேர்போல்

ஊசி பல மாட்டி
பார்வைக்குக் கரும் திடலாய்
ஆக்கி இருக்கும் பொய்க் களிமண் கும்பத்தில்*
வாசமலர் நடவேண்டாம்
என்னை நடு எனக்குத்தான்
வயதேறி உதிருகின்ற
பருவம்
உன் கொண்டையின் வெடுக்கும்
பழக்கம்

●

7.7.2004

* கும்பத்தில் - குவியலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

225

## இலைகள் இல்லாக் கதிரை

மழைக்குள்
கொடுகுது காகம்
நான் கையைத்தட்டி வீட்டுக்குள் அழைத்தால்
இருக்க உடன் வரும்
மரம் கூப்பிடவில்லை
அதுதான் வந்தது
இதனால் வெட்கமா
தலை குனிந்தபடியே நடுங்குது காகம்
சிறகு
கிடுகிடு கிடுகிடு

இந்தக் கதிரையில் காகம் வந்து அமர்ந்தால்
ஒரு துணி கொடுக்கலாம்
தலையைத் துடைக்க
ஒரு குழந்தைக் காகம்
கோடை மழைக்குள்
நனைவது தவறு
என் பிள்ளைமாதிரி

வாய் விட்டே கேட்டதா
ஒரு சத்தம் வந்தது
கா

வீட்டின்
கடப்பின் பக்கமே
பார்த்த வண்ணமாய்
அது
நிற்க
மழை
துள்ளியபடியே இருந்தது மரங்களில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால்
முறிந்து துளிகளாய்
சிதறிய துண்டுகள்
என் முகத்திலும் பட்டன

எனினும்
பாவம் காகம்
கூப்பிட்டு இருத்துவோம்

கையை நீட்டினேன்
அன்பாய் - வா - என

ஓர் இலையும் இல்லை
கிளைகளும் குறைவு
பூக்கின்ற தன்மையே அற்ற கதிரையில்
என்போல்
அமருமா காகம்

●

*7.11.2004*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

226

## உன்னில் பாடுதல் மாதிரி

இந்தப் பெரிய
காற்றுமாதிரித்தான் நானும்

எல்லா இடங்களிலும் தூசுதட்டி
காலுக்குள் சிக்குகின்ற குப்பைகளை
ஒரு கரைக்குக் கொண்டு குவிக்கின்ற
குணத்தோடு அலைகிறவன்

பல திசையும்
வலுவான கிளை பரப்பி
ஏறக்
கனிந்த பழங்களிலும் அணில் தூங்கும் சக்தியுடன்
நிற்கின்ற மாமரத்தில்
சருகு பிய்க்க நான் வந்தேன்
என்கின்ற காற்றை நோக்குங்கால்-

வேகமுள்ள
என் கால்கள்தான் இதற்கும்
ஒரு குறுந்தாடி மட்டும் இல்லை

எனினும்
துல்லியமான பார்வை அதற்கு
தேவையற்றவை தப்பிப்பிழைக்கவே
விடாதபடிக்கு
அது
தேடித் தேடிக் கூட்டிக் குவிக்கையில்
கிளம்பும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபத்தின் அளவு
நேர்மைக் கவிஞனுக்குரியது

உன்னையே கேட்பேன்
புலவனா காற்று
மரத்திலே பாடுது
என் பூமரம் நீ
அதில்
நான் பாடுதல்மாதிரி

கண் மலர் விரித்துப் பாரேன்
நிலத்தில்
எத்தனை குப்பை

●

*28.11.2004*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

227

## கொசு மாங்காய்

சிலர்
அலையில் மலம் கரைத்தல்
கடலுக்கு விருப்பமில்லை
அது
எத்தனையோ வழிகளினால் விளக்கியது
வீட்டுக்குள் குழி இருக்க
கொசு மாங்காய் ஆய்ந்து
இந்த மணற்காட்டில் போடுவதே சுகம் என்று
வாழ்ந்த மனிதர் பலர்
போனார்கள்
கரைந்த மலம் பட்ட மீனின்
செதில் துடைக்க கடலுக்குள்
கடல்தான் இழுத்துப்போய் இருக்கிறது

இவர் குந்தும் போது
பல நண்டைவிட்டு கடல் சொல்லும்
குந்தாதே குந்தாதே என்று
கேட்டாரோ இவர்
அவை வந்து கால் கடித்தால்
கொஞ்சம்
மண் அள்ளி எறிந்து
விரட்டிவிட்டு இன்னும் வடிவாக

மூங்கிற்
பிட்டவித்து இறக்கினார்கள்
கடல் பெரிய அலைப் பிள்ளைகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏவிவிட்டு நீர் எறிந்து
தூஷித்தும் எழும்பாமல்

இவர் மலம் என்ன பொன் சங்கா
செடி நாற்றம்
மாட்டு இறைச்சி மலம்
இலைக்கறியை
எண்ணெயிலே வதக்கியது
கடல் மீன் என்ன ஊத்தை வண்டி
வால் உசிரா
அதைச் சவர்க்காரம் ஆக்கி
தினம் போட்டுக் குளிப்பதற்கு

அடி சக்க
அம்மாடி
அறுத்த மீனுக்கே செதில் வழிக்க கை சிவக்கும்
பொண்டாட்டி சொன்னாள்
அறுக்காத மீனுக்கு எப்படியாம்
கொண்டைப்
பூச்சேவல் கேட்டாள்

எப்போதும் இவள் இப்படித்தான்
டக்கென்று
எறியல்தான்

●

*27.4.2005*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

228

## போர்வைக்குள் உதிர்ந்த இலைகள்

மழைக்குள்
என்னவெல்லாமோ வரும்

தின்பதெல்லாம் தின்றுவிட்டு பல் துலக்கிப் படுத்த கடல்
திரும்ப எழுகிறது மழைக் கயிற்றைப் பிடித்தபடி
என்றெல்லாம் மொழிப்பறவை கொத்த புத்தகத்தில்
இன்னும் பல கடதாசி விரிந்து ஓட்டையாகும்
மழைக்குள்
என்னவெல்லாமோ வரும்

மழை ஒரு திறப்பு
நம் நெஞ்சைத் திறந்து
உள்ளிருக்கும் பட்சிகளை எடுத்து விடுவது
இரை தேடி வர

மழையும்
மை தீட்டும்
நெஞ்சுக்குள் கிடக்கும் கறுத்த குருவிகள்
வண்ணங்களாகி மாறிப்பறக்க
மழையும்
மை தீட்டும்

என
நான் எழுதியபோது வெடித்த மழை ஒரு
பழைய பண்டங்கள் வாங்கும் வியாபாரி போல
எதையெதையோ அள்ளிக் கோர்த்தெடுத்து ரயில் செய்து
ஓடவும் செய்கிறது

மழை ஒரு
நாட்டுக்குத் தேவையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்பிரஜை
என்னைப் போலதான்

மழையின்
நரம்புகளில்
பாடகிகள் ஒளித்திருந்து பாடுகின்ற வேளைதனில்
குடை பிடித்து வருவோரே கவனம்
உங்கள் கறுப்புச் சீலை ஆமைகளில்
அவர்கள் தாவணி தைக்கத் துணிதேடி
துண்டு கிழிக்க வந்தால்தான்

இது நெருப்பு மழை என்பீர்கள்
முகத்தில் தாவியது நீர் முயற்குட்டி என்பதையும்
மறந்தோராய்
அதனால்தான்
புத்தி மயக்கும் மருந்தும் மழைதான்

இந்தக் கட்டில் எனக்கு பெரும் மலையாகி இதன் முடியில்
நான் ஏறி எட்டி முகில் பிடிக்க
சின்ன வயதில் புறாப்பிடித்த தந்திரமாய்
அது நசிந்து விரல் இடுக்கால் சிந்துகின்ற தேங்காய்ப்பால்
நக்குகின்ற பூக்களது மணி நாக்கைக் கவனித்தேன்
பூக்களின் நாக்கிலும் கறுப்பு உண்டு
மனிதனது தொந்தரவுத் துண்டுபோல
ஆம் வடு இல்லாத பானம் மழைதான்
என்றெல்லாம்
என்னவெல்லாமோ வரும் போர்வைக்குள்
குளிர் காற்றில் குதிரைசெய்து
ஓடுகிறவன் உருண்டாலும் தேன் தாவரத்தில் இருந்து
இப்படியெல்லாம் இலைகள் உதிர
●

*3.9.2006*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

229

## பெட்டைச் சுண்டு

நீ என் செவ்விளநீர்
நான் வெட்டி ஊற்றும்போது
சிலுசிலுத்து
ஆறித் தணிகின்ற
செவ்விளநீர்

மெத்தைக்கு வா
மரைக்கால்[1] கதை உண்டு

ஒரு மரைக்கால்
ஆறு சுண்டு[2]

இரண்டு சுண்டு
தீட்டிப் புடைத்தெடுத்த கதை
அது நம்
காதல் பற்றியதும்
அதற்குப் பின்னரான
திருமணத்தின் நிகழ்வுகளை
நினைவு கூர்ந்து களிப்பதுமான
தவிடு நீக்கிய மணிகள்

மூன்று சுண்டு
கொஞ்சம் கல் மண் உள்ளது
தொழில் பற்றியதும்
அதற்குப் போகும்போது
ஏறி இறங்குவதும்
துப்பாக்கி ஆட்டுப் பிரியர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கள் புள்ளிச் சட்டைகளால்
என் நெஞ்ச அருவியை உறையவைத்து
ஓர் 'ஐஸ்' கட்டியாக்கி

விடுகின்றபோது
அதிலே குளிர் பானம்
தயாரித்துக் குடிக்க
உதடு காய்ந்தவர்கள் எத்தனிப்பதுமான
கறள்[3] ஆணிகள்
விழுந்து கிடப்பன

மிச்சம் இன்னும் ஒரு சுண்டு
ஒரு மரைக்கால் ஆக
என் கையால்
மடியால் போட்டு
நள்ளிரவில்-நிலம் பூக்கும் வரைக்கும்
உன்னை விழித்திருக்கவைத்து
உன் கண்ணை
ஒற்றி ஒற்றி எடுத்து
நீ இரவை
வர்ணமயமாய் பார்க்க
பல நிறத்தில்
விளக்கு ஏற்றுவது

இந்த ஒரு சுண்டு
நிரம்பாது

ஆக ஒரு மரைக்கால்
அளந்துபார்த்தால் குறையும்தான்
பெட்டைச் சுண்டு போட்டு அளப்பவன்தான் ஆண்பிள்ளை

●

*25.11.2006*

[1, 2] மரைக்கால்/சுண்டு - தானியத்தை அளக்க உதவும் கருவிகள்

[3] கறள் - துரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

230

## ஒரு நாய்க்கும் நாயின் நேசனுக்கும் மகாநாடு

மூன்று நாளும்
எனக்கு வகுப்பு நடந்த
மண்டபத்தின் வழியில்
வெளியேதான்
சுருட்டிப் படுத்திருந்தாய்

எப்போது எழும்பினாய்
எப்போது உறங்கினாய்
என்பதெல்லாம் தெரியாது
நான்
பார்க்கும் பொழுதெல்லாம்
உனக்கு அரைத் தூக்கம்

சோகம் என்னவாம்
உனக்கு

எனக்குத்தான்
பெருங்கடல் தலையில்
தூக்கிச் சுமக்கிறேன்

ஐந்து நாள் வேலை
அதற்குப் பிறகு கிடைக்கின்ற
இரு
விடுமுறை தினங்களிலும்
இப்படி ஒரு வகுப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னுமின்னும்
என்னை
ஒரு மெஷினாக்கி இயக்க

நீயும் நானும்
இனி மனம்திறந்து பேசுவோம்
நம் வண்ணத்துப் பூச்சிகளை
இன்னுமின்னும்
வளர்ப்பது பற்றி
உனக்கு நான்
சாப்பிட்ட மிச்சத்தை
தரும்போதாவது
கலந்துரையாடுவோம்

ஒரு நாய்க்கும்
ஒரு நாயின் நேசனுக்கும்
ஆன ஒரு மகாநாடு
இந்தக் கூட்ட மண்டபத்தின்
வெளிக்
கூரையின் கீழ் நிகழுவது
நல்ல சூழ்நிலையின் அறிகுறிதான்
●

*3.3.2006*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

231

## பழஞ்சோற்றுப் பூப் பீங்கான்

இந்த மண்ணில்
இன்னும் எழுதப்படாத கவிதையொன்று
பாடசாலை போகிறது
செய்யுளின்
எதுகை மோனையென
ஒத்துகின்ற நடை அழகுப்
பால்ப் பூச்சி
மொய்த்த தெரு ஒரு
வாழைப் பழத்தோடு
தயிர் போட்டுக் கரைத்த
பழஞ்சோற்றுப்
பூப் பீங்கானாய் மாறி
ரசம் கொட்டியது
நான் வீதியையே
வழித்து வழித்துக் குடிக்கின்றேன்

புத்தகம்தான் பெரிய சுமை
இந்தப் பூச்சிக்கு
அதிலிருக்கும் பாடங்கள்
ஏறுகின்ற வயதெனினும்

கற்கண்டில்
எறும்பும் ஏறுகின்ற
பருவம்தான்

என் புற்றில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர ஒன்றுமில்லை இப்போது
கோயில் எழுகிறது
அங்கு முளைத்திருக்கும் மஞ்சள் பூ அலரிகளில்
மயானத்தின் காற்று தெறிக்கிறது

இருந்தாலும்
அத்து மீறும் ஓர் ஆறு
எங்கிருந்து எழுகிறது

எந்தப் புல்லுக்குள்
இளமை நீர் சிலுசிலுத்து
காய்ந்து கிடந்த ஓடு என நான் நினைத்த
பாத்திரம் நெய் பூசி
மினுக்கியதாய் மணக்கிறது

மெய்தான்
கோயிலை இடிக்கும் பால்ப்பூச்சி
மயானத்தின் காற்றிலும் பொன் ஊஞ்சல் தூக்கி
ஆட வைக்கும்
சுவர்க்கம்
நம் தலைகளிலே உதிர

காலையில் இதுதான் நடந்தது
நான் இன்னும் அது பறந்த தயிர் கரைத்த தெருவை
வழித்து வழித்துக் குடிக்கிறேன்
கண் இரேகைகள் தேய்ந்து
உழைத்தவனின் கைபோல
திமிர்த்து அவை இரண்டும் தொய்ய

●

*25.11.2006*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

232

## மந்திரவாதியின் மனைவி

காலமொரு ஓட்டப் பெண்
ஒரு நாளும்
நின்று கதைக்காது

நம்மைக் கொறித்துப் பதம் பார்த்து
துப்பியபடிக்கு
ஓடிக்கொண்டே புன்னகைக்கும்
நீளக்கால் மாது

அது மந்திரவாதிக்கு மனைவி
தன் கணவனின் கோலால்
அது தடவுகின்றபோது
என் இளமை குன்றி
பணிகிறது
உயரப் பறந்த எந்தன்
புறா அடங்கித் தணிய

என் நெருப்பு குளிர்கிறது
அது தடவும்போது
என் வார்த்தையில் இருந்த புளியங்கொட்டை
தெறித்து 'விண்ணென' பிறருக்குத் தாக்காமல்
பூவாக மலர்ந்தது
அவர் நெஞ்சள்ளி ஒற்றி
இப்படி இப்படியாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் கணவனின் கோலோடு திரிகின்ற பெண்ணுக்கு
என்னைக் குத்திக் குடையும் உன்னுடைய கண்ணுக்கு
இன்னும்

ஒரு சாம்பல் பூசத் தெரியவில்லை
என்ன துல்லியம்
என்ன மினுமினுப்பு

மெய்தான்
நீலக் கடலுக்குள்
இந்த ஓட்டக்காரிக்கு
சப்பாத்து புதையும்
ஓடவே முடியாது
கடல் கடலாகத்தானே இருக்கும்
இருக்கிறது
மாறாமல்

●

*18.12.2005*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

233

## வாத்து

வந்துபோய் வந்துபோய்
வந்துபோய் வந்துபோய்
வராமலே போனது மழை

ஒரு வாத்து நான்
நீந்த வெள்ளம் தேடுகின்றேன்

நான் வரும்போது சந்தியில் கொஞ்சம் கொட்டியது
என் மனம் பொறுக்கி எடுத்து சில துளிகளை நெஞ்சுக்குள்
பதுக்கி வைத்து இவ்விடத்தை அண்மிக்க
கோளாறு ஆரம்பம்
கள்ளன் பிடித்ததா

இடிமுழக்கப் பொலிஸ்காரன் அதட்டுகிறான் உறுக்கி
விளக்கடித்துப் பார்க்கின்றான் நான் நெஞ்சைத் திறப்பேனா

எடுக்கவில்லை களவு
பலர் பார்த்திருக்கப் பொறுக்கியது
அந்த மரம் சாட்சி மழையே நீ
தாராளம் குறைத்தாயா
நீ துளிகள் இறக்கி
என்போன்ற பொன் வாத்து
முட்டையிடச் செய்யத்தான்
வருகின்றாய் என்றேதான்
சந்தியிலே கொஞ்சம்
முத்தைக் கொறித்துவிட்டேன்
இப்போது விக்குகிறேன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் குணம் அறிந்து துக்கத்தில்
இந்த வாத்து நக்கரைத்து
தரையில் கால் தேய்கிறது

மழையில்லை மழையில்லை நீ மழையில்லை மழை நீயா
'ஆம்' என்றால் வேண்டாம் நான் ஆமையாகி சேறுதின்பேன்

●

*3.9.2006*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 234

### ஜன்னலின் காணிக்கைக் காசு

இந்த ஜன்னலின் வரிகள் கம்பி
எனது கவிதை வரிகளைப்போல்
அழகும் பலமும்

ஜன்னலால் காற்று வரும்
மழை பெய்தால் தூறல் விழும்
மின்னல் வந்து விழுந்து மேசையிலே
எழுந்தும் போவது
ஜன்னலால்தான்
ஜன்னலும் நாம்
சில உச்சங்களை அடையச் செய்வது
கவிதைகளைப் போலதான்

ஜன்னல்களில்தான் கிளிகளும் தாவும்
ஜன்னல்களில்தான் கொடிகளும் படரும்
ஜன்னல்களிலேயே மரத்தின் கனிகளும்
பட்டு உசும்பும்
எம்மை
வாயூறச் செய்வது
ஜன்னலே
ஜன்னல் ஒரு பறவை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு சிறகு
ஜன்னலுக்கு முந்தானை
திரைச் சீலை
என்னை
அதிலே
முடிந்து வைத்திருக்கும் ஜன்னலே
என் துனியா*வின் தொங்கலே
ஏன் இன்று திறக்கவில்லை

உன் காணிக்கைக் காசு
கிலுங்குகிறேன்
நீதான் குலுக்குகிறாய்
தெறித்து
காணத்துப் போகாமல் காப்பாற்று
●

*25.4.2006*

* துனியா - பூலோக வாழ்க்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 235

## செத்தல்மீன் பாக்குவெட்டி[1]

ஊஞ்சல்
ஆட ஆட ருசி

ஒவ்வொரு வீட்டிற்கும் ஒவ்வொரு ஊஞ்சலென
இருந்த காலம் கண்ணுறங்கி
நம் வீட்டில் மட்டும் ஓர் ஊஞ்சல் என்று
கண் விழித்தபடி இருந்து

உன்னையும்
உன் கூந்தலுக்குள் இருக்கின்ற தோகை மயிலையும்
பறக்கவும்
அழகாய் இறகு விரித்துப் பரப்பவுமாய்

ஆடும் பொன்னூஞ்சல் தட்டித்தான்
வான முட்டை நொருங்கியதா
நிலா நண்டுக் குஞ்சி
காலெடுத்து வைக்கிறது
இன்பம்தான்
வானத்தின் விழுதாக கொழுத்திருக்கும் புரிக் கயிறு

நீ எவ்வளவு உன்னினாலும்[2] அறுந்து வீழாது என் அழகே

அதன் புரியில் கிளம்பிக் கிளம்பி இருக்கின்ற
கட்டிகளில் கொழுக்கட்டைத் தோற்றம் அடிக்கிறது
உனக்கும் எனக்கும் பல் முளைத்த சிறு வயதில்
வீட்டார் சுட்டுச் சொரிந்த கொழுக்கட்டைத்
தோற்றம்தான் ஐயமில்லை

அவற்றுள்ளே
பருப்பும்
தேங்காய் பூவும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவைத்துவைத்த ஒருவன் தன் கண்ணை வைத்தபடி
இருப்பானா இல்லையா சொல்
கொழுக்கட்டை வெடித்து அவற்றின் உள் இருக்கும் சுண்டல்
சிந்த
ஆடுகின்ற சில்வண்டும் நீ கத்த

விடமாட்டான்

நீ உன்னிக் கிளம்பி நெடிய தென்னைமரக் குலை ஒன்றில்
உன் விமானத்தால் மோதி இளநீர் விழுகின்ற வேளைதான்
உன்னில் படிந்திருக்கும் துருவும் உதிர்கிறது
முகத்தில் ஒரு பளபளப்பு
வருகிறது
செவ்விளநீர்போல

நீ இன்னும் செத்தல்மீன் பாக்குவெட்டி*போல
நறுக்கு நறுக்கென நீஎன்னோடு கதை நறுக்கி
அள்ளி எனது பூக்குழிக்குள் போடுகின்ற
துருப்பிடிக்கா உருக்காக இருப்பதற்கு
இந்தப் பறக்கும் தட்டு நமக்கு வேண்டும்
வீடுகளில்
கழற்றி அடுக்கியவன் பலகைகளில் ஒட்டறைதான்

●

*3.9.2006*

[1] செத்தல்மீன் பாக்கு வெட்டி – பாக்குவெட்டியில் ஓர் வடிவம்

[2] உன்னுதல் – விசை ஊட்டுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

236

## திங்கட்கிழமையென்னும் மாட்டுத் தாள்

நான் ஞாயிற்றுக்கிழமைகளை
ஒரு மனிதனாகவே நினைக்கிறேன்
வாரம் ஒருதடவை வந்து
என்னைச் சந்திக்கும் ஞாயிற்றுக்கிழமை
அழகானது

ஞாயிற்றுக்கிழமைக்கு கார் ஓட்டத் தெரியும்
அதுவும் வேகமாக
நம்மைச் சந்தித்துவிட்டு பொழுதுபட்டுப் போனால்
கண்ணிமைக்கும் நேரத்துள் வருகிறது
திரும்பவும்
ஒரு புதிய மனிதனைப்போல்
ஞாயிற்றுக்கிழமை

ஞாயிற்றுக்கிழமைக்கு சனிக்கிழமை அண்ணன்
வெள்ளிக்கிழமை அதற்கு மூத்த அண்ணன்
வாரமென்ற ஒரு தகப்பனின் பிள்ளைகளில்
விடிந்தும்
நான் எழும்பாமல் படுத்தால்
நகம் கடித்தபடி எனக்காக
காத்திருக்கும் ஞாயிற்றுக்கிழமைதான்
எனக்குப் பிடிக்கும்

ஞாயிற்றுக்கிழமைகளில் நாங்கள் சந்தைக்குப் போவோம்
பேட்டுக்கோழியும் சேவலுமாக
எங்கள் சிகப்பு நிற இரும்புக் குதிரையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகம் சென்று புத்தகம் எடுப்போம்
பிள்ளைத்தாய்ச்சிகளை சென்று பார்ப்போம்
இரவில் படம் பார்ப்போம்

இவை எல்லாவற்றையும் செய்துவிட்டு
ஒரு திங்கட்கிழமைக்காகப் படுக்கும்போது
புறப்படும் ஞாயிற்றுக்கிழமை
எங்கள் கண்களுக்கு முன்நின்று கருகுகின்றபோது
வானம் சுடும் நிலா அப்பம்
வேறெந்தக் கிழமைகளிலும் இல்லாதபடிக்கு
பலரும்கேட்க - கொடுக்க காணாதபடிக்கு
ஆகாயத்தட்டில் மிதக்கும்

அதைச் சுற்றிவைக்க வெள்ளிக் கொசுவிழுந்து கெடுக்காமல்
விடிகின்ற கடதாசி திங்கட்கிழமை
மழை வந்தாலும் நனையாத
கனமான மாட்டுத் தாள்*

●

*6.4.2007*

* மாட்டுத்தாள் – தடித்த கடதாசி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

237

## மண்புழு

பொறுத்துப் பொறுத்து
பொறுத்துப் பொறுத்து
அலுப்பேறி
உரோமங்கள் குண்டுசிகளாகிக் குத்துகின்றன
சதையை
வெள்ளப் பாய் இழைத்து
தரையில்
விரித்தபடியே இருக்கிறது
மழை

யாருக்குத் தெரியும்
இந்தக் குளிருக்குள் தோட்டுப்பாய் விரித்து
நெல் அவித்துக் காயவைக்க
எத்தனிக்கும் பெண்மணியை

சரியாகக் காயாத நெல்லு
குற்றினால் அதன் அரிசிச்
சோறு நாறும்

நானுமிங்கு
அவித்து சரியாகக் காயாத குத்தரிசிபோல
இந்த மழைக்குள் நின்று நின்று
பொங்கும்
சோறு நாறித்தான் போனேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையில்
ஒரு குடை இல்லாத குறை
தெரு நாய் படுக்கும் கடை ஓரம்
என்னை முடக்கிற்று

அந்த வகையில் குடை ஓர் அரசி
எனது கால் தறித்து கொஞ்ச நேரம்
தன்னைப் பற்றியே நினைக்க வைத்து
கூதல் ஆடு ஒதுங்கிய சுவர் ஒன்றில்
ஆட்டோடு ஆடாக
என்னையும் சாயவைத்த அவளின்

வெற்றிக் கீதம் இசைக்கிறதா
குருவியின் குரல் கரைத்த தண்ணீர்

இவன் இல்லறத்து உழவனும்
கொத்திப் புரட்டி இவன் வைத்திருக்கும் பால் தரையில்
வெண்டி நட்டால் காய் நீளும்
அதற்குள்ளே இப்போது
மண்புழுவும் நெளிய ஆரம்பம்

என்னதான் நடந்தாலும் எப்போதும் ஒருவனது இலையில்
தூங்கியபடியே இருக்கும் மண்புழு

●

27.1.2007


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

238

## வெற்றிலை

வெயிலுக்குள் நடந்து வந்தேன்
இங்கு
தாமரையும் என்னுடைய தடாகமும் இருப்பதனால்
நெருப்பை நான் எரித்து
என் பருப்பும் வேகாமல்
கவனமுடன்

கால் வைக்க வைக்க
பெருங் கடல்போல் விரிகிறது ஊர்
இன்னும் நமது
ஊர் என்ற வெற்றிலையின்
எங்களது தெரு என்ற பெரும் நரம்பு
ஓடக் காணவில்லை
தண்டிலிருந்து
எவ்வளவோ நேரம்போய்
இப்போதே ஏறுகின்றேன் நடு நரம்பில்
மூன்றாம் கிளை நரம்பு நமது தெரு
அதில்
புழு அரித்த ஓட்டைபோல்
ஒரு பாழ்வளவும் இருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வெற்றிலையின் வாலில்தான் - அது கருகி
சுருண்டு கிடப்பதுபோல்
சுனாமிக்குப் பின்னரென்ற கடற்கரை

அது சரி
நான் இப்போது
இரண்டாம் நரம்பில் ஏறிவிட்டேன்
சுண்ணாம்பு பூசாமல் சிவக்கும் செழுமையுள்ள
பகுதியிது
வடிவான
நம் நரம்புப் பகுதியின் பெருவாசல்போல
பூமரமும் சோலைகளும்

நேரே வரலாம்
நெருப்பெரிந்த போதும்

●

*6.4.2007*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உசாத்துணைப் பகுதி

239

## வண்ணத்துப் பூச்சியின் கோடரி

படக்கு படக்கு
படக்கு படக்கென
இறகு வெட்டி
காற்றைத் தறித்தது
வண்ணத்துப் பூச்சி

என்ன கோபம் இதற்கு
இதன் சோற்றுப் பானைக்கு விறகு இல்லையோ

தறித்த காற்றுக் கொள்ளிகளை
கட்டிச் சுமக்க ஒரு நாராய்
பிடுங்க வந்ததா என் தலைமயிரை
என் தலைக்கு மேலாலும் பறக்கிறது

வண்ணத்துப் பூச்சிக்கும் கோடரி உண்டு
கொத்த தறிக்க
தன் தேவைக்கு என்று

மலர் நினைக்கவே கூடாது
ஓர் அப்பாவி ஜீவராசி
திக்குத் தெரியாமல்
அலைவது என்று

வெட்டிவெட்டி உடல் சிவக்க
சிவந்த உடல் எங்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புள்ளி புள்ளித் தோற்றங்களாய்
தடித்தெழும்பி
இருந்தாலும்
அவை அழகு
இப்போது அலைகிறது கட்ட ஒரு நாருக்கு

அது கிடைக்கும்
வண்ணத்துப் பூச்சி வீட்டில் இன்று
சோறு பொங்கும்

●

*18.12.2005*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

240

## விரிந்த தாமரை

அறைக்குள் இருக்கின்றேன்
இன்னும் வெளிவர அவகாசம் இல்லை
ஒரு கவிதை வந்து
தலையைக் காட்டிவிட்டு
வாலை ஒளிக்கிறது
அதைப் பிடித்து விளையாடும் சுவையான சூழலில்
என் அறையே விளைந்து கிடக்கின்ற வயலாகி
ஒரு தும்பியாய் தெத்துகிறேன்
பாடித்தான்
நான் வெளியில் வரச் சுணங்கும்
சூரியனே
என் கதவின் இடுக்கால் நீ கை நீட்டி
கூப்பிட்டபோதுதான்
என் கவிதை வால் பிடிபட்டுக் கொண்டது
எத்தனையோ விஷயங்கள் உதிர

ஒரு கவிதையின்
தலைக்கு இருக்கின்ற பொறுப்பைவிட
வாலுக்கு இருக்கின்ற முக்கியம்தான்
அதிகம்
மனிதனுக்கு மூளைவேண்டும் தலையில்
கவிதைக்கு வாலில்தான்
புத்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வால் முறுகினால்தானே
சிறுத்தையும் பாய்கிறது
வாலில்லாத குருவி
ஒரு கொட்டை
அழகில்லை

அதுவும்
வால் விரிந்தால் பறக்கும்

என் கவிதையின் வாலில்
நான் யானையைக் கட்டித் தூக்கி இருக்கின்றேன்
அதன் தலையில் இருக்கின்ற கொம்பைவிட
வாலில் இருக்கின்ற சடைத்த மயிர்
பொருள்
மறைந்து கொள்ளவும்
அதனைப் படைத்த கவிஞனே
மான் தேடி அலையவும்
தேவைப்பட்டது

எனவே சூரியனே
நீ வந்து
விரிந்த தாமரையாய்
என் கவிதையினை நோக்கலாம்

●

*3.7.2006*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

241

## இரண்டு தலைமுடிகள்

காற்று ஏதோ
கடைக்குப்போய் வருகிறது
காற்றுக்குச் செருப்பு
இலைகள்

காற்று விசில் ஊதியது
எனது அடிமைகளே ஊர் உறங்கப்போகிறது
நீங்கள் நிலவு பார்ப்பதற்கும்
அதன் ஓரத்தில் இருக்கும் நட்சத்திரம்
நாமாகமாட்டோமா
என்று உங்களுக்குள் ஏங்கிக் கொள்வதற்கும்
தயாராகுங்கள்

என்று கொஞ்சம் முன்னதாகவே
போதிக்க வந்துவிட்டார் வாத்தியார்

காற்று கச்சையை அவிழ்த்துத் தூக்கியதைப்போல
ஒரு வாழையிலை
உடன் முறிந்து தொங்கியது
காற்றுக்கும் எனக்குமான போராட்டம்
இரண்டு தலைமுடிகள்

காற்றுகள் உட்காரும் இடங்களில்
பூக்களும் அடங்கும்
ஆனால் அவற்றை காற்றுகள் பெரும்பாலும்
கண்டுகொள்வதே இல்லை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூக்களுக்கு கௌரவம் இல்லை என்பதுதானா
காற்றுகளின் கணிப்பு
தாங்கள் நினைத்தவுடன் உட்காரவும்
விரும்பினால் ஏறி மிதிக்கவும்
மலர்வனதான் பூக்கள் என்று
நினைத்திருக்கும் காற்றுகளுக்கு

இவற்றையெல்லாம்
சொல்லிக்கொடுக்கும் பாட சாலைகளில்
இருக்கின்ற கரும்பலகைகள்
மற்றும் வெண்கட்டிகள் யாவும்
என்றோ ஒரு நாள் கொடும்பாவிகளாக
பூக்களால் எரிக்கப்படப் போவன

திரும்பவும் நினைவுபடுத்தினால்
எனக்கும் காற்றுக்குமான போராட்டம்
இரண்டு தலைமுடிகள்தான்
வடக்கும் கிழக்கும்போல்

●

*6.4.2007*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

242

## மழையில்லை மழை

மழையில்லை மழையைப்போன்ற ஒரு சத்தம்
எதுவாக இருக்கும்
இரவும்
போய்ப்பார்க்க விரும்பவில்லை
சுருண்டு படுக்கின்றேன்
காது மட்டும் நீண்டு
மழைப் பாட்டுக்கு நாக்கு நீட்டி
ரசிக்கத் துடிக்கிறது

அசல் மழையா
இல்லை
அசலென்றால் எங்களது
தகரம் கிடுகிடுக்கும்
பிறகென்ன
சின்னக்
குளிரும் இருக்கிறது
நான் அடுத்தபக்கம் புரண்டபோது

வாழை மரம் சரிந்து
என்மீது விழுவதைப்போல்
அவள் கால் விழுகிறது
தேவைதான்
திரும்ப
மறு பக்கம் புரண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழையைத்தான் கவனித்தேன்
மழையில்லை
மழைபோல சத்தம்
மழையென்றால்
இங்கு
வெப்பம் தணிவது விளங்குமே
விருந்துண்ணும் மண்
தன் வாசம் கிளப்பி ஒரு குறி
சொல்லுமே

மழையெங்கே
இரைச்சல் இருக்கிறதே
அரசன் வருவதைப்போல் வருமாக்கும்
உளவு பார்த்து

●

*1.8.2006*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

243

## பளிங்கு நீர் ரயில் வண்டி

உன்போல
நானுமொரு
சலசலக்கும் ஆறு
எனச் சொல்கிறதா ஆறு
எங்கே போகிறது

பளிங்கு நீரான ரயில் வண்டி
இதன் பிரயாணி என் மனமா
நிற்காது கூவிப்போய்
எங்கே இறக்கும் உலகத்தை

எத்தனையோ அலை
அறுத்துப் போட்டதைப்போல்
துடிக்கின்ற முயற்குட்டி

என் கண்ணின்
சோர்வுகளை நிமிர்த்தும்
இன்னும் இன்னும்
என் கரைக்கு வா என்று
ரயில் ஓடிக் கொக்கரிக்கும்

நான் நிற்கும்
கரையும்
கரை மரமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்போல வாய் பிளந்து
திமிர்த்த பிறவிகளா
உற்றுப் பார்த்த
காற்றுக்கும் ஆடாத
மரம் பெட்டி தொலைத்த
வெளியூர் பொம்பளையா

இது ஏறினால் ரயிலுக்கு
டிக்கட் வாங்க
வெயில் துடிக்கிறது
ஆசையுடன்

●

*18.12.2005*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 244

### மான்குட்டி

கத்தியென்பது ஒரு புறா
இந்தச் சமையலறைக்குள் பறப்பது

இந்தச் சமையலறை
வனாந்தரம்
பானையும் சட்டியும்
குட்டி முயலெனக் கோப்பையுமாய்
மேய்ந்து திரிகின்ற
வனாந்தரம்

நீ தேங்காய் துருவும்
துருவிலைச் சத்தம்
காட்டுக்குள் ஏதோ
கத்துவதைப் போன்று
நித்திரையில் இருந்த என்னை எழுப்பிற்று

மதிய நித்திரை
செய்வதற்கு ரசம்
வெயில் அப்படி விழுகிறது

உப்புக் குடுக்கை
இந்தக் காட்டுக்குள் நீரூற்று
வெங்காயத் தொலிகள்
காட்டுப் பூ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு
சாப்பாடு மூட்டபதற்கு
நீ கழுகி வைத்திருக்கும் பொன்னெழுத்துப் பூப்பீங்கான்
காட்டுக்குள் உதித்த நிலவா

விரித்துவைத்த பாயில்
அது நடுவில் இருக்கிறது
இந்தக் காட்டுக்கு மான்குட்டி
யார்

●

*3.7.2006*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 245

## பால்காரன் போய்விட்டான்
## பால்காரன் வந்துவிட்டான்

பால்காரன் வருகின்றான்
வீட்டின் முற்றத்தில் இருக்கின்ற மரத்தின்கீழ்
சைக்கிளைச் சாத்துகின்றான்

மரத்தை ஒரு தரம் அண்ணார்ந்து பார்க்கின்றான்
நிழல்மரம்தான் இனிமேல்தான் காய்க்கும் என்று
மனதுக்குள் நினைத்தவனாய்
அவளின் பொங்குகின்ற புன்னகையைப்போன்ற பசும்பாலை
போத்தலிலே வார்த்து
நீட்டிக் கொடுக்க அவள் வாங்கி
பால்காரன் மனதிலும் பால் பொங்கி
பானை இல்லாமல் வழிந்தது

பால்காரன் போய்விட்டான்

இரவு
பால்காரன் நின்ற இடத்தில்
இன்னுமொரு பால்காரன்
நிலா என்ற பெயரில்
வந்து கூப்பிட்டான் மரக்கிளையின் இடுவலினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவன்
காசு வாங்காத பால்காரன்
சிலர்
கொடுத்த காசையும் வானத்தில் வீசிவிட்டு
பால்காய்ச்சி எடுத்தபடியே
பருக்கித் திரிகிறவன்

காலை வந்த பால்காரன்
கணக்குக்
குறிக்கும் கொப்பியிலே
இவன் பெயரும் இருந்திடலாம்
ஒரு கவிதையாக
அப்போது என்னுடைய கணக்குக் கொப்பியிலே
அவள் நாமம் இருந்ததுபோல்
குருவியாக

●

*28.6.2006*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதியவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

246

## உமிக்குவியல்

அரிசி ராணியாகிவிட்டது
சந்தையிலே விலை உயர்ந்த பொருளாகி
அது ஏழைகளின் கண்ணீரில் குளிக்கிறது

நாடு கேட்கிறது அது
ஆட்சிசெய்ய
உங்கள் பானைகளுக்குள் இனி நான் வருவதென்றால்
படை பட்டாளத்தோடுதான் வருவேன் என்று
குடிசைகளுக்கெல்லாம் தகவல் அனுப்பிற்று
அரிசி
நாம் வேளாண்மை செய்து
வெட்டும் குத்தரிசி

நம் கையையே கார்ந்து
சாப்பிட்டுக் கழிக்கிறது
அதனையே தின்ற நாங்கள்
இனி அதனைத் தின்ன முடியாத நிலைக்கு மாற்றி

கோதுமை மாவைக் கூப்பிடுகிறது அரிசி
தனக்கொரு
இளவரசன் என்ற கணக்கில்
இதுவரைக்கும் வெள்ளை மாவானவன்
கவனிப்பார் அற்ற பொருளாகி
விற்பனைக்கூடங்களில்
வண்டு தெறித்துக் கிடந்தபோது

தனது காலைத் துடைக்கவும் தகுதியற்ற ஒருவனென்று
ஒரு கண்ணால் பார்த்த அரிசி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்சமயம்
அதை
இரு கண்ணால் நோக்கி
வா
என் அருகில்
அல்லது என்னைவிட
உயரத்தில் அமர்கவென்று

அழைக்கும் செய்தி கேட்டு
குடிமக்கள் அனைவருமே
அரிசியின் ராஜ்ஜியத்தில் இன்று
இடிந்து
தவிடு பொடியாக

ஓர் உமிக்குவியல் மாத்திரம்தான் கிடக்கிறது

●

*15.03.2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

247

## மழை என்கின்ற வண்டிக்காரன்

சில மழைகள் நம்மைத் துரத்தும்
நாம் ஓட ஓட நீர்க்கொட்டை எறிந்து
விளையாடும்

மழையில் பல வகை உண்டு
மனிதனைப் போல
மழைக்கு பல குணமும் உண்டு
குறிப்பிடத் தக்கதாய்

காலையில் – எப்படி நண்பனே – குயில் வீட்டு வாசல்
அழகாய்தான் இருக்கிறது
என்று சொல்லிவந்த மழைபற்றி
அந்த சிலுசிலுப்புக்காரியின் பெயரில் சில
வரிகள் கீறவேண்டும்
சித்திரத்தை ஒத்த அழகோடு

சில மழைகள் ஜன்னலுக்குள்ளால் மட்டுமே வரும்
நிலத்தில் இறங்காது
தேவதைகள் மாதிரி
என் மேசைமீது துள்ளி விளையாடி
விரித்து அரைகுறையாய்
மூடிவைத்த புத்தகத்தின்
தாளை நக்கி ஈரமாக்கும்
நீண்டு வந்த பாம்புகள் மாதிரியும் சில மழைகள்

எனினும்
விடிய விடியப் பெய்கின்ற மழைக்குத்தான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப்பு
கட்டில் புறாக்கள்
ஒன்றின் நக ஓட்டுக்குள்
ஒன்று உறைந்து
இறால்மாதிரி சிகப்பாகி
விரல் நுனிபோல் – அல்லது
சிறு கொட்டைபோல்
மெத்தையில் உருமாற உதவுவது
ராத்திரி மழையின் சிறப்பு

இறால்
பால்விட்டு அவித்தால்தான்
சிகப்பு

இப்படியாய்
மழைகள் நம்மோடுதான் வாழ்ந்தபடி இருக்கின்றன
மழையின் துளிர் நமக்கும் இருக்கிறது
கண்ணீர் என்ற பெயரில்

இன்று நான் உனக்கு
ஒரு கடிதம் எழுதினேன்
அதை வாசித்துப் பார்க்கும் ஆசையில்
ஒரு குழந்தை மழை
எட்டி எட்டிப் பார்க்கிறது
காற்று ஜன்னலை மூடித் தடுத்தும்

இப்படித்தான்
மழைக்கு
சிறிய சிறிய ஆசைதான்
அதற்கு
மனிதனைப்போல
பேராசைகள் என்று ஒன்றுமேயில்லை
அதனால்தான் மழைகள்
மனிதனைப் போல
இரத்தம் குடிப்பதில்லை

மழைக்கு இருக்கும் ஆசையென்றால்
நாம் குறிப்பிடக்கூடியது
ஒரு நாள் முழுக்கப் பெய்து
நம்மை பாதையைக் கடக்கும்போது
உடுமானத்தை உயர்த்திப் பிடிக்கச் செய்வதுதான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனைப் போல
மழை பார்த்தால்
நமது அடித்தொடையின்
உரோமக் காடுகள் பொசுங்காது

மற்றும்படிக்கு
நிலத்தில் கவிதை எழுதிய பிறகு
தன் பெயரையும் எழுதத் தெரியாது
மழைக்கு

இதனால்தான் சொல்லுகிறேன்
மழை இந்தக்காலத்திலும் நாட்டுக் கவி பாடி
தன்னை யார் என்று குறிப்பிடாமல்
ஒரு வண்டிக்காரனைப்போல்
நம் வயலுக்கு முளைகொண்டு வருகிறது

●

*2.6.2007*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

248

## என்னோடு எப்போதோ

நான் நடக்கவா நான் நடக்கவா
என்று கேட்கிறது மரம்
என்னோடு என் கையைப் பிடித்தபடி
வர விருப்பமாம் அதற்கு

மரம் ஒரு குழந்தைப்பிள்ளை
கையால் அதைத் தொட்டு
நான் கொடுத்த இனிப்பை ரசிக்கும் அளவுக்கு
மரம் ஒரு குழந்தைப்பிள்ளை

இன்னும் பூக்களை
கையில் வைத்துக்கொண்டே இருக்கிறது
முடி
அடர்ந்த காடாகி
அக்காட்டைச் சுமந்தபடி
திரிகின்ற ஒருத்திக்கு
சூடக் கொடுக்கவில்லை பூக்களை

காற்றுக்கு
கிளையோடு கிளை மோதி
மலரோடு மலர் ஒட்டி
மாலை தொடுக்கத் தெரிந்த மரத்திற்கு
ஒரு கழுத்துக் கிடைக்கவில்லை
அதைப் போட

எங்கு போக மரமே என்றேன்
எங்கென்று தெரியாது என்றது மரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைப் போலதான்
எங்கென்று தெரியாமல் போய்க்கொண்டே இருக்கின்ற
எங்கென்று தெரிந்த ஒன்று

நான் காற்றைப் பதுக்கி வைத்ததைப் போலதான்
மரமும் வைத்தது
என்னைப் போலதான் இடைக்கிடை அந்த
காற்றைக் கொண்டே மூச்சுவிட்டது

இது எந்த ஊர் மரமே என்று நான் கேட்க

அதற்கும் தெரியாது முகம் பச்சையாய் சிரித்தது
என்னோடு எப்போதோ நடக்கத் தொடங்கிய மரம்

●

*20.10.2007*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 249

### வான மாம்பழம்

என்ன அழகான கவிதை
நிலா
ரசிப்பதற்கு நீயில்லை

நானொரு பழம்
வான மாமரத்தில் இருந்து
கனிந்து விழுந்து கிடக்கின்ற
மாம்பழம்

எடுத்துக் கொறிக்க நீயில்லை
என் கிளி இப்போது
ஊரில் இல்லை

நிலாக் கறுப்பைப் போன்ற உன் தலைக்கறுப்பு
நாளை தெரியலாம்
நாளை இரவும் நிலா வரும்தான்
அது இருக்கட்டும்
போன வேலைகள் எப்படி

என்று கேட்டு நான் இந்தக் காற்றில் எழுதும் குரல்
தன்னுடையது என ஓர் இரவுப் பறவை வந்து
கத்துகிறது கண்ணே
பார்த்தாயா பார்த்தாயா
எங்கு போனாலும் என்னை
அபகரிக்க ஆட்கள்

அதற்குத்தான் சொல்லுகிறேன்
ஓடி வந்துவிடு விரைவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னைப் பிரிந்த இந்த இருபத்தி நாலு மணி நேரமும்
அவஸ்தைகள்

மதியம் சாப்பிட்டேன்
நீ போகும்போது சமைத்துவைத்துப் போன உணவுகள்
கெடவில்லை
இந்த இரவு ஒன்றுமில்லை
வெளியே போய் ஏதேனும் வாங்கவென்றால்
துணைக்கு வருகிறது நிலா
அது எனக்குப் பிடிக்கவில்லை

புழுதிக்குள் விழாத மாம்பழம் நான்
இந்த வாசல் புல்லில்தான் கிடக்கின்றேன்
உன்னை நினைத்தபடி
வெட்டித் தின்ன வராதே – வந்து சூப்பு
கை கால் வலிக்கும்
இது கோடை காலம்

●

*20.06.2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

250

## இறப்பும் பிறப்பும்

*மீண்டும்*
*முளை எறியத் தயார் செய்யப்பட்ட நிலத்தில்*
*கீறிக் கிளப்பப்பட்ட மண்ணாங்கட்டிகளை*
*சில குருவிகள் முகர்கின்றன*

*பொன் மணத்தை அறிந்தனவா குருவிகள்*
*உயரப் பறக்க விருப்பமின்றி*
*வயலுக்குள்ளேயே புதைந்தபடி திரிகின்றன*

*இதுவரைக்கும் எத்தனை தரம் இந்த நிலம்*
*கீறிக் கிளப்பப்பட்டு*
*நெல் விளைய தன் மனதைத் திறந்து*
*கொடுத்திருக்கும்*

*ஒவ்வொரு தரமும் மனிதனின் உணவை*
*இந்த மண்*
*எங்கோ பதுக்கிவைத்து*
*எடுத்து நீட்டுகிறது*

*அந்தப் பதுக்கலின் இடத்தில்தான்*
*நான் இன்னும் போகமுடியாமல் இருக்கிறது*
*போகவேண்டும் போகவேண்டும் என்பதற்காகவே*
*அந்த இடத்தில் இருந்துவரும்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு பெய்யும் மழையைப்போல்
தினமும் விரிந்து மணக்கும்
மலரைப் போல்
நான் என்னை தயாராக்கிக் கொள்கிறேன்

என என் மனம்
தன்னை மறந்து புலம்பிய வேளையில்
பொக்கிஷங்களின் பூட்டும் திறப்புமான
நிலத்தில்
மேய்ந்து திரிந்த குருவிப்பாட்டம்
பறக்க
இன்னொரு பாட்டம் இறங்கி மொய்க்கிறது
இறப்பும் பிறப்புமாக

●

*16.10.2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

251

## முட்டைச் சமுகம்

உலை வைக்க
அரிசி கழுவும் உன்னை நோக்கி
கோழி வருகிறது
சேவலும் பேடுமாய்
சோடியாய்
கோழிகள்

சின்னத் தராசு
அதற்குள்
போட்டு நிறுக்கும் சில பாரம்
சொண்டில் சுமந்துவந்த கோழிகள்
எச்சமிடும்போது மினுங்கிய மினுக்கத்தில்
அவையும் தங்கம் வாங்கி
சாப்பிட்டு தங்கத்தால்
கழிக்கின்ற காலத்தின் முகம் எனக்குத் தெரிந்தது

கோழிகள்
கடனுக்கு உன்னிடம்
இரை கேட்டு
வந்து நிற்கின்றன
அவற்றின் தராசால்
நிறுத்துக் கொடு சில மணிகளை
காலக்கிரமத்தில் கடன் கட்டும்
முட்டையாய்

அல்லது –

சிலர்
உண்ணாமல் தின்னாமல் சேர்த்துவைத்த திரவியத்தால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகளுக்கு
காதுக்கு
கழுத்துக்கு
என்றெல்லாம்
நகை நட்டுச் செய்து தன் மனைவிக்குப் போடுதல்போல்
சேவலும் நீ போடும்
அரிசியினைத் தின்னாமல்

தன் பேட்டுக்கு ஒரு மூக்குத்தி செய்யலாம்

இரவில் அடையும்போது அது
பளபளக்க தன் பெண்ணை
சுலபமாய் அடையாளம் கண்டு
நான் இரவில் உன்னை
நம் குழந்தைகளுக்குள்ளால்
மதித்து[1] மெல்ல நெருங்குதல்போல்
முட்டைச் சமுகத்திற்குள்ளால் சேவல் நெருங்க
●

*10.03.2008*

* மதித்து - இனம்கண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

252

## விஞ்ஞான ஆசிரியர்

மழையோடுதான் விடிகிறது காலைப்பொழுது
நான் குளிக்குமுன்னமே தான் குளித்த பூமரங்கள்
பள்ளிக்கு வந்திருக்கும் சிறுமிகள்

பெரிய வாத்தியார்
மாமரம்
புற்கள்
சின்ன வகுப்புப் பிள்ளைகள்

என் வாசல் ஒரு பள்ளிக்கூடமாக
உதவி செய்த காலைமழை
இன்னும் வாழவேண்டும்
நாளையும் வரவேண்டும்
என் வாசலில் மரங்களின் கல்வி ஓங்கி
கனிய வேண்டும்

பூமரத்தின் முகங்களெல்லாம் புன்னகைகள்
அவைகளுக்கு
பிடித்த பாடம் நடக்கிறது
குளிர்
என் போர்வையை அவைகளுக்கு
நான் தரத் தேவையில்லை
பாடம் ஏறாது

வெயில் வருகிறது

நிலத்தை உலர்த்துதல் பற்றி
இருட்டை விரட்டியடித்து
தலையை எப்படி நிமிர்த்துதல் என்று
பிள்ளைகளுக்குச் சொல்லிக்கொடுக்க
வெயில் வருகிறது

வெயில் விஞ்ஞான ஆசிரியர்

●

*15.3.2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

253

## சிகப்பு மயில்

வந்து ஏறியவுடன் குட்மோனிங் என்று
புன்னகையை பிசைந்து வார்த்தையிலே பூசி
நீ காலை வந்தனம் தெரிவித்த விதம்
அழகு
நான் தெப்பக்குளத்தில் நீந்துவதுமாதிரி இருந்தது

இப்படி எத்தனைபேருக்கு நீ குட்மோனிங் சொன்னாய்
மாபெரிய இந்த விற்பனைக்கூடத்தில்
முகப்பில்
ஓர் அழகு மயிலைப் படைத்துவைத்து
மழைகேட்டு
ஆடு என்று
சொல்லிய முதலாளி நுணுக்கமுள்ள கலைஞன்
மயில்கள் செய்வதில் ஒரு தோகைத் தச்சன்

இங்கு எத்தனை மயில்கள் பயிர் விளைந்த சேனைக்குள்
நின்று மேய்வதைப்போல் தீன்பொறுக்கும்

அத்தனைக்குள்ளும் நீ இறக்குமதி செய்த
அப்பிள் பழங்களினால் செய்த சிகப்பு மயில்

நீ இப்போது யாருக்கோ இன்னுமொரு புன்னகையை
பசியாறக் கொடுக்கின்றாய்
சொல்
உன் புன்னகையை பசியாறி உள்ளே வருகின்ற
ஆண்களெல்லாம் மழையென்றால்
பூவாக
மொட்டாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ணத்துப் பூச்சியாக
இங்கே வருகின்ற பெண்களெல்லாம்
மின்னல்களோ

தினம்
கடைக்காரன் நிலம் குளிருதோ

ஆயிரம் மின்னல்கள் வெட்டி வெட்டி இங்கே
உடுப்புகள் வாங்கும்
ஆசைதான் அழகுத் துணிமணிகள் என்றாலே
இடுப்பு வாங்கும் கடைக்கும் சில புழுக்கள்
போயாகவேண்டும்

●

*15.03.2008*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

254

## வைக்கோல்

எதையோவெல்லாம் எழுதிவிட்டு
படுக்கைக்குப் போகுமுன்
இப்படியும் எழுதினேன்

இன்று பின்னேரம் –

பட்டமரத்தைப் பார்க்கவந்த ஒரு குருவி
கேட்டது
எப்படி
அதை எனக்கும் சொல்லவேண்டும்
உன்னைப் பார்த்தவுடன் வியப்பாய் இருக்கிறது
மழையா
நானும் மழைக்குள் எத்தனை தரம் நனைந்தேன்
மழையின்
நீர் நூலுக்குள் சிக்கி
துடிக்கும் அளவுக்கு
என் தெம்பு திரும்பவில்லை
நீ சொல்லும் மந்திரம் என்ன
ஆங்காங்கு தளிர் தெரிகிறதே

நான் எழுதிக் கிழித்து
எறியப்பட்ட ஒரு கவிதை
மீண்டும் வாழ்க்கை தனது சஞ்சிகையில் பிரசுரிக்க
மறுக்கிறது
நெஞ்சுக்குக் கீழே
சில தூறல் மயிர்கள் கிளம்புவது
என் பழைய நினைவுகள்
என்னை நான்
இரைமீட்டிப் பார்ப்பதுபோல்
நீயும் உன்னை இரைமீட்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளம்பிய பழைய ஞாபகங்களா
அவை
அப்படியென்றால் சரி

வாழ்க்கை சிறுகத்தான்
யாருக்கும்
அது கடலாக இருந்தாலும்
அதனளவில் இவ்வாழ்க்கை
சிறுகத்தான்

என விளக்கெண்ணெய் குடித்த குரலில்
மரத்தோடு பேசிப் பழகிய குருவியை
என் காகிதத்தில் உட்கார்த்தி –

விடிய விடியக் கனவுகள்
அக்குருவி என் தலையில் நிற்பதுபோன்றும்
என் எலும்புக்கூட்டுக்குள் முட்டையிடத் திரிவதுபோல்
சூத்துப் பாரத்தோடு விரல் நகத்தில் குந்தி
இளைப்பதுமாக

எனக்குள்ளே வைக்கோல் இருக்கிறதா

●

*15.3.2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

255

## ஒரு கூடைக் கற்பனையின் துளிர்

பேருந்தின்
தலை வயிறு வால் முழுக்க
இரை
சமியாமல் – ஒரு வாந்தி எடுத்தால் நல்லதென்று
நினைக்கின்ற நாலு சக்கரத்துக் கழுதை
ஒரு பழைய எருமை
எரிபொருளாய் வைக்கோல் தின்கிறதோ என்று
நான் கற்பனையின் துளிர் நோண்ட
போகிறதா இல்லை போவதைப்போல் போவதைப்போல்
சமாதி ஆகிறதா

ஓரிடத்தில் நின்று
சிறுநீர் கழித்ததைப்போல்
ஒரு பையன்
இரு சிறுமி
தாயோடு
இன்னுமொரு
கிழவியென
ஐவர் இறங்கிவிட

இரு வணிகர்
இவர்கள்
இருவரது கரங்களிலும்
இரு பொதிகள் என
திரும்ப
சாப்பிட்ட மாடு உறுமியது

நான் நோண்டிக் குவித்த
கற்பனையின் துளிர்கள்
ஒரு கூடையாகி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறும் கையாய் பேரூந்தில்
ஏறி இருந்த நான்
என் இடம் வந்து
இடத்தில்
என்னை வரவேற்கும்
மரம் வந்து
அதிலே
யாரோ கூர் ஆயுதத்தால்
எழுதிவைத்த
சமகாலத்து
ஊர் காதல் பட்சிகளின்
நாமங்கள் புலப்பட

உள்ளம் குளிர்ந்தமாதிரித்தான் இருந்தது

இறங்கும்போது பெரிய சுமை
நான் காதலிக்கும் கவிதைப் பெண்ணுக்குக் கொடுக்கலாம்
வெள்ளைக் காகிதங்களில் அவள் சுமந்து திரிவாள்
கை சோராமல்
பெரிய பலசாலியாக அவள் இருப்பதனால்

●

*17.03.2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

256

## கூச்சல்

மிகவும் அருமையாக கூச்சல் போடுகிறீர்கள்
இடைக்கிடை நீங்கள் கூச்சல் போட்டாலும்
அதில் ஒரு தொடர்ச்சி இருக்கிறது
புகைவண்டி கூச்சல் போட்டால்தான் ஓடுமல்லவா
நீங்கள் கூச்சல் போட்டால்தான் இந்தக் கூட்டம்
இனிமையாக
நடந்து முடியும்

கூச்சல் போடுவது ஒன்றும்
இளக்காரமானதல்ல
ஒரு காலத்தில் கூச்சல் போட்டவர்
இன்று அரசர்களாக மாறியிருக்கவில்லையா

ஒருவன் பேசிக்கொண்டிருக்கும்போது
அல்லது
நான் ஒரு கவிதையை நிகழ்த்திக்கொண்டிருக்கும்போது
கூச்சல் போடுகிறவன்
எதிர்காலத்தில் பாராளுமன்றம் சென்று
மக்களின் பெயரால் கூச்சல்போட
தயாராகிக் கொள்கிறான்

எத்தனை மந்திரிகள்
இந்த நாட்டில்
தன் கூச்சலை வைத்தே பொது நிகழ்ச்சிகளில்
கலந்துவிட்டுப் போகிறார்கள்

எங்கள் பாராளுமன்றம்தான்
இப்பொழுது
உலகில் முதன் முதலாய்
மக்களின் பிரச்சினைகளைப் பற்றிப் பேசும் மொழி
கூச்சல் என்று
ஒரு புது மொழியை உருவாக்கியிருக்கிறது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைக் கற்றவர்கள்
நாடு முழுக்க
பெருகியபடியே இருக்கிறார்கள்

கூச்சலால்
அவர்கள்
பிழைக்கிறார்கள்

ஆனால் எனக்கு ஒரு கவலை இருக்கிறது
அது
கூச்சலை செந்தமிழ் கொண்டு மொழிபெயர்த்தால்
அதற்கு
காவாலித்தனம்* என பொருள் வருகிறது
●

*15.3.2008*

* காவாலித்தனம் – பொறுக்கித்தனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

257

## உன் கைலேஞ்சி

உன் கைலேஞ்சிகளை யார் மடித்து
பறவைகளாக்கி விட்டது
அதிகம் முக்கோணப் பறவைகள் அலைய
அவற்றில்
எனக்கு
மூக்குத் துடைக்க விருப்பம்

ஏனெனில்
நான் உன்
பூவரசம் இலை
இரவு வந்தால் கட்டிலிலே துளிர்த்து
கூதலால் சுருண்டு புழுவாகி நெளிகின்ற
உன்னை
என்னில்
ஏந்தியபடி இருக்கின்ற
பழுத்து
அந்த நிலவின் வெளிச்சத்தில்
மஞ்சள் நிறமாகியதாய்
மஞ்சள் நிறமான
பூவரசம் இலை

என்னில்தான் நீ வாழுவது
என்னை அரித்து உண்பதுதான்
இனிய சாப்பாடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ என்னைச் சுருட்டி
'பீப்பீ' ஊதாத ஒரு நாள் உண்டா
என்னில் இருந்துவரும்
நீ ஊதும் பீப்பீச் சத்தம்
ஒன்று திரண்டு மனிதனாய் விளைந்ததாய்
தெரியவில்லையா நம்முடைய பிள்ளைகள்

அதில் ஒன்று
அந்தப் பறவைகளை
பிடித்துக் கேட்கிறதே
அவை உன் கைலேஞ்சிகள் என்பதை
தெரிந்துகொண்டது பார்த்தாயா இந்தச் சின்ன ஆத்மாவும்

●

*20.06.2008*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 258

### படைப்பு

உச்சி வெயிலில்
மிக உச்சாரத்தில்
தொங்கிக்கொண்டிருக்கும் முருங்கைக்காய்
நாம் கணையான் கருவாடு
வாங்கும்வரை இருக்கிறதா
இன்னும் முற்றாமல்
சட்டிக்குள் வந்து சுவை கூட்ட

நம் கருவாடு எங்கே
இப்பொழுது காய்கிறதோ
அதைவிடுவோம் நம் உணவு
வந்தேதான் தீரும்
அதுவரைக்கும் அந்தக்
கருவாட்டின் இந்தக்
கூட்டான முருங்கைக்காய்
ஒருவேளை
நமக்கு உணவாக
நிச்சயிக்கப் பட்டிருந்தால்
யார் உசுப்பினாலும்
இப்போது உசும்பாது

அதிகம் கதை எதற்கு
நீயும் நானும்தான்
பலதுக்கும் நல்ல
உதாரணங்கள் இல்லையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ காய்த்து ஆளாகி
கறிக்குத் தோதான
பருவத்தில் வரும்வரைக்கும்

நான் தன்னந்தனியே வாழ்க்கையிலே காய்ந்தேனே

நீ சாம்பல் நிறம்கொண்டு
உன் கண்ணால் என் நெஞ்சத்தை
விண்ணெனத் தெறித்ததுமே
கலியாணச் சட்டிக்குள் சமைந்தோம்

உன்னை யார் ஆய்ந்தார்
என்னை குளிர் நிழலில் எடுத்து
யார் வைத்தார் என்பதெல்லாம்

தேடிப் பார்த்தால் தெரிவதுபோது இல்லை
ஆனால்
நம்மைக் கூட்டாக்கி யாரோ சமைத்தெடுத்து சுள்ளென்ற
ஆணத்தைக் குடித்துச் சுவைப்பது
தெரியாமல் போனால் நாமென்ன படைப்பு

●

*05.08.2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

259

## கறுப்பாக எழுதுகின்ற பேனை

ஓர் அவசரத்தில்
மாலைக்குள் படுத்த என்னை எழுப்பிச் சொல்லாமலே
நீ போய்விட்டாய்
வருவதற்கு நேரமாகும்
அது எனக்குத் தெரியும்
இப்படி எத்தனை முறைகள் செய்திருப்பாய்

உனது நல்ல பழக்கம்
எப்போதும் என்னில் அக்கறை வைத்திருப்பதுதான்
பின்னேரம் போட்டு எனக்காக
ஊற்றிவைத்த தேநீர்
சூடாறி
குடிக்கப் பொருத்தமற்று இருக்கிறது
நான் தூக்கிப் பார்த்தபோது
தழம்பியது

பரவாயில்லை
நீ வந்து
திரும்ப ஒரு தேநீர்
தரும்வரைக்கும்
பேனையால் ஒரு சாயம் குடிப்பதைப் போல்
இந்த வெள்ளைப் பேப்பரை எடுத்து
சில வரிகள் எழுதினேன்
என்ன எழுதினேன்
எதைப்பற்றி
அதிகம் எழுதினேன்
என்பதெல்லாம் தெரியாமல்
பழக்கப்பட்ட பாதையில் ஓடிய மாட்டுவண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல் என் பேனையும்
வெள்ளைக் காகிதத்தின் முகமெல்லாம் ஓடியது
பேனையின் பாதை பேப்பரா

அப்போதே
திரும்ப
நீ வந்தாய்
என்ன தேநீர் குடித்தாயிற்றா
ஊற்றி
வைத்துவிட்டுப் போனேனே
என்றபடி

எத்தனை முறை இப்படி
நீ கேட்டிருக்கிறாய்
உன் குரலும்
ஓடிய பாதையில் ஓடுகின்ற
ஒரு மாட்டுவண்டி மாதிரித்தான்
அதாவது
நான் வெள்ளைத்தாள்
நீ கறுப்பாக எழுதுகின்ற
ஒரு பேனை
●

*20.08.2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

260

## சினைக் காலம்

முற்றிப் பழுத்த சூரியன்
தன் நெருப்புப் பழம் சொரிய வைத்திருக்கும் பையன்
வெயில் என்று
நான் மனதுக்குள் நினைப்பதை அறிந்தா
தீ தூவித் திரிகின்ற கொச்சிக்காய் ஆறு
என்னிலும் பாய்கிறது
பாய்ந்து
என் பிடரி மயிரையும் பொசுக்கிச் சுட்டு
அதன் மணத்தில்
சோறு தின்கிறது
கறி ஒறுப்பு - வெயிலுக்கு தன் உழைப்பு
போதாமல்போக
முருங்கை இலையையும் பொரிக்கப் பழகியதா
சுருள்கிறது தளிர் வாடி

பையனுக்கு
நெருப்புப் பழம் சொரிகின்ற தம்பிக்கு
சம்பளம் என்னவாம் சூரிய முதலாளி கொடுப்பது

கையில் எடுத்துப் பார்த்ததுமே பறந்துவிடும்
சில இறகுக் கடதாசி என்று நினைக்கின்றேன்

இவருக்கு வயதென்ன
இளைஞன்
வயதுக்கு ஏற்ற விதத்தில்
துடிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன்
கறுப்பியில் வெள்ளையனுக்கு காதல் வந்த கணக்காக
நிழல் அரசிமேல் கொஞ்சம் கண்ணும்

நான் பாதணி அறுந்து
பாதங்கள் பொசுங்கி
ஒரு மரத்திற்குக் கீழே செருப்புத் தைக்கின்ற தொழிலாளி
போல குந்தியிருந்து
அவற்றைத் திருத்திக் கொண்டிருப்பதையும் கவனிக்கமாட்டாமல்

அரசியின் அருகில் தம்பி மெல்ல வரும்போது
அவள் தொலைய

என்னைக் காட்டி இவன் பிடரிமயிரைப்
பொசுக்கியாவது
உனக்கு சோறு தருவேனே
ஏன் எனக்கு
காட்டி மறைகின்றாய்
என்பதுபோல மங்கி மீண்டும் ஒளிர்கின்ற
பையனது
வருத்தம் ஒரு காலம் எனக்கும் இருந்தது

இதுதான் சினைக் காலம்

●

*20.06.2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

261

## பலாப்பழம்

ஒரு பலாப்பழத்தைத் தந்தாய்
எத்தனையோ நாட்களின்பின் உன் ஊருக்கு வந்து
உன்னைப் பார்த்துவிட்டுத் திரும்புகையில்
முள்ளாலான
ஓர் இனிய
உலகத்தைத் தூக்கித்
தந்ததைப் போல் தந்து
இது தேன்
ஊருக்குக் கொண்டுபோய்
தின்று பாருங்கள்
எங்கள் வளவில் பழுத்தது
என்றெல்லாம் வர்ணனைகள் செய்து
எனக்கொரு சுமையை ஏற்றி விட்டாய்

சரி
இனிய சுமைதான்
மனைவி மக்கள்போல
இந்தப் பழமும் என்று

வாகனத்தில் தூக்கிப் போட்டேன்

வாகனம் ஒரு பசுமாடு
நீ தந்த
பலாப்பழத்தின் மனத்தில்
வாய் ஊறி ஊறி
துப்பித் துப்பித்தான் ஓடியது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் இடத்தில்
என்னுடைய பலாப்பழத்தில் தன்னுடைய
இரு காலைத் தூக்கி
வைத்தபடி பக்கத்தில்
இருந்துவந்த ஒருத்தி
தூங்கி வருவதனைக் கண்டேன்

இவள் காதலிக்கும் பெண்ணாவாள்
காதல் வந்தால்
பலாப்பழத்தின் முள்போல்தான்
கட்டிலின் மேனியும் மாறும்

யாரவனோ
சூரியனின் கதிர்களிலே தன் வாளைத் தீட்டி
இடுப்பில் செருகியபடி
புல் பூத்திருக்கும் ஒரு வெளியில்
வெட்டுக்கிளி வீசும்
இவள் விசித்திர இளைஞன் யார்

பலாப்பழம்
கொஞ்சம் உருண்டபோது
உலகம் இடிந்ததாய் அவள் விழித்துப் பார்த்தாள்
அந்த உலகத்தின் கடவுள் மாதிரி நான் அவளுக்குத்
தெரிந்திருப்பேன்

●

*15.07.2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

262

## அணில்களின் சந்தை

அணில்களின் சந்தை
கூடிவிட்டது
ஐயையோ முருங்கைமரம்
பூத்துவிட்டது
கீச்சு மூச்சு கீச்சு மூச்சு
அணில் வியாபாரிகள் போடுகின்ற சத்தம்
பார்க்க நானும் வாசலுக்கு வருகின்றேன்

இலையில்லா முருங்கைமரம்
நெல்லு முளையாலே தன் உடம்பை
சோடித்து வைத்த பயன்

நிலத்தைப் பார்க்க
பச்சை நூல் நூறு இறங்க

யார் இவற்றைத் துணி நெய்வார்
முருங்கை நூல் சேலை என
உடுத்துத் திரியும் ஒரு பொம்பளைக்கு
அணிற்பிள்ளை
பாட்டுப் படிக்க ஒத்திகைகள் நடக்கும்

சந்தையிலே
அதாவது
என் வாசல் முருங்கை என்ற
மரத்தினிலே
ஒரு செண்பகமாமி இப்போது குந்தியது

அது நெருப்பு விற்க வந்த
வியாபாரிபோல
செக்கச் சிவந்த கண்ணை உருட்டி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் காலையிலே
வாசலிலே
காய்வாங்கி நெருப்பு வாங்கி
வைத்துள்ளேன்
கறி சமைக்க

முருங்கைக்காயை நறுக்கித்தான் சமைக்க வேண்டும்
அறிவுள்ளோர்
கதைப்பதைப்போல
நெடிதாகப் போடுவது
மரபுமல்ல போட்டால்
உப்புப் புளி இருக்காது

இது விளங்கித்தான் பச்சைக்கிளி
கொஞ்சம் கொஞ்சம் சக்கரைக்கட்டிபோல்
சொற்களைக் கொட்டுகிறதா
இவற்றில் நின்றும் என் கவனத்தைத் திசைதிருப்ப

நான் தற்சமயம்
கிளிச் சொல்லே வாங்கிக் குவிக்கின்றேன்
பழம் உண்ண

●

*20.08.2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 263

### மணி வியாபாரி

நிலா
தங்கப் பழமா
வானம் ஒரு தாவரமா
அழகு

கடல்
பொங்குகின்ற பாற்குடமா
அதற்குள்
போட்டுக் காய்ச்சுகின்ற சீனி
வானமெல்லாம் சிந்தி
கிடப்பதுபோல் கிடக்கிறதே
வெள்ளி
அவற்றை
மொய்க்கின்ற சிற்றெறும்பு நானா

சீனி
போட்டாலும் இனிப்பேன்
போடாமல் விட்டாலும்
இனிப்பேன் என்கிறது
கடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம் இன்று நள்ளிரவு
நான் எழுதப்போகும்
கவிதையைத் தந்தது அது
ஈரமாக
நிலா ஒளி பட்டத்தைப்போல்
என் கவிதையில் ஒரு சிறகிருக்கும்
அது
கடலின் சிறகு

நானில்லை கவிஞன்
நான் சும்மா சேகரிப்போன்
பொறுக்கும் இடத்திலெல்லாம்
பொறுக்கி
மாலை கோர்க்கும்
ஒரு மணி வியாபாரி

●

*22.08.2008*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

264

## கோழி

நீ எனக்கு
குறுக்கும் மறுக்குமாய் போகின்றாய்
நீ கோழியா
நிலத்திலா நீ தீன் பொறுக்குவது
இல்லை
என்னிலா

நீல நிற உடுப்பில்
நீ இன்று
அழகாகவே இருக்கிறாய்
நீ கொண்டையை வாரிக் கட்டியிருக்கும் விதம்
அதில் ஒரு
ஊசியை மாட்டி
ஊசியில் இரு
மணிகளைத் தூக்கி
நீ நடக்க
அவற்றைத் தலையில்
ஆடச் செய்திருக்கும் வித்தை
இல்லை
அந்த மணிகளின் ஒவ்வொரு அசைவிலும்
என்னை இடியச் செய்கின்ற செயல்
சொல்லி மாளாது என் சுரைத்தலைப்பே
உன்னை கூனிபோட்டு நசித்து
இங்கேயே புசிக்கின்றேன்

இந்த மண்
சாப்பாட்டின் சீதேவி அல்லவா
சுரைத் தலைப்புள்
கூனி* போட்டு நசித்து
உண்பதைப்போல் சுவை
வேறு எதில் உண்டு
முருங்கையிலைப் பாலாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூனி
வறுத்துக் கொட்ட மணம் கிளம்பும்

கூனி
வறுத்துக் கொட்டிய சம்பலும்
உயர்தரம்தான்
நீ உதட்டைக் கடித்து கொடுப்பைப் பிதுக்கி
கவர்ச்சி எடுத்துத் தெளித்து
என்னைத் தின்பதைப் போல்
தரத்தில் – உயர்தரம்தான்

அதெல்லாம் இருக்கட்டும்
நாக்கில் நீர் ஊற
கீரி மீன் போட்டு
சுண்டி எடுத்த திராய்போல
ஒரு சட்டியிலே – ஒரு பக்கத்தில் –
அதெல்லாம் இருக்கட்டும்

ஏன் இப்படி
ஒவ்வொரு நாளும்
எனக்கு குறுக்காலும் மறுக்காலும்
உன் முகத்தில் ஒரு கன்னிவைத்து
நான் பார்த்தால் விரிய
கால நேரம் தேடும் பயிராக
என் கண்ணால்
நான் இந்த
சுரைத் தலைப்பை
அறுக்க அறுக்க
கந்துவிட்டுத் தளைத்தபடி
படருகின்றாயே
பைத்தியமா

●

*20.08.2008*

* கூனி – ஒரு நன்னீர் உணவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 265

## ஓடித்திரிகிறது ஒரு மழை

எங்கு பெய்யலாம்
எத்தெருவை நிறைத்து
வாகனத்தை மூழ்கவைத்து
அரசனுக்கு ஒரு வசையை வாங்கிக் கொடுக்கலாம்
எங்கு அருவி வெட்டி நெல் குவித்து வைத்துள்ளார்
அங்கு போய் பெய்து
மடிநெல்லாய் ஆக்கிவிட்டால்
கஞ்சனுக்கு இறைவன் தீர்ப்பைப்பார் என்று சொல்லி
ஊரிலுள்ளோர் பேச ஒரு வாய் அவலைப் போட்டதைப் போல்
இருக்குமே என்றெல்லாம்
வால் எரியும் நரிபோல
ஓடித் திரிகிறது ஒரு மழை
அவள்
வீதி ஓரத்தில்
சேவலைப்போல் முடி
சிலுப்பி நின்றபோதும்
இந்தக் குஞ்சுக் கோழி
எதற்கு எனக்கு என்று
நனைக்காமல்
ஏழுதரம் இருட்டி
பிறகு வெளிப்பாகி
அதைப் பார்த்து
எழுத பேனை திறந்த என்னை
பகிடிபண்ணி

காலிருந்தால் ஓடலாமா
அப்படி
ஓடியவன் ஜெயித்தானா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதையும்
நின்று நிதானித்து கண் திறந்து செய்தால்தான்
காரியத்தில் சித்தி
நீ
இவ்விடத்தில் பெய்
ஒரு பாட்டை உனக்கு நான்
பரிசுதர
நான் பாட்டு மரமேதான்
என் வேருக்கு வெண்ணை விடு

வீதியினை நீ நிறைத்தால்
வாகனங்கள் நீந்தும்
அவை தாராபோல் தெரியும்
கவிஞனுக்கு மட்டும்தான்
ஏனையவர் மரக்கட்டை
புறுபுறுப்பர்
வெட்டிக் குவித்திருக்கும் தானியத்தின் மீதில்
ஏறி விளையாடி நீ களைத்தால்
வியர்த்து
உடல் நாற்றம் எடுக்கும்
மழை குளிக்க இன்னுமொரு மழை உண்டா
ஊரில்
'ஆம்' என்றால் சொல்லு
மணச் சவர்க்காரம் வாங்கிவைப்பேன்

●

*20.08.2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

266

## குளம் சுட்ட கொழுக்கட்டை

சுவையாக இருக்கிறது
தாமரை இலையைப் பார்க்க
அவை குளத்தில்
படர்ந்திருக்கும் அழகை ரசிக்க
சுவையாக இருக்கிறது
கண்
சர்க்கரைபோல இனிக்கிறது

பச்சைப் பச்சை பூரணை நிலவுகள்
குளத்தில் இலைகளாய்
அவைகளில் ஏறி நிற்கும் அழகுபோல்
பூக்கள்
பூக்கள்
குளம் எங்கே

ஆம் எருமைகள் குளித்த குளம்
எங்கே போனது

குளமும் போகும் ஓர் ஆத்மீகப் பயணம்
தன் அழுக்கை அகற்றி இப்படிப் புனிதமாய்
ஆகும் குளமும் ஒருநாள்

குளமும் ஆத்மா உள்ளது
அது இருந்தால் இப்படித் தேடல் நிகழும்

சருகும் இறந்தால் பச்சையை வைக்கும்
ஒரு நரம்பில்
அந்தப் பச்சையில் இருந்துதான் அதன் ஆத்மா
தேடும் சுவர்க்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் குளம் எங்கே தனது
ஈரத்தை வைத்ததோ
கோடையில் வற்றிய ஓடு
இது
இன்று
தேன் கொழுக்கட்டை சுட்டது

குளமே குளமே நான் உன்னில்
ஓர் இலை ஆய்ந்து
சோறு சாப்பிட விரும்புகிறேன்
●

*20.11.2008*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

267

## இருந்து பாடு

பகல் மங்கி
அது புதைத்து வைத்திருந்த நிலவை
மீண்டும் இருள் வானத்தில்
எடுத்து ஒட்டிவிட எத்தனிக்கும் நேரம்
இதை மாலை நேரம் என்றும் மகிழுவர்
உலகம் சிவந்திருக்கிறது
நீ எனக்குக் கொண்டுவந்து தந்த
தேனீரைப்போல்
உலகம் பழுத்திருக்கிறது

மாலைப்பொழுது
ஒரு கனி
இந்தத் தேனீருடன் இன்னும் சுவைகூட்ட
நீ கொண்டுவந்து கொடுத்த
நம் வளவில் பழுத்த குலையில்
ஆய்ந்த ஒரு பழமாய்
நான் தின்னும்
வாழைப்பழம்போல
மாலைப்பொழுதும்
ஓர் இனிய பழம்

இப்பொழுது மஞ்சள் நிறமாகிறது
மாலைப்பொழுது
மனிதன் நிறம் மாறுவதைப் போல

அந்திக்கும்
ஓர்
அரசியல்
இருக்கிறது
அந்திபட
உயிரில்லாதவனின் ஆட்சியில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழும் குடிமக்கள்போல
நான் உரித்து வீசிய வாழைப்பழத்தோல்
கிடப்பதைக் கண்டு
மாலைப்பொழுதுக்கு மனம் வலிக்கிறதா
இப்பொழுது
நீலநிறமாகிறது

நீ
பகலெல்லாம்
பறந்து அலுத்த
பச்சைக்கிளிபோல
ஒரு காலுக்குமேலே
மறு காலைப் போட்டு
ஆறுதலாய்
கதிரையிலே உட்கார்ந்து
கிளி இறகை
விரித்து அடிப்பதைப்போல்
நீயும் கைவிரலை
விரித்து மடக்கிவிட்டு
மறுகணமே
குடித்த கோப்பையைத் தாருங்கள் வைத்துவிட்டு
வருகின்றேன் என்று
உன் கைக்கொழுந்தைப் படரவிட்டாய்
என்பக்கம்

நான் உரித்து வீசிய இன்னுமொரு
வாழைப்பழத் தோலா நீ
இல்லை
என் கோப்பை உன் கைக்கொடியில் காய்க்காது
நீ பச்சைக்கிளி
இருந்து பாடு

●

*20.11.2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 268

## சிலுசிலுப்பும் பலகாரமும்

அவன் இடம்மாறிப் போனபின்பு மாதக்கணக்காக
கொட்டாவிவிட்டு விட்டு
சும்மா கிடந்த நாற்காலிமீது
ஒருத்தி வந்துவிட்டாள் இடம்மாறி இங்கு

முன்பு இவள் எங்கிருந்தாள் என்று தெரியாது
இவள் யார் இவள் பெயரென்ன என்பதெல்லாம்
எதுவும் தெரியாது
காலையிலே வந்த எனக்கு
புன்னகைத்தாள்
புன்னகைத்தேன்
பிறகு என் இருப்பிடத்தில் போனபின்பும்
இரண்டொரு நிமிடங்கள்
அவள் புன்னகையின் அத்தர்
மணத்தது

மதியத்தில்
சாப்பிடும்போது பார்த்தேன்
அவள் சோற்றை அள்ளி வாய்க்குள்ளே வைக்குங்கால்
வாசலில் கிடந்த நாய்
ஊ என்றது

உணவு கேட்கிறதா
இல்லை நான் பார்த்துக்கொண்டிருக்கும்
என் உணவை அது கூப்பிடுகின்றதா

கந்தோர் என்றாலே சில விதிகள் உண்டு
அதில்
வழிகளில் நாய்கள் படுப்பதும்
அதுவும் சோர்ந்தபடி
ஒரு மரத்தில் ஒரு கிளையில் பூ இருக்கும்போது
அதே மரத்தின் மறு கிளை
முறிந்து வாடுவதும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் இடத்தில் நீர் ஒழுக
ஓர் இடத்தில் தண்ணீரை
சிக்கனமாய் பாவித்து உதவுங்கள் என்று
எழுதிவைத்திருப்பதும்

நான் அவளுக்குத் தெரியாமல் அவளைப் பார்ப்பதுபோல்
தவிர்க்கமுடியாதவை

அவள் இப்போது உண்டுவிட்டு கை அலம்பப் போகின்றாள்
அவள் திருகிய இடத்தில் தண்ணீர் தெறிக்கிறது
அவளை வரவேற்பது மாதிரியும்
உனக்குத் தெரியாமல் உன்னை ஒருத்தன்
அவதானிக்கின்றான்
என்று சொல்லுவதைப் போலவும்
சத்தமாக
தண்ணீருக்கே உரிய துணிச்சலுடன்
சிலுசிலுப்பும் பலகாரமும் என்ற கணக்கில்
●

*27.11.2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

269

## வீசி விதைப்பவன்

ஒரு வரி துள்ளித் துள்ளி எழுகிறது
நான் உனது கவிதையில் எங்கு குந்த
எவ்விடத்தில் பொருளாக
என்று கேட்கிறது

எனக்கென்ன தெரியும் நான் இதுவரைக்கும் எந்த
சொல்லையும் தூக்கி என் கட்டிடத்தில் வைத்தேனா
நான் இதுவரைக்கும் கட்டிய கண்ணாடி மாளிகையில்
எதிலாவது ஒரு செதில் அளவுகூட
ஒரு சொல்லை எடுத்து ஒட்டியிருந்தால்
நீயும் கேட்கலாம்
உன் வாதாட்டம் நியாயம்
இல்லையே
அந்தப் பழக்கம்
எனக்குக் கிடையாதே

விரும்பினால் இறங்கு
நான் செய்யும் இந்த
வெள்ளைக் காகிதத்து வயலில்
நீயும் ஒரு வேளாண்மையாகி
இடம்பிடித்துக் கொள்ளு

நான் வீசி விதைப்பவன்தான்
பிடுங்கி நடுகின்ற விவசாயி இல்லை

உனக்கான இடத்தை நீயே தேடிக்கொள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனக்கு எத்தனை கால்கள்
என் நெஞ்செல்லாம் வலிக்கிறதே
இரவு மழை
அந்தக் குளிரையும் பாராமல்
ஒரு கவிதைக்குள் நுழைந்து
எங்கே பயணம் போகப் போகின்றாய்

போன எனது வாகனங்கள் எல்லாம்
பல உள்ளங்கள் வாங்கி எனக்காகத் தந்தன
நல்ல அன்பான உள்ளங்கள்
அவற்றில் ஒன்றிரண்டு
பதரும்தான்

நீ எந்தத் திசைக்கு எந்த வாகனத்தில்
போவாய் என்பதெல்லாம் எனக்குத் தெரியாது
என்னோடு உறவுவைத்தால் இப்படித்தான்
உன் விருப்பம்தான் முக்கியம்
என் விருப்பத்திற்கு உன்னை நான் அமர்த்த
கடையில் கணக்கெழுதும் ஒருவன் இல்லையே

●

*27.11.2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

270

## கோடுகள்

நான் இங்கிருந்து பார்த்தால்
எதிர்வீட்டு முகப்பில் நிற்கின்ற பப்பாசிமரம்
தன் இலைகளை ஆட்டி ஆட்டி
என்னைக் கூப்பிடுவதைப் போல இருக்கிறது
போகவா

நெடிய நெடிய குழல்களில்
என் கை விரல்களை விரித்தாற்போல்
இலைகள்
படுத்து உருளலாம்
விரித்த பாய்களைப் போன்றும்
போகவா
பாவம்

எனக்காக எத்தனை பாய்களை
இந்தப் பப்பாசிமரம்
விரித்து வைத்திருக்கிறது
இப்படித்தான்
இந்த உலகத்தில்
யார் யாருக்கோவெல்லாம்
யார் யாரோ
அன்பு செலுத்தி
அரவணைக்கக் காத்திருப்பர்
நாம் கொஞ்சம்
உற்றுப் பார்த்தால்தான்
இந்த உண்மைகள் விளங்கும்

ஒருவனையும் - ஒரு உரிமட்டையையும்
இங்கு தனியே விடவில்லை அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றிலொன்றைச் சிக்கவைத்து
ஒன்றில் ஒன்றை
தொடுத்து
வாழ்க்கை நதியை விசாலமாகத்தான்
பாயவிட்டான்
பச்சை நிறத்தாலும் பயிர் பச்சை என்று
கவிதை எழுதிய கவிஞன்

எறும்புக்குத் துரும்பு
உலகமாகவில்லையா
என்னை இந்த பப்பாசி இலைகள்
சுமக்காது என்று
நினைக்கலாமா
அன்பு ஒரு பாரம் தாங்கும்
சக்தியல்லவா

அதன் காயில் இருக்கின்ற கோடுகள்போல
என் மனதிலும் சில கோடுகள் விழுந்தன
●

*28.11.2008*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

271

## அது வேறு விடயம்

அன்பே
வெயில் மாரி பொழிகிறது
ஒரு குடை அனுப்பவா
நீ கருகாமல்
காலையிலே போன
பசுமை மாறாமல் திரும்பிவர

நீ இல்லாத வீடு
கிளி பறந்த பாழ் இல்லம்
மேசையிலே பழம் உண்டு
எடுத்துப் புசிக்க மனமில்லை
என் சோடிக்கிளியின் சொண்டுக்குள்
நாக்காக
நானே இருப்பதனால்
எடுத்துக் கடித்தாலும் சுவையில்லை
வானொலியில் ஒலிக்கின்ற
பாடல்கள்போல
வீட்டு மின்விசிறிக் காற்றில்
உலர்கிறது கண்ணே நீ வரவேண்டும் என்கின்ற
என்னுடைய பேரவாவும்

பெரிய
தார் வீதியில்தான் இருக்கிறது
உன்னுடைய அலுவலகம்
காலையிலே நீ வெளிக்கிடும் முன்
கழுகிவைத்துப் போன
அரிசியை நான் இப்போது
பானையிலே இட்டு
அடுப்பிலே வைத்தவுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொதிப்பதைப் போல் கொதிக்குமே
அத் தெருவும்
சோற்றுப் பானைக்குள் குடையும் அகப்பைக்கு
உயிரில்லை
அதனாலே நான் அள்ளி உப்புப் பார்க்கின்றேன்
அகப்பை அழவில்லை

உன் கால் என்ன மரமா
சீவிச் செதுக்கிய தடிபோல தெரிந்தாலும்
நடந்துவரும்போது வீதிக்குள் குடைந்து
உப்புப் புளி பார்க்க

குடையை அனுப்புகிறேன் மயிலே
நம் வளவில் படருகின்ற அவரைக்கொடிபோல
அதனை விரித்து நீ படர்ந்து
உன் தலைப்பை நீட்டு

என் கொச்சிப் பழம்
காய்ந்தாலும் வத்தல்தான்
அது வேறு விடயம்
கூட
நான் மல்லியாய் இருந்து
மஞ்சலுக்கும் மிளகிற்கும் உறவாவேன்
அதுவும் வேறு விடயம்

●

*28.11.2008*

பொது நூலகம்
யாழ்ப்பாணம் - மேற்பிரிவு
உசாத்துணைப் பகுதி
R.21429



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோலைக்கிளி கடந்த முப்பதாண்டுகளில் எழுதிய கவிதைகள் இந்நூலில் தொகுப்பாகியுள்ளன. கவிதைகள் மக்கள் மொழியில் பேசுவதால், கவிஞனுக்கும் வாசகனுக்கும் இடையே நிகழும் ஓர் அந்தரங்கமான பேச்சைப் போல் அணுக்கமாக இருக்கின்றன; காலங்கள் உருவகங்களாக வடிவெடுக்கின்றன; இடங்கள் உயிர்பெற்ற உடல்களாக வெவ்வேறு மனநிலைகளுடன் அலைகின்றன; இடைவிடாத யுத்தத்தால் நிலமும் மனிதர்களும் அலைக்கழிக்கப்படுகின்றனர். இத்தகைய சூழ்நிலையிலும், வாழ்வின் மீதான நம்பிக்கையை கைவிடாத கவித்துவத் தன்னிலையின் உயிர்த்துவத்துடன் சோலைக்கிளியின் கவிதைகள் திகழ்கின்றன. கிழக்கிலங்கைப் பிரதேசத்தின் வழக்காறுகள் செறிந்த மொழியில் இயற்கையுடனான தனது நெகிழ்ந்த உறவிலிருந்து, உயிரிலிருந்து உயிர்தாவும் பார்வைக் கோணங்களிலிருந்து தனித்துவமிக்க அறிதல்களாகவும் தொன்மங்களாகவும் தனது கவிதைகளை சோலைக்கிளி சாத்தியப்படுத்தியுள்ளார்.

ஃ

'காலத்தைக் காலண்டராக்குகிற வித்தையை கைவசப்படுத்தி இருப்பவர் சோலைக்கிளி. இந்த நாட்காட்டியில் எண்களுக்கும் பொழுதுகளுக்கும் பதிலாக மனித அகங்களும் முகங்களும் துலங்குகின்றன. அவணம், ஈழக்கவிதையில் ஓர் ஆவணம்.'

— சுகுமாரன்

'நவீன தமிழ்க்கவிதை மரபில், நத்தையின் வழித்தடம் போல ஈரமான புதிய பாதையை சோலைக்கிளி சமைத்துள்ளார். தாவரங்களும் உயிர்களும் சமத்துவமாகத் தத்தம் தனித்துவங்களுடன் சஞ்சரிக்கும் விநோதமான கவிதை நிலம் இவருடையது.'

— ஷங்கர்ராமசுப்ரமணியன்

அட்டை வடிவமைப்பும் எழுத்தும்: மணிவண்ணன்

978 81 7720 143 7

அடையாளம்

₹ 350

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org